# ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்துறை
# கொள்கை விளக்கக் குறிப்பு 2012–13

## 1. முகவுரை

''உண்மையான ஜனநாயக இந்தியாவின் அடிப்படை அலகு கிராமங்களே ஆகும். உண்மையான ஜனநாயகத்தை கிராமத்தில் உள்ள ஒவ்வொரு குடிமகனும் கிராமத்தின் அடித்தளத்திலிருந்து அமைக்க பாடுபட வேண்டும். என்னுடைய கணிப்பில் 'கிராமம்' என்ற அமைப்புதான் மிகவும் வலிமையினும் வலிமையானது. இத்தகைய ஒரு சுய சார்பு அடிப்படையில் உருவாக்கப்பட்ட கிராமமே மிகச்சிறந்த தன்மையை வெளிப்படுத்தும். இப்படிப்பட்ட சுய சார்பு மிக்க ஓர் சிறந்த கிராமத்தை ஒருவர் உருவாக்கினால் அவர் இந்த நாட்டிற்கு மட்டுமல்ல, அகில உலகத்திற்கே வடிவமைப்பு ஒன்றினை கொடுத்துள்ளார்''.

மகாத்மா காந்தி

---

ஊரகப்பகுதிகளில் வாழும் மக்களின் சமுதாய மற்றும் பொருளாதார முன்னேற்றத்தில் தமிழக அரசு உறுதி கொண்டுள்ளது. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 51.55 விழுக்காடு, அதாவது 3.72 கோடி மக்கள் ஊரகப் பகுதிகளில் வாழ்கின்றனர். மாநில மக்கள் தொகையில் பெரும்பான்மையினர் ஊரகப் பகுதிகளில்



வாழ்வதாலும், அவர்களின் நலத்தை பேணுகின்ற மாநிலமாக தமிழகம் திகழ்வதாலும் பொருளாதார வளர்ச்சி, சமூக நீதி, மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துதல், வறுமை ஒழிப்பிற்கு முக்கியத்துவம் அளித்தல், அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் ஆகியவற்றில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் ஊரக வளர்ச்சியின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளாக கொண்டு செயல்படுகிறது. ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் ஆக்கப்பூர்வமான பங்கேற்போடு வளர்ச்சித் திட்டங்களை சிறந்த முறையில் நிறைவேற்றுவதன் மூலம் இத்தகைய குறிக்கோள்கள் எட்டப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் பொருட்டு இந்தியாவிலேயே முதன் முறையாக இந்த அரசு, ''தாய் திட்டம்'' (தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம்) என்னும் முன்னோடித் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்படி, நிதி ஒதுக்கீடு மற்றும் திட்ட செயலாக்கம் ஆகியவை, குக்கிராமங்களை அடிப்படை அலகாகக் கொண்டு அமையும். வளர்ச்சிக்கான திட்டமிடுதல், நிதி ஒதுக்கீடு செய்தல் மற்றும் செயலாக்கத்தை ''ஊராட்சி'' அளவிலிருந்து ''குக்கிராம'' அளவிற்கு மேலும் பரவலாக்குதல் தொடர்பான கொள்கையினை வகுப்பதில் இந்த முயற்சி மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையால் மேற்கொள்ளப்பட்ட குக்கிராமங்கள்

வாரியான கணக்கெடுப்பு, தற்போதுள்ள அடிப்படை வசதிகள் மற்றும் தேவைகள் குறித்து கண்டறிவதற்கு பேருதவியாக உள்ளது. இந்த கணக்கெடுப்பின் மூலம் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் நிதி ஆதாரங்கள் நியாயமான அளவில் எல்லா குக்கிராமங்களுக்கும் கிடைக்கப்பெறவில்லை என்பதும், அடிப்படை வசதிகள், சாலை வசதிகள் மற்றும் இதர உட்கட்டமைப்புகளை ஏற்படுத்தியதில் குக்கிராமங்களுக்கிடையே ஏற்றத்தாழ்வு உள்ளதும் தெரிய வந்துள்ளது. ‘‘தாய்’’ திட்டம் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை அனைத்து குக்கிராமங்களிலும் ஏற்படுத்துவதை உறுதிப்படுத்துவதோடு நகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் உள்ள வசதிகள் அனைத்தும் குக்கிராமங்களிலும் கிடைப்பதற்கு வழி வகை செய்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட ‘‘முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம்’’ ஊரகப் பகுதிகளில் உள்ள குடியிருப்புகளின் தேவை குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கான முன் முயற்சியில் ஒரு மைல் கல் ஆகும். இந்தியாவில் வேறு எந்தப் பகுதிகளிலும் ஏழை, எளிய மக்களுக்கான இது போன்ற இலவச வீட்டு வசதித் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. இத்திட்டத்தின் படி கிராமப்புற ஏழை மக்களுக்காக 300 சதுர அடி பரப்பளவில் ரூ.1.80 இலட்சம் மதிப்பீட்டில் சூரிய சக்தியுடன் கூடிய இலவச வீடுகள் கட்டித்தரப்படுகின்றன.



திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாத மாநிலமாக தமிழகத்தை அறிவித்திடும் வகையில் இந்த அரசு ஊரக சுகாதாரத்திற்கு ஒரு புது உத்வேகத்தை அளித்து அதற்கு தேவையான நிதி ஆதாரங்கள், அடிப்படை வசதிகள் மற்றும் தொடர் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அனைத்து ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்களும் புனரமைக்கப்பட்டு, பயன்படுத்துவோர் குழுக்கள் மூலம் அவைகள் தொடர்ந்து பராமரிக்கப்படுவதும், பயன்படுத்தப்படுவதும் உறுதி செய்யப்படுகிறது. ஊரகப் பகுதிகளில் சுத்தமான சுற்றுப்புற சூழல் மற்றும் சுகாதாரத்தை ஊக்கப்படுத்தும் வகையில் தூய்மை கிராம இயக்கத்தை மீண்டும் இந்த அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி, திட மற்றும் திரவக் கழிவுகளை பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்துதல், பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டினை தடை செய்தல் மற்றும் மழைநீர் சேகரிப்பு போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது.

பிளாஸ்டிக் பொருட்களால் ஏற்படும் தீய விளைவுகளிலிருந்து சுற்றுப்புற சூழலை பாதுகாப்பதில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி தார்ச்சாலைகள் அமைத்திடுவதை ஊக்கப்படுத்துகிறது. இதன்படி 2011 – 12ம் ஆண்டில், 100 கி.மீ. நீளமுள்ள சாலைகள் எடுக்கப்பட்டுள்ளன. 2012–13ம் ஆண்டிலும் இது தொடரும். இத்தகைய பணிகள் சாலைகளின் தரத்தை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல்,

சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்களையும் வெகுவாகக் குறைத்திடுகிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை புதிய உத்வேகத்துடன் திறம்பட செயல்படுத்த பின்வரும் முனைப்பான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. i) ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட பணிகளை மேற்கொள்ளுதல். ii) செயற்கைக்கோள் மூலம் தயாரிக்கப்பட்ட வரைபடத்தை அடிப்படையாகக் கொண்டு நீர் நிலை ஆதாரப்பணிகளைத் தேர்வு செய்தல், iii) தொழிலாளர்கள் முழு ஊதியத்தையும் பெறுவதற்கான தகவல் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். iv) வங்கிகள் மூலம் ஊதியம் வழங்குதல். v) பணித்தள பொறுப்பாளர்கள் மூலம் தொழிலாளர்கள் இடையே இணக்கமான சூழ்நிலையை ஏற்படுத்துதல். vi) குக்கிராமங்கள் வாரியாக தொழிலாளர்கள் பங்கேற்பை உறுதி செய்யும் பொருட்டு தொடர்ந்து கண்காணித்தல். மேலும் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர்,சிறு/குறு விவசாயிகள், நில சீர்திருத்த திட்டப் பயனாளிகள், இந்திரா நினைவு குடியிருப்பு திட்டப் பயனாளிகள் மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளோர் ஆகியோர் நிலங்களில் பாசன வசதிகளை ஏற்படுத்துதல், நில மேம்பாட்டுப் பணிகள் மற்றும் தோட்டக்கலை சார்ந்த பணிகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த அரசின் சீரிய முயற்சிகளால் இத்திட்டத்தின் கீழ் கடந்த பத்து மாத காலத்திற்குள் ரூ.3,000 கோடி ஊதியமாக வழங்கப்பட்டு இதன் மூலம் 33 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இது, இத்திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து தற்போதுவரை மேற்கொள்ளப்பட்ட செலவினத்தில் மிகவும் அதிகமானதாகும்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கு ஏற்ப ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையானது ‘‘தானே’’ புயல் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் மக்களுக்குத் தேவையான மீட்பு மற்றும் மறுவாழ்வு பணிகளில் முக்கிய பங்காற்றியுள்ளது. உடனடி நிவாரண நடவடிக்கையாக 3 மாவட்டங்களில் உள்ள 5,403 குடியிருப்புக்களில் உடனடியாக 100 விழுக்காடு குடிநீர் விநியோகம் உறுதிப்படுத்தப்பட்டது. இதற்கான மின்மோட்டார்களை இயக்குவதற்கு தேவையான ‘‘ஜெனரேட்டர்கள்’’ வரவழைக்கப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் மற்றும் தரை மட்ட தொட்டிகள் மூலமாக குடிநீர் வழங்கப்பட்டதுடன் லாரிகள் மூலமாகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது. பல்வேறு மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட இத்துறை பணியாளர்கள் மூலம் பழுதுபட்ட 57,014 தெருவிளக்குகள் போர்க்கால அடிப்படையில் சரி செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டன.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நான்காவது சாதாரண தேர்தல்கள் அக்டோபர் 2011ல் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. 1,19,399 பிரதிநிதிகள் பல்வேறு பதவிகள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். கிராமங்களின் ஒட்டு மொத்த வளர்ச்சியினை உறுதி செய்வதற்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகள் சிறப்பான முறையில் செயலாற்றுவது அவசியமானதாகும். தீவிர தொடர் பயிற்சிகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகளின் செயல் திறனை மேம்படுத்த இத்துறை முனைப்புடன் செயல்படும்.

மகளிர் மேம்பாட்டிற்கான சிறப்பு நடவடிக்கைகளில் மற்ற மாநிலங்களுக்கு முன் மாதிரியாக தமிழகம் விளங்குகின்றது. 1983 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம், ''IFAD'' திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களை பேணிக்காத்து, ஊக்குவித்து வருகின்றது. இதன் முக்கிய குறிக்கோள் மகளிருக்கான சமூக மற்றும் பொருளாதார மேம்பாடு ஆகும். திறன் வளர்த்தல் பயிற்சிகள் மற்றும் வங்கிக் கடன்கள் மூலமாக, தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள பல்வேறு உத்திகள் மூலம் இவ்வரசு பெண்களை ஊக்கப்படுத்தி வருகிறது. மக்கள் பங்கேற்புடன் செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களில் மகளிர் குழுக்களின் பங்கு முதுகெலும்பாகத் திகழ்கின்றது. ''சுய உதவிக்குழு'' இயக்கமானது கிராமப்புற



பொருளாதாரத்தில் ஓர் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில், சுய உதவிக்குழு இயக்கம் மூலமாக பெண்கள் கல்வியறிவு மற்றும் திறன் மேம்பாடு பெற்று, குடும்பத்தில் பொருளீட்டும் திறன் படைத்தவர்களாக மாறியுள்ளனர். இதன் விளைவாக பெண்களுக்கு சமுதாயத்தில் உன்னத நிலை மற்றும் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

தமிழக அரசு, உலக வங்கி நிதி உதவியுடன், ''புதுவாழ்வு திட்டம்'' என்ற திட்டத்தை 2005ம் ஆண்டு முதல் 16 மாவட்டங்களில் செயல்படுத்தி வருகின்றது. 2011–12ம் ஆண்டில் இத்திட்டமானது ரூ.950 கோடி செலவில் 10 புதிய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய அம்சமானது, மக்கள் சார்ந்த அமைப்புக்களை உருவாக்கி வலுப்படுத்துவது ஆகும். இத்தகைய மக்கள் அமைப்புகள் மூலம் சமுதாயத்தின் அவசியத் தேவைகளை கண்டறிந்து நிறைவேற்றுதல், குறிப்பாக பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி அவதியுறும் மக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் இத்திட்டத்தின் இலக்கு மக்கள் ஆவர். கிராம ஊராட்சி முதல் மாவட்ட நிர்வாகம் வரையிலான நிலையில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து முறைப்படுத்தி இந்த அரசின் பல்வேறு துறைகளின் திட்ட பயன்கள் யாவும் இலக்கு மக்களுக்கு கிடைக்கும் வகையில் அரசுத் துறைகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

பல்வேறு ஊரக வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் உள்ளாட்சி நிர்வாகத்தின் நோக்கங்களை எய்திடும் வகையில் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் கடமைகளை திறம்பட நிறைவேற்றிட வழி வகை செய்தல் ஆகிய பொறுப்பு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையை சார்ந்ததாகும். குக்கிராம அளவில் அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தி, சுகாதாரத்தினை மேம்படுத்தி, இயற்கை வளங்ளைக் காத்து, கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் உள்ள இடைவெளியைக் குறைத்து, வறுமையை அகற்றி வளமான தமிழகத்தை உருவாக்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது.

**2. ஊராட்சி நிர்வாகம்**

தமிழ்நாட்டில் உள்ளூர் அரசமைப்புகள் சோழர் ஆட்சிக் காலத்தில் செயல்பட்டதற்கான வரலாற்றுச் சான்றுகள் காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரில் அமைந்துள்ள ஸ்ரீ வைகுண்டப் பெருமாள் கோவிலில் உள்ள கல்வெட்டுகள் மூலம் கண்டறியலாம். அக்காலத்தில் கிராமக் கூட்டம் நடைபெற்ற இடத்தைச் சுற்றியுள்ள சுவர்களில் தேர்தல் விதிமுறைகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்படும் முறைகள் விரிவாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுகள், பராந்தகச்சோழர் ஆட்சி செய்த கி.பி.920–ஆம் ஆண்டினைச் சார்ந்ததாகும். இத்தகைய மக்களாட்சி அமைப்பில் கிராமக்குழுக்களின் உறுப்பினர்கள் இரகசியக் 'குடவோலை' முறை மூலம்



தேர்ந்தெடுக்கப்பட்டு கிராம அளவில் பொருளாதார மற்றும் நிர்வாகப் பொறுப்புகளை முழுமையான சுதந்திரத்துடன் செயல்படுத்தி வந்தனர். அவ்வாறான இரகசிய வாக்குப்பதிவே இன்றைய வாக்குப்பதிவு முறையின் அடித்தளமாகும். பெரிய குடம் ஒன்று கிராமத்தின் முக்கியமான பகுதியில் வாக்களிப்பதற்காக வைக்கப்பட்டு, வாக்குரிமை பெற்றோர் தங்களுக்கு விருப்பமான பெயரைப் பனை ஓலைகளில் எழுதி அக்குடத்தில் போடுவர். இறுதியாகக் குடத்தில் உள்ள ஓலைகளை வெளியில் எடுத்து, வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள் எண்ணப்பட்டு, அதிக வாக்குகள் பெற்றவரே கிராமக் குழுவின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டனர். கிராமக் குழுவின் உறுப்பினராகப் போட்டியிடுவதற்கான தகுதிகள் மற்றும் தகுதியின்மைக்கான விதிகள் வகுக்கப்பட்டிருந்தது கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்களாகும்.

ஆங்கிலேயர்களின் வருகைக்குப்பின் உள்ளூர் அரசமைப்பு முறை நலிவுற ஆரம்பித்ததோடு நவீனத் தொழில்மயமானதால் அதிக அளவில் வேலைவாய்ப்பில்லாத நிலை ஏற்பட்டது. இவை, உள்ளூர் அரசமைப்பின் அடித்தளத்தையே சீர்குலைத்தது. எனினும், ஆங்கிலேயர்களால் அவர்களுக்கு ஏற்றவாறான உள்ளூர் அரசமைப்பு முறை கொண்டு வரப்பட்டது.

**1854–**ஆம் ஆண்டு 'மாவட்ட போர்டு நிதி' ஏற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, **1871–**ஆம் ஆண்டு

ஆளுநர் மேயோ என்பவரால் மெட்ராஸ் உள்ளாட்சி நிதிச் சட்டம் கொண்டு வரப்பட்டது. உள்ளாட்சி நிதிக் குழுமங்களும் அந்தந்தப் பகுதிகளில் அமைக்கப்பட்டு குறிப்பிட்ட செயல்பாடுகளுக்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டன. 1882–ஆம் ஆண்டு ரிப்பன் பிரபுவால் கொண்டுவரப்பட்ட உள்ளூர் அரசமைப்புத் தீர்மானத்தின் வெளிப்பாடாக 1884–ஆம் ஆண்டு மெட்ராஸ் உள்ளாட்சிக் குழும சட்டம் கொண்டு வரப்பட்டது. இச்சட்டம், மாவட்ட போர்டுகள், வட்டார போர்டுகள் மற்றும் கிராமங்களின் கூட்டமைப்புகள் ஆகிய மூன்றடுக்கு முறைக்கு வழிவகுத்தது. 1920–ஆம் ஆண்டு பின்வரும் இரண்டு சட்டங்களை அரசு கொண்டு வந்தது.

1. 1884–ஆம் ஆண்டு சட்டத்திற்கு பதிலாக சென்னை லோக்கல் போர்டு சட்டம்
2. கிராம ஊராட்சிகள் சட்டம்

சென்னை கிராம ஊராட்சிகள் சட்டத்திற்கு மாற்றாக, சென்னை லோக்கல் போர்டு சட்டம் 1920 திருத்தியமைக்கப்பட்டு, அனைத்து கிராம ஊராட்சிகளும் 1930ல் சென்னை லோக்கல் போர்டு சட்டம் 1920ன் கீழ் கொண்டு வரப்பட்டன. இவ்வாறு உள்ளூர் அரசமைப்புகளில் பல திருத்தங்கள் கொண்டு வரப்பட்டாலும், நகராட்சிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் ஆய்வாளர்கள் மூலமாக உள்ளாட்சி அமைப்புகளை முழுக் கட்டுப்பாட்டில் அரசு வைத்திருந்தது.



நாடு விடுதலை அடைந்த பின்னர், ஊராட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கும் வகையில் 1950–ஆம் ஆண்டு 'சென்னை கிராம ஊராட்சிகள் சட்டம்' கொண்டு வரப்பட்டது. அரசியலமைப்புச் சட்டம் பகுதி IV பிரிவு 40ல் கிராம ஊராட்சிகளை அமைத்து அவைகளுக்கு அதிகாரங்களும் பொறுப்புகளும் வழங்க வழிவகை செய்யப்பட்டது. மாவட்ட போர்டுகள், சுகாதாரம் மற்றும் கல்வி ஆகியவற்றையும் கிராம ஊராட்சிகள், மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய பல்வேறு பணிகளையும் பராமரித்து வந்தன. 1951–ஆம் ஆண்டு மதுரையில் பரிசோதனை முறையில் சில கிராம ஊராட்சிப் பகுதிகளை ஒன்று சேர்த்து 'மாதிரி ஊராட்சி ஒன்றியம்' அமைக்கப்பட்டது. வளர்ச்சி வட்டாரங்கள் மூலம் உள்ளூர்ப் பகுதி வளர்ச்சிக்காக 1952–ஆம் ஆண்டு மத்திய அரசால் சமுதாய வளர்ச்சி மற்றும் தேசிய விரிவாக்கத்திட்டம் கொண்டு வரப்பட்டது.

மத்திய அரசால் அமைக்கப்பட்ட திரு.பல்வந்த்ராய் மேத்தா அவர்கள் தலைமையிலான குழு, மக்களாட்சி பரவலாக்கம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் ஊராட்சி அமைப்புகளை ஏற்படுத்திடப் பரிந்துரைத்து, 1957ஆம் ஆண்டு சனவரி மாதம் தனது அறிக்கையை சமர்ப்பித்தது. பல்வந்த்ராய் மேத்தா குழுவின் பரிந்துரைகளாவன:

1. மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் அமைத்தல் மற்றும் அமைப்பு ரீதியிலான ஒருங்கிணைப்பினை மறைமுகத் தேர்தல் முறை மூலம் ஏற்படுத்துதல்.
2. நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு கிராம ஊராட்சிகளையும், மறைமுகத் தேர்தலின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு ஊராட்சி ஒன்றியங்களையும், மாவட்ட ஊராட்சிகளையும் அமைத்தல்.
3. அனைத்து வகையான திட்டமிடல் மற்றும் வளர்ச்சிப் பணிகளை மூன்றடுக்கு உள்ளாட்சிகளிடம் ஒப்படைத்தல்.
4. ஊராட்சி ஒன்றியங்கள் திட்டங்களைச் செயல்படுத்தும் அமைப்புகளாகவும், மாவட்ட ஊராட்சிகள், ஆலோசனை, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைப்புகளாகவும் செயல்பட வேண்டும்.
5. மாவட்ட ஊராட்சியின் தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவர் இருப்பார்.
6. நியாயமான முறையில் இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்களும் பொறுப்புகளும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.
7. உள்ளாட்சி அமைப்புகள் தங்களது கடமைகளை நிறைவேற்றிட ஏதுவாக போதுமான நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளித்தல்.



8. வருங்காலங்களிலும் இந்த அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்கள் கிடைக்கும் வகையிலான வழிமுறைகளை கண்டறிய வேண்டும்.

ஆனால், பல்வந்த்ராய் மேத்தா குழுவின் பரிந்துரைகளை அரசு முழுமையாக ஏற்றுக் கொள்ளாத நிலையில், 1958–ஆம் ஆண்டு மதராஸ் பஞ்சாயத்துச் சட்டம் மற்றும் 1958–ஆம் ஆண்டு மதராஸ் மாவட்ட வளர்ச்சி மன்றச் சட்டம் கொண்டு வரப்பட்டன. இச்சட்டங்களின் முக்கிய அம்சங்களாவன:

1. வளர்ச்சி வட்டாரங்களுக்குப் பதிலாக, ஊராட்சி ஒன்றியங்களைக் கொண்டு வருதல்
2. மாவட்ட போர்டுகளைக் கலைத்தல்.
3. ஆலோசனை வழங்கும் வகையில் மாவட்ட வளர்ச்சி மன்றங்களை ஏற்படுத்துதல்.
4. பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மற்றும் சமூக நலப்பணிகளைச் செயல்படுத்தும் பொறுப்புகளை ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்குதல். ஆயினும், நீதி வழங்கும் அதிகாரம் போன்ற சில குறிப்பிட்ட அதிகாரங்கள் கிராம ஊராட்சிகளிடமிருந்து எடுக்கப்பட்டன.

பல்வந்த்ராய் மேத்தா குழு, மாவட்ட அளவில், மாவட்ட ஊராட்சியை உள்ளடக்கிய மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்பு முறையினைப் பரிந்துரை செய்த போதிலும், மதராஸ் அரசு, மாவட்ட அளவில் மாவட்ட ஊராட்சிகளுக்குப் பதிலாக

மாவட்ட வளர்ச்சி மன்றங்களை ஏற்படுத்தியது. இதனால் கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் என ‘இரண்டு அடுக்கு ஊராட்சி முறை’ ஏற்படுத்தப்பட்டது. மாவட்ட போர்டுகள் கலைக்கப்பட்டதால் அதற்குப் பதிலாக ஊராட்சி ஒன்றியங்கள் அப்பொறுப்பை ஏற்றுக்கொண்டன. மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவரும், ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள், மாவட்டத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பலர் இந்த அமைப்பின் உறுப்பினர்களாகவும் செயல்பட்டு வந்தனர். இவ்வாறாக ஊராட்சி ஒன்றியங்கள், வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தும் முக்கிய அமைப்பாக விளங்கத் தொடங்கின.

73–வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் 1993, ஏப்ரல் மாதத்தில் இருந்து நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பிரிவு 243 ஜி–ன்படி ஊராட்சி அமைப்புகளுக்குப் பல்வேறு பொருள்களில் திட்டங்களைச் செயல்படுத்தும் முழுமையான அதிகாரங்களும், பொறுப்புகளும் கிடைப்பதற்கு அதிகமான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன. அரசியலமைப்புச் சட்டத்தில் 11–வது அட்டவணையில் 29 பொருள்கள் குறித்து வரையறுக்கப்பட்டுள்ளன. 74–வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ‘மாவட்ட



திட்டக் குழு’ உருவாக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

73–வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்திற்கு ஒப்ப மாநில அரசுகள் தங்கள் ஊராட்சிச் சட்டங்களில் தேவையான திருத்தங்கள் செய்து புதிய சட்டத்தை இயற்ற வேண்டும். 73–வது அரசியலமைப்புச் சட்டம், உள்ளாட்சி அமைப்பு முறையில் புதிய மற்றும் முக்கியமான பரிணாம மாற்றங்களைக் கொண்டு வந்தது. அவற்றில் முக்கியமானவைகளாக கிராம சபைக் கோட்பாட்டை அறிமுகப்படுத்துதல், மூன்றடுக்கு ஊராட்சி முறை ஏற்படுத்துதல், நேரடித் தேர்தலின் மூலம் மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்கேற்ப ஊராட்சி அமைப்புகளின் பதவிகளுக்கு இட ஒதுக்கீடு செய்தல், மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்தல், தலைமைப் பதவியிடங்களில் சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு, ஐந்தாண்டுகளுக்கொரு முறை உள்ளாட்சித் தேர்தல், உள்ளாட்சி அமைப்புகள் கலைக்கப்பட்ட தேதியிலிருந்து 6 மாதத்திற்குள்ளாக தேர்தல் நடத்துதல், மாநில சட்டத்தின் மூலம் ஊராட்சிகளுக்கு பொறுப்புகள் மற்றும் அதிகாரங்களை அளித்தல், மாநில அரசின் நிதி ஆதாரங்களை நகர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளித்தல், ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மாநில நிதி ஆணையம் அமைப்பதன் மூலம் ஊரக

உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஆதாரங்களை ஆய்வு செய்து பரிந்துரை செய்தல் மற்றும் மாநிலத் தேர்தல் ஆணையத்தை அமைத்தல் ஆகியவை முக்கிய அம்சங்களாகத் திகழ்கின்றன.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994–ஆம் ஆண்டு இயற்றப்பட்டு 22.4.1994 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன்படி, தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சி அமைப்புகளில், பல்வேறு முக்கியமான மாறுதல்கள் கொண்டு வரப்பட்டன.

- தமிழ்நாட்டில் மூன்றடுக்கு ஊராட்சி முறை நடைமுறைக்கு வந்தது.
- ‘ஊராட்சி’ என்ற பொதுப்படையான சொல் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புக்களைக் குறிப்பதற்கெனப் பயன்படுத்தப்படுகிறது. மேலும், பேரூராட்சிகள், நகர்பாலிகா சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.
- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கான உறுப்பினர்கள் மற்றும் கிராம ஊராட்சியின் தலைவர் ஆகியோர், வாக்காளர்களால் நேரடியாகத் தேர்வு செய்யப்படுகின்றனர். ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும், மாவட்ட ஊராட்சியின் தலைவர்களும் முறையே ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தலின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.



- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் ஒவ்வொன்றும் சுதந்திரமாக / தனித்தனியாக இயங்கக் கூடியவை. கிராம ஊராட்சியின் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியக் குழுவில் உறுப்பினர்கள் அல்ல.
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப, பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மூன்றில் ஒரு பங்கு, பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பதவியிடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஒதுக்கீடு, 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை சுழற்சிமுறையில் மாற்றம் செய்யப்படும்.
- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் தலைவர்கள் பதவிக்காலம் 5 ஆண்டுகளாகும். காலியிடம் ஏற்பட்ட 6 மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட்டு பதவிகள் நிறைவு செய்யப்படும்.
- தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- மாநில நிதி ஆணையம் ஐந்தாண்டுக்கு ஒரு முறை அமைக்கப்பட்டு வருகிறது.
- ஒவ்வொரு மாவட்டத்திற்கும், மாவட்டத் திட்டக் குழு ஏற்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டக்குழு, ஊராட்சி மற்றும் நகராட்சிகளின் வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து மாவட்ட அளவில் திட்டத்தினைத் தொகுத்திடும்.

## 2.1 கிராம சபை

கிராம ஊராட்சியிலுள்ள அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கிய அமைப்பு கிராம சபை ஆகும். குறிப்பிட்ட அதிகாரங்களும், பொறுப்புகளும் கிராம சபைக்கு வழங்கப்பட்டுள்ளன.

இரண்டு கிராமசபைக் கூட்டங்களுக்கு இடையே உள்ள காலம் ஆறு மாதங்களுக்கு மிகாமல் இருக்கும் வகையில் சட்ட ரீதியாக கிராம சபைக் கூட்டங்கள் கூட்டப்பட வேண்டும். ஆயினும், ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒரு ஆண்டில் குறைந்தது நான்கு முறை, அதாவது ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15, அக்டோபர் 2 ஆகிய நாட்களில் கிராம சபைக்கூட்டம் நடத்த தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. இது தவிர, தேவையின் அடிப்படையில் விதிமுறைகளுக்குட்பட்டு கிராம சபைக் கூட்டம் நடத்தலாம்.

கிராம சபை பின்வரும் முக்கியமான பணிகளை நிறைவேற்றுகின்றன:

1. கிராம வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்.
2. கிராம ஊராட்சியின் வரவு–செலவு திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்.
3. தணிக்கை அறிக்கைக்கு ஒப்புதல் வழங்குதல்
4. திட்டப்பணிகள் செயல்பாட்டின் முன்னேற்றத்தை ஆய்வு செய்தல்.



5. பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காக தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளின் பட்டியலுக்கு ஒப்புதல் வழங்குதல்.
6. கிராமத்தில் உள்ள பல்வேறு இன மக்களிடையே சமுதாய மற்றும் சமூக நல்லிணக்கத்தை ஊக்குவித்தல்.

## 2.2 மாநிலத் தேர்தல் ஆணையம்

73–வது இந்திய அரசியலமைப்பு திருத்தச்சட்டம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 239–ன் படி தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம், அதிகாரப் பரவலாக்கம் மற்றும் சனநாயகத்தை வலுப்படுத்தும் விதமாக சுதந்திரமான மற்றும் சுய சார்புடைய அமைப்பாக 1994–ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. ஊராட்சிகளில் வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் ஆகிய அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் முறையாக தேர்தலை நடத்துதல் ஆகிய பணிகளைக் கண்காணித்தல், இயக்குதல் மற்றும் கட்டுப்படுத்துதல், ஆணையரைத் தலைமையாகக் கொண்ட தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தைச் சார்ந்ததாகும்.

1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 239 உட்பிரிவு (3)–ன்படி தமிழ்நாடு மாநிலத் தேர்தல்

ஆணையத்திற்கு, ஆணையர் மற்றும் நிர்வாக பணியாளர்களும் நியமிக்கப்படுவார்கள். மாநில தேர்தல் ஆணையரின் பணி விதிகள், பதவிக்காலம் ஆகியவை குறித்த விதிகளை ஆளுநர் நிர்ணயிப்பார். ஆணையர் இரண்டு ஆண்டுகளுக்குப் பதவி வகிப்பார். மேலும், இப்பதவியினை ஆறு ஆண்டுகளுக்கு மிகாமல் இரண்டு முறை நீட்டிப்பு செய்யலாம். ஆனால் மாநிலத் தேர்தல் ஆணையரை அவருடைய பதவியிலிருந்து நீக்க முடியாது. அவ்வாறு நீக்குவதாக இருந்தால், உயர்நீதிமன்ற நீதிபதியை நீக்கும் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். மேலும், மாநிலத் தேர்தல் ஆணையர் நியமிக்கப்பட்ட பின்னர் அவருடைய பணி விதிகள் தொடர்பான நிபந்தனைகள் எதுவும் அவரைப் பாதிக்கக்கூடிய வகையில் இருக்கக் கூடாது.

### 2.3 உள்ளாட்சி தேர்தல் 2011

1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்டவுடன் முதல் சாதாரண உள்ளாட்சித் தேர்தல் நகர்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அக்டோபர் 1996 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. பின்பு இரண்டாவது தேர்தல் அக்டோபர் 2001–ம் ஆண்டும், மூன்றாவது தேர்தல் அக்டோபர் 2006 ஆம் ஆண்டும் நடத்தி முடிக்கப்பட்டது.

ஊரக மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான 4–வது சாதாரண தேர்தல் அக்டோபர் மாதம் 2011 ஆம் ஆண்டு



வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது. ஊரக பகுதிகளில் சாதனையாக, அதிகளவு அதாவது 81.81 விழுக்காடு வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர். கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி ஆகியவற்றின் வார்டுகளின் உறுப்பினர்கள் மற்றும் கிராம ஊராட்சித் தலைவர்கள் ஆகியோருக்கான நேரடி தேர்தல் 17.10.2011 மற்றும் 19.10.2011 ஆகிய இரண்டு கட்டமாக நடைபெற்றது. கிராம ஊராட்சியின் துணைத் தலைவர், ஊராட்சி ஒன்றியத் தலைவர், துணைத் தலைவர், மாவட்ட ஊராட்சித் தலைவர், துணைத் தலைவர் ஆகிய பதவியிடங்களுக்கு மறைமுக தேர்தல் 29.10.2011 அன்று நடத்தப்பட்டது. மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத் தலைவர் பதவியிடங்கள் மற்றும் வார்டுகளின் உறுப்பினர்களுக்கான தேர்தல்கள் கட்சிகள் சார்ந்த அடிப்படையிலும், கிராம ஊராட்சித் தலைவர் பதவியிடங்கள் மற்றும் வார்டு உறுப்பினர்களுக்கான தேர்தல்கள் கட்சி சாரா அடிப்படையிலும் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

### 2.4 ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகளை மறு சீரமைப்பு செய்தல் – பல உறுப்பினர் வார்டுகளை ஓர் உறுப்பினர் வார்டுகளாக மாற்றியமைத்தல்

2006–ம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஓர் உறுப்பினர் வார்டுகள் அடிப்படையிலும், கிராம ஊராட்சிக்கு பல உறுப்பினர் கொண்ட வார்டுகள் அடிப்படையிலும் தேர்தல் நடைபெற்று வந்தது.

கிராம ஊராட்சியில் வழக்கத்திலிருந்த பல உறுப்பினர் வார்டு முறையினால் பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு கிராம ஊராட்சி வார்டுகளில் இட ஒதுக்கீடு செய்வதில் மிகுந்த சிரமங்கள் இருந்தன. மேலும் இந்த அமைப்பில் கிராமத்திலுள்ள வாக்காளர்களுக்கு வாக்குச்சீட்டுக்களில் குழப்பமும், அலுவலர்களுக்கு வாக்கு எண்ணிக்கையின்போது சிரமங்களும் ஏற்பட்டன. பல உறுப்பினர்களைக் கொண்ட வார்டுகளின் எல்லைகள் தெளிவாக வரையறை செய்யப்படாததால் ஒவ்வொரு வார்டு உறுப்பினர்களுக்குரிய பகுதி தெளிவுபடுத்தப்படவில்லை. எனவே, தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த)ச் சட்டம் 2009 (தமிழ்நாடு சட்டம் எண். 20/2009, 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு, 12–ல் திருத்தம் செய்யப்பட்டது.

மேற்படி, சட்ட திருத்தத்திற்கு தொடர்பான விதி திருத்தம் வெளியிடப்படாததால் பல உறுப்பினர் வார்டுகளை ஓர் உறுப்பினர் வார்டாக மாற்றியமைக்கும் பணி நடைமுறைப்படுத்தப்படவில்லை. 1995ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (கிராம ஊராட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை நிர்ணயம் மற்றும் வார்டுகளைப் பிரித்தல்) விதிகளுக்கு உரிய திருத்தம் 2011ம் ஆண்டு, அரசாணை (நிலை) எண். 63, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா.2) துறை நாள் 14.9.2011 மூலம் செய்யப்பட்டது.



1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, கிராம ஊராட்சியில், 40,879 பல உறுப்பினர் வார்டுகளில் 97,458 வார்டு உறுப்பினர்கள் இருந்தனர். எனவே, தேர்தல் நடைமுறையினை சரிப்படுத்தும் வகையிலும், கிராம ஊராட்சி வார்டுகளின் எல்லைகளை தெளிவாக வரையறை செய்யும் பொருட்டும், கிராம ஊராட்சியில் உள்ள பல உறுப்பினர் வார்டுகளை ஒரு உறுப்பினர் வார்டுகளாக மாற்ற முடிவு செய்யப்பட்டது. 2001ம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்அடிப்படையில் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் பல உறுப்பினர் வார்டுகளை ஒரு உறுப்பினர் வார்டுகளாக மாற்றியமைக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வாயிலாக, கிராம ஊராட்சி உறுப்பினர் வார்டுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையும் 99,333 ஆக அதிகரித்துள்ளது.

### 2.5 ஊராட்சி ஒன்றிய வார்டுகளை மறுசீரமைப்பு செய்தல்

பல உறுப்பினர் வார்டுகளை ஓர் உறுப்பினர் வார்டுகளாக மாற்றும் பணி மற்றும் 96 கிராம ஊராட்சிகளை மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுடன் இணைக்கப்பட்டதன் தொடர்ச்சியாக தொடர்புடைய ஊராட்சி ஒன்றியங்களின் எல்லைகளும் மறுசீரமைப்பு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் ஊராட்சி ஒன்றிய வார்டுகளுக்கான தேர்தல் நடத்தப்பட்டது.

**2.6 மாவட்ட ஊராட்சி வார்டுகளை மறுசீரமைப்பு செய்தல்.**

அரியலூர் மற்றும் திருப்பூர் ஆகிய இரண்டு புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்தும், கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, பெரம்பலூர் மற்றும் அரியலூர் ஆகிய மாவட்ட ஊராட்சி வார்டுகளை மறுசீரமைப்பு செய்யும் அவசியமும், 96 கிராம ஊராட்சிகள் மாநகராட்சி மற்றும் நகராட்சியுடன் இணைக்கப்பட்டதால் தொடர்புடைய மாவட்டங்களில் மாவட்ட ஊராட்சி வார்டுகளும் மறுசீரமைப்பு செய்யப்படவேண்டியிருந்தது. எனவே, மேற்கண்ட மாவட்டங்களில் மாவட்ட ஊராட்சிகளின் வார்டுகள் மறுசீரமைப்பு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் உள்ளாட்சி தேர்தல் 2011ம் ஆண்டு நடத்தி முடிக்கப்பட்டது.

**2.7 உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரணத் தேர்தல் 2011**

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரணத் தேர்தல் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களுக்கான மற்றும் கிராம ஊராட்சித் தலைவர்களுக்கான தேர்தல் வெற்றிகரமாக அக்டோபர் 2011ல் நடத்தி முடிக்கப்பட்டது. மாநிலத்திலேயே முதல் முறையாக கிராம ஊராட்சி வார்டுகளுக்கு ஓர் உறுப்பினர் வார்டு முறையில் தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டது.

2011 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற சாதாரண தேர்தலில் மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புக்களில் உள்ள பதவியிடங்கள் மற்றும் தலைமை



பதவியிடங்களுக்கான விவரங்கள் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளது.

**பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்கள் குறித்த விவரங்கள்**

| வ. எண். | பதவியிடம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கிராம ஊராட்சி வார்டுகள் | 99,333 |
| 2 | ஊராட்சி ஒன்றிய வார்டுகள் | 6,471 |
| 3 | மாவட்ட ஊராட்சி வார்டுகள் | 655 |
| 4 | கிராம ஊராட்சித் தலைவர்கள் | 12,524 |
| 5 | ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் | 385 |
| 6 | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | 31 |
| | **மொத்தம்** | **1,19,399** |

**2.8 இரண்டு புதிய கிராம ஊராட்சிகளைத் தோற்றுவித்தல்**

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் பெருமாத்தூர், இந்திரா நகர் ஆகிய இரண்டு புதிய கிராம ஊராட்சிகளை உருவாக்கி கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவிக்கை வெளியிடப்பட்டது. மேற்படி புதியதாக உருவாக்கப்பட்ட இரண்டு ஊராட்சிகளும் அக்டோபர் 2011 உள்ளாட்சி தேர்தலுக்கு பிறகு செயல்பட தொடங்கியுள்ளன.

**2.9 இரண்டு மாவட்ட ஊராட்சிகளைப் புதிதாக ஏற்படுத்துதல்**

அரியலூர் மற்றும் திருப்பூர் ஆகிய இரண்டு புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து இரண்டு

புதிய மாவட்ட ஊராட்சிகள் முறையே அரசாணை (நிலை) எண்.26 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா 2) துறை, நாள். 25.2.2011 மற்றும் அரசாணை (நிலை) எண். 49 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா 2) துறை நாள். 25.8.2011 வாயிலாக ஏற்படுத்தப்பட்டன. இந்த இரண்டு மாவட்ட ஊராட்சிகளுக்கும் தேர்தல் அக்டோபர்–2011ல் முடிவுற்று, அவை செயல்பட துவங்கியுள்ளன.

## 2.10 ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஊராட்சி அமைப்புகளின் பல்வேறு பதவியிடங்களுக்கு மக்கள் தொகை அடிப்படையில் உரிய இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். இந்திய அரசியலமைப்புச் சட்டம், சட்டக்கூறு 243 D–ன்படி ஊராட்சி அமைப்புகளில் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கான பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை செய்யப்பட வேண்டும். அதில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் ஆதிதிராவிடர், பழங்குடியினப் பெண்களுக்கு ஒதுக்கப்படும் எண்ணிக்கையையும் உள்ளடக்கி மொத்த ஒதுக்கீட்டில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்திட வேண்டும். இதற்காக 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் உட்பிரிவுகள் 11, 20, 32 மற்றும் 57 மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் (பதவியிடங்களுக்கான



ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை) விதிகள், 1995 ஆகியவை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு செய்வது குறித்துத் தெளிவாக விளக்குகிறது.

**2011–ஆம் ஆண்டு ஊரக உள்ளாட்சித் தேர்தல்**

**பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு விபரம்**

| வ. எண் | இட ஒதுக்கீடு வகை | மொத்த பதவி இடங்கள் | மகளிருக்கான ஒதுக்கீடு | | ஆதிதிராவிடருக்கான ஒதுக்கீடு (பொது (ம) மகளிர்) | | பழங்குடியினருக்கான ஒதுக்கீடு (பொது (ம) மகளிர்) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | 31 | 11 | 35% | 7 | 24% | 0 | 0% |
| 2 | ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் | 385 | 140 | 36% | 87 | 23% | 4 | 1% |
| 3 | கிராம ஊராட்சித் தலைவர்கள் | 12,524 | 4,289 | 34% | 3,136 | 25% | 156 | 1% |
| 4 | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 655 | 228 | 35% | 154 | 24% | 8 | 1% |
| 5 | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் | 6,471 | 2,286 | 35% | 1,526 | 24% | 64 | 1% |
| 6 | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 99,333 | 33,121 | 33% | 25,360 | 26% | 1,039 | 1% |

## 2.11. கிராம ஊராட்சித்தலைவர்களுக்கான பதவியிடங்களுக்கு தேர்தல் நடத்துதல்

இந்திய அரசியலமைப்புச் சட்டம், சட்டப் பிரிவு 243D–ன்படி ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கான

பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை செய்யப்படவேண்டும். தமிழ்நாடு ஊராட்சி (பதவியிடங் களுக்கான ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை) விதிகள் 1995–ன்படி இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை நிர்ணயிக்கப்படுகிறது. 2006ம் ஆண்டு நடைபெற்ற சாதாரணத் தேர்தல்களில் இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை செய்யப்பட்டு ஊராட்சிகளுக்கான தேர்தல் நடத்தப்பட்டன. ஆயினும், மதுரை மாவட்டத்திலுள்ள பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் ஊராட்சிகளிலும், விருதுநகர் மாவட்டத்திலுள்ள கொட்டக்காச்சியேந்தல் ஊராட்சியிலும் 2006–ஆம் ஆண்டுக்கு முன்புவரை சாதாரணத் தேர்தல்கள் நடத்த இயலாததால் இவ்வூராட்சிகளில் இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை மேற்கொள்ளப்படவில்லை.

மேற்கண்ட ஊராட்சிகளுக்கான தலைமைப் பதவியிடங்களுக்கென ஏற்கனவே உள்ள ஆதிதிராவிடர்களுக்கான இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலேயே 2006–ம் ஆண்டு சாதாரணத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. 2011–ஆம் ஆண்டு நடைபெற்ற சாதாரணத் தேர்தல்களின்போதும் இவ்வூராட்சிகளுக்கான தலைமைப் பதவியிடங்களுக்கான தேர்தல்களும், இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறையில் மாற்றம் ஏதும் செய்யாமல் ஆதிதிராவிடர்களுக்கான இட ஒதுக்கீட்டிலேயே நடத்தப்படவேண்டும் என இந்த அரசு முடிவு செய்தது. அதன்படி, இவ்வூராட்சித் தலைவர்களுக்கான



பதவியிடங்களுக்கான இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலேயே சட்ட ஒழுங்குப் பிரச்சினை ஏதுமின்றி 2011–ஆம் ஆண்டு சாதாரணத் தேர்தல்கள் நடத்தப்பட்டு ஊராட்சிப் பிரதிநிதிகள் பொறுப்பேற்று செயல்பட்டு வருகின்றனர்.

### 2.12. கிராம ஊராட்சித் தலைவர்களுக்கான தலைமைப் பதவியிடங்களை பொது ஒதுக்கீடாக மாற்றுதல்

2006ம் ஆண்டு ஊரக உள்ளாட்சித் தேர்தலில் ஊராட்சி அமைப்புகளுக்கான பதவி மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கான இட ஒதுக்கீட்டில் சுழற்சி முறை மேற்கொள்ளப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டன. ஆனால் ஆதிதிராவிடர்கள் / பழங்குடியினருக்கு என ஒதுக்கப்பட்ட பின்வரும் 8 கிராம ஊராட்சிகளுக்கான தலைமைப் பதவியிடங்களுக்கு அவ்வூராட்சிகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஒருவரும் இல்லாததால் தேர்தல் நடத்த இயலவில்லை.

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | ஊராட்சியின் பெயர் | 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இட ஒதுக்கீடு |
|---|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | உத்திரமேரூர் | புலிப்பாக்கம் | பழங்குடியினர்(பொது) |
| 2. | காஞ்சிபுரம் | சித்தாமூர் | புதுார் | ஆதிதிராவிடர்(பொது) |
| 3. | திருவள்ளூர் | பள்ளிப்பட்டு | இராமாபுரம் | பழங்குடியினர்(பொது) |
| 4. | கடலுார் | பண்ருட்டி | கொலப்பாக்கம் | ஆதிதிராவிடர்(பெண்) |
| 5. | விழுப்புரம் | வல்லம் | கடுகப்பட்டு | ஆதிதிராவிடர்(பெண்) |
| 6. | வேலுார் | திமிரி | செய்யாத்து வண்ணம் | பழங்குடியினர்(பொது) |
| 7. | திருவண்ணாமலை | தண்டராம்பட்டு | பேரணாம்பட்டு | பழங்குடியினர்(பொது) |
| 8. | அரியலுார் | டி.பாலுார் | நடுவலுார் | ஆதிதிராவிடர்(பொது) |

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் பின்வரும் நாட்களில் பலமுறை தற்காலிகத் தேர்தல்கள் நடத்தியும் மேற்கண்ட ஊராட்சிகளுக்கான தலைமைப் பதவியிடங்களுக்கு யாரும் வேட்பு மனு தாக்கல் செய்யாததால் இவ்வூராட்சிகளில் தேர்தல்கள் நடைபெறவில்லை.

1. செப்டம்பர், 2007
2. பிப்ரவரி, 2008
3. செப்டம்பர், 2008
4. ஜனவரி, 2011

2001–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இவ்வூராட்சிகளில் ஆதிதிராவிடர்கள்/ பழங்குடியினர்களை உள்ளடக்கி இருந்ததால் அதனடிப்படையில் ஆதிதிராவிடர் /பழங்குடியினருக்கான இடஒதுக்கீடு செய்யப்பட்டது. மாவட்ட ஆட்சித்தலைவர்கள், இந்த 8 ஊராட்சிகளிலும் உரிய கள ஆய்வுகளை மேற்கொண்டு ஆதிதிராவிடர்கள்/பழங்குடியினர் யாரும் இங்கு வசிக்கவில்லை என தெரிவித்தனர். மாவட்ட ஆட்சித்தலைவர்களின் உண்மை நிலை அறிக்கையினைப் பரிசீலனை செய்து, மேற்கண்ட 8 ஊராட்சிகளின் தலைமைப் பதவியிடங்களுக்கு ஏற்கனவே உள்ள ஒதுக்கீடான ஆதிதிராவிடர்கள்/பழங்குடியினர் என்பதை மாற்றி பொது ஒதுக்கீடாக அறிவித்து அரசாணை எண்.60 ,



ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா–1) துறை நாள் 9.9.2011–ன்படி ஆணை வெளியிடப்பட்டது.

மேற்கண்டவாறு இட ஒதுக்கீட்டினை பொது ஒதுக்கீடாக மாற்றியதன் அடிப்படையில் இவ்வூராட்சிகளின் தலைமைப் பதவியிடங்களுக்கான சாதாரணத் தேர்தல்கள் 2011–ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது. அத்துடன், தேர்ந்தெடுக்கப்பபட்ட பிரதிநிதிகள் பொறுப்பேற்றுக் கொண்டதுடன் 5 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த ஊராட்சிகளில் ஜனநாயக அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் நிலை நிறுத்தப்பட்டன. மேற்கண்ட ஊராட்சிகளில் தாழ்த்தப்பட்ட/பழங்குடியினருக்கான இட ஒதுக்கீட்டினை பொது ஒதுக்கீடாக மாற்றியபோதிலும், ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு வழங்க வேண்டிய ஒட்டுமொத்த ஒதுக்கீடு குறையாமல் இருப்பதை உறுதி செய்யப்பட்டுள்ளது.

### 2.13. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் ஊராட்சிகளின் எல்லைகளை மறுசீரமைப்பு செய்தல்

கிராம ஊராட்சி வார்டுகளின் எல்லைகள் மற்றும் கிராம ஊராட்சி வார்டுகளின் எண்ணிக்கை ஆகியவை 2001ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்பட்டன. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சி வார்டுகளின் எல்லைகள் மற்றும் வார்டு உறுப்பினர்களின் எண்ணிக்கை

அனைத்தும் 1991 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படியே நிர்ணயிக்கப்பட்டன. 2011ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்கள் மேற்கண்ட வார்டு எல்லைகள் மற்றும் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே அமைந்தன. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி, ஊராட்சிகளின் எல்லைகள் மற்றும் வார்டு உறுப்பினர்களின் எண்ணிக்கை அனைத்தும் தேர்தல் நடப்பதற்கு முன்னர் வெளியிடப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும். அதன்படி, 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் 3 அடுக்கு ஊராட்சி அமைப்புகளின் வார்டுகளை மறுசீரமைத்திடவும், வார்டுகளின் எல்லைகளை மாற்றி அமைத்தும் 2016ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்களை நடத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது.

### 2.14 மாநில நிதி ஆணையம்

73–வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 198ன்படி, தமிழ்நாடு மாநில நிதி ஆணையம் அமைத்திட வழி செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் முதல் மாநில நிதி ஆணையம் 1994ல் அமைக்கப்பட்டு, கீழ்க்கண்ட பொருள்களை ஆய்வு செய்து அரசிற்கு பரிந்துரை அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.



1. அரசால் விதிக்கப்படும் வரி, தீர்வை, சுங்கம் மற்றும் கட்டணங்கள் மூலம் பெறப்படும் மொத்த வருவாயில் மாநிலத்திற்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பிரித்து வழங்கும் முறை.
2. ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய வரிகள், தீர்வை, சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை நிர்ணயித்தல்.
3. மாநிலத்தின் மொத்தத் தொகுப்பு நிதியிலிருந்து ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மானியங்கள்.
4. ஊராட்சிகளின் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கான வழிமுறைகள்.

தமிழகத்தில் நான்காவது மாநில நிதி ஆணையம் டிசம்பர் 2009ல், அரசாணை (நிலை) எண்.549, நிதித்துறை, நாள்.1.12.2009–ன்படி, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுடைய நிதி ஆதாரங்களை ஆய்வு செய்யவும் தேவையான பரிந்துரைகளை செய்யவும் ஏற்படுத்தப்பட்டது. இந்நிதிக்குழு 2011–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2012–2017 ஆண்டுகளுக்கான அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்துள்ளது.

2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் தற்காலிக அறிவிக்கையின்படி ஊரக மற்றும் நகர்ப்புற மக்கள்தொகை

விகிதாச்சாரம், தமிழ்நாட்டில் 52:48 என உள்ளது. இதனால், தற்போது உள்ள மாநில நிதி வருவாய்ப் பகிர்வான 58:42 என்ற விகிதாசாரத்தை மாற்றி, நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு அதிக ஒதுக்கீடு கிடைக்கக் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதாக அறியப்பட்ட நிலையில், ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை, நான்காவது மாநில நிதி ஆணையத்திடம் நடைமுறையில் உள்ள விகிதாச்சாரப் பகிர்வினையே தொடர வேண்டிய அவசியம் குறித்தும், விகிதாச்சார மாற்றத்தால் நகர்ப்புற மற்றும் ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தில் இடைவெளி மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது எனவும், ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த தவறினால், அவர்கள் அதிக அளவில் நகர்ப்புறங்களுக்கு இடம் பெயர்ந்து, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மறைமுகமான நிதிச்சுமையை ஏற்படுத்தக் கூடும் எனவும் எடுத்துரைக்கப்பட்டது.

அரசு 2011–12 ஆண்டிற்கு மாநில நிதிக்குழு மானியமாக, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.3,332.47 கோடி ஒதுக்கீடு செய்தது.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில நிதி குழு மானியத்தின் ஒதுக்கீடு 2009–10 முதல் 2011–12 வரை கீழ்க்காணும் அட்டவணைப்படி உயர்த்தப்பட்டுள்ளது.



**2009–10 முதல் 2011–12 வரை மாநில நிதி ஆணைய மான்யம்**

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | மாநில நிதி ஆணையம் மான்யம் | தொகை | முந்தைய ஆண்டுகளை விட அதிகரிக்கப்பட்ட சதவீதம் |
|---|---|---|---|
| 2009–10 | 1,926.57 | 210.13 | 12 % |
| 2010–11 | 2,814.88 | 888.31 | 46% |
| 2011–12 | 3,332.47 | 517.59 | 18 % |

## 2.15. மாவட்டத் திட்டக் குழு

1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 241–ன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்டத் திட்டக்குழு அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டத் திட்டக்குழுவின் தலைவராக மாவட்ட ஊராட்சித் தலைவரும், துணைத்தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவரும் இருப்பர். நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விகிதாசாரத்திற்கேற்ப உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் இக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பர். மாவட்டத் திட்டக்குழுவின் பணிகள் பின்வருமாறு:

1. மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான மாவட்ட அளவிலான வள ஆதாரங்கள் விபரங்களை சேகரித்தல், தொகுத்தல் மற்றும் நாளது தேதிவரையான விபரங்களைப் பெறுதல்.

2. தேவைகளைக் கண்டறிந்து முன்னுரிமை அளித்தல்
3. மாவட்டத்தின் வளர்ச்சிக்குத் தேவையான கொள்கைகள், திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் முன்னுரிமை அளித்தல்.
4. மாவட்டத்தில் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தயாரித்த திட்டங்களை ஒருங்கிணைத்து மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல். மாவட்டத் திட்டக்குழு தயாரிக்கும் வளர்ச்சித் திட்டம் மாநிலத் திட்டக்குழு தயாரிக்கும் மாநில அளவிலான திட்டத்திற்கு உதவியாக இருத்தல்.
5. மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் ஆய்வு செய்தல்.
6. வளர்ச்சித் திட்டங்களில் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பை ஊக்குவித்தல்.
7. மாநில அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துதல் தொடர்பான ஆலோசனைகளை மாநில அரசுக்கு வழங்குதல்.
8. மாநில அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் இதர பணிகளை நிறைவேற்றுதல்.

அரியலூர் மற்றும் திருப்பூர் ஆகிய இரண்டு மாவட்டங்கள் புதிதாக உருவாக்கப்பட்டதன் தொடர்ச்சியாகவும், 96 கிராம ஊராட்சிகள் அருகிலுள்ள மாநகராட்சி, நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள்



ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டதன் விளைவாகவும் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்கள் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கையை மறு நிர்ணயம் செய்து மாவட்ட வாரியான மாவட்டத் திட்டக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை அரசு விரைவில் வெளிவிடும்.

## 2.16. மத்திய நிதி ஆணையம்

பதிமூன்றாவது நிதி ஆணையம், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு, பொது அடிப்படை மான்யம் மற்றும் பொது செயலாக்க மான்யம் ஆகிய இரண்டு மான்யங்களை வழங்க பரிந்துரைத்துள்ளது..

### i) பொது அடிப்படை மானியம்

13–வது நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில், இரண்டு விதமான மான்யங்களை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. 2010–11 முதல் 2014–15 வரையிலான காலத்திற்கான 13–வது நிதி ஆணைய அடிப்படை மானியமாக ரூ. 2,016.30 கோடி இந்திய அரசால் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கப்பட்டது. 2010–11 ஆம் ஆண்டிற்கான அடிப்படை மான்யம் ரூ. 287.10 கோடி பெறப்பட்டது.

2011–12 ஆம் ஆண்டில் 13–வது நிதி ஆணைய அடிப்படை மானியமாக ரூ.352.62 கோடி மத்திய

அரசிடமிருந்து பெறப்பட்டது. அரசாணை எண்.43 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா.–1) துறை நாள். 20.7.2011–ன்படி ரூ.166.50 கோடி முதல் தவணையாக மாநில அரசு விடுவித்துள்ளது. அரசாணை எண்.67 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா.–1) துறை நாள் 22.9.2011–ன்படி, ரூ.9.81 கோடி, முதல் தவணையில் மீதமுள்ள பொது அடிப்படை மான்யமாக வழங்கப்பட்டது. 2011–12 ஆண்டின் பொது அடிப்படை மான்யத்தின் இரண்டாம் தவணையான ரூ.176.31 கோடியானது அரசாணை எண்.85 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா.–1) துறை நாள்.8.11.2011–ன்படி விடுவிக்கப்பட்டது.

பின்வரும் பணிகளுக்காக இம்மானியங்கள் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படுகின்றன.

- குடிநீர் விநியோகம், தெருவிளக்குகள் மற்றும் சுகாதார வசதி இவை தொடர்பான இயக்கம் மற்றும் பராமரிப்பு.
- குடிநீர் விநியோகம் மற்றும் தெருவிளக்குகளுக்கான மின்கட்டணம் செலுத்துதல்.

**ii) பொது செயலாக்க மான்யம்**

பொது செயலாக்க மானியத்தை பெறுவதற்கு 13–வது நிதி ஆணையம் பரிந்துரைத்த நிபந்தனைகளை மத்திய அரசு பட்டியலிட்டுள்ளது. 26.9.2011 அன்று நடைபெற்ற உயர்மட்ட கண்காணிப்புக்குழு கூட்டத்தில்,



பொது செயலாக்க மான்யத்தை பெறும் பொருட்டு, மத்திய அரசு விவரித்துள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளை செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.

1. ஊரக உள்ளாட்சிகள் மற்றும் நகர்புற உள்ளாட்சிகளுக்கென்று தனித்தனியான வரவு செலவு அறிக்கைகளை தாக்கல் செய்ய வேண்டும்.

ஊராட்சி அமைப்புகளுக்கான கணக்கீட்டு மென்பொருள் (PRIASOFT) - மாதிரி கணக்கீட்டு முறை, மத்திய அரசு கணக்கு மற்றும் தணிக்கைத் தலைவரால் தொகுக்கப்பட்ட 8 அடிப்படை விபரங்கள் மற்றும் படிவங்கள் ஆகியவற்றை செயல்படுத்துதல்.

2. மத்திய அரசு கணக்கு மற்றும் தணிக்கைத் தலைவரால் ஒவ்வொரு ஊராட்சி அமைப்புகளையும் தணிக்கை செய்வதற்கு தேவையான தொழில்நுட்ப வழிமுறைகள் மற்றும் ஒத்துழைப்பினை அளித்திட வேண்டும்.

உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநரின் வருடாந்திர தொழில்நுட்ப ஆய்வறிக்கையினை மாநில சட்டப்பேரவையில் தாக்கல் செய்திட வேண்டும்.

3. மாவட்ட ஊராட்சிகளில் நடைபெறும் தவறான நிர்வாகம், ஊழல் குறித்த புகார்களை கண்காணிக்கும் பொருட்டு சுதந்திரமான உள்ளாட்சி அமைப்புக்கான குறை தீர்ப்பாளரை (Ombudsman) நியமித்திட வேண்டும்.

4. மத்திய அரசிடமிருந்து பெறப்படும் நிதி, மின்னணு தொழில்நுட்ப வசதி உள்ள வங்கிகள் மூலம் 5 நாட்களிலும் ,

இவ்வசதியில்லாத வங்கிகள் மூலம் 10 நாட்களிலும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சென்றடையும் வகையில் பரிமாற்றம் செய்யப்பட வேண்டும்.

5. மாநில நிதி ஆணையம்:– அரசியலமைப்பு பிரிவு 243 (I) (2)–ல் மாநில நிதிக்குழு உறுப்பினர்களுக்கான தகுதி குறித்த வரையறை செய்யப்பட்டுள்ளது.

6. அனைத்து உள்ளாட்சிஅமைப்புகளும் சொத்து வரி விதிப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும்.

7. மாநிலத்தில் உள்ள அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கு உதவிடும் வகையில் மாநில அரசால் மாநில அளவில் சொத்து வரி வாரியம் அமைக்கப்பட வேண்டும்.

8. உள்ளாட்சி அமைப்புகள் வழங்கும் அனைத்து அவசியப் பணிகளின் தரத்தினையும் நிர்ணயித்திட மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

9. 2001ன் கணக்கெடுப்பின்படி 1 மில்லியன் மக்கள் தொகைக்கு அதிகமாக உள்ள மாநகராட்சிகள், தங்கள் எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறும் தீ விபத்துக்களை தடுக்கும் மற்றும் இடம் பெயர்வு திட்டங்களை கொண்டிருக்க வேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகள்மீது நடவடிக்கை மேற்கொண்டு அதற்கான தொகுப்பறிக்கை மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டு தேவையான அரசாணையை வெளியிட்டு,



பொது செயலாக்க மான்யத்தை தமிழகத்திலுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கக் கோரப்பட்டுள்ளது.

**2.17. கிராம ஊராட்சி**

கிராம ஊராட்சி என்பது, அதற்கென உள்ள கிராமங்களை உள்ளடக்கி, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு ஊராட்சிகளின் ஆய்வாளர் அறிவிக்கையில் குறிப்பிட்ட தேதியிலிருந்து அமைக்கப்படும். சிறந்த நிர்வாகம் என்ற அடிப்படையில் உரிய அறிவிக்கையின் வாயிலாக கிராம ஊராட்சிகளைப் பல்வேறு நிலைகளில் வகைப்படுத்தலாம். கிராம ஊராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை (தலைவர் நீங்கலாக) மக்கள் தொகை அடிப்படையில் ஊராட்சிகளின் ஆய்வாளரால் அறிவிக்கை செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு ஊராட்சியும் உரிய காரணங்களால் கலைக்கப்படாதவரை ஒவ்வொரு சாதாரணத் தேர்தலுக்குப்பின்னர் 5 ஆண்டு காலம் செயல்பாட்டில் இருக்கும். ஆயினும், குறிப்பிட்ட சூழ்நிலைகளில் ஊராட்சிகளின் நிர்வாகப் பொறுப்பினைக் கவனித்திட தனி அலுவலர்கள் நியமிக்கப்படுவர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை விவரங்கள் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

கிராம ஊராட்சியின் தலைவர், கிராம ஊராட்சியின் செயல் அலுவலர் ஆவார். ஒவ்வொரு கிராம ஊராட்சியும் கீழ்க்கண்ட குழுக்களை அமைத்திட வேண்டும்.

1. நியமனக் குழு
2. வளர்ச்சிக் குழு
3. வேளாண்மை மற்றும் குடிநீர் வழங்கல் குழு
4. பணிகள் குழு
5. தற்காலிகக் குழு

**1994** ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு **110** ன் படி கீழே குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொள்ள வேண்டியது கிராம ஊராட்சிகளின் முக்கியக் கடமையாகும்.

1. அனைத்து கிராமச்சாலைகள், பாலங்கள், சிறுபாலங்கள், தடுப்புச்சுவர்கள் மற்றும் தரைப்பாலங்களை அமைத்தல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல் (நெடுஞ்சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தவிர)
2. பொது இடங்களில் தெரு விளக்குகள் அமைத்தல்.
3. கழிவுநீர் வாய்க்கால் அமைத்துக் கழிவுநீரை வெளியேற்றுதல்.
4. தெருக்களை சுத்தம் செய்தல் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துதல்.
5. பொதுக்கழிப்பிட வசதி ஏற்படுத்துதல்
6. இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகளை ஏற்படுத்திப் பராமரித்தல்.
7. குடிநீர் வழங்குதல்.



8. அவ்வப்போது அரசு அறிவிக்கை வாயிலாகப் பணிக்கக்கூடிய பிற கடமைகள்.

**1994–**ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு **111–**ன் படி பின்வரும் கடமைகளை ஊராட்சியின் தேவைக்கேற்பவும், நிதி ஆதாரங்களைக் கணக்கில் கொண்டும் கிராமத்தில் உள்ள சாலைகளின் இரு பக்கங்களிலும் மரங்கள் நடுதல், தெரு விளக்குகள், சந்தைகள், விழாக்கள், பொருட்காட்சிகள், வண்டிகள் நிறுத்தும் இடங்கள், கால்நடைத் தொழுவங்கள், இறைச்சிக் கூடங்கள், படிப்பகங்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் ஏற்படுத்தி நிர்வகித்தல் போன்றவை.

### 2.17.1 நிதி வருவாய்

கிராம ஊராட்சிகள் மட்டுமே தங்கள் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பின்வரும் வரிகள், கட்டணங்கள் ஆகியவற்றை விதித்து வசூலிக்க அதிகாரம் பெற்றுள்ளது.

#### 2.17.1.1 வரி வருவாய்

1. வீட்டு வரி
2. தொழில் வரி
3. விளம்பர வரி

#### 2.17.1.2 வரியல்லாத வருவாய்

1. கட்டடங்கள் மற்றும் வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்

2. அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழில்களுக்கான உரிமம்
3. சந்தைக் கட்டணம்
4. குடிநீர் கட்டணம்
5. வண்டி நிலையங்களுக்கான கட்டணம்
6. சமூகக் காடுகள் ஏலம்
7. மீன்பாசி குத்தகை
8. 2சி மரப்பட்டா
9. சந்தை மற்றும் பொருட்காட்சிகளிலிருந்து பெறப்படும் வருமானங்கள்
10. படகு குழாம் மூலம் பெறப்படும் கட்டணங்கள்
11. அபராதங்கள் மற்றும் தண்டத்தீர்வை .

ஊராட்சி நிலங்களில் வைக்கப்பட்டுள்ள அலைபேசிக் கோபுரங்களுக்கான கட்டணம், கிராம ஊராட்சிச் சாலைகளில் கண்ணாடிக் கம்பி இழை பதித்தலுக்கான கட்டணம், நிலங்களை வகைப்படுத்தல் மற்றும் இதர கட்டணங்களை வசூலித்தல் மூலம் கூடுதல் வருவாயினை ஏற்படுத்தலாம். அதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு, ஊராட்சிகளுக்கு அதிக நிதி ஆதாரங்கள் கிடைப்பதற்கான வாய்ப்புகளைக் கண்டறிந்து அதற்கான பரிந்துரைகளை அரசுக்கு அளிக்கும்.



### 2.17.2 ஒப்படைக்கப்பட்ட மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய்

ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்களான முத்திரைத்தாள் மீதான வரி மற்றும் கேளிக்கை வரி ஆகியவற்றின் ஒரு பகுதி வருவாய் கிராம ஊராட்சிகள் பெறத் தகுதியுடையனவாகும்.

### 2.17.3 மானியம்

1. **மத்திய நிதி ஆணைய மானியம்:** தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மத்திய நிதி ஆணைய மானியம் முழுவதும் குடிநீர் மற்றும் சுகாதாரப் பணிகளுக்காக கிராம ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.
2. **மாநில நிதி ஆணைய மானியம்:** ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநிலத்தின் மொத்த வரி வருவாயில் இருந்து ஒதுக்கப்படும் 10 சதவீத நிதியில் ஒதுக்கீடு செய்யப்படும் 58 சதவீத நிதியில், 60 சதவீதம் கிராம ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த மானியம் ஒவ்வொரு மாதமும் ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படுகிறது. அதில் குறைந்தபட்ச நிதியாக (Floor amount) ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டுத் தனியாகக் கணக்குப் பராமரிக்கப்பட்டு, தெரு விளக்குகள் மற்றும் குடிநீர் வழங்கல் தொடர்பான மின்கட்டணம் செலுத்த வழி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை, மக்கள் தொகை அடிப்படையில் கிராம

ஊராட்சிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. மேற்காணும் **60** சதவீத நிதியில் **5** சதவீதம் கிராமங்களில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ஏதுவாக, அடிப்படைக் கட்டமைப்புத் தேவைகளை நிறைவு செய்து கொடுப்பதற்கான நிதியாக (Infrastructure Gap Filling Fund) ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**3.** மத்திய அரசு மற்றும் மாநில அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களுக்காக விடுவிக்கப்படும் வளர்ச்சி நிதி.

**2.18 கிராம ஊராட்சிகளின் நிதி ஆதாரத்தை அதிகரிக்கும் பொருட்டு சிறப்பு குழு அமைத்தல்.**

தமிழ்நாடு மாநிலத்தில் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் ஆகிய மூன்று வகையான ஊரக உள்ளாட்சி அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் கிராம ஊராட்சி அடிப்படை அலகாக உள்ளது. கிராம ஊராட்சிகளின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் தமிழ்நாடு ஊராட்சி சட்டம் **1994**ல் பிரிவு **110** மற்றும் **111**ல் பரிந்துரைக்கப்பட்ட முக்கியப் பணிகள் கீழ்வருமாறு:

1. குடிநீர் விநியோகம்,
2. தெருவிளக்குகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல்
3. சுகாதார வசதியை பராமரித்தல்



4. கிராம சாலைகளை உருவாக்குதல், சரி செய்தல் மற்றும் பராமரித்தல்.
5. பூங்கா, சுடுகாடு, படிக்கும் அறைகள் ஆகியவற்றை பராமரித்தல்.
6. கிராம ஊராட்சிகளில் மத்திய, மாநில அரசுகளின் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

கிராம ஊராட்சிகளின் முக்கிய ஆதாரமாக வீட்டு வரி, தண்ணீர் கட்டணம், தொழில்வரி, கட்டிடம் மற்றும் அனுமதி மனைப்பிரிவு அனுமதி தொகை ஆகியவை ஆகியவற்றிலிருந்து கிடைக்கிறது. மாநில அரசு மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி கிராம ஊராட்சிகளுக்கு மாநில நிதிக்குழு மானியத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் நிதி விடுவிக்கின்றது.

மேலும் ஒப்படைக்கப்பட்ட வருவாயானது மாநில அளவில் ஒருங்கிணைக்கப்பட்டு கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு **60:32:8** என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. **2010–2011** ஆம் ஆண்டில் ஒருங்கிணைக்கப்பட்ட வருவாயானது மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கும் **1:2** என்ற விகிதத்தில் முதன்மைப் பணிகளுக்கும் வழங்கப்பட்டது. ஆனால் **2011–12** ஆம் ஆண்டில் ஒருங்கிணைக்கப்பட்ட வருவாயாக **2/3** பங்கு கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு **2:1** என்ற விகிதத்தில் வழங்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள 1/3 பங்கு நிதியானது, ஊரக பகுதிகளில் முதன்மை பணிகளுக்கு செலவிடப்பட்டுள்ளது.

ஊரக பகுதிகளில் அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தல் மற்றும் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுதல் ஆகியவற்றிற்கு கிராம ஊராட்சிகளே பொறுப்பாக இருப்பதால், கிராம ஊராட்சிகளின் நிதி நிலை பலப்படுத்தப்பட வேண்டியுள்ளது. அவ்வாறு கிராம ஊராட்சிகளின் நிதி ஆதாரத்தை அதிகரிக்க தேவையான காரணிகளை சிறப்பாகவும் விரிவாகவும் ஆராய வேண்டியுள்ளது. “சிறப்பு குழுக்கள் மூலம் கிராம ஊராட்சிகளின் நிதி ஆதாரங்களை அதிகரிப்பது குறித்து ஆராயப்படும்” என்று சட்டசபையில் அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அரசாணை எண். 98 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா1) துறை நாள்.2.12.2011–ன் மூலம், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் தலைமையின் கீழ் கிராம ஊராட்சிகளின் நிதி ஆதாரங்களை அதிகரிப்பது குறித்து அரசால் சிறப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

சிறப்புக்குழுவானது 10 அலுவலக உறுப்பினர்களையும், ஊராட்சி கணக்கியல் முறைகளில் வல்லுனர்களான இருவரை உள்ளடக்கிய 11 அலுவல் சார்பற்ற உறுப்பினர்களையும் கொண்டது.



அந்த சிறப்புக்குழுவானது கிராம ஊராட்சிகளின் ஏற்கனவே உள்ள நிதிநிலையை ஆய்வு செய்தும், நிதிநிலையினை மேம்படுத்தும் வழிமுறைகளைப் பற்றியும் மற்றும் கிராம ஊராட்சியின் நிதிநிலையினை அதிகரிக்கும் பொருட்டும் அதற்கான வருவாய்மூலங்களை பற்றியும் ஆய்வு மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும் இதுகுறித்து உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுடனும் இத்துறையில் உள்ள சிறந்த வல்லுனர்களுடன் கலந்துரையாடவும் திட்டமிட்டுள்ளது. தேவைப்படின், அக்குழுவானது மற்ற மாநிலங்களுக்குச் சென்று அங்குள்ள கிராம ஊராட்சிகளின் நிதி ஆதார அமைப்புகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளும்.

### 2.19. ஊராட்சி ஒன்றியம்

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், 5000 மக்கள் தொகை கொண்ட ஊராட்சி ஒன்றிய வார்டுகளை உள்ளடக்கிய வளர்ச்சி வட்டாரங்களாகும். வார்டு உறுப்பினர்கள் நேரடியாக வார்டில் உள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களால், மறைமுகத் தேர்தலில் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் தேர்வு செய்யப்படுவார்.

| ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளின் எண்ணிக்கை | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 10– மற்றும் அதற்கு குறைவாக | 23 |
| 11–20 | 80 |
| 21–30 | 80 |

| | |
|---|---|
| 31–40 | 83 |
| 41–50 | 65 |
| 51 மற்றும் அதற்கு அதிகமாக | 54 |
| மொத்தம் | 385 |

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை விவரம் இணைப்பில் தரப்பட்டுள்ளது.

வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), ஊராட்சி ஒன்றியத்தின் செயல் அலுவலர் ஆவார். அவருக்கு உதவியாக நிர்வாகப் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் உள்ள பணியாளர்கள் இருப்பார்கள். தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 112ன்படி ஊராட்சி ஒன்றியக் குழு மேற்கொள்ளும் பணிகளில் முக்கியமான சில பணிகளின் விவரம் பின்வருமாறு:

1. மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.
2. ஊராட்சி ஒன்றிய சாலைகள், சிறுபாலங்கள், பாலங்கள், தடுப்புச் சுவர்கள், தரைப்பாலங்கள் அமைத்தல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்.
3. ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளைக் கட்டுதல் மற்றும் பராமரித்தல்.
4. தொற்றுநோய் பரவாமல் இருக்கத் தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்
5. ஊராட்சி ஒன்றியக் குழுக்களால் வரையறுக்கப்பட்ட கண்காட்சி மற்றும் விழாக்கள் நடத்துதல்.



6. ஊராட்சி ஒன்றியச் சந்தைகள்.

1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 114ன்படி பொருளாதார வளர்ச்சி குறித்த திட்டங்கள் மற்றும் இதர செயல்பாடுகளையும் ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் செயல்படுத்தும்படி அரசு பணிக்கலாம்.

### 2.19.1 நிதி

1. ஊராட்சி ஒன்றியக் குழுவால் வரிகள் ஏதும் விதிக்க இயலாது.
2. ஊராட்சி ஒன்றியத்திற்கான வருவாய் இனங்களாவன: வரியல்லாத வருவாய், ஒப்பளிக்கப்பட்ட / பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய் இனத்தில் ஒரு பகுதி, கட்டணங்கள், வாடகை, அபராதம் மற்றும் தண்டத்தொகை, அரசு மானியங்களான மாநில நிதி ஆணைய மானியம், தாய் சேய் நல விடுதிக்கான மானியம், ஊரக மருந்தக மானியம், சமூகக் கல்வி மானியம், மகளிர் மற்றும் குழந்தைகள் நல மானியம், உள்ளூர் பாசன நிதி மற்றும் மத்திய மாநில அரசுத் திட்ட மானியங்கள்.
3. மாநில நிதி ஆணைய மானியம், மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் 10 சதவீத நிதியில், 58 சதவீதம் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதில், 32 சதவீதம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த

மானியம் ஒவ்வொரு மாதமும் விடுவிக்கப்படுகிறது. சீரான நிதி கிடைக்கும் வகையில் ரூ.30 லட்சம் குறைந்தபட்ச நிதியாக (Floor Amount) ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மீதித்தொகை, மக்கள் தொகை அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு விடுவிக்கப்படுகிறது.

## 2.20. மாவட்ட ஊராட்சி

1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 24ன்படி ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் மாவட்ட ஊராட்சி அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்ட ஊராட்சியும், உத்தேசமாக 50,000 மக்கள் தொகைக்கு ஒரு வார்டு என்ற அடிப்படையில் பல வார்டுகளைக் கொண்டுள்ளது. வார்டு உறுப்பினர்கள் மக்களால் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல் மூலம் மாவட்ட ஊராட்சித் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், உதவி இயக்குநர் நிலையில் ஒரு அலுவலர் செயலராக ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு உறுதுணையாகப் பணியாளர்கள் உள்ளனர். மாவட்ட ஊராட்சி, பின்வரும் நிலைக்குழுக்களை அமைக்கலாம்.

1. உணவு மற்றும் வேளாண்மை
2. தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்கள்



3. பொதுப்பணிகள்
4. கல்வி
5. மது விலக்கு உள்ளிட்ட சுகாதாரம் மற்றும் நலத் திட்டங்கள்.

இக்குழுக்கள் மாவட்ட ஊராட்சியில் ஒப்படைக்கப் படும் பணிகளைச் செயல்படுத்தும். இக்குழுக்கள் தவிர, மாவட்ட ஊராட்சியால் கூடுதல் நிலைக் குழுக்களைத் தேவையின் அடிப்படையில் அமைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு நிலைக் குழுவும், தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களில் ஒருவரைத் தலைவராகத் தேர்வு செய்திட வேண்டும். மாவட்ட ஊராட்சித் தலைவர், மேற்படி நிலைக் குழுக்களின் பதவி வழி உறுப்பினர் ஆவார். மாவட்ட ஊராட்சியின் கடமைகளாவன:

1. மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்.
2. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் நிர்வாக அறிக்கையினை ஒருங்கிணைத்தல் மற்றும் மாவட்டத்தின் ஆண்டறிக்கையைத் தயாரித்தல்.
3. விவசாயம், நிலவள மேம்பாடு, கால்நடை பராமரிப்பு, பால்வளம், கோழிப்பண்ணை, மீன்வளம் மற்றும் கிராமத் தொழில்கள் ஆகியவற்றைத் திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல்.

4. ஊரக வீட்டு வசதிக்கான திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல், குறிப்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு.

5. பெரிய அளவிலான குடிநீர் திட்டப் பணிகளைக் கண்டறிதல்.

**2.20.1. நிதி**

மாவட்ட ஊராட்சிக்கு வரி விதிக்கும் அதிகாரம் ஏதும் இல்லை. மாநில நிதி ஆணைய மானியம் மற்றும் மாவட்ட ஊராட்சிக்குச் சொந்தமான நிலம் மற்றும் கட்டிடங்கள் வாயிலாகக் கிடைக்கும் வருவாய் ஆகியவை முதன்மை வருவாய் இனங்களாகும்.

மாநில நிதி ஆணையம் மானியம் – மாநில சொந்த வரி வருவாயில் 10 சதவீத ஒதுக்கீட்டில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் 58 சதவீத நிதியில், 8 சதவீதம் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த மானியம் ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படுகிறது.

**2.21. ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதியினை ஒருங்கிணைத்தல்**

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் முத்திரைத்தாள் வரி , கேளிக்கை வரி ஆகியவற்றில் இருந்து பெறப்படும் வருவாய் நிதியினை மாநில அளவில் ஒருங்கிணைத்து ஊராட்சிகளுக்குப் பிரித்து வழங்க அரசு ஆணையிட்டுள்ளது (சமூகக் காடுகள் வருவாய் மற்றும் கனிம வளங்களுக்கான குத்தகை



நீங்கலாக). 2010 –11 ம் ஆண்டில் மாநில அளவில் ஒருங்கிணைக்கப்பட்ட வருவாயில் மூன்றில் இரண்டு பங்கு ஊரகப் பகுதிகளில் நடைபெறும் முதன்மை திட்டப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, மீதி மூன்றில் ஒரு பங்கு நிதி மட்டும் ஊராட்சி அமைப்புகளுக்கு விடுவிக்கப்பட்டது. ஆனால் 2011–12ஆம் ஆண்டில் இந்த விகிதாச்சாரம் மாற்றப்பட்டு, மொத்த தொகையில் மூன்றில் இரண்டு பங்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கும், மூன்றில் ஒரு பங்கு முக்கிய முன்னேற்ற திட்டமான ‘‘தாய் திட்டம்’’ செயல்படுத்தப்படும் கிராமங்களுக்கு முதன்மைத் திட்டப் பணிகளுக்கென வழங்கப்படும்.

இதற்கேற்ப அரசு ரூ.532.42 கோடி தொகையினை அரசாணை (நிலை) எண்.97 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா–1) துறை நாள் 1.12.2011ல் 2011–12ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைக்கப்பட்ட வருவாய் நிதியாக முத்திரைத்தாள் மீதான மேல்வரி மற்றும் விளம்பர வரியிலிருந்து பின்வருமாறு விடுவித்துள்ளது.

| | |
|---|---|
| முத்திரைத்தாள் மீதான மேல்வரி | ரூ.528,47,89,051 |
| விளம்பர வரி | ரூ. 3,94,61,464 |
| மொத்தம் | ரூ.532,42,50,515 |

மேற்கண்ட தொகையில் மூன்றில் இரண்டு பங்கு அதாவது ரூ.354.95கோடி தொகையினை கிராம ஊராட்சி ஒன்றியங்களுக்கு 67:33 என்ற விகிதத்தில் 2001

மக்கள் தொகை அடிப்படையில் கீழ்க்கண்டவாறு பிரித்தளித்துள்ளது.

(ரூபாயில்)

| இனம் | கிராம ஊராட்சிகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| முத்திரைத்தாள் மீதான மேல்வரி | 236,05,39,109 | 116,26,53,591 | 352,31,92,700 |
| விளம்பர வரி | 1,76,26,121 | 86,81,522 | 2,63,07,643 |
| மொத்தம் | 237,81,65,230 | 117,13,35,113 | 354,95,00,343 |

மீதமுள்ள மூன்றில் ஒரு பங்கு தொகை ரூ.177,47,50,172/– சிறப்பு முன்னேற்ற திட்டமான "**தாய் திட்டம்**" செயல்படுத்தப்படும் ஊரக பகுதிகளில் முதன்மை பணிகளுக்காக வழங்கப்படும்.

### 2.22. ஊராட்சி அமைப்புகளுக்கான கணக்கீட்டு மென்பொருள் (PRIASOFT) – மாதிரி கணக்கீட்டு முறை

ஊராட்சி அமைப்புகளின் கணக்கீட்டு முறையினை வலுப்படுத்தும் வகையில், 11–வது நிதிக்குழு, உள்ளாட்சி அமைப்புகளின் கணக்கீட்டு படிவங்களை வரையறை செய்திட மத்திய அரசின் கணக்கு மற்றும் தணிக்கைத் தலைவருக்கு பரிந்துரை செய்தது. அதன்படி, 2005ல் ஊராட்சிகளின் பல்வேறு விதமான செயல்பாடுகளை பிரதிபலிக்கும் வகையில் அரசின் கணக்கீட்டு முறைகளைப் போன்று கணக்கு மற்றும் தணிக்கைத் தலைவரால் புதிய முறையிலான கணக்கீட்டு முறை வடிவமைக்கப்பட்டது.



இந்திய அரசின் ஊராட்சி அமைச்சகமானது, ஊராட்சிகளின் வரவு செலவு அறிக்கை மற்றும் கணக்கீட்டு முறைகளை மேலும் எளிமைப்படுத்தும் விதம் குறித்து ஆய்வு செய்யும் வகையில் தொழில் நுட்பக்குழு ஒன்றை நியமித்தது. இத்தொழில் நுட்பக் குழுவானது, ஒன்று சேர்ந்த கணக்கீட்டு (Accrual Accounting) முறைக்கு மாறும் வசதியுடன் கூடிய எளிதாக்கப்பட்ட தொகை அடிப்படையிலான (Cash Based Accounting) மாதிரி கணக்கீட்டு முறை ஒன்றினை ஊராட்சி அமைப்புகளுக்கென வடிவமைத்தது.

தமிழக அரசு, 26.09.2011 அன்று நடைபெற்ற உயர்நிலை கண்காணிப்புக் குழு கூட்டத்தில் செயல்பாட்டிற்கான மானியத்தினை மத்திய அரசிடமிருந்து (Performance Grant) பெறும் வகையில் பிரியாசாப்ட் – மாதிரி கணக்கீட்டு முறையினை செயல்படுத்த வேண்டுமென்ற 13வது நிதிக்குழுவின் நிபந்தனைகளை நடைமுறைப்படுத்த முடிவெடுத்தது.

பிரியாசாப்ட் என்பது ஊராட்சி அமைப்புகளுக்கான கணக்கீட்டு மென் பொருள் என்பதன் ஆங்கில வடிவத்தின் (Panchayat Raj Institutions Accounting Software) சுருக்கமாகும். மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராம ஊராட்சி ஆகிய மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் பயன்படுத்தும் வகையில் மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகத்தின் கலந்தாலோசனையுடன், மத்திய அரசின் தகவல் தொடர்பு தொழில்நுட்ப அமைச்சகத்தைச் சேர்ந்த

தேசிய தகவல் மையம் ஒருங்கிணைந்த கணக்கீட்டு மென்பொருள் ஒன்றினை உருவாக்கியது. இம்மென்பொருளானது, மத்திய கணக்கு மற்றும் தணிக்கைத் தலைவரால் மாற்றியமைக்கப்பட்ட மாதிரி கணக்கீட்டுப் படிவங்களுடன் பொருந்தும் வகையில் அமைந்திருப்பது இதன் சிறப்பு அம்சமாகும்.

2012–13ஆம் ஆண்டிலிருந்து பிரியாசாப்ட் கணக்கீட்டு முறையினை அனைத்து கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளிலும் செயல்பாட்டிற்கு கொண்டு வர தமிழக அரசு முடிவு செய்துள்ளது. அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளிலும் ஒரே நேரத்தில் இம்முறை செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும். கிராம ஊராட்சிகளில் இது படிப்படியாக செயல்படுத்தப்படும்.

கிராம ஊராட்சிகளில் பிரியாசாப்ட் மென்பொருளினை செயல்படுத்த அனைத்து கிராம ஊராட்சிகளும் கணினி வசதிகளைக் கொண்டிருப்பது இன்றியமையாதது ஆகும். கிராம ஊராட்சிகளுக்கு 2004–05ஆம் ஆண்டிலேயே கணினிகள் வழங்கப்பட்டிருந்தாலும் கூட அவற்றில் பெரும்பாலானவை தற்போது செயல்படும் நிலையில் இல்லை. அனைத்து ஊராட்சிகளிலும் பிரியாசாப்ட் கணக்கீட்டு முறையினை செயல்படுத்துவதன் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு, அரசானது 12,524 கிராம ஊராட்சிகளுக்கும் கணினி, அச்சுப்பொறி, தடையில்லா மின் வழங்கி (UPS) மற்றும் அகன்ற அலைக்கற்றை இணைப்பு (Broadband connection) ஆகியவற்றினை வழங்கிட முடிவு செய்துள்ளது. தமிழ்நாடு அரசின் மின்னணு (எல்காட்) நிறுவனமானது கணினிகளை ஒப்பந்த அடிப்படையில் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும். இதற்கான தொகையானது தமிழ்நாடு அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் எல்காட் நிறுவனத்திற்கு வழங்கப்படும். கிராம ஊராட்சிகளில் பணியாற்றும் ஊராட்சிச் செயலர்களால் மேற்படி கணினிகள் இயக்கப்படும்.

இதற்கான பயிற்சி கையேடுகள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் பணியாளர்களுக்கு இது தொடர்பான பயிற்சிகள் மத்திய ஊராட்சி அமைச்சகம் மற்றும் புதுடில்லியில் உள்ள தேசிய தகவல் ஆணையத்தால் 2012–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வழங்கப்படும்.

## 3. மாநிலத் திட்டங்கள்

### 3.1 தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் (தாய்) திட்டம்

தமிழ்நாடு அரசு, பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுகாதார வசதிகள், தரமான கல்வி, அனைத்து காலங்களுக்கும் ஏற்ற சாலை வசதி ஆகியவற்றை அளிப்பதன் மூலம் ஊரகப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தினைத் தொடர்ந்து மேம்படுத்துவது என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளது.

வறுமை ஒழிப்பு, சிறந்த வாழ்வாதாரத்தை வழங்குதல், அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து திட்டங்களை அமல்படுத்த செயல்திட்டம் வகுத்துள்ளது. தற்போதுள்ள நடைமுறையின்படி திட்ட செயலாக்கம் மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்கு கிராம ஊராட்சியை மட்டுமே அடிப்படை அலகாகக் கொண்டு ஊரக வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

ஊரக வளர்ச்சித் துறைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தற்போதுள்ள நடைமுறையைவிட ஒரு படி மேலாக, கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களை திட்டமிடுதல், நிதியளித்தல் மற்றும் செயலாக்கம் ஆகியவற்றிற்கான அலகாக எடுத்துத் திட்டங்களைச் செயல்படுத்த இந்த அரசு முடிவு செய்தது. மாநிலத்தில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளில் 79,394 குக்கிராமங்கள் உள்ள நிலையில், குக்கிராம அளவில் திட்டமிடுதல் மூலம் மட்டுமே கிராமங்களுக்கும், நகர்ப்புறங்களுக்கும் உள்ள வேறுபாட்டினைக் குறைக்க இயலும். கடந்த 10 ஆண்டுகளில் கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு மக்கள் அதிகமாக இடம் பெயர்ந்ததால், நகர்ப்புற வளர்ச்சி விகிதாச்சாரம் அதிகரித்துள்ளது. மேற்கண்ட குறைபாடுகளைச் சரிசெய்ய வேண்டுமெனில், நகரம் மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள வசதிகள் அனைத்தும் கிராமப்புறங்களில் அமைத்திடல் வேண்டும்.



மொத்தமுள்ள 12,524 கிராம ஊராட்சிகளில் 79,394 குக்கிராமங்கள் உள்ள நிலையில், சராசரியாக ஒரு கிராம ஊராட்சியில் 7 குக்கிராமங்கள் உள்ளன. எனினும், கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களின் எண்ணிக்கை மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகிறது. நீலகிரி மாவட்டத்தில் ஒரு கிராம ஊராட்சியில் சராசரியாக 37 குக்கிராமங்களும், விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு கிராம ஊராட்சியில் சராசரியாக 3 குக்கிராமங்களும் உள்ளன. பல்வேறு எண்ணிக்கையிலான குக்கிராமங்களைக் கொண்ட கிராம ஊராட்சிகளுக்குச் சமமான அளவிலான நிதி ஒதுக்கீடு செய்வது வளர்ச்சி நிலையில் வேறுபாட்டினையும், பொதுச் சொத்துகள் உருவாக்கப்படுவதில் மாறுபாட்டினையும் முன்னேற்றத்தில் ஏற்ற தாழ்வுகளையும் உருவாக்கும்.

வள ஆதாரங்களை பகிர்ந்தளிப்பதில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் களையும் நோக்கிலும், குறைந்தபட்ச அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் அனைத்து குக்கிராமங்களுக்கும் சென்றடையும் வகையிலும் ஒரு முன்னோடித் திட்டமாக “தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத்(தாய்) திட்டம்” என்னும் புதிய திட்டம் இவ்வரசால் அறிவிக்கப்பட்டு, 2011–12–ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. *தேசிய அளவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், தமிழகத்தில் தான் குக்கிராமங்களை வளர்ச்சி அலகாகக் கொண்டு முதன்முறையாக, இம்முன்னோடித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.*

அனைத்து குக்கிராமங்களுக்கும் சமமான நிதி ஆதாரம் சரியான விகிதாச்சார அடிப்படையில் அளிக்கும் போதுதான் வளர்ச்சிப் பணிகள் அனைத்து குக்கிராமங்களிலும் செயல்படுத்தப்பட்டு பாரபட்சமற்ற, நியாயமான மற்றும் சீரான வளர்ச்சியை பெறும். ‘‘தாய்’’ திட்டம் அறிமுகப்படுத்தப்படுவது, ஊரக வளர்ச்சித் துறையின் நோக்கில் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தும் விதமாக அமைந்துள்ளது.

தமிழகத்தில், சென்னை நீங்கலாக உள்ள **31** மாவட்டங்களில் **12,524** கிராம ஊராட்சிகள் உள்ளன. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையின்படி, தமிழ்நாட்டில் உள்ள கிராம ஊராட்சிகளின் மக்கள் தொகை **500**க்குக் குறைவாகவும், சில ஊராட்சிகளில் மக்கள் தொகை **10,000**க்கு அதிகமாகவும் உள்ளது.

**மக்கள் தொகையின் அடிப்படையில்**
**கிராம ஊராட்சிகளை வகைப்படுத்துதல்**
**(2001 கணக்கெடுப்பின்படி)**

| வ.எண். | மக்கள் தொகை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 500 மற்றும் அதற்குக் கீழ் | 66 |
| 2. | 501–1000 | 1,175 |
| 3. | 1001–3000 | 7,228 |
| 4. | 3001–5000 | 2,554 |
| 5. | 5001–10000 | 1,354 |
| 6. | 10,000க்கு மேல் | 147 |
| மொத்தம் | | **12,524** |



குக்கிராமங்களின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுக்கும்போது கிராம ஊராட்சிகளைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

**குக்கிராமங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில்**
**கிராம ஊராட்சிகளை வகைப்படுத்துதல்.**

| வ.எண். | குக்கிராமங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 5க்கும் கீழ் | 6,241 |
| 2. | 5–15 | 5,434 |
| 3. | 16–25 | 637 |
| 4. | 25க்கு மேல் | 212 |
| மொத்தம் | | **12,524** |

**நிதி ஒதுக்கீடு:**

குக்கிராமங்களின் எண்ணிக்கையையும், ஊராட்சியில் உள்ள மக்கள் தொகையையும் ஒப்புநோக்கும் போது, குக்கிராமங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மக்கள் தொகையும் கூடுகிறது என்பது தெளிவாகிறது. பின்வரும் அட்டவணையே இதற்குச் சான்றாகும்.

**<u>“தாய்” திட்டத்திற்குத் தேவைப்படும் நிதி</u>**

| வ. எண் | குக்கிராமங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சி களின் எண்ணிக்கை | மொத்த மக்கள் தொகை | ஒரு ஊராட்சிக்கான சராசரி மக்கள் தொகை | ஓர் ஊராட்சிக்கான ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | | | மொத்த தேவை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | குறைந்தபட்ச அடிப்படை மானிய நிதி | கூடுதல் நிதி | மொத்த நிதி | |
| 1. | 5க்கும் கீழ் | 6241 | 12534047 | 2008 | 20 | 0 | 20 | 1248.20 |
| 2. | 5–15 | 5434 | 17392688 | 3201 | 20 | 10 | 30 | 1630.20 |
| 3. | 16– 25 | 637 | 3553429 | 5578 | 20 | 20 | 40 | 254.80 |
| 4. | 25க்கு மேல் | 212 | 1864689 | 8796 | 20 | 30 | 50 | 106.00 |
| மொத்தம் | | 12524 | 35344853 | 19583 | –– | –– | –– | 3239.20 |
| கணக்கெடுப்பு, தகவல்,கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகள், ஆரம்ப கட்டப் பணிகள் மற்றும் விருதுகளுக்கான நிதி | | | | | | | | 160.80 |
| **பெருமொத்தம்** | | | | | | | | **3,400.00** |

அதிக அளவிலான குக்கிராமங்களைக் கொண்ட ஊராட்சிக்கு அதிக அளவிலான நிதி தேவைப்படுகிறது. இதன் அடிப்படையில் அனைத்து ஊராட்சிகளும் நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு வகைக்கேற்பவும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதாவது, அதிகக் குடியிருப்புகள் மற்றும் அதிக மக்கள் தொகையுடைய ஊராட்சிகள் அதிக நிதி ஒதுக்கீட்டினைப் பெறும். மேற்குறிப்பிட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி ஐந்து ஆண்டுகளில் அனைத்து 12,524 ஊராட்சிகளிலும் உள்ள அனைத்து குக்கிராமங்களிலும் ரூ.3,400 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் முழுமையாக செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டு 2011–12 ஆம் ஆண்டில் ரூ.680 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.



### திட்டக் கூறுகள்

"தாய்" திட்டத்தில் அனுமதிக்கப்படும் பணிகள் பின்வருமாறு மூன்று வகைப்படும்

| வ. எண் | குறைந்த பட்ச அடிப்படை தேவைகள் | கூடுதல் தேவைகள் | இதர பணிகள் |
|---|---|---|---|
| 1 | குடிநீர் விநியோகம் | அங்கன்வாடி மையம் | அனுமதிக்கப்பட்ட இதரப் பணிகள் |
| 2 | தெருவிளக்குகள் | பொது விநியோகக் கடை | |
| 3 | சாலைகள் | சுய உதவிக்குழு கட்டிடம் | |
| 4 | சுடுகாடு / இடுகாடு | கதிரடிக்கும் களம் | |
| 5 | சுடுகாடு / இடுகாட்டிற்கு சாலை வசதிகள் | விளையாட்டு மைதானம் | |

### குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகள்

### 3.1.1. குடிநீர் விநியோகம்

குடிநீர் விநியோகப் பணிகளான சிறுமின்விசை இறைப்பான், குடிநீர்க் குழாய் விரிவாக்கம், தற்போதுள்ள தனிமின்விசைத் திட்டத்திற்கான நீராதாரத்தினைப்

பெருக்குதல் போன்ற பணிகள் தேவையின் அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்படலாம்.

### 3.1.2. தெரு விளக்குகள்

புதிய குக்கிராமங்கள், விரிவாக்கப் பகுதிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகள் மற்றும் இந்திரா நினைவு குடியிருப்பு வீடுகள் அடங்கிய குடியிருப்புகளில் தேவைக்கேற்ப புதிய தெருவிளக்குகள் அமைக்கப்படலாம். ஏற்கெனவே, உள்ள இடங்களில் தெரு விளக்குகள் பற்றாக்குறையாக இருந்தால் கூடுதல் தெரு விளக்குகளும் அமைக்கலாம். சூரிய சக்தி தெருவிளக்குகளும் இத்திட்டத்தில் அமைக்கலாம்.

### 3.1.3. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள்

இருபுறங்களிலும் குடியிருப்புகள் அதிகமாக உள்ள இடம், தாழ்வான பகுதிகளில் அமைந்து, மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கும் தெருக்கள் அல்லது சந்துகள், ஏற்கனவே சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கப்பட்ட தெருக்களில் விடுபட்ட பகுதி ஆகியன முன்னுரிமை அடிப்படையில் எடுக்கப்பட்டு சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கப்படலாம்.

### 3.1.4 இணைப்புச் சாலைகள்

பேருந்துகள் செல்லும் சாலைகள், கற்சாலைகளைத் தார்ச் சாலைகளாக தரம் உயர்த்துதல், ஒரு கிராம ஊராட்சியில் இரண்டு அல்லது அதற்கு மேல் உள்ள குக்கிராமங்களை இணைத்துச் சாலை அமைத்தல், மண்



சாலைகள் / சரளைச் சாலைகளை தரம் உயர்த்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளலாம்.

### 3.1.5 சுடுகாடு / இடுகாடு

ஒவ்வொரு சுடுகாடு/இடுகாட்டிற்கும் அணுகு சாலைகள், சுற்றுச்சுவர், சுடுகாட்டுக் கொட்டகை, தண்ணீர் வசதி மற்றும் விளக்கு வசதிகள் தேவையின் அடிப்படையில் செய்து தரப்பட வேண்டும்.

### 3.1.6 சுடுகாடு / இடுகாட்டிற்கு சாலை வசதி செய்தல்

சாலை வசதி இல்லாத சுடுகாடு / இடுகாட்டிற்கு முன்னுரிமை அடிப்படையில் அணுகுசாலை அல்லது பாதை அமைக்கப்பட வேண்டும். ஏற்கெனவே சாலை வசதி உள்ளதெனில் மேற்படி சாலையின் தற்போதைய தன்மையைக் கருத்திற்கொண்டு தேவையின் அடிப்படையில் சாலை மேம்பாடு செய்ய வேண்டும்.

ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் நிறைவேற்றப்படும் பல்வேறு திட்டங்கள் அல்லது பிற துறைகளில் உள்ள பல வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

### 3.1.7. திட்ட செயலாக்கம்

இத்திட்டம் 2011–12ம் ஆண்டு முதல் 2015–16ம் ஆண்டு வரை ஐந்து கட்டங்களாக செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டது. முதற்கட்டமாக, 2011–12ம் ஆண்டில் 2,020 கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த 25,335 குக்கிராமங்கள்

தெரிவு செய்யப்பட்டு ஆண்டொன்றுக்கு ரூ.680 கோடி ஆண்டு ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2012–13ம் ஆண்டில் இத்திட்டம் 2,250 கிராம ஊராட்சிகளில் உள்ள 18,581 குக்கிராமங்களில் செயல்படுத்தப்படும்.

மீதமுள்ள குக்கிராமங்களில் பின்வருமாறு இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

| வ.எண் | ஆண்டு | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | குக்கிராமங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 2013–14 | 2,500 | 15,115 |
| 2 | 2014–15 | 2,740 | 12,093 |
| 3 | 2015–16 | 3,014 | 8,270 |

இவ்வாறு 12,524 கிராம ஊராட்சிகளில் அமைந்துள்ள 79,394 குக்கிராமங்களிலும், 2015–16க்குள் அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து முடிக்கப்படும்.

### 3.1.8. 2011–12ம் ஆண்டில் திட்ட செயலாக்கம்

2011–12ம் ஆண்டிற்கான 2,020 கிராம ஊராட்சிளைச் சேர்ந்த 25,335 குக்கிராமங்களில் தற்போதுள்ள அடிப்படை வசதிகள் மற்றும் தேவைப்படும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை கண்டறிய 2011 நவம்பர் மற்றும்



டிசம்பர் மாதங்களில் ஒரு விரிவான கணக்கெடுப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு அனைத்து புள்ளி விவரங்களும் ஊரக வளர்ச்சித்துறையின் வலைதளத்தில் (www.tnrd.gov.nic.in) உள்ளீடு செய்யப்பட்டுள்ளன.

நாட்டிலேயே முதன் முறையாக குக்கிராம அளவில் தற்போதுள்ள வசதிகளை மதிப்பீடு செய்யவும், நுண்ணிய அளவில் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும், முதன்முறையாக மேற்கொள்ளப்பட்ட தனித்தன்மை வாய்ந்ததொரு கணக்கெடுப்புப் பணி இதுவாகும்.

இக்கணக்கெடுப்புப்பணி பின்வரும் 12 படிவங்களுடன் அடிப்படைத் தேவைகளான குடிநீர் விநியோகம், தெருவிளக்குகள், சாலைகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளை குக்கிராம அளவில் கணக்கீடு செய்யும் அளவில் வடிவமைக்கப்பட்டதாகும்.

1. குக்கிராமம் குறித்த அடிப்படை விவரங்கள்
2. குடிநீர் விநியோகம்
   (அ). மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்
   (ஆ). சிறுமின்விசை பம்புகள்
   (இ). தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகள்
   (ஈ). கைப்பம்புகள்
3. தெருவிளக்குகள்
4. தெருக்கள் மற்றும் சந்துகள்
5. இடுகாடு/சுடுகாடு
6 (அ). அரசு / உள்ளாட்சி கட்டிடங்கள்
   (பள்ளி கட்டிடங்கள் நீங்கலாக)

(ஆ). அரசு/உள்ளாட்சி பள்ளி கட்டிடங்கள்

7. சிறுகுளங்கள் மற்றும் ஊரணிகள்

8. விளையாட்டு திடல்கள்

9. பேருந்து நிலையங்கள்

10. சந்தைகள்

11. சுய உதவிக்குழுக்கள் குறித்த விவரங்கள்

12 (அ). கிராம ஊராட்சி சாலைகள்

(ஆ). ஊராட்சி ஒன்றிய சாலைகள்

விரிவான புள்ளி விவர கணக்கெடுப்பின் அடிப்படையில் 2011–12ம் ஆண்டிற்கான திட்ட செயலாக்க கிராம ஊராட்சிகளான 2,020ல் அமைந்துள்ள 25,335 குக்கிராமங்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படைத் தேவைகள் மற்றும் கூடுதல் தேவைகளை நிறைவேற்றும் வகையில் கீழ்க்கண்டவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேவைப்படுமென கண்டறியப்பட்ட மொத்த பணிகளின் எண்ணிக்கை, குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகள், கூடுதல் அத்தியாவசிய தேவைகள் மற்றும் இதர தேவைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படும் பணிகள் ‘தாய்’ திட்டத்தின்கீழ் பின்வரும் அட்டவணையில் கண்டுள்ளவாறு எடுக்கப்பட்டுள்ளது.



| வ.எண் | பணி விவரம் | எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| i. | குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகள் | 66,954 | 62,891.67 |
| ii. | கூடுதல் அத்தியாவசிய தேவைகள் | 303 | 908.93 |
| iii. | இதர தேவைகள் | 975 | 1,544.47 |
| | மொத்தம் | 68,232 | 65,345.07 |

‘தாய்’ திட்டம் தவிர, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் 13வது நிதிக்குழு மான்யம் போன்ற ஊரக வளர்ச்சி திட்டங்களின் மூலம் ரூ. 31.93 கோடி மதிப்பீட்டில் 3,223 பணிகள் எடுத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. கண்டறியப்பட்ட அனைத்து தேவைகளையும் 2012–13–ம் ஆண்டிற்குள் இதர திட்ட நிதிகளை ஒருமுகப்படுத்துவதன் மூலம் பூர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3.1.9. 2012–13ம் ஆண்டில் “தாய்” திட்ட செயலாக்கம்

- தாய் திட்டம் 2250 கிராம ஊராட்சிகளில் உள்ள 18581 குக்கிராமங்களில் ரூ.750 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

- விரிவான புள்ளி விவர கணக்கெடுப்பு நடைபெற்று வருகிறது. இதன் மூலம் சரியான தேவை அளவிடப்பட்டு **2012–13**ம் ஆண்டில் தாய் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்படும்.

- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மற்றும் இதர துறைகளில் உள்ள திட்ட நிதிகளும் ஒருமுகப்படுத்தப்பட்டு அனைத்து தேவைகளும் நிறைவேற்றப்படும்.

**2013–14, 2014–15** மற்றும் **2015–16**ம் ஆண்டுகளில் இத்திட்டத்தினை செயல்படுத்தும் வகையில் எஞ்சியுள்ள குக்கிராமங்களில் உள்ள அனைத்து தேவைகளையும் மதிப்பீடு செய்ய விரிவான புள்ளி விவர கணக்கெடுப்புப் பணியினை இவ்வாண்டின் இரண்டாம் காலாண்டிற்குள் பூர்த்தி செய்வதன் மூலம் இதர திட்ட நிதிகளை இக்குக்கிராமங்களில் **2012–13**ம் ஆண்டு முதல் ஒருமுகப்படுத்தி தேவைகள் நிறைவேற்றப்படும்.

### 3.2. முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் **03.06.2011** அன்று மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் ''இந்த அரசு கிராமப்புற ஏழைகள் பயன்பெறும் வகையில் 'சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம்' தொடங்கி சுமார் **300** சதுர அடி அளவில் ரூ.**1.80** இலட்சம்



அலகுத்தொகையில் முழு செலவினையும் அரசே ஏற்று வீடுகளை கட்டிக் கொடுக்கும்'' என அறிவிக்கப்பட்டது.

அதன்படி ஒவ்வொரு வீடும் ரூ.**1.80** இலட்சம் அலகு தொகையில் **300** சதுர அடி பரப்பளவில் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகளை ஆண்டு ஒன்றுக்கு **60,000** வீடுகள் என்ற அடிப்படையில், **2011–12**–ல் தொடங்கி, அடுத்து வரும் **5** ஆண்டுகளில் இவ்வீடுகளை கட்டுவது என அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ''முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்'' என பெயரிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால். அனுமதிக்கப்பட்ட ''முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகள், ஊரகப் பகுதிகளில் மிகவும் தேவையென கண்டறியப்பட்ட ஊரக வீட்டு வசதிகளை உருவாக்குவதற்கான வளர்ச்சித் திட்ட அணுகுமுறைகளின் வரலாற்றில் இது மற்றுமொரு மைல் கல்லாகும். இலவசமாக வீடுகள் கட்டித்தரப்படும் திட்டங்களில், **300** சதுர அடி பரப்பளவில் சூரிய மின்சக்தியுடன் கூடிய இவ்வீடுகள் கட்டும் திட்டத்தைப் போல் இந்நாட்டிலேயே வேறெங்கும் கட்டித்தரப்படுவதில்லை.

#### 3.2.1 இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்

- ஊரகப் பகுதிகளில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள் அனைவரும் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் பெற தகுதியானவர்கள்.

- ஒவ்வொரு வீடும் 300 சதுர அடி பரப்பளவில், ரூ.1.80 இலட்சம் – அலகுத் தொகையுடன் மாநில அரசின் முழு நிதி உதவியுடன் கட்டப்படுகிறது..
- ஒவ்வொரு வீடும், வசிக்கும் அறை, படுக்கை அறை, சமையல் அறை, கழிப்பறை மற்றும் தாழ்வாரம் ஆகிய வசதிகள் மற்றும் மழைநீர் சேகரிப்பு அமைப்புடனும் கட்டப்படவுள்ளது.
- ஒவ்வொரு வீட்டிலும் 5 சூரிய ஒளி சக்தியில் எரியும் அடர்குறு விளக்குகள் அமைக்கப்படும். இவை படுக்கை அறை, வசிக்கும் அறை, சமையல்அறை, கழிப்பறை மற்றும் தாழ்வாரம் ஆகிய பகுதிகளுக்கு ஒரு விளக்கு வீதம் அமைக்கப்படும். பயனாளிகள் ஒவ்வொருவரும் தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து மின் இணைப்பு பெறும் விருப்பத்திற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ.1.80 இலட்சம் அலகு தொகையாகும். கட்டுமானத்திற்கான ரூ.1.50 இலட்சம் மற்றும் சூரிய சக்தி விளக்குகளுக்கான ரூ.30,000 இதில் அடங்கும்.
- வீடுகள் கட்டும் பணி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சூரிய சக்தி விளக்குகள் அமைக்கும் பணியை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை செயல்படுத்தும்.



- பசுமை வீடுகள் பயனாளிகளின் குடியிருப்பு அமைந்துள்ள இடம் அல்லது கிராம ஊராட்சியின் பிற பகுதியில் அமைந்துள்ள பயனாளிக்குச் சொந்தமான இடங்களில் கட்டித்தரப்படும். மேலும், இத்திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்படுவதற்கென நில எடுப்புகள் ஏதும் செய்யப்படமாட்டாது. வீட்டுமனை பட்டா உள்ளவர்கள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் தகுதியானவர்கள் ஆவர்.
- சூரிய சக்தி விளக்குகள் மற்றும் இதர உபகரணங்களை வழங்குதல் அவற்றை நிறுவுதல் ஆகியவற்றை அனுமதிக்கப்பட்ட வழிமுறைகளின்படி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநர்களுடன் ஒருங்கிணைந்து, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை செயல்படுத்தும்.

### 3.2.2. மாதிரி வடிவமைப்பு மற்றும் அலகுத்தொகை

- ஒவ்வொரு பசுமை வீடும் அதிகபட்சம் 300 சதுர அடி பரப்பளவை கொண்டதாகவும், ரூ. 1.80 லட்சம் அலகுத்தொகையில் கட்டப்படும். இந்த வீடுகளில், வசிக்கும் அறை, படுக்கை அறை, சமையலறை மற்றும் கழிப்பறை ஆகியவற்றுடன் கட்டப்படும். முழு சுகாதாரத் திட்டத்தின் கீழ் பெறப்படும் நிதியை பயன்படுத்தி இக்கழிப்பறை கட்டப்படும். அனைத்து பசுமை வீடுகளிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்தப்படும். சூரிய சக்தி விளக்குகள் மற்றும்

இதர கருவிகளை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையினால் சம்பந்தப்பட்ட மாவட்ட அலுவலர்களின் ஒத்துழைப்புடன் பசுமை வீடுகளில் அமைக்கப்படும்.

- ஒவ்வொரு பசுமை வீடும் அனுமதிக்கப்பட்ட பரப்பளவான 300 சதுர அடிக்கு மிகாமல் இதற்கென தனியாக வடிவமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வீடுகள் விரைந்து கட்டி முடிக்கும் வகையிலும் ஒரே மாதிரியான வடிவமைப்பிலும் கட்டப்பட வேண்டும் என்பதால் இதன் வடிவமைப்பில் மாறுதல்கள் அனுமதிக்கப்படுவதில்லை.
- இருப்பினும் அனுமதிக்கப்பட்ட வீட்டின் பரப்பளவான 300 சதுர அடியில் வீட்டின் வடிவமைப்பில் மாறுதல் செய்யாமல், சமையலறை மற்றும் படுக்கை அறை ஆகியவற்றை இடஅமைவிற்கேற்ப மாற்றி அமைக்க அனுமதிக்கப்படும்.
- செராமிக் ஓடுகளில் இத்திட்டத்திற்கென வடிவமைக்கப்பட்ட சின்னத்தை அனைத்து வீடுகளிலும், அனைவரும் பார்க்கும் வகையில் வீட்டின் வடிவமைப்பில் உள்ளவாறு நிர்ணயிக்கப்பட்ட இடத்தில் பதிக்கப்பட வேண்டும்.
- இத்திட்டத்தில் கட்டி முடிக்கப்பட்ட அனைத்து வீடுகளிலும் திட்டத்தின் பெயர், பயனாளியின் பெயர் மற்றும் வீடு கட்டப்பட்ட ஆண்டு ஆகிய விபரங்கள்



தெளிவாகத் தெரியும் வகையில் வண்ணத்தினால் எழுதப்படவேண்டும்.

### 3.2.3 சூரிய சக்தி விளக்குகள் நிறுவுதல் :

கீழ்குறிப்பிட்ட வழிமுறைகளை பின்பற்றி பசுமை வீடுகளில் சூரிய சக்தி விளக்குகள் அமைக்கவும், செயல்படுத்தவும் மற்றும் பராமரிக்கப்படவும் உள்ளது:

- ஒவ்வொரு வீடுகளிலும் சூரிய மின் ஒளி அமைப்பு மூலம் 5 அடர்குறு விளக்குகள் (CFL) அமைக்கப்படும்.
- வீட்டின் உட்புறம் செய்யவேண்டிய கம்பி அமைப்பு (wiring) வேலை கட்டுமானப்பணியுடன் சேர்த்து செய்யப்படும். மின்மாற்றி மற்றும் ஸ்விட்சு நிறுவும் பணியை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை மூலம் செயல்படுத்தப்படும்.
- வழங்கப்பட்ட பொருட்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கான உத்தரவாதம் மற்றும் ஒன்று/இரண்டு/மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படும் அமைப்புகளுக்கு வருடாந்திர பராமரிப்பு கட்டணம் ஆகியவை விலைப்புள்ளி அடிப்படையில் முடிவு செய்யப்படும். தொடர்புடைய நிறுவனம் வட்டார அளவிலும், மாவட்ட அளவிலும் பராமரிப்பு மையங்களை அமைக்க வேண்டும். மேலும், இப்பொருட்களை தயாரித்த மற்றும் விநியோகித்த நிறுவனங்களால் மாவட்ட அளவில்

சிறப்பு தொலைபேசி இணைப்பு (Helpline) ஒன்று அமைக்கப்படும்.

- ஒரு வீட்டிற்கு சூரிய சக்தி விளக்கு அமைப்பதற்கு தேவையான தொகை ரூ.30,000/–ஐ சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் பட்டியலிட்டு கருவூலத்திலிருந்து பெற்று, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் கணக்கில் வைத்திருக்க வேண்டும். இதற்குரிய தகுதியான மானியத்தொகையினை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் புதுடெல்லியில் உள்ள புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தில் இருந்து பெற்று தமிழ்நாடு அரசுக்கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.
- இத்திட்டத்தினை செயல்படுத்தும்போது பெறப்படும் ஏதேனும் வட்டி மற்றும் இதர சேமிப்புத்தொகை இருப்பின் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை அதனை தமிழ்நாடு அரசுக்கணக்கில் செலுத்திட வேண்டும்.
- தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், 1998ன் படி, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையினால் இதற்குரிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும்.
- சூரிய சக்தி விளக்குகள் அமைப்பு பராமரிப்பது தொடர்பான சிற்றேடு/துண்டுப் பிரசுரம் மற்றும் இதர பயிற்சி கையேடுகள் வெளியிடத் தக்க



நடவடிக்கைகள் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையால் எடுக்கப்பட வேண்டும். மேலும் 'செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை' குறித்த கையேடு ஒன்றையும் நடைமுறையிலுள்ள உள்ளூர் மொழியில் தயாரித்து பயனாளிகளுக்கு வழங்கிட வேண்டும்.

- விநியோகிஸ்தர்களுக்கும், பயனாளிகளுக்கும் இடையே சரியான புரிந்துணர்வை ஏற்படுத்த கிராம ஊராட்சி தலைவர்கள், ஊராட்சி செயலர்கள், தேர்வு செய்யப்பட்ட சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் தகுதியான உள்ளூர் பிரதிநிதிகள் ஆகியவர்களுக்கு உரிய பயிற்சியளிக்க தேவையான பயிற்சி தொகுப்புகள் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையினால் தயாரிக்கப்படும்.

### 3.2.4. பணிகளை செயல்படுத்துதல்

இவ்வமைப்பினை நிர்மாணிக்கும் மற்றும் செயல்படுத்தும் நிறுவனங்கள் 2 வருட உத்திரவாதத்திற்கும் மற்றும் கூடுதல் 1/2/3 ஆண்டுகள் முழுமையான பராமரிப்பு ஒப்பந்தத்திற்கும் பொறுப்பேற்க வேண்டும். திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையுடன் ஒருங்கிணைந்து செயல்படவும் கண்காணிக்கவும் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, ஒரு உதவி செயற்பொறியாளர்/உதவி பொறியாளர் மற்றும் இளநிலை உதவியாளர்–கணினி இயக்குநர் நிலையில் ஒருவரையும் ஒவ்வொரு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் பணியமர்த்த வேண்டும். திட்ட

இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை பணியாளர்கள் பணியாற்ற தனி அறை ஒன்றை ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

### 3.2.5. தரக்கட்டுபாடு மற்றும் ஆய்வு

திட்ட மேலாண்மை ஆலோசகர்கள் மற்றும் ஆய்வு மேற்கொள்ள நிர்ணயிக்கப்படும் நிறுவனங்கள் ஆகியவற்றினை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை முடிவு செய்யும். வாங்கப்படும் பொருட்களின் தரம் மற்றும் முடிக்கப்பட்ட வேலைகளின் அளவுகள் நிர்ணயிக்கப் பட்டுள்ளவாறு உள்ளதா என்பதை ஆய்வு செய்ய வேண்டியது இந்நிறுவனங்களின் பொறுப்பாகும். பொருட்கள் விநியோகம் செய்வதற்கு முன் அவை இருப்புவைக்கப்பட்ட விநியோகஸ்தர்களின் இடத்தில் வைத்து ஆய்வு செய்வதும் இந்த நிறுவனங்களின் பொறுப்பில் அடங்கும்.

விளக்குகள் அமைக்கப்பட்ட பின் இப்பணியினை திட்ட மேலாண்மை ஆலோசகர்கள் 100 சதவீதம் ஆய்வு மேற்கொண்டு வேலை நடைபெற்றதை உறுதி செய்ய வேண்டும். அமைக்கப்பட்ட சூரிய சக்தி விளக்குகள் மற்றும் அமைப்புகளில் ஏதேனும் பழுதுகள் ஏற்பட்டால் அதனை உடனடியாக பழுது நீக்கம் செய்யும் பொருட்டு தொடர்புடைய பயனாளி, கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட நிர்வாகத்தினால் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட வேண்டும்.



அமைக்கப்பட்ட விளக்குகளில் / அமைப்பில் ஏதேனும் குறைபாடுகள் / திருப்தியின்மை போன்றவை தர ஆய்வின் போது கண்டறியப்பட்டால் தொடர்புடைய ஒப்பந்ததாரர் குறிப்பிட்ட காலத்திற்குள் பழுதான பொருளை மாற்றித் தருவதையும் அல்லது சரியாக செய்யப்படாத வேலையை சரிசெய்வதையும் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை உறுதி செய்யும். அனைத்து பணிகளுமே திருப்திகரமாக இல்லையெனில் அவ்வினங்களில் பழுதுநீக்கம் செய்த பின் ஒப்பந்ததாரரிடமிருந்து பழுது நீக்கம் செய்யப்பட்டதென அறிக்கைப் பெற்ற பின்னரும் அப்பணி மறு ஆய்வு செய்யப்படலாம். பழுது நீக்கம் செய்த பின் பணி திருப்திகரமாக முடிக்கப்பட்டுள்ளதென அறிக்கை வரப்பெற்றால் மட்டுமே தொடர்புடைய நிறுவனங்களுக்கு நிதி விடுவிக்கப்பட வேண்டும். மேற்படி பணிகளை கண்காணிப்பதற்காக தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை தகுதியான உயர் அலுவலர் ஒருவரை நியமிக்கும்.

### 3.2.6 சூரிய சக்தி அமைப்புகளை பராமரித்தல்

செயல்படுத்தும் நிறுவனங்களுடன் முடிவு செய்யப்படும் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, ஒவ்வொரு ஊராட்சியிலும் உள்ள பயனாளிகள் மற்றும் 4 சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு, அமைக்கப்பட்ட விளக்குகள் மற்றும் சூரிய சக்தி அமைப்புகளை அன்றாடம் பராமரிப்பு செய்யும்வகையில் அவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டியது சம்மந்தப்பட்ட நிறுவனங்களின் முழு பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

### 3.2.7. மாநில அதிகாரமளிக்கப்பட்ட குழு

தமிழ்நாடு அரசால், தலைமைச் செயலாளரின் தலைமையில் மாநில அதிகாரமளிக்கப்பட்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதில் கீழ்க்கண்டவர்கள் உறுப்பினர்களாக அங்கம் வகிப்பார்கள். திட்ட மதிப்பீடுகளை திருத்தம் செய்வது, திட்ட செயல்பாடுகளை ஆய்வு செய்வது மற்றும் கண்காணிப்பது, மேலும் இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திட தேவையான நெறிமுறைகளை அவ்வப்போது வகுத்தளிப்பது, திட்டங்களுக்கு ஒப்பளிப்பு செய்வது ஆகிய பணிகளை இக்குழு மேற்கொள்ளும். மேலும், தொழில்நுட்ப வரையறைகள் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கான ஆவணங்களுக்கு ஒப்புதல் தருவது மற்றும் இறுதியான விலைப்புள்ளிகளை முடிவும் செய்யும் அலுவலர்களுக்கு பரிந்துரை செய்வது ஆகிய பணிகளையும் இக்குழு மேற்கொள்ளும்.

தலைவர் / நிர்வாக இயக்குனர்,
தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை
– உறுப்பினர்–செயலர்
அரசு முதன்மை செயலர், எரிசக்தி துறை
அரசு முதன்மை செயலர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
அரசு முதன்மை செயலர், நிதித்துறை.
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை



பெருந்தலைவர், TANTRANSCO
Dr. கிரிதர், CWET
பேராசிரியர் அசோக் ஜுன்ஜுன்வாலா,
பெருந்தலைவர், RTBI, IIT, Madras.

### 3.2.8. நிதி விடுவித்தல் மற்றும் அரசு மானியம் கோருதல்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் ஆணையரால் இத்திட்டத்திற்கான நிதியை அரசிடமிருந்து பெற்று தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமைக்கு விடுவிக்கப்படும். ஒப்பந்த நிறுவனங்களுக்கு பணியின் முன்னேற்றத்திற்கு ஏற்ப நிதி விடுவிக்கப்படும். பணிகள் திருப்திகரமாக முடிக்கப்பட்டுள்ளதென தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் அதிகாரம்பெற்ற அலுவலர் மூலம் உரிய சான்றிதழ் கிடைக்கப்பெற்றவுடன் ஒப்பந்த நிறுவனங்களுக்கு இறுதித் தொகை வழங்கப்படும். மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்திடமிருந்து பெற்று தமிழ்நாடு அரசிற்கு மீள செலுத்த வேண்டிய மானியம் பெறுவதற்கான விண்ணப்ப படிவங்களை அனுப்பும் பணியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையுடன் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை இணைந்து செயல்படும். இதன் தொடர்பாக மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் வரையறை செய்துள்ள படிவத்தில் இதற்கான விண்ணப்பத்தை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அனுப்பி வைக்கும்.

### 3.2.9. உத்தரவாதம்

மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நல்ல தரநிர்ணயம் மற்றும் நிபந்தனைகளை நிறைவு செய்வதை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை உறுதிப்படுத்த வேண்டும். சூரிய சக்தி பலகை, மின்கலம் மற்றும் தொடர்புடைய உபகரணங்களுக்கான உத்தரவாதம் ஒப்பந்தத்தில் இடம் பெற வேண்டும். சூரிய சக்தியில் இயங்கும் விளக்குகளுக்கு குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். மேலும், 2 ஆண்டுகளாக உத்தரவாதம் முடிவுற்ற பின்னர் மேற்கொண்டு 3 ஆண்டுகளுக்கு முழுமையான வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (CAMC) ஒப்பந்தப்புள்ளி முறையில் இறுதி செய்யப்படும். ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள முழுமையான வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தத் (CAMC) தொகை, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையில் உள்ள நிதி நிலையினை பொறுத்து எத்தனை ஆண்டுகளுக்கு வழங்குவது என்று இறுதி முடிவு மேற்கொள்ளப்படும்.

### 3.2.10. பயிற்சிக்கான உபகரணங்கள்

சூரிய சக்தி விளக்குகளின் உபகரணங்களை பயன்படுத்துவது மற்றும் பராமரிப்பது தொடர்பான பயிற்சி கையேடுகள் / துண்டறிக்கை / துண்டு பிரசுரங்கள் ஆகியவற்றினை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை வெளியிட வேண்டும். மேலும், தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையினால் ‘ செய்ய வேண்டியவை மற்றும்



செய்ய கூடாதவை ‘ என்ற தலைப்பில் துண்டறிக்கை தயார் செய்யப்பட வேண்டும்.

### 3.2.11. மாவட்ட நிர்வாகத்தின் ஒத்துழைப்பு மற்றும் உரிய வசதிகள் செய்தல்

- சூரிய சக்தி விளக்குகள் அமைக்க உள்ள வீடுகளின் விவரங்கள் மற்றும் ஊராட்சிகளின் விவரங்கள் போன்றவற்றை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமைக்கு முன் கூட்டியே அனுப்பப்பட வேண்டும்.
- சூரிய சக்தி விளக்குகள் அமைக்கும் பணியில், தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் மாவட்ட மேலாளர் மூலமாக பணி அமர்த்தப்படும் திட்ட மேலாண்மை ஆலோசகர்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.
- இப் பணி தொடர்புடைய விவரங்களுக்காக எளிதில் தொடர்பு கொள்வதற்கு வழிவகை செய்ய தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, சூரிய சக்தி விளக்குகள் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தயாரிப்பாளர்கள் / விநியோகஸ்தர்கள் / ஒப்பந்ததாரர்கள் (AMC holders) பற்றிய முழு முகவரி மற்றும் தொலைபேசி எண்கள் போன்ற விவரங்களை மாவட்டம், ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சிகள் அளவில் வழங்கிட வேண்டும்.

## 3.2.12. முழுமையான வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (CAMC)

சூரிய சக்தி விளக்குகள் அமைக்க உள்ள நிறுவனங்கள் / விநியோகஸ்தர்கள் / ஒப்பந்ததாரர்களுடன் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை செய்து கொள்ளும் உத்தரவாதம் பற்றிய விவரம் மற்றும் முழுமையான வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்த விவரங்களையும் சூரிய சக்தி விளக்குகள் மற்றும் அமைப்புகளை நிறுவிய பின்னர் பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

## 3.2.13. பயனாளிகளின் தகுதி

பயனாளி கீழ்கண்ட தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்.

- சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
- சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியில் உள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களின் நிரந்தர காத்திருப்போர் பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும்.
- 300 சதுர அடிக்கு குறையாத வீட்டு மனை இடத்திற்கு சொந்தக்காரராக இருக்க வேண்டும்.
- குடும்ப தலைவரின் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினர் எவரேனும் ஒருவர் பெயரிலோ வில்லங்கமற்ற வீட்டுமனை பட்டா இருக்க வேண்டும்.



- அந்த கிராம ஊராட்சியில் அல்லது வேறு எங்கும் கான்கிரீட் கூரை போடப்பட்ட வீடு எதுவும் இருக்கக் கூடாது.
- அரசின் இதர வீடு கட்டும் திட்டங்களில் பயன்பெற்றவராக இருக்கக் கூடாது.

### 3.2.13.1. பயனாளிகள் தேர்வு:

- ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோரின் நிரந்தர காத்திருப்புப் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும். மேலும், மிகவும் வறிய நிலையிலுள்ளோர் தேர்வு செய்யப்பட வேண்டும்.
- பயனாளிகள் பட்டியல் தயாரிக்கப்படும்போது, மாற்றுத் திறனாளிகள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், பெண்களைத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள், திருநங்கைகள், ஹெச்ஐவி/எய்ட்ஸ்/டிபி ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் என துணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) சான்றிதழ் பெற்றவர்கள், வெள்ளம், தீ விபத்து ஆகிய இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப் பட்டோருக்கு முன்னுரிமை அளிக்கப் படவேண்டும். மேலும், மனநிலை பாதிக்கப்பட்டவர் உள்ள குடும்பங்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.

- தகுதியுள்ள ஏழை ஒருவரின் பெயர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோர் பட்டியலில் விடுபட்டிருப்பின், விடுபட்ட நபர் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு விண்ணப்பிக்கலாம். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உதவி இயக்குநர் நிலையில் உள்ள அலுவலர் விவரங்களை சரிபார்த்து மாவட்ட ஆட்சியரின் இசைவுடன் அவரது பெயரை பட்டியலில் இடம் பெற செய்து அதனை கிராம சபாவில் வைத்து ஒப்புதல் பெறவேண்டும். இவ்வாறு சேர்க்கப்படும் நபர் நிரந்தர காத்திருப்பு பட்டியலில் இடம் பெற்று தேர்வு செய்யப்பட பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்.
- கிராம ஊராட்சிகள் தகுதியுள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பயனாளிகளின் பட்டியலை தேர்வு செய்து கிராம சபையில் ஒப்புதலுக்காக வைக்கப்படவேண்டும்.

**3.2.13.2. பயனாளிகள் பட்டியலை சரிபார்த்தல்**

கிராம ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளின் பட்டியலை தொடர்புடைய வட்டார வளர்ச்சி அலுவலரிடம் (வட்டார ஊராட்சி) அளிக்கவேண்டும். துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் ஒன்றிய மேற்பார்வையாளர்கள் பட்டியலில் உள்ள பயனாளிகளின் நில உரிமை, தேவையான இடம் ஆகியவற்றை களத்தில்



ஆய்வு செய்து பயனாளியின் தகுதி மற்றும் நில உடமைகளை உறுதி செய்யவேண்டும்.

**3.2.14. வீடுகள் ஒதுக்கீடு செய்தல்**

i) மாநில அளவில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் இத்திட்டத்தின்கீழ் ஒராண்டில் கட்டப்பட வேண்டிய மாவட்ட வாரியாக வீடுகளின் இலக்கினை ஒதுக்கீடு செய்வார்.

ii) மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர், ஊராட்சிவாரியாக வீடுகளை ஒதுக்கீடு செய்வதை முடிவு செய்வார்.

iii) வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோர் நிரந்தர காத்திருப்புப் பட்டியலில் முன்னுரிமைப்படி தேர்வு செய்யப்பட்ட கிராம சபையில் வைத்து ஒப்புதல் பெறப்பட்ட பயனாளிகளுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

**3.2.15. பணிகளுக்கான உத்தரவு வழங்குதல்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களால் நில உரிமை, இடம் ஆகியவை சரிபார்க்கப்பட்டதை உறுதி செய்த பிறகு தகுதியுள்ள பயனாளிகளுக்கு வட்டார வளர்ச்சி அலுவலர்(வட்டார ஊராட்சி) வேலை உத்திரவினை வழங்க வேண்டும்.

**3.2.16. இடத்தை குறியீடு செய்தல்**

சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியின் ஒன்றிய மேற்பார்வையாளர் அரசினால் ஒப்புதலளிக்கப்பட்ட வடிவமைப்பின்படி வேலையைத் துவக்குவதற்காக நிலத்தினை குறியீடு செய்ய வேண்டும்.

**3.2.17. கட்டுமானப் பொருட்கள் விநியோகம்**

**சிமெண்ட்**

மாநில அளவில், கிராம ஊராட்சிகளுக்குத் தேவையான சிமெண்ட் தங்குதடையின்றி விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ‘அரசு சிமெண்ட்’ (TANCEM) மூலமாக சிமெண்ட் விநியோகம் செய்து அதற்கான தொகையை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் திட்ட நிதியிலிருந்து வழங்கப்படவேண்டும்.

**இரும்புக் கம்பி**

இதேபோன்று, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் தங்களது மாவட்டங்களின் தேவைக்கேற்ப இரும்புக் கம்பிகள் கொள்முதல் செய்து, இதற்கான தொகையைத் திட்ட நிதியிலிருந்து வழங்க வேண்டும்.

**கதவுகள் மற்றும் ஜன்னல்கள்**

பயனாளிகள் கதவுகள் மற்றும் ஜன்னல்களைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ளலாம். பயனாளிகளால் கதவுகள் மற்றும் ஜன்னல்களை ஏற்பாடு செய்ய இயலாத நிலையில், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கதவுகள் மற்றும் ஜன்னல்களை ஏற்பாடு செய்து



வழங்கிவிட்டு அதற்கான தொகையினை திட்ட நிதியிலிருந்து பிடித்தம் செய்து கொள்ளலாம்.

ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மேற்காணும் கொள்முதல்களுக்கு திட்ட இயக்குநர்கள், தங்கள் மாவட்டங்களுக்குத் தேவையான பொருட்களின் மொத்த அளவினை கணக்கிட்டுக்கொள்ள வேண்டும்.

**3.2.18. திட்ட செயலாக்கம்**

- ஒவ்வொரு வருடமும் மாவட்டத்திற்கான ஒதுக்கீட்டின் அடிப்படையில் திட்டத்திற்கான நிர்வாக ஒப்புதல் மாவட்ட ஆட்சியரால் வழங்கப்படும்.
- வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) மூலம் திட்டம் செயல்படுத்தப்படும்.
- வீடுகளைக் கட்டுவதற்கும், தொழில்நுட்ப வேலைகளுக்கும் ஒன்றியப் பொறியாளர்களே பொறுப்பாவார்கள். வீட்டின் பணி முன்னேற்ற ஆய்வு மற்றும் மேலளவு செய்வதை உதவி செயற் பொறியாளர்கள் மேற்கொள்வர்.
- மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர்கள், செயற்பொறியாளர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்கள், வீடுகளின் பணி முன்னேற்றத்தை அடிக்கடி ஆய்வு செய்து அதனை விரைந்து முடிப்பதை உறுதிப்படுத்த வேண்டும். இத்திட்டத்தின்கீழ் மாதிரி

வடிவமைப்பில் எவ்வித மாறுபாடோ அல்லது குறைபாடுகளோ இல்லை என்பதையும் அவர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

**3.2.19. ஆவணப்படுத்துதல்**

வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) வேலைக்கான உத்தரவு வழங்கும் முன்பு பயனாளி தற்போது தான் வசிக்கும் வீட்டின் முன்பாக நின்று எடுத்துக்கொள்ளப்பட்ட புகைப்படத்தினை பதிவு செய்துகொள்ள வேண்டும். இதேமுறையில் வீடுகள் கட்டி முடிக்கப்பட்ட பின்னரும் புகைப்படம் எடுத்து பதிவு செய்துகொள்ள வேண்டும். இறுதி பணப் பட்டுவாடா செய்யும் முன்பாக இந்தப் பதிவுகளை வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) ஆவணப்படுத்த வேண்டும். இத்திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கீட்டில் 1 சதவீதம் ஆவணப்படுத்துதல் மற்றும் செய்தி, கல்வி மற்றும் தொடர்பு (Information, Education and Communication) நடவடிக்கைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**3.2.20. கண்காணித்தல்**

மாவட்ட ஆட்சியர், இத்திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகளின் பணி முன்னேற்றம் மற்றும் சூரிய சக்தி விளக்குகள் மற்றும் அமைப்புகள் நிறுவும் பணியின் முன்னேற்றம் ஆகியவற்றை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை அலுவலர்களுடன்



ஆய்வு செய்வர். இத்திட்டப்பணிகளை கண்காணிக்க உதவி இயக்குநர் நிலையில் தொடர்பு அலுவலர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் நியமனம் செய்யவேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் ஆகியோர் மாவட்ட அளவில் இத்திட்டத்தை முறையாக செயல்படுத்துவதற்கு பொறுப்பாவர். சூரிய சக்தி விளக்கு அமைப்பை நிறுவுதலுக்கு மாநில அளவில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை பொறுப்பாகும்.

**3.2.21. நிதி விடுவிப்பு**

- இத்திட்டத்திற்கான ஆண்டு நிதி ஒதுக்கீட்டிலிருந்து இரண்டு அரையாண்டு தவணைகளில் நிதி விடுவிக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு வீட்டிற்கு ரூ.1,50,000/– வீதமாக மாவட்டங்களுக்கு நிதி விடுவிக்கப்படும். மீதத் தொகை ஒரு வீட்டிற்கு ரு.30,000/– வீதம் சூரிய சக்தியுடன் கூடிய மின்னொளி கருவியினை வாங்குதல் மற்றும் பொருத்துதலுக்காக மேலாண்மை இயக்குநர்/ தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமைக்கு வைப்புத் தொகையாக வழங்கப்படும். மாவட்டங்கள் முறையே அந்தந்த கிராம ஊராட்சிகளுக்கு நேரடியாக நிதியை விடுவிப்பார்கள். வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் மூலமாக நிதி விடுவிக்கப்படக்கூடாது.

- பசுமை வீடுகள் திட்டத்திற்காக மாவட்ட தலைநகரில் மாவட்ட ஆட்சித் தலைவர்/பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை என்ற பெயரில் ஒவ்வொரு மாவட்ட தலைநகரத்திலும் ஒரு தனி சேமிப்பு வங்கி கணக்கை தொடங்கிட வேண்டும். மாவட்ட அளவில் ஒரே ஒரு வங்கி கணக்கு மட்டும் பராமரிக்கப்படும்.
- ‘பசுமை வீடுகள் திட்டம்’ செயல்படுத்தப்படும் கிராம ஊராட்சிகளில், ஆறாவது கணக்காக ‘கிராம ஊராட்சி CMSPGHS திட்டக் கணக்கு’ என்ற பெயரில் செயல்படுத்தப்படும். வரவு வைக்கப்பட வேண்டிய விவரங்கள், அதிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டிய செலவுகளின் வகைகள் மற்றும் கிராம ஊராட்சி பசுமை வீடுகள் திட்ட, திட்டக் கணக்கினை இயக்குதல் குறித்த விவரங்கள் பின்வருமாறு:—
    - **அ) வரவுகள்:** பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் பெறப்படும் நிதியே கிராம ஊராட்சி CMSPGHS திட்டக் கணக்கின் வரவுகள் ஆகும்.
    - **ஆ) செலவுகள்:** CMSPGHS கிராம ஊராட்சியின் இத்திட்ட கணக்கில் வரவு வைக்கப்படும் நிதி இத்திட்டப் பணிகளுக்கு மட்டுமே செலவழிக்கப்பட வேண்டும்.
    - **இ) கணக்குப் பராமரிப்பு முறை:** கிராம ஊராட்சி நிதிக் கணக்கினை பராமரிப்பது



போலவே, மேலே குறிப்பிட்ட இத்திட்டக் கணக்கினையும் கிராம ஊராட்சியின் தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகியோர் இணைந்து பராமரிக்க வேண்டும். இருப்பினும், மாவட்ட ஆட்சியர்கள் சம்மந்தப்பட்ட வங்கிக் கிளைகளுக்கு பசுமை வீடுகள் சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியின் தொகையினை வழங்குவதற்கு தலைவர் மற்றும் துணைத் தலைவர் இருவரின் கையெழுத்து காசோலையில் உள்ளது என உறுதி செய்து வட்டார வளர்ச்சி அலுவலரின் (வட்டார ஊராட்சி) செயல்முறை ஆணைகள் இருப்பதை உறுதி செய்து வங்கிப் பதிவேடுகள் மற்றும் கணினியில் உரிய பதிவுகள் மேற்கொண்ட பின்னரே தொகை வழங்கப்படவேண்டும் என தொடர்புடைய வங்கிக் கிளைகளுக்கு எழுத்து மூலம் அறிவுரைகள் வழங்க வேண்டும். ஒவ்வொரு காசோலையிலும் ‘வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) செயல்முறை ஆணைகள் இணைக்கப்பட்டிருந்தால் மட்டுமே தொகை வழங்கப்பட வேண்டும்’ என முத்திரை இடப்பட்டிருக்க வேண்டும். இத்திட்டக் கணக்கில் சுய கையெழுத்திட்ட காசோலைக்கோ, பணம் பெறும்

படிவத்திலோ தொகை வழங்க அனுமதிக்கக்கூடாது.

- இத்திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அவ்வப்போது ஏற்படும் தேவைகளுக்கேற்ப உரிய மாறுதல் செய்து கொள்ள அரசு அதிகாரம் பெற்றதாகும்.

**3.2.22. முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டச் செயல்பாடு**

2011–12ம் ஆண்டில் ரூ.1,080 கோடி மதிப்பீட்டில் 60,000 பசுமை வீடுகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றில் இதுவரை 1,107 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 58,893 வீடுகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

2012–13ம் ஆண்டில் ரூ.1,080 கோடி ஒதுக்கீட்டில் 60,000 பசுமை வீடுகள் கட்டப்படவுள்ளன.

**3.3. சூரிய சக்தியுடன் கூடிய தெரு விளக்குகள்**

சூரிய சக்தியுடன் கூடிய தெரு விளக்குகளை சோதனை முறையில் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்படும் என்று 3.6.2011 அன்றைய 2011–12ம் ஆண்டிற்கான ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டது. இதன்படி, அரசாணை (நிலை) எண்.91, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (எஸ்.ஜி.எஸ்.3) துறை நாள்.17.11.2011–ல், கிராம ஊராட்சிகளில் உள்ள தெருவிளக்குகளை சூரிய சக்தியை பயன்படுத்தி ஒளிரச்



செய்ய உரிய ஆணை வெளியிடப்பட்டது. 2011–12ம் ஆண்டிலிருந்து, ஒவ்வொரு ஆண்டும் 20,000 தெருவிளக்குகள் வீதம் ஐந்தாண்டுகளில் ஒரு லட்சம் தெருவிளக்குகள் சூரிய சக்தி மூலம் இயங்கும் தெருவிளக்குகளாக மாற்றப்படும்.

இத்திட்டத்திற்கென அரசு, 2011–12ம் ஆண்டில் ரூ.52.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படும். 2011–12ம் ஆண்டில் 20,000 தெருவிளக்குகள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு சூரிய சக்தி தெருவிளக்குகளாக மாற்றப்படும்.

i. சூரிய சக்தியைப் பயன்படுத்தி 1000 தெருவிளக்குகள் தனித்தியங்கும் (stand alone)விளக்குகளாக நிறுவப்படும்.

ii. ஒவ்வொரு 10 தெருவிளக்கிற்கும் பொதுவான 500 வாட் திறன் கொண்ட சூரிய மின் சக்தி நிலையம் அமைத்து, புதிய சூரியசக்தி தெருவிளக்குகள் அமைக்கப்படும். இவ்வாறு 1000 புதிய தெருவிளக்குகள் அமைக்கப்படும்.

iii. ஒவ்வொரு 10 தெருவிளக்கிற்கும் பொதுவான 500 வாட் திறன் கொண்ட சூரிய மின் சக்தி நிலையம் அமைத்து, ஏற்கனவே உள்ள தெருவிளக்குகள் சூரியசக்தி தெருவிளக்குகளாக மாற்றப்படும். இவ்வாறு 18,000 தெருவிளக்குகள் சூரிய சக்தி தெருவிளக்குகளாக மாற்றப்படும்.

இதன் அடிப்படையில், தகுதியுடைய கிராம ஊராட்சிகளையும், ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் தேவைப்படும் இடங்களையும் கீழே குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை கருத்திற் கொண்டு தேர்வு செய்ய வேண்டும்.

i சூரிய சக்தியைப் பயன்படுத்தி எத்தனை தெருவிளக்குகள் எந்தெந்த இடங்களில் / ஊராட்சிகளில் அமைக்கப்பட வேண்டும் என்பதை மாவட்ட ஆட்சித்தலைவர்கள் முடிவு செய்ய வேண்டும்.

ii **2011–12** ஆம் ஆண்டிற்கான சூரிய சக்தியைப் பயன்படுத்தி அமைக்கப்பட வேண்டிய தெருவிளக்குகள், நடப்பு ஆண்டில் தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (தாய்) செயல்படுத்தப்படும் ஊராட்சிகளில்/ குக்கிராமங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

iii. சூரியசக்தியைப் பயன்படுத்தி தனித்தனியாக நிறுவப்படும் தெருவிளக்குகள், மயானம் மற்றும் அதற்குச் செல்லும் பாதை, மின்வசதியே இல்லாத ஒதுக்குப்புறமான பகுதிகளில் புதியதாக நிறுவப்பட வேண்டும்.

iv. மாவட்டத்தின் தொலை தூரப்பகுதிகளில் உள்ள குக்கிராமங்களில் புதிய சூரிய சக்தி தெருவிளக்குகள் தற்போது இயங்கிவரும்



தெருவிளக்குகளுக்கு இடையே நிறுவப்பட வேண்டும்.

v. மின்சார வசதியே இல்லாத கிராமங்களில் சூரிய சக்தி மூலம் இயங்கும் தெருவிளக்குகள் ஒரு வரிசையில் **10** விளக்குகள் அமைந்திடும் வகையில் நிறுவப்பட வேண்டும்.

vi. தொடர்ந்து மின் அழுத்தக் குறைபாடு ஏற்படும் குக்கிராமங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

vii. தொலைதூரத்தில் உள்ள குடியிருப்புகளுக்கும், வனப் பகுதிகளில் அமைந்துள்ள குடியிருப்பு களுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

viii குமிழ் விளக்குகளுக்குப் (Incandescent lamps) பதிலாக சூரிய சக்தி தெருவிளக்குகள் அமைக்க முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

ix. குடியிருப்புக்களில் ஒதுக்குப்புறமாக /தனித்த பகுதிகளில் ஒற்றை தெருவிளக்குகளை அமைத்திட முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

x. ஏற்கனவே உள்ள குமிழ் விளக்குகள்/ குழல் விளக்குகளை மாற்றும் போது ஒரே வரிசையில் தொடர்ச்சியாக உள்ள **10** தெரு விளக்குகளை தேர்வு செய்து ஊரின் மையப் பகுதியில் அமையவுள்ள சூரிய சக்தி நிலையத்தின் மூலம்

தெருவிளக்குகள் அமைத்திட வேண்டும்.

xi. சூரிய சக்தி தெருவிளக்குகள் அமைத்திடுவதற்கான இடம் தேர்வு செய்யும் போது தமிழ்நாடு மின்சார வாரியத்தினையும் கலந்தாலோசித்திட வேண்டும்.

xii. கிராம ஊராட்சிகளில், சூரிய சக்தி நிலையம் அமைக்கத் தேவைப்படும் இடத்தினை வழங்கிட மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, சூரிய சக்தி தெருவிளக்குகள் அமைத்திடும் பணியினை செயல்படுத்தும் நிறுவனமாகும். இம்முகமை, தெருவிளக்குகளை அமைத்திடும் நிறுவனங்களை முடிவு செய்ய ஒப்பந்த புள்ளிகளை கோரியுள்ளது. ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டவுடன் பணிகள் துவங்கப்படும்.

### 3.4. ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

இந்த அரசு “ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்” எனும் திட்டத்தை **2011–12**ம் ஆண்டு துவங்கியுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், ஊரகப் பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான, புதிய கட்டிடங்கள், சமையல் அறை, குடிநீர் வசதி மற்றும் கழிப்பறைகள் ஆகியவைகளை ஏற்படுத்துதல் ஆகும்.



தேவைப்படும் இடங்களில் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணிகளும் இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படும்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப புதிய பள்ளிக் கட்டிடங்கள் அனைத்தும் தட்டோடு பதித்த கான்கிரீட் கூரைகளுடன் தண்ணீர் கசியாத வகையில் கட்டப்படும். புதிய பள்ளிக் கட்டிடங்கள், பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள காலி இடத்தில் அமைக்கப்படும். பள்ளிக் கட்டடம் கட்டத் தேவையான காலி இடம் இல்லாத நிலையில், ஏற்கனவே உள்ள கான்கிரீட் பள்ளிக் கட்டடத்தின் உறுதித்தன்மையை சரிபார்த்து அதன் மேல் தளத்தில் புதிய கட்டடம் அமைக்கப்படும்.

சமையல் அறை இல்லாத ஊராட்சி ஒன்றியப்பள்ளிகளில் புதிய சமையல் அறைகள் அமைக்கப்படும். தேவையின் அடிப்படையில் பழுதுபார்த்தல்/புதுப்பித்தல் பணி மேற்கொள்ளப்படும். ஏற்கனவே உள்ள சமையல் அறைக் கட்டடத்தில் மதிய உணவுத் திட்டத்திற்குத் தேவையான உணவுப்பொருட்களை இருப்பு வைத்துக் கொள்ளும் கூடுதல் அறைகளும் தேவையின் அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படும்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் ஏற்கெனவே உள்ள குடிநீர் வசதி அமைப்புகள் பழுதடைந்து இருப்பின் அவைகள் பழுது நீக்கிச் சீரமைக்கப்படும். குடிநீர்க்குழாய் நீட்டிப்பு பணிகள், புதிய குடிநீர் இணைப்புகள், கழிவறைக்குத்

தேவையான தண்ணீர் வசதி, ஆகியன மேற்கொள்ளப்படும். அவசியமான இடங்களில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைக்கப்படும்.

அனைத்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் பயிலும் மாணவ, மாணவிகளுக்குத் தனித்தனியாக, போதுமான அளவில் கழிப்பறைகள் கட்டப்படுவதை இந்த அரசு உறுதிசெய்யும். நடுநிலைப் பள்ளிகளில் மாணவிகளின் வசதிக்காக எரியூட்டிகள் (Incinerator) அமைக்கப்படும். முழு சுகாதாரத் திட்டத்தின் கீழ் புதிய கழிப்பறைகள் அமைக்கப் போதிய நிதி இல்லையெனில், இத்திட்டத்தின் கீழ் புதிய கழிப்பறைகள் கட்டித் தரப்படும். பேரூராட்சிகள் மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிப் பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ள மாவட்ட அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டது. 2011–12ம் ஆண்டு, இத்திட்டத்திற்காக ரூ.100 கோடி ஒதுக்கப்பட்டது.

அதே போன்று, 2012–13ம் ஆண்டிலும் இத்திட்டத்திற்காக ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், தற்போது மேற்கொள்ளப்படும் பணிகளை தவிர, தேவைகளுக்கேற்ப பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் மற்றும் மிதிவண்டி நிறுத்தம் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படும்.



### 3.5. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கான நிதி முழுவதையும் மாநில அரசே வழங்குகிறது. சட்டமன்ற உறுப்பினர் ஒவ்வொருவரும் தனது தொகுதியில் நிறைவேற்ற விரும்பும் பணிகளை கண்டறிந்து பரிந்துரை செய்வர். இத்திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தேவையான கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ஒவ்வொரு தொகுதிக்கும் வழங்கப்பட்டு வந்த ரூ.1.75 கோடியானது, 2011–12ம் ஆண்டு முதல் ரூ.2.00 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்வாக அனுமதி வழங்கிச் செயல்படுத்தும் முகமையினை நிர்ணயிப்பார். தொகுதிக்கான மொத்த ஒதுக்கீட்டில். ரூ.1.125 கோடி நிதியை அரசால் குறிப்பிடப்பட்ட முன்னுரிமைப் பணிகளுக்கும், மீதமுள்ள ரூ.0.875 கோடி நிதியை சட்டமன்ற உறுப்பினர் தனது விருப்பப்படி திட்ட வழிக்காட்டு நெறிமுறைகளில் குறிப்பிட்டுள்ள பணிகளுக்காகவும் ஒதுக்கீடு செய்யலாம்.

### 3.5.1. சிறப்பம்சங்கள்

### 3.5.1.1. வரையறுக்கப்பட்ட நிதி தொகையான ரூ.1.125 கோடியில் மேற்கொள்ளப்படும் பணிகள்

வரையறுக்கப்பட்ட நிதியின் கீழ் ரூ.1.125 கோடி மதிப்பீட்டில் பணிகளை மேற்கொள்ளலாம். பள்ளிகளுக்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் பழுதுற்ற கழிப்பறைகள், குடிநீர் வழங்கல், சமையல் அறைகள் போன்ற கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில், அங்கன்வாடிக் கட்டிடங்கள், சத்துணவு மையக் கட்டிடங்கள், சத்துணவு சமையற்கூடங்கள் கட்டுதல் ஆகிய பணிகளை ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் எடுத்துச் செய்ய வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மாற்றுத் திறனாளிகளுக்கு கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்கிட ரூ.5.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

வரையறுக்கப்பட்ட நிதியில் மீதமுள்ள ரூ. 62.50 இலட்சம் நிதியில், சட்டமன்ற உறுப்பினர்கள் அவர் தம் விருப்பத்தின் அடிப்படையில் கீழ்க்கண்டவற்றுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பணிகளை தேர்வு செய்யலாம்,.

**அ) ஊரகப் பகுதிகளில்**

1. சூரிய சக்தி தெரு விளக்குகள் பொருத்துதல்



2. சரளை மற்றும் கப்பிச்சாலைகளை தார்ச்சாலையாக மேம்படுத்துதல்
3. மிகவும் பழுதடைந்துள்ள தார்சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார்சாலைப் பணி மட்டும் மேற்கொள்ளல்.)
4. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்
5. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவ மனைகள் ஆகியவைகளுக்குக் கட்டிடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டிக் கொடுத்தல் மற்றும் அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய / ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு விடுதிகள் ஆகியவைகளுக்கு கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல்.
6. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு அனாதை விடுதிகள் ஆகியவைகளுக்கு உள்கட்டமைப்பு வசதி செய்து கொடுத்தல்.
7. பாலங்கள் கட்டுதல்
8. வசதி இல்லாத கிராம ஊராட்சிகளில் கூடுதல் இடுகாடு மற்றும் சுடுகாடு வசதிகளை அமைத்தல்.

9. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட விதிமுறைகளின் அடிப்படையில் புதிய வீடுகள் கட்டுதல்.

**ஆ) நகர்ப்புறப் பகுதிகளில்**

1. சூரிய சக்தி தெரு விளக்குகள் அமைத்தல்
2. சரளை மற்றும் கப்பிச்சாலைகளை தார்ச்சாலையாக மேம்படுத்துதல்
3. மிகவும் பழுதடைந்துள்ள தார்சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார்சாலைப் பணி மட்டும் மேற்கொள்ளல்.)
4. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்
5. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவ மனைகள் ஆகியவைகளுக்கு கட்டடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல் மற்றும் அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய/ ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் விடுதிகளுக்குக் கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல்.
6. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு ஆதரவற்றோர் விடுதிகள் ஆகியவைகளுக்கு உள்கட்டமைப்பு வசதி ஏற்படுத்துதல்.



7. பாலங்கள் கட்டுதல்
8. சுடுகாடு / இடுகாடுகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்
9. தேவையின் அடிப்படையில் மழைநீர் வடிகால் வசதிகளுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் நடைபாதைகள்அமைத்தல்
10. புதிய பூங்காக்கள்அமைத்தல்
11. பொதுக் கழிப்பிடங்கள் கட்டுதல்
12. “ஜெட்ராடிங்” இயந்திரங்கள் மற்றும் “ஹைட்ராலிக்” விசையால் இயக்கப்படுகின்ற தூர்வாரும் இயந்திரங்களை வாங்குதல்.

**3.5.1.2. வரையறுக்கப்படாத தொகையான ரூ.87.50 இலட்சத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள்:**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்ட பட்டியலில் உள்ள கீழ்க்கண்ட பணிகளைத் தவிர ஏனைய பணிகளை வரையறுக்கப்படாத திட்ட நிதியான ரூ.87.50 இலட்சம் ஒதுக்கீட்டிலிருந்து எடுத்துச் செய்யலாம். அதேபோல் வரையறுக்கப்பட்ட நிதியில் எடுத்துச் செய்யக் கூடிய பணிகளையும் வரையறுக்கப்படாத நிதியில் மேற்கொள்ளலாம்.

**3.5.1.3. தடை செய்யப்பட்ட பணிகள்:**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் சிறப்பினமாக எடுத்து செய்ய அனுமதிக்கப்பட்ட

பணிகளைத் தவிர கீழ்க்காணும் 'தடை செய்யப்பட்ட பணிகளை' எடுத்து செய்ய இயலாது.

1. மத்திய மாநில அரசுத் துறைகள் (பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட) மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள், சங்கங்கள் ஆகியவைகளுக்கான அலுவலகக் கட்டிடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல்.

   **விதிவிலக்கு** (i) பொது விநியோகக் கடைகளுக்குக் கட்டடம் கட்டுதல் நேரடிக் கொள் முதல் நிலையங்கள், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடங்கள், மொத்த குளிர்பதன மையங்களுக்குக் கட்டடங்கள், (ii) தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களின் பேருந்து பணிமனைகளுக்கான பேருந்து பராமரிப்புக் கூடம், சுற்றுச்சுவர் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல்.

2. அனைத்து வகையான பராமரிப்பு, பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளுதல்.

   **விதிவிலக்கு** – அரசுத் திட்டங்களின்கீழ் 31.12.2002 வரை கட்டப்பட்ட தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய வீடுகள் உட்பட வீடு ஒன்றுக்கு ரூ.25,000/–க்கு மிகாமல் பழுது நீக்கும் பணிகளை மேற்கொள்ளுதல்.



இருப்பினும், மேற்படி வீடுகளை பழுது நீக்கம் செய்ய எடுத்துக்கொள்ளும் முன்னர் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மற்றும் தாட்கோ நிறுவனத்திடமிருந்து உரிய அனுமதி பெறப்படவேண்டும்.

3. அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குதல்.

   **விதிவிலக்கு** (i) அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு தங்கும் விடுதிகள், அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள் ஆகியவற்றிற்கு தளவாடச் சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல், (ii) அரசு போக்குவரத்து கழகங்களுக்கு சொந்தமான கழிவு செய்யப்பட்ட சாதாரண பேருந்துகளுக்கு (அரசாணை (நிலை) எண்.2552, போக்குவரத்துத் துறை, நாள் 26.9.91–இல் குறிப்பிட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி கழிவு செய்யப்பட்ட பேருந்துகள்) பதிலாக மட்டும் புதிய சாதாரண வகை பேருந்துகள் வாங்குதல், (iii) பணிமனைகளுக்கு பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்புக்குத் தேவையான உபகரணங்கள்

வாங்குதல், (iv) மாற்றுத் திறனாளிகளுக்கு கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்.

இருப்பினும் இத்தகைய பணிகளை எடுத்துச் செய்யும்போது இதற்கான பணியாட்களுக்கான (Man power) செலவினம் எதுவும் மேற்கொள்ளக் கூடாது.

4. அரசு உதவி பெறும் பள்ளிகள், சுயநிதிப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் எவ்விதப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.

**விதிவிலக்கு:** 100 சதவீதம் அரசு நிதி உதவி பெறும் மற்றும் 100 சதவீதம் தமிழ் வழிக் கல்வி பள்ளிகளில் பள்ளி வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் கழிப்பிடங்கள் கட்டும் பணிகளை எடுத்துச் செய்தல். பகுதி சுய நிதி பெறும் மற்றும் பகுதி நிதி உதவிப் பள்ளி அல்லது பகுதி தமிழ்வழிக் கல்வி அல்லது பகுதி ஆங்கிலவழிக் கல்வி பள்ளிகள் இத்திட்டத்தில் அரசு நிதி உதவி பெற தகுதியில்லை. நிதி உதவி பெறும் தகுதி வாய்ந்த பள்ளி ஒன்றுக்கு இத்திட்டத்தில் அரசு நிதிஉதவி ஒரு குறிப்பிட்ட ஆண்டில் ரூ. 15 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். அரசு நிதி உதவி பெறும் தகுதி வாய்ந்த பள்ளி ஒன்று இத்திட்டத்தில் எவ்வளவு நிதி உதவி பெற்றிருப்பினும், அப்பள்ளி இத்திட்டத்தின் கீழ்



அடுத்த மூன்றாண்டுகளுக்கு உதவி பெற தகுதியில்லை.

மேற்படிப் பணிகளைப் பொருத்தமட்டில், மாவட்ட ஆட்சியர் தனது சொந்த விசாரணையை மேற்கொள்ளுவதோடு, சம்பந்தப்பட்ட மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் அல்லது மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து கீழ்க்காணும் சான்றிதழ்களை பணி மேற்கொள்வதற்கு முன் பெற வேண்டும்.

(i) இந்தப் பள்ளி 100 சதவீதம் தமிழ்வழி பயிற்றுவிக்கும் வகுப்புகள்/ பிரிவுகள் கொண்டது. ஆங்கில வழி வகுப்புப் பிரிவுகள் இல்லை.

(ii) இந்தப் பள்ளி 100 சதவீதம் அரசு உதவி பெறும் பள்ளி ஆகும். அதே நிர்வாகத்தால் ஒரே வளாகத்திலோ அல்லது வெவ்வேறு வளாகங்களிலோ நடத்தப்படும் இந்தப் பள்ளியின் சுய நிதி பிரிவுகள் / வகுப்புகள் இயங்கவில்லை.

5. தனிநபர்/ குடும்பப் பயனுக்காக சொத்துக்களை உருவாக்குதல்.

**விதிவிலக்கு –** கிராம ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட வழிமுறைகளின்படி புதிய வீடுகள் கட்டுதல்.

6. அனைத்து வணிக நிறுவனங்கள் / அலகுகள் குறித்த பணிகள்.
7. மானியம் மற்றும் கடன், மத்திய மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்கு பங்களித்தல்.
8. நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்.
9. முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகள் **அல்லது** இனங்களுக்கான தொகை மீளச் செலுத்துதல்.
10. அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்.
11. மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள் / குழுக்களுக்கு சொந்தமான நிலங்களில் பணிகள்.
12. குட்டைகள், ஊரணிகள், ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் வாய்க்கால் போன்றவைகளைத் தூர் வாருதல்.
13. சரளை / கப்பி சாலைகள் (தார்சாலை வரை அமைக்கும் சாலைப்பணிகளை மட்டுமே எடுத்துக்கொள்ளலாம்).
14. உயர் கோபுர மின் விளக்குகள் பொருத்துதல்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் மொத்த நிதியில் 21 சதவீதம் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் அதிக எண்ணிக்கையில் வாழும் பகுதி அல்லது நகர்புறங்களில் குடிசை பகுதிகளில் வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் அப்பகுதிக்கென ஒதுக்கப்பட வேண்டும்.



தேவையின் அடிப்படையில், வழிகாட்டு நெறிமுறைகளில் தேவையான மாறுதல்களை அரசு மேற்கொள்ளலாம்.

### 3.5.1.4 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கம்

இத்திட்டத்தின் கீழ் 2011–12ம் ஆண்டில் ரூ.470 கோடி ஒதுக்கீட்டில் 13,766 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கென 2012–13ம் ஆண்டில் ரூ. 470 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 3.6. ஊரக கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் புனரமைப்புத் திட்டம்

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்கள் பராமரிக்கப்படவேண்டும் என்கிற நோக்கத்தோடு ஊரக கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் புனரமைப்புத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டப்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புளைச் சார்ந்த கட்டடங்கள் முறையாக தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வந்தால் மட்டுமே அவற்றை முழுமையாக பயன்டுத்த இயலும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்களான ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், அங்கன்வாடி மையங்கள்,

மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகள், ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள், போன்றவை இத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படுகின்றன. 2011–12ஆம் ஆண்டில், பராமரிப்பின்றி பழுதடைந்திருந்த 12,811 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் ஊரகப் பெண்களின் சிரமங்களை போக்கும் வகையில் முழுமையாக இத்திட்டத்தின் கீழ் ரூ. 170 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டது.

இத்திட்டம், 2012–13 ஆம் ஆண்டிலும் ரூ. 100 கோடி நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 3.7. தன்னிறைவுத் திட்டம்

ஊரகப் பகுதி மக்கள் தங்களுடைய தேவைகளை தாமே நிறைவு செய்யும் மனப்பான்மை, பொது மக்கள் பங்கேற்பு ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் தன்னிறைவுத் திட்டம் 2011–12ம் ஆண்டு முதல் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. பொதுமக்கள், தேர்வு செய்யப்பட்ட பணியின் மதிப்பீட்டுத் தொகையில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் பங்களிப்பு செய்ய வேண்டும்.

சுயசார்பு மற்றும் சுயஉதவி மனப்பான்மையை ஊக்குவித்து மக்கள் தங்களது தேவையை பங்கேற்புடன் செயல்படுத்துவதற்கான திட்டமே தன்னிறைவுத் திட்டமாகும். இத்திட்டம், திட்டமிடுதல், நிதி ஆதாரங்களை



திரட்டுதல், செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்ற பணிகளில் கிராமப்புற சமுதாயத்தை நேரடியாக ஈடுபடுத்துகிறது. இத்திட்டத்திற்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியை அளித்து மக்களின் முயற்சியை அரசு ஊக்குவிக்கிறது. மக்களின் அடிப்படை தேவைகள் இத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படுகின்றன.

### 3.7.1. பணிகளை தேர்வு செய்தல்

- ஒரு பணியினை எடுத்துச் செய்வதற்கான தேவை, தனிநபர்களிடமிருந்தோ, குழுவினரிடமிருந்தோ, தனியார் அல்லது பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்தோ அல்லது அப்பகுதி மக்களிடமிருந்தோ எழலாம்.
- தேர்வு செய்யப்பட்ட பணி குறித்த விண்ணப்பமும், மதிப்பீட்டில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் தொகையினை வழங்குவதற்கான ஒப்புதல் கடிதத்தினையும் பொது மக்களிடமிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் பெறலாம்.
- தேவை மற்றும் செயல்படுத்தத்தக்க தன்மையினை உறுதிப்படுத்திய பின்னரே மதிப்பீடுகள் தயார் செய்யப்படுதல் வேண்டும்.
- நிதி ஒதுக்கீட்டைவிடத் தேவையான பணிகளின் மதிப்பீடு அதிகமாகும் நிலையில், முன்னுரிமை அடிப்படையில் பணியினைத் தேர்வு செய்து

மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்வாக அனுமதி வழங்கலாம்.

### 3.7.2. பணிகளின் பட்டியல்

#### 3.7.2.1. அனுமதிக்கப்பட்ட பணிகளின் பட்டியல்

- அரசு ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், மலைவாழ் மக்களுக்கான பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு விடுதிகளுக்கு கட்டடங்கள், ஆய்வகங்கள், கழிவறைகள் மற்றும் சுற்றுச் சுவர் / சுற்று வேலி அமைத்தல்.

- அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார மையங்கள், துணை மையங்கள், கால்நடை மருந்தகங்கள், கால்நடை வளர்ப்பு மையங்கள் மற்றும் நூலகங்கள் ஆகியவைகளுக்குக் கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் சுற்றுச் சுவர் / சுற்று வேலி அமைத்தல்.
- நகர்ப்புறப் பகுதிகளில் நூலகங்கள் கட்டுதல் மற்றும் ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் சத்துணவு மையங்கள், சத்துணவு மைய சமையல் கூடங்கள், அங்கன்வாடிகள் மற்றும் பொது விநியோகக் கடைகள் ஆகியவைகளுக்குக் கட்டிடங்கள் கட்டுதல்.



- கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் குடிநீர் ஆதாரங்கள் உருவாக்குதல், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் மற்றும் கதிரடிக்கும் களங்கள் போன்ற சமுதாயச் சொத்துக்களை உருவாக்குதல்.
- அனைத்து சமூகச் சொத்துக்களையும் பராமரித்தல். முன்னுரிமை அடிப்படையில் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகத்தினை பராமரிக்கும் பணி எடுத்துக் கொள்ளப்படலாம்.
- பாலங்கள் அல்லது சிறு பாலங்கள் கட்டுதல், சரளை/கப்பிச் சாலைகளை தார்ச்சாலைகளாக தரம் உயர்த்துதல், பழுதடைந்த தார்ச்சாலைகளை புதுப்பித்தல். தெருக்கள் மற்றும் சிறிய சந்துகளை செங்கல் அல்லது கப்பி கற்கள் அல்லது சிமெண்ட் பலகை அல்லது சிமெண்ட் கான்கிரீட் கொண்டு சீரமைத்தல்.
- பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், சாலைத் திட்டுக்கள், நீரூற்றுகள், தெருவிளக்குகள் (சூரிய ஒளி விளக்குகள் உட்பட) போன்றவற்றை அமைத்தல் மற்றும் பராமரித்தல்.
- பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக அரசு மற்றும் ஊராட்சி ஒன்றிய பள்ளிகள், நூலகங்கள் மற்றும் கட்டிடங்களுக்குத் தேவையான அறைகலன்கள், கணினிகள் மற்றும் உபகரணங்கள்

ஆகியவற்றை வாங்குதல். பழைய கணினிகள், உபகரணங்கள் வாங்கக்கூடாது. .

- 100 சதவீதம் அரசு நிதி உதவி பெறும் மற்றும் 100 சதவீதம் தமிழ்வழிக் கல்வி பள்ளிகளில் பள்ளி வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் கழிப்பிடங்கள் கட்டுதல்.

**3.7.2.2. தடை செய்யப்பட்ட பணிகள்**

சிறப்பினமாக எடுத்துச் செய்ய அனுமதிக்கப்பட்ட பணிகளைத் தவிர கீழ்க்காணும் தடை செய்யப்பட்ட பணிகளை தன்னிறைவுத் திட்டத்தில் எடுத்துச் செய்ய இயலாது.

**(1).** மத்திய, மாநில அரசுத் துறைகள் (பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட) மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள், சங்கங்கள் ஆகியவைகளுக்கான அலுவலகக் கட்டிடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல்.

**விதிவிலக்கு–** ஆரம்ப சுகாதார நிலையங்கள் / அரசு மருத்துவமனை மருத்துவர்களுக்கு வசிப்பிடங்களுக்கான கட்டடங்கள் கட்டுதல், பழுது பார்த்தல் மற்றும் சீரமைத்தல். அனைத்து அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள் ஆகியவைகளுக்குக் கட்டடங்கள் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல், பொது விநியோகக் கடைகளுக்குக் கட்டடம் கட்டுதல், நேரடிக்



கொள்முதல் நிலையங்கள் மற்றும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடங்கள், மொத்தக் குளிர்பதன மையங்களுக்குக் கட்டடங்கள் கட்டுதல்.

**(2).** அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குதல்.

**விதிவிலக்கு** அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அங்கன்வாடிகள், மதிய உணவு மையங்கள், அரசுக் கல்லூரிகள், அரசு மாணவர் தங்கும் விடுதிகள், அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள் ஆகியவற்றிற்குத் தளவாட சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்.

**(3).** அரசு உதவி பெறும் பள்ளிகள், சுயநிதிப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு எவ்விதப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.

**விதிவிலக்கு– 100** சதவீதம் அரசு நிதி உதவி பெறும் மற்றும் தமிழ் வழிக் கல்வி கற்பிக்கப்படும் பள்ளிகளில், பள்ளி வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் கழிப்பிடங்கள் கட்டும் பணிகளை எடுத்துச் செய்தல். நிதி உதவி பெறும் தகுதி வாய்ந்த பள்ளி ஒன்றுக்குத் தன்னிறைவு திட்டத்தில் அரசு மான்யம் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் ரூ.10 லட்சத்திற்கு மிகாமல் இருக்க

வேண்டும். அரசு நிதி உதவி பெறும் தகுதி வாய்ந்த பள்ளி ஒன்று தன்னிறைவுத் திட்டத்தில் எவ்வளவு நிதி உதவி பெற்றிருப்பினும், அப்பள்ளி அடுத்த மூன்றாண்டுகளுக்குப் பிறகே மீண்டும் இந்நிதி உதவியைப் பெற இயலும்.

மேற்காணும் பணிகளைப் பொறுத்தவரை, மாவட்ட ஆட்சித் தலைவர் உரிய விசாரணை மேற்கொள்ளுவதோடு, சம்பந்தப்பட்ட மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் அல்லது மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து கீழ்காணும் சான்றிதழ்களைப் பணி மேற்கொள்வதற்கு முன் பெற வேண்டும்.

அ) இப்பள்ளி 100 சதவீதம் தமிழ்வழி பயிற்றுவிக்கும் வகுப்புகள்/பிரிவுகள் கொண்டது. ஆங்கில வழி பயிற்றுவிக்கும் பிரிவுகள் கிடையாது.

ஆ) இப்பள்ளி 100 சதவீதம் அரசு உதவி பெறும் பள்ளி ஆகும். அதே நிர்வாகத்தால் ஒரே வளாகத்திலோ அல்லது வெவ்வேறு வளாகத்திலோ நடத்தப்படும் இந்தப் பள்ளியில் சுய நிதி பிரிவுகள்/வகுப்புகள் இயங்கவில்லை.

(4). அனைத்து வணிக நிறுவனங்கள் /அலகுகள் குறித்த பணிகள்.

(5). மானியம், கடன் மற்றும் மாநில, யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்குப் பங்களித்தல்



(6). நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்.

(7). முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகளுக்காக தொகை மீளச் செலுத்துதல்.

(8). தனிநபர்/குடும்பப் பயனுக்காக சொத்துக்களை உருவாக்குதல்

(9). அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்

(10). மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள்/ குழுக்களுக்குச் சொந்தமான நிலங்களில் பணிகள்

(11). குட்டைகள், ஊரணிகள், ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் வாய்க்கால் போன்றவைகளைத் தூர் வாருதல்

**விதிவிலக்கு:** மாவட்ட ஆட்சியர் அவசியம் எனக் கருதினால், பொதுப்பணித்துறைக் கண்மாய்கள் தூர் வாருதல், கரைகளைப் பலப்படுத்துதல் மற்றும் மதகு / அணைகளைப் புதுப்பித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளலாம். இதில் மக்கள் பங்களிப்புத் தொகை பொதுப்பணித் துறையினரால் தயாரிக்கப்படும் மதிப்பீட்டிற்கு 50 சதவீதத்திற்குக் குறையாமல் இருக்க வேண்டும். தேவையிருப்பின் நீர் நிலைகள், வரத்து கால்வாய் மற்றும் உபரி நீர் கால்வாய் ஆகியவற்றைத் தூர்வாரும் பணியினைப் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்

திட்டம் / IAMWARM போன்ற திட்டங்களின் கீழ் மேற்கொள்ளலாம்.

(12). சரளை / கப்பிச் சாலைகள் (தார்ச்சாலை வரை அமைக்கும் சாலைப்பணிகளை மட்டுமே எடுத்துக்கொள்ளலாம்).

(13). சோடியம் ஆவி விளக்குகள்/உயர் கோபுர மின் விளக்குகள் பொருத்துதல்

### 3.7.3. பணிகளைச் செயல்படுத்துதல்

சம்மந்தப்பட்ட துறைகள் அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998ன்படி ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் செயல்படுத்தப்படும். மக்கள் பங்கேற்பினை அதிகப்படுத்தும் நோக்குடன் மதிப்பீட்டில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமாக பங்களிப்பு செய்த பணிகளை முகமையோ அல்லது பணம் செலுத்தியவரோ செயல்படுத்திட அனுமதி கோரும் நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்கான அனுமதியை வழங்கலாம். <u>ஆனால் பொதுப்பணித்துறைக் கண்மாய்கள் தூர்வாரும் பணியைப் பொருத்த மட்டில் பொது மக்கள் பங்களிப்பு 50 விழுக்காட்டிற்கும் அதிகமாக இருந்தால் கூட ஒப்பந்தப் புள்ளி முறையைப் பின்பற்றியே பணிகள் செய்யப்பட வேண்டும்.</u>



### 3.7.4. 2011 – 12 ஆம் ஆண்டில் திட்ட செயலாக்கம்

இத்திட்டத்தில் 2011–12–ம் ஆண்டிற்கு பணிகள் மேற்கொள்ள ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மொத்த தொகை ரூ. 100 கோடியில், ரூ.25 கோடி சிறப்பு பணிகளுக்காக கூடுதல் நிதியாக மாவட்டங்களுக்கு வழங்க ஊரக வளர்ச்சி ஆணையருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.75 கோடி அனைத்து மாவட்டங்கள் மற்றும் சென்னை மாநகராட்சிக்கும் இரண்டு தவணைகளாக மக்கள் தொகை அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளது.

தன்னிறைவு திட்டத்தின் கீழ் 2011–12ம் ஆண்டில் 1,255 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டது. பொதுமக்கள் பங்குத் தொகையாக ரூ.60 கோடி பெறப்பட்டு சமுதாய சொத்துக்கள் உருவாக்கப்பட்டது. இதில் 23% சாலைப்பணிகள், 7% பள்ளிகளுக்கான படிப்பறைகள், கழிவறைகள், ஆய்வகங்கள், சத்துணவு கூடங்கள் போன்ற கட்டடங்கள் மற்றும் 7% குடிநீர் விநியோக பணிகளுக்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சிறப்பு பணிகள் மற்றும் மாவட்டங்கள் கோரும் கூடுதல் தேவைகளை மேற்கொள்ள மாவட்டங்களுக்கு கூடுதல் நிதியாக ரூ. 25 கோடி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரால் விடுவிக்கப்பட்டுள்ளது.

2012–13ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பயனுள்ள மற்றும் அத்தியாவசியமான சமுதாய

சொத்துக்களை உருவாக்குவதற்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 3.8. ஊரக உட்கட்டமைப்புத் திட்டம்

ஊரகப் பகுதிகளில் நிலையான சொத்துக்களை உருவாக்குவதும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் சொத்துக்களை நிலைப் படுத்துதலுமே, ஊரக உட்கட்டமைப்புத் திட்டத்தின் நோக்கம் என்பதால் இந்த அரசு ஊரக உட்கட்டமைப்புத் திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்தும். இதற்காக 2011–12ம் ஆண்டில் மாநில நிதி ஆணைய மானியத்திலிருந்து 250 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் பின்வரும் வேலைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டன.

- தற்போதுள்ள மண் கிராவல் சாலைகளை கற்சாலைகளாகத் (WBM) தரம் உயர்த்துதல்.
- தற்போதுள்ள கற்சாலைகளைத் தார்ச்சாலைகளாக தரம் உயர்த்துதல்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்ட பணிகளான மதகு சீரமைத்தல், மறுகால் சீரமைத்தல், தடுப்புச் சுவர் கட்டுதல் போன்ற பணிகளை செயல்படுத்துதல்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட புதிய சாலைகளில் சிறுபாலங்கள் , தடுப்புச் சுவர்கள் கட்டுதல்.



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் மேற்கொள்ளப்படும் பணிகளை நிலைப்படுத்துவதற்கான பணிகள், அனைத்து பருவ காலத்திற்கும் ஏற்ற சாலைப் பணிகள் அமைத்தல் போன்ற பணிகளை எடுத்துச் செய்வதற்காக 2012–13ம் ஆண்டில் ரூ.250 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 3.9. ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் சீரமைப்பு

2001ம் ஆண்டில் இந்த அரசு பதவியேற்ற போது பெண்களுக்கு மேம்பட்ட சுகாதாரத்தை ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தது. முறையான சுகாதார வசதிகள் கிடைக்கப் பெறாததால், கிராமப் பெண்களின் வாழ்க்கை மிகவும் சிரமத்துக்குள்ளானது. ஏழ்மை மற்றும் கலாச்சாரப் பழக்கங்களால் சுகாதார வசதி இல்லாதிருந்த நிலையிலிருந்து அவர்கள் மீளவேண்டியிருந்தது. எனவே, ஊரகப் பெண்களுக்கான தனித்துவம் மற்றும் பாதுகாப்பை உறுதிசெய்து அவர்களின் பொது சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துவது மிகவும் அவசியமானதும் முக்கியமானதும் ஆகும்.

இதனை கருத்தில் கொண்டு தமிழகத்தில் அப்போதிருந்த அனைத்து 12,618 கிராம ஊராட்சிகளிலும் சுமார் 750 சதுர அடி பரப்பளவில் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் கட்ட, 2001–ஆம் ஆண்டில் இந்த அரசால் முடிவெடுக்கப்பட்டது. பெண்கள் எளிய முறையில் உபயோகப்படுத்தும் வண்ணமாக, அவை கட்டுவதற்கான

இடங்கள் தேர்வு செய்யப்பட்டன. ஒவ்வொரு வளாகமும், 14 கழிவறைகள், 2 குளியலறைகள், மின்மோட்டாருடன் நீரேற்று அறை, தண்ணீர் தொட்டி மற்றும் துணி துவைக்கத் தேவையான கல் ஆகியவற்றை உள்ளடக்கியதாயிருந்தது. குளிக்கவும் துணி துவைக்கவும் தேவையான தண்ணீர் விநியோகம் இவ்வளாகத்தில் உறுதிசெய்யப்பட்டது. இவ்வளாகத்திலுள்ள கழிவறைகளை ஒதுக்கீடு செய்ய உபயோகிப்பாளர்கள் கண்டறியப்பட்டு குழுவாக்கப்பட்டனர். தண்ணீர் விநியோகம் மற்றும் விளக்குகளுக்குத் தேவையான மின்வசதியைக் கிராம ஊராட்சிகள் செய்து கொடுத்து சம்மந்தப்பட்ட குடும்பங்கள் அதனை பராமரிக்க ஏற்பாடு செய்யப்பட்டன. மகளிர் வசதிக்காக இவ்வளாகங்களில் எரியூட்டிகள் (Incinerators) அமைக்கப்பட்டன.

தொடக்கத்தில், ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு மகளிர் சுகாதார வளாகம் என்ற அடிப்படையில் ஒரு வளாகத்திற்கு ரூ.2 லட்சம் மதிப்பீட்டில் 385 வளாகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. பின்னர், அலகுத்தொகை ரூ.2.25 லட்சமாக உயர்த்தப்பட்டது. 2001 முதல் 2004–ஆம் ஆண்டு வரை மாநிலத்தில் உள்ள அனைத்துக் கிராம ஊராட்சிகளிலும், மகளிர் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டன. முந்தைய ஆட்சி காலத்தில் இது குறித்து போதுமான கவனிப்பு செலுத்தப்படாததால் பெரும்பாலான மகளிர் சுகாதார வளாகங்கள் முறையான பயன்பாடு மற்றும் பராமரிப்பு இல்லாமல் போனது.



மாண்புமிகு தமிழக முதல்வரின் வழிகாட்டுதலின் பேரில் பழுதடைந்த 12793 மகளிர் சுகாதார வளாகங்கள் ரூ.170 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டு அடிப்படை சுகாதாரம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

### 3.9.1. மகளிர் சுகாதார வளாகங்கள் பராமரிப்பு :

#### 3.9.1.1. பயன்படுத்துவோர் குழுக்கள் அமைத்தல் :

புனரமைக்கப்பட்ட மகளிர் சுகாதார வளாகங்களை முறையாக பயன்படுத்தவும் மற்றும் பராமரிக்கவும் ஒவ்வொரு வளாகத்திற்கும் பயன்படுத்துவோர் குழு ஒன்றினை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது. மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் குக்கிராம அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களிடையேயிருந்து இத்தகைய பயன்படுத்துவோர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகத்தை முறையாக பயன்படுத்தவும், பராமரிக்கவும் இந்த பயன்படுத்துவோர் குழுக்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், பயன்பாடு மற்றும் பராமரிப்பிற்கான வழிகாட்டி புத்தகம் தயாரிக்கப்பட்டு அனைத்து பயன்படுத்துவோர் குழுக்களுக்கும் கையேடாக வழங்கப்பட்டுள்ளது.

#### 3.9.1.2. நேரடி பராமரிப்பு :

மகளிர் சுகாதார வளாகத்தில் மின் இணைப்பு உள்ளதை கிராம ஊராட்சி உறுதி செய்ய வேண்டும். தண்ணீர் விநியோகம் மற்றும் மின் விளக்கு ஆகியவற்றுக்கான மின் கட்டணம் கிராம ஊராட்சி பொது

நிதியிலிருந்து வழங்கப்படவேண்டும். பம்பு செட் பராமரிப்பு, கழிவு நீர்த்தொட்டி சுத்தம் செய்தல் போன்ற சிறு பழுது / பராமரிப்பு பணிக்கு உரிய செலவு தொகையினை கிராம ஊராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

மின் செலவினக் கட்டணம் முறையாக செலுத்துதல், முறையான இடைவெளியில் கழிவு நீர் தொட்டி சுத்தம் செய்தல் மற்றும் சிறு பழுதுகளை அவ்வப்பொழுது சரிசெய்தல் ஆகியவை குறித்து பயன்படுத்துவோர் குழு கிராம ஊராட்சி கவனத்திற்கு கொண்டு வந்து உரிய முறையில் செயல்படுத்த வேண்டும்.

### 3.9.1.3. பயன்படுத்துவோர் குழுக்களின் மூலம் அன்றாட பராமரிப்பு:

பயன்படுத்துவோர் குழு உறுப்பினர்கள் வழங்கும் பங்குத்தொகையினைக் கொண்டு வளாகங்களின் அன்றாட பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும். சுகாதார வளாகத்தின் அன்றாட தூய்மையை பராமரிக்க புற பணியாளர் அல்லது குழுவின் உறுப்பினர் ஒருவரை தூய்மை பணியாளராக பயன்பாட்டுக் குழு நியமிக்கலாம்.

### 3.9.2. கண்காணிப்பு குழுக்கள் அமைத்தல் :

மகளிர் சுகாதார வளாகத்தின் பராமரிப்பை கண்காணிக்க மாவட்ட அளவில் மற்றும் வட்டார அளவில், கண்காணிப்பு குழுக்கள் மாவட்ட ஆட்சித் தலைவரால் அமைக்கப்பட்டுள்ளன. குழுக் கூட்டத்தில்



கீழ்க்கண்டவைகள் குறித்து விவாதித்து உரிய தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும்:

- ஒவ்வொரு ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகத்தின் செயல்பாட்டு நிலை
- ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள கழிவறைகளின் பயன்பாட்டு நிலை
- மகளிர் சுகாதார வளாகத்தினை பயன்படுத்துவோர் குழுக்கள் பராமரிக்கும் முறை
- வளாகங்களை கிராம ஊராட்சி கால முறையில் பராமரிக்கும் விதம்
- பயன்பாட்டு குழுக்களின் கருத்துக்கள் / ஆலோசனைகள்
- கண்காணிப்பு குழு உறுப்பினர்கள் அல்லது மண்டல அலுவலர்கள் ஆய்வின் போது தெரிவிக்கப்படும் கருத்துக்கள் / ஆலோசனைகள்.

### 3.10. தூய்மையான கிராம இயக்கம்

தமிழ்நாட்டில் சுகாதார புரட்சியின் மூலம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு இந்த அரசால் 2003–ஆம் ஆண்டில் "தூய்மையான கிராம இயக்கம்" துவக்கப்பட்டது. கிராமங்களில் இவ்வியக்கம் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை உள்ளடக்கியது ஆகும்.

**தூய்மையான கிராம இயக்கத்தின் முக்கிய நோக்கங்கள்:**

- திறந்தவெளியில் மலம் கழிப்பதனால் ஏற்படும் சுகாதார பாதிப்புகள் மற்றும் விளைவுகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- பல்வேறு தரப்பு மக்களின் சுகாதாரத் தேவைகளைக் கண்டறிவதுடன், குறிப்பாக மகளிர் மற்றும் குழந்தைகள், இளவயதினர், வயதானோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு சுகாதாரத் தேவையின் முக்கியத்துவத்தை ஊக்குவித்தல்.
- அங்கன்வாடிகள், பள்ளிகள் மற்றும் பொது இடங்கள் ஆகியனவற்றில் சுற்றுச்சூழல் சுகாதாரங்களை மேம்படுத்துதல்.
- பல்வேறு புவியமைப்புகளில், நிலத்தடி நீர் கிடைக்கும் நிலை, நீராதாரம் ஆகியவற்றைக் கண்டறிவதற்கான தொழில் நுட்பங்களை மேம்படுத்துதல்.
- அறிவுசார் திறமைகள் மூலம் சுகாதாரப் பழக்க வழக்கத்தை ஊக்குவித்து சுற்றுச்சூழல் சுகாதாரத்தை மேம்படுத்துதல்.
- சுற்றுச்சூழல் சுகாதாரத்தைப் பேணுவதில், சமுதாயத்திற்கும் ஊராட்சி அமைப்புகளுக்கும் மேலாண்மைத் திறனைப் பலப்படுத்துதல்.



- சுகாதாரத்தைப் பேணும் நோக்கில் பணியாற்றும் பலதரப்பட்ட அமைப்புகளை ஒருங்கிணைப்பதன் மூலம் அவற்றின் செயல்பாடுகளை மேம்படுத்துதல் மற்றும் ஏற்படுத்தப்பட்ட சுகாதார வசதிகளை நிலைப்படுத்துதல்.

மேலும், தீவிர தகவல் தொடர்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலமாக கிராம ஊராட்சிகள் மற்றும் இதரத் துறைகளையும் சமூகத்துடன் ஒருங்கிணைப்பது இதன் முக்கிய நோக்கமாகும். தூய்மையான கிராம இயக்கத்தின் கூறுகளாவன:

1. திறந்தவெளியில் மலம் கழித்தலைத் தடுத்தல்.
2. மழை நீர் சேகரிப்பு மற்றும் கழிவுநீரினை மறு சுழற்சி செய்தல்.
3. திடக்கழிவு மேலாண்மை
4. மனிதக் கழிவுடன் இணைந்த எரிவாயு கலன் அமைத்தல்.

தனிநபர் இல்லங்கள், பள்ளிகள் ஆகியவற்றில் சுகாதார வசதி மற்றும் திறந்தவெளி மலங்கழித்தலை முழுமையாக அகற்றுவதன் மூலம் தூய்மையான சூழலை உருவாக்கியும், திடக்கழிவு மேலாண்மை மற்றும் நீர் சேகரிப்பு வாயிலாக 100% சுகாதாரத்தை எய்துகின்ற ஊராட்சிகள் மாநில அரசு வழங்கும் ரூ.5 இலட்சம் ரொக்கப் பரிசு பெறத் தகுதியாகின்றன. அரசால் ஒவ்வொரு ஆண்டும் 15 கிராம

ஊராட்சிகளுக்கு "ரொக்கம் மற்றும் செயலாக்க ஊக்கத்தொகை" வழங்கப்பட்டது.

முந்தைய அரசால் கைவிடப்பட்ட இத்திட்டமானது தற்போது மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டு இந்த ஆண்டு மாவட்டத்திற்கு ஒரு கிராம ஊராட்சி வீதம் தேர்ந்தெடுத்து ஒரு கிராம ஊராட்சிக்கு ரூ.5 லட்சம் ரொக்கப் பரிசும் ‘‘தூய்மையான கிராம இயக்கம்’’ விருதும் 31 மாவட்டங்களிலும் செயல்படுத்த ரூ.1.55 கோடி தொகை அரசாணை (1ப) எண்.30, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் (பஞ்சாயத்து ராஜ் 2) துறை நாள் 13.1.2012ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 2012–13ம் ஆண்டிலும் ரூ.1.55 கோடி ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்படும்.

### 3.11 தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கான ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம்:

நக்சலைட்டுகளின் செயல்பாட்டினை கட்டுப்படுத்தும் விதமாகவும், அவர்களின் வளர்ச்சியைத் தடுத்திடும் வகையிலும் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கான சிறப்புத் திட்டமாக 2003–04–ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் புதிய வீடுகள் கட்டுதல், தொகுப்பு வீடுகள் பழுது நீக்குதல், இளைஞர்களுக்கான கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல், மற்றும் மாற்றுத்திறனாளிகள், விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்குத்



தனிநபர் உதவி போன்ற பணிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

2011–12ஆம் ஆண்டில் ரூ.7.5 கோடி ஒதுக்கீட்டில் 1,601 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

2012–13ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக உத்தேசமாக ரூ.7.5 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 4. மத்திய அரசு திட்டங்கள்

### 4.1 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் உருவாக்கப்பட்டு, திட்டத்திற்கு சட்டப் பாதுகாப்பு வழங்கிட நாடாளுமன்றத்தில் செப்டம்பர் 2005ம் ஆண்டு தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் இயற்றப்பட்டது.

ஒவ்வொரு நிதியாண்டிலும், ஊரகப் பகுதிகளில் திறன்சாரா, உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு ஆண்டில் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலை வாய்ப்பினை அளிப்பதன் மூலம் அவர்களது வாழ்வாதாரப் பாதுகாப்பினை உயர்த்துவதே இச்சட்டத்தின் நோக்கமாகும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் உடலுழைப்பினால் செய்யப்படும் வேலைவாய்ப்பினை வழங்குவது இத்திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோளாகும். வறுமையை உருவாக்கும் காரணிகளான வறட்சி, காடுகள் அழிப்பு, மண்அரிப்பு போன்றவற்றைத் தடுக்கும் பணிகளை

மேற்கொள்ளுவதன் மூலம் இயற்கை ஆதாரங்களின் மேம்பாட்டினை உறுதி செய்து, நிலையான வளர்ச்சியினை மேம்படுத்துவது இத்திட்டத்தின் துணைக் குறிக்கோளாகும்.

தமிழ்நாட்டில், முதலில் இத்திட்டம் 6 மாவட்டங்களில் **2.2.2006ல்** அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் மற்ற மாவட்டங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டது.

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்**
**மூன்று கட்டங்களில் விரிவாக்கம்**

| முதற் கட்டம் (2.2.2006 லிருந்து ) | இரண்டாம் கட்டம் (1.4.2007 லிருந்து ) | மூன்றாம் கட்டம் (1.4.2008 லிருந்து) | |
|---|---|---|---|
| 1. கடலூர் | 1. தஞ்சாவூர் | 1. காஞ்சிபுரம் | 11. திருச்சி |
| 2. விழுப்புரம் | 2. திருவாரூர் | 2. திருவள்ளூர் | 12. பெரம்பலூர் |
| 3. திருவண்ணாமலை | 3. கரூர் | 3. வேலூர் | 13. அரியலூர் |
| 4. நாகப்பட்டினம் | 4. திருநெல்வேலி | 4. சேலம் | 14. புதுக்கோட்டை |
| 5. திண்டுக்கல் | | 5. நாமக்கல் | 15. மதுரை |
| 6. சிவகங்கை | | 6. தர்மபுரி | 16. தேனி |
| | | 7. கிருஷ்ணகிரி | 17. இராமநாதபுரம் |
| | | 8. ஈரோடு | 18. விருதுநகர் |
| | | 9. கோயம்புத்தூர் | 19. தூத்துக்குடி |
| | | 10. நீலகிரி | 20. கன்னியாகுமரி |
| | | | 21. திருப்பூர் |

### 4.1.1. திட்டத்தின் சிறப்பம்சங்கள்

- ஊரகக் குடும்பங்களில் உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பம் உள்ள வயது வந்தோர், எழுத்து மூலமாகவோ அல்லது வாய் மொழியாகவோ தமது விருப்பத்தினை, கிராம ஊராட்சிக்கு தெரிவித்து பதிவு செய்துகொள்ள வேண்டும்.



- புகைப்படம் மற்றும் பதிவு எண்ணுடன் கூடிய வேலை அட்டையினை கிராம ஊராட்சி இலவசமாக வழங்கும்.
- எழுத்து மூலமாகவோ அல்லது வாய் மொழியாகவோ பெறப்பட்ட வேண்டுகோளின்படி 15 நாட்களுக்குள் வேலை அட்டை வழங்கப்படும்.
- வேலை அட்டை உள்ளோர் எழுத்து மூலமாகவும் வேலை கோரலாம். அத்தருணங்களில், கிராம ஊராட்சி தேதியுடன் கூடிய ஒப்புகைச் சீட்டு வழங்கும். அது அவர்களுக்கு 15 நாட்களுக்குள் வேலை வழங்குவதற்கு உத்தரவாதமாக விளங்கும்.
- வேலை நடைபெறும் இடம் கிராமத்திலிருந்து 5 கி.மீ. தூரத்திற்குள் இருக்கும். வேலை நடைபெறும் இடம் 5 கி.மீ. தூரத்திற்கு மேல் இருந்தால், போக்குவரத்து மற்றும் வாழ்வாதாரத் தொகையாக ஊதியத்தில் 10 சதவீதம் கூடுதலாக வழங்கப்படும்.
- குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948ன்படி, விவசாய தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படுதல் வேண்டும்.
- தமிழகத்தைப் பொறுத்தவரை ஒரு நபருக்கு நாளொன்றுக்கு ஊதியம் ரூ.119/– என மத்திய அரசால் 2011–12ல் நிர்ணயம் செய்யப் பட்டிருந்தது. தற்போது இது ரூ.132/- என

நிர்ணயம் செய்யப்பட்டு அதற்கான அறிவிக்கை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

- ஆண்கள் மற்றும் பெண்களுக்குச் சம அளவிலான ஊதியம் வழங்கப்படும்.
- பொதுவாக, வாரம் தோறும் ஊதியம் வழங்கப்படுதல் வேண்டும். 15 நாட்களுக்குள் ஊதியம் வழங்கப்படுதல் உறுதிசெய்யப்பட வேண்டும்.
- மூன்றில் ஒரு பங்கு பயனாளிகள் பெண்களாக இருக்க வேண்டும்.
- வேலை நடைபெறும் இடங்களில், குடிநீர், முதலுதவிப்பெட்டி, நிழற் கூடங்கள் போன்ற வசதிகள் செய்து தரப்பட வேண்டும்.
- வழிகாட்டி நெறிமுறைகளின்படி, கிராமத்திற்கான திட்டத் தொகுப்பினை, கிராம சபை ஒப்புதல் அளித்தபின், அதில் 50 விழுக்காடு வேலைகள் கிராம ஊராட்சியின் மூலம் செயல்படுத்த ஒதுக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில், கிராம ஊராட்சியே அனைத்து வேலைகளையும் செயல்படுத்தி வருகிறது.
- இத்திட்டத்தின் வேலைகளுக்கான ஊதியம் மற்றும் பொருட்களுக்கிடையேயான விகிதாச்சாரம் 60:40 என்று அனுமதிக்கப் பட்டிருந்த போதிலும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 100 விழுக்காடு முழுமையான



மனித உழைப்பைக் கொண்டு செய்யப்படும் வேலைகள் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றன.

- ஒப்பந்ததாரர்கள் மற்றும் இயந்திரங்கள் பயன்படுத்தல் அனுமதிக்கப்படமாட்டாது.
- திறன்சாரா உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கான (unskilled labour) ஊதியச் செலவு 100 விழுக்காடு, கட்டுமானப் பொருட்களின் செலவினம், திறன் சார்ந்த (skilled labour) மற்றும் பகுதி திறன் சார்ந்த தொழிலாளர்களின் (semi-skilled labour) ஊதியச் செலவில் 75 விழுக்காடு மத்திய அரசால் ஏற்கப்படுகிறது.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் சமூகத் தணிக்கையினை, கிராம சபை, அதற்காக அமைக்கப்பட்டுள்ள ‘‘சமூகத் தணிக்கையாளர்கள்’’ மூலம் மேற்கொள்ளும்.
- குறைகளைத் துரிதமாகத் தீர்க்கும் வகையில், குறை தீர்க்கும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், கட்டணம் இல்லாத் தொலைபேசி சேவை ‘‘1299’’ (Toll free Helpline ‘1299’) ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுகிறது.
- இத்திட்டத்தின் அனைத்து கணக்கு மற்றும் ஆவணங்களை பொதுமக்கள் பரிசீலிக்கலாம்.
- இத்திட்டச் செயல்பாடு குறித்து அறிவுரைகள் வழங்கிடவும், கண்காணிக்கவும் மற்றும்

மதிப்பீடு செய்யவும், "தமிழ்நாடு அரசு மாநில வேலை உறுதி மன்றம்" என்ற அமைப்பு தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் பிரிவு 12–ன்படி அமைக்கப்பட்டுள்ளது.

### 4.1.2. அனுமதிக்கப்பட்ட பணிகள்

- நீராதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் நீர் சேகரிப்புப் பணிகள்.
- வறட்சியினைத் தடுக்கும் வகையில், காடு வளர்ப்பு மற்றும் மரங்கள் நட்டு வளர்த்தல்.
- சிறு மற்றும் குறுநீர்ப்பாசனப் பணிகள் உள்ளிட்ட பாசனக் கால்வாய்கள்.
- தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர், சிறு / குறு விவசாயிகள், நிலச்சீர்திருத்தத் திட்டப் பயனாளிகள், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டப் பயனாளிகள் மற்றும் வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ளோர் ஆகியோரின் நிலங்களில் பாசன வசதிகளை ஏற்படுத்துதல், மரக்கன்றுகள் நடுதல், நில மேம்பாட்டுப் பணிகள் மற்றும் தோட்டக்கலை சார்ந்த பணிகள்.
- குளங்கள் / ஏரிகள் தூர் வாருதல் உள்ளிட்ட பாரம்பரிய நீராதார அமைப்புகளைப் புனரமைத்தல்
- நிலங்களை மேம்படுத்துதல்.



- நீர் தேங்கக்கூடிய இடங்களில் வடிகால்களை ஏற்படுத்துதல் உள்ளிட்ட வெள்ளத் தடுப்புப் பணிகள்.
- அனைத்துப் பருவகாலத்திற்கும் ஏற்ற சாலைகள் அமைத்தல் மற்றும் தேவையான இடங்களில் சிறுபாலங்கள் மற்றும் வடிகால்கள் ஏற்படுத்துதல்.
- மாநில அரசினைக் கலந்தாலோசித்து மத்திய அரசால் தெரிவிக்கப்படும் இதர பணிகள்.

### 4.1.3. 2011–12ம் ஆண்டின் சாதனைகள்

#### 4.1.3.1. நிதி குறித்த சாதனைகள்

2011–12ம் ஆண்டிற்கென நிர்ணயிக்கப்பட்ட 30.02 கோடி மனித சக்தி நாட்கள் என்ற இலக்கினை ஒப்பிடுகையில் இந்த அரசால் 33 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

**மதிப்பீட்டு இலக்கு மீதான சாதனை**

| மதிப்பீட்டு இலக்கு | | | | | |
|---|---|---|---|---|---|
| (ரூபாய் கோடியில்) | | | செயல்திறன் (மனிதசக்தி நாட்கள்) (கோடியில்) | | |
| ஏற்பளிப்பு | சாதனை | % | ஏற்பளிப்பு | சாதனை | % |
| 3572 | 3000 | 84 | 30.02 | 33.00 | 110 |

**நிதி வரவு மீதான சாதனை (ரூபாய் கோடியில்)**

| ஆரம்ப இருப்பு | மத்திய அரசு நிதி விடுவிப்பு | மாநில அரசு நிதி விடுவிப்பு | மொத்தம் | செலவு | % |
|---|---|---|---|---|---|
| 502.79 | 2815.52 | 357 | 3675.31 | 3000 | 82 |

## 4.1.3.2. மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்கள் அதிக ஊதியம் பெறுதல்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் 8 மணிநேர வேலைக்கு ஒரு நபருக்கு ஒரு நாள் ஊதியமாக ரூ.119/– அறிவிக்கப்பட்டுள்ளது. ஊதியம், தொழிலாளர்களால் செய்யப்படுகின்ற வேலையின் அளவைப் பொறுத்தே வழங்கப்படும் என்ற நிலையில், 15.5.2011ற்கு முன்னர் தொழிலாளர்கள், பெரும்பாலான நேரங்களில் ரூ.80/– முதல் ரூ.90/– வரை மட்டுமே ஊதியம் பெறும் நிலை இருந்தது. ஆகையால், இத்திட்டத்தில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வு இயக்கம் மற்றும் விரிவான விளம்பரங்கள் வாயிலாகவும் மற்றும் பணித்தளத்தில் மாதிரி குழிகள் அமைத்தும், தொழிலாளர்கள் சரியான ஊதியம் பெற தேவையான அளவு வேலை செய்ய வேண்டிய அளவீடுகள் குறித்து முன் அளவீடு செய்தல் மற்றும் அளவு எடுப்பது குறித்த பயிற்சி பணி மேற்பார்வையாளர்களுக்கு நடத்தப்பட்டது. இவ்விழிப்புணர்வு இயக்கம் நடத்தப்பட்டதன் விளைவாக தொழிலாளர்கள் பெறும் சராசரி ஊதியம் ரூ.90/– லிருந்து ரூ.105/– ஆகவும் உயர்ந்துள்ளது.

## 4.1.3.3 கிராம ஊராட்சிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட பணிகளை எடுத்து செய்ய அனுமதித்தல்

15.5.2011க்கு முன்னர் கிராம ஊராட்சிகளில் அனுமதிக்கப்பட்ட பணிகளில் ஒரே நேரத்தில் ஒரு பணியை



மட்டுமே எடுத்து செய்ய உத்திரவிடப்பட்டிருந்தது. இதனால் திட்டச் செயல்பாட்டில் பின்வரும் இடர்பாடுகள் இருந்தன.

1. ஒரு பணித்தளத்தில் மிக அதிகமான தொழிலாளர்கள் பணிசெய்வதால் ஊதியம் குறைதல்.
2. தொழிலாளர்களை மேற்பார்வையிடுதலில் சிரமம்
3. குக்கிராமங்களிலிருந்து நீண்ட துாரத்தில் பணி நடைபெறுவதால் தொழிலாளர்கள் பங்கேற்பு குறைவு.
4. ‘குக்கிராமவாரியாக சுழற்சி முறை’யில் செய்து வந்ததால் 100 நாட்களுக்கு பதிலாக சராசரியாக ஒரு குடும்பத்திற்கு 54 நாட்களுக்கு மட்டுமே வேலை வழங்கப்பட்டு வந்தது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களுக்கு அதிக வேலை வழங்க, தற்பொழுது இந்த அரசானது, ஒவ்வொரு ஊராட்சியிலும் உள்ள குக்கிராமங்கள் மற்றும் பணிக்கு வரும் பணியாளர்களின் எண்ணிக்கையை அடிப்படையாக கொண்டு அதிக வேலைகளை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஒரு பணிக்கு மேல் பல பணிகள் மேற்கொள்ள, வழக்கமாக பணிக்கு வரும் பணியாளர்கள் மற்றும் குடியிருப்புகளின் எண்ணிக்கையினை அடிப்படையாக கொண்டு, தாங்கள் வசிக்கும் குடியிருப்புகளுக்கு அருகாமையில் பணியை செய்திட ஏதுவாக ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும்

ஒன்றுக்கும் மேற்பட்ட பணிகளை எடுத்து செய்ய அக்கிராம ஊராட்சிகளில் உள்ள குடியிருப்புகள் தொகுதிகளாக பிரிக்கப்பட்டு, ஒரு தொகுதிக்கு குறைந்தபட்சம் ஒரு பணி செய்திட அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஒரு ஊராட்சியில் எத்தனை தொகுதிகள் உள்ளனவோ அத்தனை பணிகள் ஒரே நேரத்தில் செயல் படுத்தப்படுகிறது.

இந்த முறை அக்டோபர் 2011 முதல் செயல்பட்டு வருவதால் பின்வரும் பலன்கள் கிடைக்க வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1. குடியிருப்புகளுக்கு மிக அருகாமையிலேயே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணி நடைபெறுவதால் அதிக அளவில் தொழிலாளர்கள் பணித்தளத்திற்குச் செல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.
2. 2010–11ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட 26.86 கோடி மனித சக்தி நாட்களை ஒப்பிடும்போது 2011–12ம் ஆண்டில் 33 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
3. ஒரு வாரத்தில் வழங்கப்பட்ட சராசரி ஊதியம் ரூ.50 கோடியிலிருந்து ரூ.75 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

#### 4.1.3.4 நில மேம்பாட்டுப் பணிகள்

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்ட வழிகாட்டி நெறிமுறையின்படி



தாழ்த்தப்பட்ட/ பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகள், நிலச் சீர்திருத்த திட்டப் பயனாளிகள், இந்திரா நினைவு குடியிருப்பு திட்டப் பயனாளிகள், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள் ஆகியோரின் நிலங்கள் மேம்பாடு செய்ய அனுமதி உள்ளது. இவ்வாறான நிலச் சீர்த்திருத்தப் பணிகள் சில மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- தமிழக அரசால் இத்திட்டத்தின் மூலம் விவசாயப் பணிகள், நிலமேம்பாட்டுப் பணிகள், பாசனப் பணிகள், தோட்டக் கலை மற்றும் பலதரப்பட்ட நில மேம்பாடுப்பணிகளை தகுதியுடையவர்களின் நிலங்களில் செய்திட 2011–12 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
  - ➢ உயர் அலுவலர்கள் கொண்ட இரண்டு குழு ஆந்திரா மற்றும் கேரளா மாநிலங்களுக்கு சென்று இத்திட்டம் செயல்படுத்தப்படும் முறை குறித்து தீவிர ஆய்வுகளை மேற்கொண்டது.
  - ➢ வேளாண்மை மற்றும் தோட்டக்கலை துறைகளுடன் விரிவான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டது.
  - ➢ மேலும் தனிநபர் நிலமேம்பாட்டிற்கான பல்வேறு பணிகள் எடுத்துச் செய்வது குறித்த காலநிர்ணய வேலை அளவு (Time and motion study) ஈரோடு, திருச்சிராப்பள்ளி, விருதுநகர்

மற்றும் வேலூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் எடுத்து செய்யப்பட்டு வருகிறது.

மேற்கண்ட நடவடிக்கைகளை அடிப்படையாக கொண்டு வேளாண்மைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, வனத்துறை மற்றும் தோட்டக்கலை துறைகளின் உதவியுடன் சிறப்பு வழிகாட்டி நெறிமுறைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. தனிநபர் நிலமேம்பாட்டு பணி **2012–13**ம் ஆண்டிலிருந்து எடுத்து செய்யப்படவுள்ளது. பொது மற்றும் அரசுக்கு சொந்தமான நிலங்களில் நில மேம்பாட்டுப் பணிகள் மற்றும் மரக்கன்றுகள் நடுதல் போன்ற பணிகளும் செயல்படுத்தப்படும்.

### 4.1.3.5 வங்கிகள் மூலமாக ஊதியம் வழங்கும் முறை

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் "ஊதியக்குழு" மூலம் நேரடியாக ஊதியம் வழங்கும் முறையை நிறுத்துவது என அரசு முடிவெடுத்துள்ளது. ஏனவே, கீழ்க்கண்ட நோக்கங்களுடன் வங்கிகள் மூலம் ஊதியம் வழங்கும் முறை படிப்படியாக செயல்படுத்தப்படும். இதனால்

i) ஊதியம் வழங்கும் முறையில் உள்ள ஒழுங்கீனங்கள் களையப்படும் மற்றும்

ii) பணி வழங்குகின்ற முகமையும், ஊதியம் வழங்கும் முகமையும் வேறுவேறாக இருக்கும்.



இதனடிப்படையில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- தற்பொழுது **385** கிராம ஊராட்சிகளில் (அதாவது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஊராட்சி வீதம்) வங்கி மூலம் ஊதியம் வழங்கும் முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இதுவரை **94,12,748** மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களின் வங்கி கணக்குகள் துவங்கப்பட்டுள்ளன. இது பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களில் **82** சதவீதம் ஆகும்.
- **2012–13** ம் ஆண்டில் மீதமுள்ள **12,139** கிராம ஊராட்சிகளில் படிப்படியாக கீழ்கண்ட முறைகளில் வங்கி மூலம் ஊதியம் வழங்கப்பட வேண்டிய நோக்கில், கிராம ஊராட்சியில் உள்ள அனைத்து பயனாளிகளின் வங்கிக் கணக்குகளை சரிபார்க்கும் பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகிறது.

i) தற்பொழுது வங்கிகளால் நியமிக்கப்பட்ட வங்கித் தொடர்பாளர்கள் (Banking Correspondent) மூலம் **4446** கிராம ஊராட்சிகளில் செய்யும் முறை **2012** ஏப்ரல் மாதம் செயல்படுத்தப்படவுள்ளது.

ii) மக்கள் தொகை **1001** முதல் **2000** வரை உள்ள **6837** கிராம ஊராட்சிகளில், பணியாளர்களுக்கு வங்கி மூலம் ஊதியம்

வழங்கும் முறை வரும் மே 2012ற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட உள்ளது.

iii) மக்கள் தொகை 1000க்கும் குறைவாக உள்ள கிராம ஊராட்சிகளில், பயனாளிகளுக்கு வங்கி மூலம் ஊதியம் வழங்குவதற்கு மாறாக அஞ்சலகம் மூலமாகவோ அல்லது அந்தப் பகுதியில் உள்ள கிராம சுய உதவிக் குழுக்கள் மூலமாகவோ அல்லது வங்கித் தொடர்பாளர் மூலம் ஊதியம் வழங்கிட சம்மதிக்கின்ற வங்கிகள் மூலமாகவோ தொழிலாளர்களுக்கான ஊதியம் வழங்கப்படும்.

இவ்வரசு இத்திட்டத்தின் கீழ் நிதி பரிமாற்ற முறையை e-FMS மூலம் செயல்படுத்த முனைந்துள்ளது. தொடர்பு வங்கியில் (Nodal Bank) பராமரிக்கப்படும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிதியிலிருந்து மின்னணு முறையை பின்பற்றி தொழிலாளர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக, தேசிய தகவல் மையம் (NIC) உருவாக்கிய 'NREGA soft' மென்பொருள் மூலம் செலுத்தப்படவுள்ளது.



**4.1.3.6 செயற்கைகோள் மூலம் தயாரிக்கப்பட்ட வரைபடங்கள் அடிப்படையில் பணிகள் தெரிவுசெய்தல்**

- இவ்வரசு செயற்கைகோள் உதவியுடன் தற்போதுள்ள நீர் நிலை ஆதாரங்களை (குளம் / ஊரணி / குடிநீர் வடிகால்) கொண்ட வரைபடம் தயாரிக்கும் பணிகளை மேற்கொள்ள முடிவுசெய்துள்ளது.
- 1960 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட நில வரைபடங்கள் மற்றும் ஐ.ஆர்.எஸ் செயற்கைகோள் படங்களை கொண்டு நீர்நிலை ஆதாரங்களின் முந்தைய மற்றும் தற்போதைய நிலை ஆகியவற்றைக் காட்டிடும் வரைபடம் வட்டாரம் வாரியாக அண்ணா பல்கலைக்கழக உதவியுடன் தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் ஊரக வளர்ச்சி துறை அலுவலர்களின் விரிவான தல ஆய்வறிக்கையின் மூலம் பெறப்பட்ட தற்போதுள்ள விபரங்களும் அதில் இடம் பெற்றுள்ளது. இந்த வள ஆதார வரைபடம் (Resource Map) அனைத்து மாவட்டங்களுக்கும் மாவட்டவாரியாக, வட்டார வாரியாக, ஊராட்சிவாரியாக தயார் செய்து முடிக்கப் பட்டுள்ளது.
- மேற்படி வரைபடங்களின் அடிப்படையில், முதலில் இருந்த கொள்ளளவை பெரும் வகையிலும் நிலத்தடி நீர் அளவை உயர்த்தும் பொருட்டும் 2012–13 ஆம்

ஆண்டில் இது தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 4.1. 4. சமூக தணிக்கை அலகு

- மத்திய அரசால் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தணிக்கைகான விதி 2011ன்படி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- அதன்படி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் தணிக்கை விதி 4(1)ல் அனைத்து கிராம ஊராட்சியிலும் தணிக்கை செய்யும் நோக்கில் மாநில அரசு 'சமூக தணிக்கை அலகு' என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்த உத்தரவிட்டுள்ளது.
- அதனடிப்படையில், சாஸ்தா (Social Audit Society for Tamil Nadu - SASTA) என்ற சங்கத்தை மாநில அளவில் நிறுவி அதன் கீழ் மாநிலத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் சமூக தணிக்கையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.
- இப்பொருள் தொடர்பாக 02.01.2012 முதல் 06.01.2012 வரை 20 மாநில அளவிலான வழிகாட்டி நபர்கள் சமூக தணிக்கை நடத்துவதற்கான பயிற்சியினை ஐதராபாத்தில் உள்ள தேசிய ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தில் பெற்றுள்ளனர்.



- அதனடிப்படையில், சமூக தணிக்கை செய்ய, முன்மாதிரியாக, வேலூர் மாவட்டத்தில் கனியம்பாடி ஊராட்சி ஒன்றியத்திலும் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் கோலியனூர் ஊராட்சி ஒன்றியத்திலும் சமூகத் தணிக்கை பணி நடத்தப்பட்டது.
- வேலூர் மாவட்டத்தில் கிராம அளவில் உள்ள வழிகாட்டி நபர்கள் 120 பேருக்கும், விழுப்புரம் மாவட்டத்தில் கிராம அளவில் உள்ள வழிகாட்டி நபர்கள் 220 பேருக்கும் 16.02.2012 முதல் 19.02.2012 வரை சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளில் சமூக தணிக்கை மேற்கொள்வதற்கான பயிற்சி வகுப்பு மாவட்ட அளவில் வழங்கப்பட்டது.
- வேலூர் மாவட்டம் கனியம்பாடி மற்றும் விழுப்புரம் மாவட்டம் கோலியனூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த அனைத்து ஊராட்சிகளிலும் சமூக தணிக்கை செய்ய அட்டவணை தயாரிக்கப்பட்டு அதனடிப்படையில் 07.03.2012 முதல் 20.3.2012 வரை சமூக தணிக்கை நடைபெற்றுள்ளது.
- மாநிலத்திலுள்ள 12,524 ஊராட்சிகளிலும் வருடத்திற்கு இருமுறை சமூகத்தணிக்கை 2012–13ம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்படும்.

### 4.1.5. மாற்று திறனாளிகளுக்கான சிறப்பு பணிகள்

- மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட வழிகாட்டி நெறிமுறைகள் **5.5.10–**ன்படி, மாற்றுத் திறனாளிகளுக்கென சிறப்புப் பணிகளின் பட்டியல் இடம் பெற வேண்டும். இதன் அடிப்படையில், **12.01.2012** மற்றும் **3.02.2012** அன்று நடைபெற்ற மாநில அரசு சாரா நிறுவனங்களுடன் கலந்துரையாடியதை தொடர்ந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள **4** மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் **2** கிராம ஊராட்சிகளில் பரீட்சார்த்த முறையில் நடைமுறைபடுத்த முடிவெடுக்கப்பட்டது.

| வ.எண். | மாவட்டத்தின் பெயர் | வட்டாரத்தின் பெயர் | கிராம ஊராட்சியின் பெயர் |
|---|---|---|---|
| 1 | காஞ்சீபுரம் | திருப்போரூர் | 1.கோவளம்<br>2.காயார் |
| 2 | கோயம்புத்தூர் | காரமடை | 1.சிக்குரம்பாளையம்<br>2.ஜடையம்பாளையம் |
| 3 | மதுரை | மதுரை கிழக்கு | 1.கள்ளந்திரி<br>2.ஒத்தக்கடை |
| 4 | திருநெல்வேலி | 1.கடையநல்லூர்<br>2.செங்கோட்டை | 1.குலையநேரி<br>2.இலத்தூர் |

- **17.2.12** முதல் **14.3.2012** வரை கால நிர்ணய வேலை அளவு (Time and motion study) தொடர்ந்து **4** வாரங்கள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி ஆய்வில் சமர்ப்பிக்கப்படும் கருத்தினை கொண்டு மாற்றுத் திறனாளிகளுக்கு புதிய ஊதிய விகிதம் **2012–2013** முதல் நிர்ணயம் செய்யப்படும்.
- தற்பொழுது நடைமுறையில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான பணிகளான பணியிடத்தில் குடிநீர் வழங்குதல், குழந்தைகள் பராமரித்தல் போன்ற பணிகளும் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது.

### 4.1.6. 2012–13 ல் புதிய முயற்சிகள்

**2012–13** ம் ஆண்டிற்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தில் மேற்கொள்ளப்பட உள்ள புதிய பணிகள் பற்றிய விபரம்

- இத்திட்டத்தின்கீழ், தாழ்த்தப்பட்ட/ பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகள், நிலச்சீர்திருத்தப் பயனாளிகள், இந்திரா நினைவு குடியிருப்பு திட்டப் பயனாளிகள், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள் ஆகியோரின் நிலங்கள் மேம்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- பொது மற்றும் அரசுக்கு சொந்தமான நிலங்களில் மரம் நடுதல் மற்றும் நில மேம்பாட்டு பணிகள் வேளாண்மைத் துறை, கால்நடைத் துறை, வனத்துறை மற்றும்

தோட்டக்கலைத் துறைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும்.

- தமிழ்நாட்டில் உள்ள மொத்த 12,524 கிராம ஊராட்சிகளிலும் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு வங்கிகள்/ வங்கிப் பணியாளர் மூலம்/கிராம ஊராட்சி குழுமம் மூலம்/அஞ்சலகம் மூலமாக வாராந்திர ஊதியம் வழங்கும் முறை உருவாக்கப்படும்.
- நடப்பாண்டிற்கு மேற்படி திட்டத்தின் கீழ்எடுத்து செய்ய வேண்டிய பணிப்பட்டியலில், செயற்கைகோள் உதவியுடன் தயாரிக்கப்பட்ட வரைபடங்கள் மூலம் நீர் ஆதாரப்பணிகள் முன்னுரிமைப் பணிகளாக பாவிக்கப்பட்டு அப்பணிகள் முதலில் மேற்கொள்ளப்படும். நீர்ஆதாரங்கள் அனைத்தும் அவற்றின் முழுமையான கொள்ளளவை மீளப்பெறும் வகையில் சீரமைக்கப்படும்.
- கிராம ஊராட்சிகளில் சமூகத் தணிக்கை செய்ய வேண்டி, சமூகத் தணிக்கை அலகு ஒன்று உருவாக்கப்படும். அதன் அடிப்படையில், கிராம ஊராட்சிகளில் வருடத்திற்கு இரண்டு முறை சமூகத் தணிக்கை மேற்கொள்ளப்படும்.



- பணிக்கு வருகின்ற தொழிலாளர்களில் 83% பெண்கள் என்பதையும் பணித்தளத்தில் மண் எடுத்துச் செல்லப்படும் தூரம் மற்றும் உயரம் ஆகியவற்றை கருத்திற்கொண்டும் செய்ய வேண்டிய வேலை அளவினை வரையறை செய்வதற்காக கால நிர்ணய வேலை அளவு மேற்கொள்ளப்படும். அதனடிப்படையில் புதிய ஊரக விலைப்புள்ளிப் பட்டியல் தயாரிக்கப்படும்.
- மாற்றுத் திறனாளிகளுக்கென சிறப்பு ஊதிய விகிதம் உருவாக்கப்படும்.

தமிழ்நாட்டில் 2012–13ம் ஆண்டில் 37.90 கோடி மனிதசக்தி நாட்கள் உருவாக்கப்பட வேண்டுமென மத்திய அரசு மதிப்பீட்டு இலக்கு நிர்ணயித்துள்ளது .

### 4.2. இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம்

கிராமப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர், கொத்தடிமைகளாக இருந்து விடுவிக்கப்பட்டவர்கள், வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஆதிதிராவிட, பழங்குடியினர் அல்லாத ஊரக ஏழை மக்கள் ஆகியோருக்கு இலவச வீடுகள் கட்டித் தருதல் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். கிராம சபையினால் ஒப்பளிக்கப்பட்ட வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் நபர்களின் பட்டியலில் இருந்து பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

இத்திட்டத்திற்கான ஒதுக்கீட்டில் **60** விழுக்காட்டிற்குக் குறையாமல் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு புதிய வீடுகள் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும். அதிகபட்சமாக **40** விழுக்காடு ஒதுக்கீடு தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் அல்லாத பிற வகுப்பினரைச் சார்ந்த வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். மேற்கண்ட இனங்களில் **3** விழுக்காடு உடல் ஊனமுற்றோர் மற்றும் மனவளர்ச்சி குன்றியோருக்கு ஒதுக்கப்படுகிறது. ஒதுக்கப்பட்ட வீடுகளில் **15** விழுக்காடு சிறுபான்மை யினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென மத்திய அரசு வரையறை செய்துள்ளது. இத்திட்டத்திற்கான நிதியில் மத்திய மற்றும் மாநில அரசின் பங்களிப்பு **75:25** விழுக்காடு ஆகும்.

ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ரூ.**45,000/–**என மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசு ரூ.**33,750/–** மற்றும் மாநில அரசு ரூ.**11,250/–** வழங்குகின்றன. இத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் அனைத்து வீடுகளுக்கும் கான்கிரீட் கூரை அமைப்பதற்காக தமிழக அரசால் கூடுதல் நிதி ஒதுக்கப்படுகிறது. கட்டுமான பொருட்களின் விலை உயர்வினால் மாநில அரசால் கான்கிரீட் கூரை அமைப்பதற்காக வழங்கப்பட்ட தொகையான ரூ.**30,000/–**ஐ ரூ.**55,000/–** ஆக உயர்த்தி அரசு ஆணை (நிலை) எண்.**87** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி–**1**) துறை நாள் **16.11.2011**–ல் தமிழ்நாடு



அரசினால் உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் மூலம் கட்டப்படும் வீடு ஒன்றிற்கான அலகுத்தொகை ரூ.**75,000/–**லிருந்து ரூ.**1,00,000/–**ஆக **2011–12** முதல் உயர்த்தப்பட்டுள்ளது. இதில் மாநில அரசு மட்டுமே ரூ.**66,250/– (66.25%)** ஒதுக்கீடு செய்கிறது. மத்திய அரசு ரூ.**33,750/– (33.75%)** ஐ தன் பங்காக வழங்குகிறது.

இத்திட்டத்தின் கீழ் **2011–12**ம் ஆண்டில் ரூ.**1,005.53** கோடி மதிப்பீட்டில் **1,00,553** வீடுகள் எடுக்கப்பட்டுள்ளன.

**2012–13**ம் ஆண்டில் சுமார் ஒரு லட்சம் வீடுகள் இத்திட்டத்தில் கட்டப்படும்.

### 4.3. நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுதிட்டம்:

நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஏற்கனவே பல்வேறு மாநிலத் திட்டங்கள் மற்றும் மத்திய திட்டங்களால் உருவாக்கப்பட்ட கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளியினை நிரப்புவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மத்திய அரசு நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு நிதியினை ரூ.**2** கோடியிலிருந்து ரூ.**5** கோடியாக **2011–12**ம் ஆண்டு முதல் உயர்த்தியுள்ளது. நிர்வாக செலவினங்களுக்காக மொத்த ஒதுக்கீட்டில் வழங்கப்பட்ட தொகை **0.5** விழுக்காட்டிலிருந்து **2** விழுக்காடாக **2011–12**ம் ஆண்டு முதல் உயர்த்தியுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் பணிகளுக்கான நிர்வாக அனுமதி வழங்குவார்.

இத்திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யக்கூடிய பணிகள் குறித்த விளக்கப் பட்டியலும் மேலும் தடை செய்யப்பட்ட பணிகள் குறித்து வழிகாட்டு நெறிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் அனைத்து வகையான பராமரிப்பு பணிகளும் தடை செய்யப்பட்டுள்ளன. குளங்கள், குட்டைகள், ஆறுகள், வாய்க்கால் தூர் வாருதல் போன்ற பணிகள் பராமரிப்பு பணிகளாக கருதப்பட்டு இத்திட்டத்தின் கீழ் எடுத்து செய்ய இயலாது.

இத்திட்டத்தின் கீழ் **2011–12**ம் ஆண்டில் ரூ.**295** கோடி ஒதுக்கீட்டில் **5,229** பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**2012–13**ம் ஆண்டில் இத்திட்டத்திற்கென உத்தேசமாக ரூ.**295** கோடி மத்திய அரசினால் ஒதுக்கீடு செய்யப்படும்.

### 4.4 முழு சுகாதார இயக்கம்

ஊரகப் பகுதிகளில் சுகாதார வசதிகளை ஏற்படுத்தி, திறந்தவெளியில் மலம் கழித்தலை அடியோடு ஒழிப்பதை உறுதி செய்யும் பொருட்டு மத்திய அரசின் ராஜுவ்காந்தி தேசிய குடிநீர் இயக்கத்தினால் “முழு சுகாதார இயக்கம்” என்ற திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஊரக சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் அனைத்து வீடுகளுக்கும் தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகள், சுகாதாரப் பழக்கங்களில் முன்னேற்றம் ஆகியவற்றை ஏற்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். தேவையின் அடிப்படையிலும், மக்களை



மையப்படுத்தியும் ஊரக ஏழைக் குடும்பங்கள் குறிப்பிட்ட அளவு மானியத்துடன் கூடிய கழிப்பிடங்கள் கட்டுவதற்கு இத்திட்டம் ஊக்கம் அளிக்கிறது. ஊராட்சி அமைப்புகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புகளை ஈடுபடுத்தி, செய்தி, கல்வி மற்றும் தொடர்பு, திறன் வளர்த்தல் மற்றும் சுகாதாரக் கல்வி ஆகியவற்றைச் செம்மையாக அளிப்பதன் மூலம் ஊரக மக்களின் சுகாதார செயல்பாடுகளில் மாற்றம் கொண்டுவருவதை முழு சுகாதார இயக்கம் வலியுறுத்துகிறது.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாக, தனிநபர் இல்லக் கழிப்பிடம், பள்ளி சுகாதாரம், சுகாதாரக் கல்வி, சமூகச் சுகாதார வளாகம் மற்றும் அங்கன்வாடிக் கழிப்பிடம் ஆகியவை இனங்காணப்பட்டுள்ளன.

மத்திய, மாநில அரசுகள் மற்றும் பயனாளிகளின் பங்களிப்பு கீழ்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

(ரூபாயில்)

| வ. எண் | கூறுகள் | மத்திய அரசு | மாநில அரசு | பயனாளியின் பங்குத் தொகை | மொத்த அலகுத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | தனிநபர் கழிப்பறை | 2,200 (63%) | 1,000 (28%) | 300 (9%) | 3,500 |
| 2 | பள்ளிக் கழிப்பறை | 24,500 (70%) | 10,500 (30%) | 0 | 35,000 |
| 3 | அங்கன்வாடி கழிப்பறை | 5,600 (70%) | 2,400 (30%) | 0 | 8,000 |
| 4 | சுகாதார வளாகங்கள் | 1,20,000 (60%) | 40,000 (20%) | 40,000 (20%) | 2,00,000 |

முழு சுகாதார இயக்கம் முதலில் கடலூார் மற்றும் கோயம்புத்துார் மாவட்டங்களில் தொடங்கப்பட்டு பின்னர் அனைத்து மாவட்டங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டது. 1999ம் ஆண்டு தொடங்கப்பட்ட திட்டம் தற்போது 2017 வரை மத்திய அரசால் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.1,143,67 கோடி ஆகும். அவற்றில் இதுவரை ரூ.835.15 கோடி விடுவிக்கப்பட்டு ரூ.679.51 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**4.4.1 தனிநபர் இல்லக்கழிப்பிடங்கள்**

இதன் முக்கிய நோக்கம்

- ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்
- ஊரகப் பகுதிகளில் சுகாதாரம் முழுமை பெறுவதை விரைவுபடுத்துதல்.
- சுகாதாரக் கல்வி மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம் சுகாதார வசதியின் அவசியத்தை உணரச் செய்தல்.
- ஊரகப் பகுதிகளிலுள்ள பள்ளிகள் / அங்கன்வாடிகளில் சுகாதார வசதிகளை ஏற்படுத்தி அதன் மூலம் சுகாதாரக் கல்வி மற்றும் சுகாதாரப் பழக்கங்கள் மாணவர்களைச் சென்றடையச் செய்தல்.



- சுகாதாரத்திற்கான சிக்கன முறையிலான சரியான தொழில் நுட்பங்களை ஊக்குவித்தல்.
- திறந்தவெளியில் மலங்கழிக்கும் பழக்கத்தை முற்றிலும் அகற்றி, தண்ணீர் மற்றும் உணவு மாசுபடுதலைத் தடுத்தல்
- உலர் கழிப்பிடங்களைத் (dry latrines), தண்ணீர் ஊற்றிப் பயன்படுத்தும் கழிப்பிடங்களாக (flush out latrines) மாற்றுவதன் மூலம் மனித கழிவுகளைத் துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு சுத்தப்படுத்தும் அவல நிலையை அகற்றுதல்.

ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்துக் குடும்பங்களையும் இத்திட்டத்தின் கீழ்கொண்டு வருவதே இதன் முக்கிய நோக்கமாகும். வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள அனைவருக்கும் ஊக்கத் தொகை அளிப்பதன் மூலம் சமுதாயத்தை முழு ஈடுபாட்டுடன் இத்திட்டத்தில் பங்கேற்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. வறுமைக்கோட்டிற்கு மேலுள்ள மக்களையும் அவர்களின் வீடுகளில் சொந்தச் செலவிலேயே கழிப்பிடங்களைக் கட்ட ஊக்கப்படுத்தப்படுகிறது. தனிநபர் இல்லக் கழிப்பிடங்களை வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள் தாங்களாகவே கட்டிக் கொள்கின்றனர்.

தற்போதுள்ள விதிமுறைகளின்படி தனிநபர் கழிப்பிடத்திற்கு ரூ.3,500/– அலகுத் தொகையாக நிர்ணயிக்கப்பட்டு, ரூ.2,200/– மத்திய அரசாலும் ரூ.1,000/–

மாநில அரசாலும் மானியமாக வழங்கப்படுகிறது. இதற்கான பயனாளிகளின் பங்குத் தொகை ரூ.300/– ஆகும்.

தமிழ்நாட்டில் கட்டப்பட வேண்டிய தனி நபர் இல்லக் கழிப்பிடங்களின் இலக்கு 44,22,133 ஆகும். இதுவரை 38,32,686 கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன. மீதமுள்ள 5,89,447 கழிப்பிடங்களில் 4,72,249 தனிநபர் இல்லக் கழிப்பிடங்கள் 2012–13ஆம் ஆண்டில் கட்டப்பட உள்ளன.

### 4.4.2 பள்ளி சுகாதாரம் மற்றும் சுகாதாரக் கல்வி

மாணவர்கள், புதிய சிந்தனைகளை உடன் ஏற்றுக்கொள்ளும் திறன் கொண்டவர்களாதலால் திறந்தவெளியில் மலம் கழித்தலைத் தவிர்த்துக் கழிப்பிடங்களை உபயோகிப்பதைக் கல்வி மற்றும் ஊக்கப்படுத்துதல் மூலம் அவர்களின் எண்ணங்கள் மற்றும் நடவடிக்கைகளை மாற்றுவதில் பள்ளிகளும், அங்கன்வாடிகளும் சிறந்த பங்கு வகிக்கின்றன. ஆசிரியர்கள் புகட்டும் சுகாதாரக் கல்வி மற்றும் கழிப்பிடங்களை உபயோகிப்பதால் கிடைக்கும் அனுபவம் ஆகியவை மாணவர்கள் மூலம் வீடுகளை அடைந்து அதன் மூலம் பெற்றோர்கள் சுகாதாரப் பழக்கங்களைக் கடைபிடிக்க வழிவகுக்கிறது. எனவே, பள்ளி சுகாதாரம், முழு சுகாதாரத் திட்டத்தில் முக்கியப் பங்காற்றுகிறது. ஆரம்பப்பள்ளி, உயர் நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி மற்றும் அங்கன்வாடி மையங்கள் என அனைத்து வகையான கல்வி நிறுவனங்களிலும் இத்திட்டத்தின் மூலம் கழிப்பிடங்கள் கட்டப்படுகின்றன. பெண்கள் பயிலும் பள்ளிகளில் கழிப்பறை கட்ட அதிகக் கவனம் செலுத்தப்படுகிறது.



சுகாதாரம் மற்றும் சுகாதாரக் கல்வி தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் பள்ளிக் கல்வித்துறையுடன் ஒருங்கிணைந்து பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளில் மேற்கொள்ளப்படுகின்றன. அனைத்துப் பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளில் கழிப்பிட வசதிகளை ஏற்படுத்தித் தருவதை இந்த அரசு உறுதி செய்யும்.

முழு சுகாதார இயக்கத் திட்டத்தில் பள்ளி சுகாதாரத்திற்கான மத்திய அரசு மற்றும் மாநில அரசு நிதி 70:30 என்ற விகிதத்தில் அளிக்கப்படுகிறது. ரூ.118.09 கோடி மதிப்பீட்டில் 53,678 பள்ளிக்கழிப்பிடங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

### 4.4.3 அங்கன்வாடிக் கழிப்பிடங்கள்

குழந்தைகளுக்கு இளவயதிலேயே சுகாதாரம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் அங்கன்வாடிக் கழிப்பறைகள் அமைத்து அதனைப் பயன்படுத்தச் செய்வதன் மூலம் அவர்களிடையே சுகாதாரப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றச் செய்து மாணவர்களுக்கும், அங்கன்வாடிகளில் இருந்து மாணவர்களை அழைத்துச் செல்ல வருகைதரும் தாய்மார்களுக்கும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் அவசியமாகும். ஒவ்வொரு அங்கன்வாடியிலும் குழந்தைகள் பயன்படுத்துவதற்கேற்ற கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 24,470 அங்கன்வாடிக் கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன. 3,500 கழிப்பிடங்கள் 2012–13–ஆம் ஆண்டில் ரூ.2.80 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட உள்ளது.

**4.4.4 சமூக சுகாதார வளாகங்கள்**

முழு சுகாதார இயக்கத்தில், சமூக சுகாதார வளாகம் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. கிராமத்தில் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய மற்றும் எளிதில் அணுகக்கூடிய இடத்தில் சுகாதார வளாகங்கள் அமைக்கப்படுகின்றன. இவ்வளாகங்களை, கிராம ஊராட்சிகள் முறையாகப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்க வேண்டும் அல்லது அதற்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

மத்திய அரசு, மாநில அரசு மற்றும் சமுதாயப் பங்குத் தொகை 60:20:20 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது. கிராம ஊராட்சி, சமுதாயப் பங்களிப்பையும் அளிக்கலாம். 1,438 வளாகங்கள் கட்டப்படவேண்டும் என்று இலக்கில் இதுவரை 1,556 வளாகங்கள் ரூ.31 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன.

**4.4.5 ஊரக சுகாதார அங்காடிகள்**

ஊரக சுகாதார அங்காடிகள், சமூக நோக்குடன் உள்ள வர்த்தகச் செயல்பாட்டு அமைப்பு ஆகும். சுகாதார வளாகங்கள் கட்டுவதற்குத் தேவையான பொருட்கள் மற்றும் ஊரகப் பகுதிகளில் உள்ள தனி நபர்கள் மற்றும் குடும்பங்களுக்கு கழிப்பறை கட்டத் தேவையான பொருட்களை வழங்குவதே ஊரக சுகாதார அங்காடிகளின்



நோக்கமாகும். சம்மந்தப்பட்ட பகுதிகளுக்கேற்ற தொழில் நுட்பம் மற்றும் நிதி வசதிகளுக்கு ஏற்பக் கட்டப்படும் பல்வேறு விதமான கழிப்பிடங்களுக்கான பொருட்கள், அவை சார்ந்த சேவை மற்றும் ஆலோசனை வழங்குதல் ஆகியவை இதன் குறிக்கோளாகும். இந்த அங்காடிகள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், மகளிர் நிறுவனங்கள், ஊராட்சி அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளால் துவக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. மாநிலத்திலுள்ள 31 மாவட்டங்களில், 195 அங்காடிகள் ரூ.2.93 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளன.

**4.4.6 உற்பத்தி மையங்கள்**

குறைந்த செலவில், தரமான கட்டுமானப் பொருட்களின் உற்பத்தியை பெருக்குவதற்கு இந்த உற்பத்தி மையங்கள் உதவி புரிகின்றன. ஒவ்வொரு மையத்தினை அமைப்பதற்கும், கொத்தனார் பயிற்சி மற்றும் சுழல் நிதிக்காக அதிகபட்சம் ரூ.3.50 லட்சம் வழங்கப்படுகிறது. இதுவரை, ரூ. 65 லட்சம் செலவில் 65 உற்பத்தி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**4.4.7 நிர்மல் கிராம புரஸ்கார் விருது**

சுகாதாரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், நாட்டிலேயே முதன் முறையாக ஜுலை 2003–ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ‘‘தூய்மையான கிராம இயக்கம்‘‘ என்ற விருது, சுகாதார திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தும் கிராம

ஊராட்சிகளுக்கு வழங்கப்படும் என அறிவித்தார்கள். அதனை முன்னோடியாகக் கொண்டு, மத்திய அரசு, முழு சுகாதார இயக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் நிர்மல் கிராம புரஸ்கார் விருது 2005–லிருந்து வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது தங்கள் பகுதிகளில் முழு சுகாதாரத்தை எய்தும் ஊராட்சிகளுக்கும் இதர அமைப்புகளுக்கும் ஒரு அங்கீகாரமாகத் திகழ்கிறது.

**NGPன் முயற்சிகள்**

1. சமூக மற்றும் அரசியல் தொடர்புகளை ஏற்படுத்தி இந்தியாவில் உள்ள ஊரகப் பகுதிகளில் சுகாதார வசதியினை மேம்படுத்தி வளர்ச்சி பெறச் செய்தல்.
2. திறந்தவெளியில் மலம் கழித்தலைத் தடுத்தலும் தூய்மையான கிராமத்தை உருவாக்குதலும்.
3. முழுசுகாதார இயக்கத்தை, தொடர்ந்து வெற்றிகரமாகச் செயல்படுத்த ஊராட்சி அமைப்புகளை ஊக்குவித்தல்.
4. முழு சுகாதாரத்தை எய்தப் பாடுபடும் அமைப்புகளை ஊக்குவிப்பதன் மூலம் சமூக ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல்.

இதுவரை தமிழ்நாட்டில் 5 வட்டார ஊராட்சிகள் மற்றும் 2,385 கிராம ஊராட்சிகள் சுகாதாரம் மற்றும் முழுமையான தூய்மைக்காக இவ்விருதினைப் பெற்றுள்ளன. இந்த விருதுக்குரிய தொகை ரூ.50,000/–ல் இருந்து ரூ.5 லட்சம் வரை கிராம ஊராட்சிகளுக்கும் ரூ.10 லட்சத்திலிருந்து ரூ.20 லட்சம் வரை வட்டார



ஊராட்சிகளுக்கும் மக்கள் தொகைக்கேற்ப வழங்கப் படுகிறது.

முழு சுகாதாரத் திட்டத்திற்கு வலுசேர்க்கும் வகையில், சுகாதாரமான மற்றும் திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத கிராமங்களை உருவாக்குவதனை பல ஊடக மற்றும் மக்கள்தொடர்பு சாதனங்கள் (Multi-media) மூலம் இந்த அரசு உறுதி செய்யும்.

### 4.5. பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மான்ய நிதி

தமிழகத்தில் பின்தங்கிய 5 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்ட தேசிய வளர்ச்சி மற்றும் புனரமைப்புத் திட்டம் மத்திய திட்டக் குழுவிலிருந்து மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைப்பகத்திற்கு 2006–07 முதல் மாற்றப்பட்டது. பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் இத்திட்டத்தைப் பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மானிய நிதி என மாற்றியமைத்தது. இத்திட்டம், தற்போது தமிழ்நாட்டில் கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், திண்டுக்கல் மற்றும் சிவகங்கை ஆகிய ஆறு மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வளர்ச்சியில் பல்வேறு பகுதிகளில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளைக் கண்டறிந்து அவற்றைக் களைவதற்காக உருவாக்கப்பட்டதே பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மானிய நிதி ஆகும். தற்போதுள்ள திட்டங்களின் செயல்பாடுகளால் வளர்ச்சியில் முழுமை பெறாத பகுதிகளுக்கு ஏற்றவாறு இது

வடிவமைக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளின் திட்டமிடல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றை மேம்படுத்துதல், அவைகளுக்கு ஒப்படைக்கப்பட்ட முக்கியக் கடமைகளை நிறைவேற்றுதலில் திறனை மேம்படுத்த உதவுதல் மற்றும் வளர்ச்சியில் ஏற்றத்தாழ்வுகளைக் களைதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

இத்திட்டத்தின் கீழ் இரு வழிகளில் நிதி அளிக்கப்படுகிறது.

1. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தொடர்புடைய அலுவலர்களுக்குப் பொறுப்புணர்வு மற்றும் வெளிப்படையான தன்மையை ஏற்படுத்தும் வகையில் திட்டமிடல், செயலாக்கம், கண்காணித்தல், கணக்குகளைப் பராமரித்தல் ஆகியவற்றிற்கான திறனை மேம்படுத்தப் பயிற்சி அளித்தல்.
2. ஊராட்சிகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் பகுதிகளில் உள்ள அடிப்படை வசதிகளில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளைக் களையும் விதமாக மக்களோடு இணைந்து திட்டமிடல் வாயிலாக ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் வரையறுக்கப்படாத மானியத்தை வழங்குதல்.



2011–12ம் ஆண்டிற்கு 117.74 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.6. தேசிய கரிம வாயுத்திட்டம்**

இத்திட்டம் 100 சதவீதம் மத்திய அரசு மானியத்துடன் செயல்படுத்தப்படுகிறது. மலைப்பாங்கான இடங்களில் ரூ.10,000/–க்கும் இதர இடங்களில் ரூ.8,000/–க்கும் கரிமவாயு கலன்கள் அமைக்கப்படுகின்றன. 2011–12ம் நிதியாண்டில் 1,000 கரிம வாயுகலன்கள் அமைத்திட ரூ.91.25 லட்சம் மத்திய அரசால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை 760 கலன்கள் முடிக்கப்பட்டுள்ளன

**4.7. சமூக பொருளாதார – சாதிவாரியான கணக்கெடுப்பு –2011**

மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் மூலமாக சமூக பொருளாதார சாதி கணக்கெடுப்பு 2011–னை இந்திய அரசு துவக்கியுள்ளது. இக்கணக்கெடுப்பின் மூலம் ஊரக மற்றும் நகர்புறத்தில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழே வசிக்கும் அனைத்து குடும்பங்களும் கண்டறியப்படும், சாதி மற்றும் மதம் தொடர்பான அனைத்து புள்ளி விவரங்களும் இக்கணக்கெடுப்பில் சேகரிக்கப்பட்டாலும் சாதி, மதம் தொடர்பான விவரங்கள் மட்டும் பொது பார்வைக்கு அல்லாமல், இந்திய அரசின் பொது பதிவாளரால் சமூக

பொருளாதார புள்ளி விவரங்கள் தொகுப்பது தொடர்பான பயன்பாட்டிற்கு மட்டும் எடுத்துக் கொள்ளப்படும்.

மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் தொழில் நுட்ப ஆலோசனை மற்றும் நிதியினைக் கொண்டு மாநில நிர்வாகத்தின் மூலம் இக்கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும். இக்கணக்கெடுப்பு பணியானது, விவரங்கள் எழுத்துப்பூர்வமாக பதியப்படாமல் பெங்களூரிலுள்ள மத்திய அரசின் நிறுவனமான பாரத மின்னனு நிறுவனத்தின் மூலம் வழங்கப்படும் கைக்கணினியில் நேரடியாக பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

இக்கணக்கெடுப்பு பணியில் ஈடுபடும் கணக்கெடுப்பாளர்களுக்கு, கணக்கெடுப்பு பகுதி வாரியான வீட்டுப் பட்டியல் சுருக்கம் மற்றும் கள வரைபடம் ஆகியவை மக்கள்தொகை கணக்கெடுப்பு இயக்ககத்திலிருந்து வழங்கப்படும். தேசிய மக்கள் தொகை பதிவேட்டில் சேகரிக்கப்பட்டுள்ள வீட்டு விவர பட்டியல் கைக்கணினியில் கணக்கெடுப்பு தொடங்குவதற்கு முன் பதிவு செய்யப்படும். இதற்கென நியமிக்கப்பட்டுள்ள கணக்கெடுப்பாளர் மற்றும் பெல் நிறுவனத்தால் பயிற்சி அளிக்கப்பட்ட புள்ளி விவர பதிவாளர் (Data Entry Operator) ஆகியோர் இக்கணக்கெடுப்பு பணியினை களத்தில் ஒருங்கிணைந்து மேற்கொள்வர். இக்கணக்கெடுப்பு பணிக்கு மாவட்டம் முழுமைக்கும் மாவட்ட ஆட்சியர், முதன்மை சமூக பொருளாதார சாதி கணக்கெடுப்பு அலுவலராவர். இவரது கண்காணிப்பின் கீழ் இப்பணி மேற்கொள்ளப்படும்.



தனி நபர் மற்றும் வீடுகளில் கணக்கெடுப்பில் சேகரிக்கப்படும் விவரங்கள்: தொழில், கல்வி, மாற்றுத் திறன், மதம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவரம் சாதி/ பழங்குடியினரின் பெயர், பணி, வருமானம் மற்றும் வருமான ஆதாரம், அசையும் மற்றும் அசையா சொத்துக்கள், நுகர்வோர் வீட்டு உபயோக பொருட்கள் மற்றும் நிலம். மேலும், மேற்படி கணக்கெடுப்பானது வீட்டு வசதி குறித்த விவரங்கள், பணி விவரங்கள், கல்வி நிலை, வீட்டு உறுப்பினர்களின் மாற்றுத்திறன் மற்றும் நில உடமை விவரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இக்கணக்கெடுப்பில், கணக்கெடுக்கப்படுபவரின் விவரங்கள் அவர் சுயமாக அளிக்கும் விவரங்களை இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வினா படிவத்தில் பதியப்படும்.

குடும்பத் தலைவர் அளிக்கும் விவரங்கள் தவறானவை என கணக்கெடுப்பாளர் கருதும் பட்சத்தில் அவை சரியானவை அல்ல என்று கணக்கெடுப்பாளர் குறிப்புரை வழங்குவாரானால், மேற்பார்வையாளர், மேற்கண்ட வீட்டிற்கு நேரடியாக சென்று தகவல்களின் உண்மைத் தன்மையினை சரிபார்க்க வேண்டும். சேகரிக்கப்பட்ட தகவல்களை கிராம சபை கூட்டத்தில் வைத்து ஒப்புதல் பெறப்பட வேண்டும். கணக்கெடுப்புப் பணி முடிவுற்றவுடன் வரைவு பட்டியல் வெளியிடப்படும். இதனைத் தொடர்ந்து பெறப்படும் கோரிக்கைகள், மறுப்புகள் மற்றும் அது தொடர்பான முடிவுகள் குறித்து உரிய

வழிமுறைகளை பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். அதன்பின்னர் 31வது நாள் நிறைவில், இறுதி பட்டியல் வெளியிடப்பட்டு இணைய தளத்திலும் வெளியிடப்படும்.

தமிழ்நாட்டில் இப்பணியினை மேற்கொள்ள இந்திய அரசானது ரூ.8920.62 லட்சங்களை ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாட்டில், இப்பணியானது உள்ளாட்சிகளுக்கு நடைபெற்ற சாதாரண தேர்தலுக்கு பின்பு டிசம்பர் 2011ல் பணிகள் தொடங்கப்பெற்று இக்கணக்கெடுப்பு தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி முழுமையாக ஆகஸ்டு –2012க்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 5. சாலைகள்

### 5.1. பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்

சாலை வசதியில்லாத குக்கிராமங்களுக்கு அனைத்து பருவ காலத்திற்கும் ஏற்ற சாலை வசதியினை ஏற்படுத்தித் தருவதற்காக மத்திய அரசால் 2000ம் ஆண்டில் பிரதம மந்திரி கிராம சாலை திட்டம் துவங்கப்பட்டது. இத்திட்டம் 100% மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. ஆண்டு முழுவதும், அனைத்து பருவ காலங்களிலும் பயன்படுத்த தக்கவகையில் தேவையான சிறுபாலங்கள் மற்றும் வடிகால் வசதிகளுடன் கூடிய சாலைகள் அமைப்பதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டத்தின் முதல் ஏழு கட்டங்களில்,



அதாவது 2000–2001ல் இருந்து 2007–08 (பாரத் நிர்மான் கட்டம் II) வரை 9,984.32 கி.மீ. நீளமுள்ள 4,949 சாலைப்பணிகள், மொத்தம் ரூ.2,024 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 4,918 பணிகள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

தற்போது ரூ.577.90 கோடி மதிப்பீட்டில் 2,031 கி.மீ நீளமுள்ள 1,176 சாலைகளை மேம்பாடு செய்ய பாரத் நிர்மான் கட்டம் IIIன் (பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம் கட்டம் VIII) கீழ் விரிவான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, அதற்கான கருத்துரு, தேசிய ஊரக சாலை மேம்பாட்டு முகமைக்கு அனுப்ப தயார் நிலையில் உள்ளது. இருப்பினும், மத்திய அரசின் தற்போதைய நெறி முறைகளின்படி, கீழ்க்கண்ட வகையிலான பணிகளை மட்டுமே பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்ய இயலும்.

i. பாரத் நிர்மான் திட்டத்தின் முதல் கட்டத்தில் விடுபட்டுப்போன குக்கிராமங்களுக்கான இணைப்புச்சாலைகள்.
ii. உலக வங்கி மற்றும் ஆசிய வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்.
iii. இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டதாக கண்டறியப்பட்ட 33 மாவட்டங்களில் இணைப்புச்சாலைகள்.
iv. எல்லை பகுதியில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட சிறப்பு சாலைகளின் தொகுப்பு.

தமிழ்நாட்டில் பிரதம மந்திரி கிராம சாலைத்திட்ட செயலாக்கம் தொடர்ந்து சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக, மேற்கூறியுள்ள நெறிமுறைகளுக்கு ஏற்ற சாலைகள் நம் மாநிலத்தில் இல்லாத காரணத்தால் கடந்த 3 வருடங்களாக தமிழகத்திற்கு இத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மத்திய திட்டக் குழு துணைத் தலைவரிடம், 6.7.11 அன்று புதுடெல்லியில் 2011–12 ஆண்டின் தமிழ்நாட்டிற்கான ஆண்டு திட்டத்தினை இறுதி செய்யும்பொழுது இதுகுறித்து நேரில் எடுத்துரைத்துள்ளார்கள். மேலும் இந்த சந்திப்பின்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தற்போதுள்ள ஊரக சாலைகளை மேம்படுத்துவதற்கு தமிழ்நாட்டிற்கு அதிக நிதி ஒதுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தி உள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் முயற்சியால் தற்போது மத்திய அரசு 500 முதல் 999 வரை மக்கள் தொகை கொண்ட இணைப்பு சாலை வசதியில்லாத குக்கிராமங்களுக்கு சாலை வசதி அமைக்க கருத்துரு கோரியுள்ளது. இவற்றிற்கான விரிவான திட்ட அறிக்கைகள் மத்திய அரசுக்கு விரைவில் சமர்ப்பிக்கப்படும்.

இருப்பினும், தமிழகத்தில் 500 முதல் 999 வரை மக்கள்தொகை கொண்ட குக்கிராமங்களுக்கு கூட மிகக்குறைவான சாலைகளே தேவைப்படும். எனவே, இத்திட்டத்தினை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச்செல்வது



இன்றியமையாததாகிறது. அதாவது, 250 முதல் 500 வரை மக்கள் தொகை கொண்ட குக்கிராமங்களுக்கும் சாலை வசதி இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படவேண்டும். இந்த அரசு 250 முதல் 500 வரை மக்கள்தொகை கொண்ட குக்கிராமங்களுக்கும் சாலை வசதி அமைப்பதற்கான கருத்துருக்களை பரிசீலிக்கக்கோரி மத்திய அரசினை வலியுறுத்தும்.

**விடுபட்ட பாலங்கள்**

பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் ஏற்கனவே அமைக்கப்பட்ட சாலைகளில் விடுபட்டுப்போன 43 பாலங்களை ரூ.57.43 கோடி மதிப்பீட்டில் எடுத்துச்செய்ய, மத்திய அரசு முதல் கட்ட அனுமதி வழங்கியுள்ளது. இதில் மாநில அரசின் பங்களிப்பு ரூ. 14.95 கோடி ஆகும்.

**தென்னை நார் தொழில்நுட்ப சாலை (Coir–Geo Textile road)**

சாலைகள் மேம்பாடு செய்வதில் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் வகையில் தென்னை நாரினை பயன்படுத்தி சாலைகள் மேம்பாடு செய்ய அரசு உத்தேசித்துள்ளது. மத்திய அரசு இத்தொழில்நுட்பத்தை பயன்படுத்தி 45.88 கி.மீ நீளமுள்ள 21 சாலைகளை மேம்படுத்த ரூ. 20.34 கோடி மதிப்பீட்டில் முதற்கட்ட அனுமதி வழங்கியுள்ளது.

இவற்றிற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்படவுள்ளது.

### 5.2. நபார்டு ஊரக உட்கட்டமைப்பு சாலைப் பணிகள்

மத்திய அரசின் வழிகாட்டுதலுக்கிணங்க 1995–96 ஆம் ஆண்டு நபார்டு வங்கி, கிராமப் பகுதிகளில் மாநில அரசு, அரசுத்துறை நிறுவனங்கள், கிராம ஊராட்சிகள், சுயஉதவிக் குழுக்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகளுக்கு உட்கட்டமைப்புத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக நிதி உதவி வழங்கும் பொருட்டு, ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியை உருவாக்கியது. நபார்டு வங்கி பல்வேறு பகுதிகளாக இந்த நிதியினை விடுவித்து வருகிறது. இந்த நிதியின் மூலம் பெரும்பான்மையான கிராமப்புறச் சாலைகள், பாலங்கள், சிறுபாசனக் கட்டமைப்புகள், பள்ளிகள், சுகாதார மையங்கள் மற்றும் மின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

நபார்டு வங்கி தமிழக அரசுக்கு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியினை கடனாக வழங்கி வருகிறது. சாலைகள் மற்றும் பாலங்களுக்கு நிதி வழங்குவது, ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி–IIவது பகுதியில் இருந்து துவங்கியது. இந்த நிதி, சாலைகள் அமைத்தல், ஏற்கனவே உள்ள சாலைகளை தார்ச்சாலைகளாக மேம்படுத்துதல், பழுதடைந்த தார்ச்சாலைகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் மூலமாக இதுவரை மொத்தம் 4,307 சாலைப்பணிகள் ரூ.1,322.37 கோடி மதிப்பீட்டில் 10,580.46 கி.மீ. நீளத்திற்கு எடுக்கப்பட்டு, இதுவரை 4,214 பணிகள்



முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

நபார்டு வங்கி, ஊரக உள்கட்டமைப்பு நிதி XVII–ன் கீழ் 2011–12ம் ஆண்டில் 902.07 கி.மீ நீளமுள்ள 333 ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்பாடு செய்திட ரூ. 143.67 கோடி நிதியினை அளித்துள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, இப்பணிகள் அனைத்தும் தற்போது துவங்கப்பட்டுள்ளன.

தற்போது, இத்துறையின் சிறப்பான செயல் பாட்டினைக் கருத்திற்கொண்டு, நபார்டு வங்கி கூடுதலாக ரூ.315 கோடி மதிப்பீட்டில் 1,729.28 கி.மீ நீளமுள்ள 637 ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்பாடு செய்வதற்கு அனுமதி அளித்துள்ளது. இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் விரைவில் கோரப்படும். மேலும் 2012–13ம் ஆண்டில், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்படுத்துவதற்கு கூடுதல் நிதி வழங்கிட நபார்டு வங்கியிடம் இத்துறை கோரியுள்ளது.

### 5.3. பதிமூன்றாம் நிதிக்குழு மானிய சாலைப்பணிகள்

அரசு ஆணை எண்.11, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் (H.N I) துறை நாள் 23.1.12ன்படி சாலைகள் மற்றும் பாலங்கள் பராமரிப்பிற்கான மானியம், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளுக்கு இடையே 2:1 என்ற விகிதத்தில் பிரிக்கப்பட்டு, 1,778.48 கி.மீ நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய

மற்றும் ஊராட்சி சாலைகளை ரூ.143 கோடி மதிப்பீட்டில் பராமரிப்பு செய்வதற்கு அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தற்போது பணிகள் அனைத்தும் நடைபெற்று வருகின்றன.

மேலும், 2012–13ம் ஆண்டிற்கு ரூ.151 கோடி மதிப்பீட்டில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் பராமரிப்பு செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 5.4. பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு தார் சாலைகள் அமைத்தல்

தமிழக அரசின் 2011–12ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு சாலை அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு சாலை அமைப்பது இவ்வரசுக்கு புதிதல்ல. ஏற்கனவே 2004–05இல், 29 மாவட்டங்களில் 1,031.39 கி.மீ நீளமுள்ள ஊரகச் சாலைகள் பிளாஸ்டிக் கழிவுகளை கொண்டு ரூ. 47.29 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டது.

தற்போது 31 மாவட்டங்களில், 1,10.21 கி.மீ நீளமுள்ள 45 சாலைகள் ரூ.9.00 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இதுதவிர 13–ம் நிதிக்குழு மானிய நிதி ஒதுக்கீட்டின் கீழ் 83.63 கி.மீ நீளமுள்ள 37 சாலைகள் ரூ. 7.28 கோடி மதிப்பீட்டில் பிளாஸ்டிக் சாலைகளாக அமைக்கப்பட உள்ளது.



மேலும், இத்துறையானது ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில், 10 இடங்களில் பிளாஸ்டிக் கழிவுகளை சேகரிக்கும் மையங்களை அமைத்து வருகிறது. இந்த மையங்கள் கிராம அளவிலான கூட்டமைப்பினால் நடத்தப்படும். சாலைகளுக்கு தேவைப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் இம்மையங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும்.

**தரமான திட்ட செயலாக்கத்திற்கான புதிய நடவடிக்கைகள்**

- இந்த அரசு, பல்வேறு திட்டங்கள் மூலம் கட்டப்படும் கட்டடங்களின் மாதிரி வடிவமைப்புகளில் (Type design) பயன்பெறுவோரை கலந்தாலோசித்து தேவையான மாற்றங்களை ஏற்படுத்தி அதனடிப்படையில் புதிய வடிவமைப்புகள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.
- பல்வேறு திட்டப் பணிகள் கூடுதல் தரத்துடன் செயல்படுத்தப்படுவதற்காக, மாவட்டங்களிலுள்ள தர ஆய்வுக்கூடங்களுக்கு புதிய உபகரணங்கள் வாங்கி வழங்கப்பட்டு அவைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.
- ஒப்பந்தப்புள்ளி கோரும் அனைத்து அமைப்புகளும் ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டிற்கு மேலுள்ள அனைத்து பணிகளுக்கும் மின் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விரைவில் மின் ஒப்பந்தப்புள்ளி முறை நடைமுறைப்படுத்தப்படும்.

- பணிகளின் நிலை குறித்த விவரங்களை அவ்வப்போதே தெரிந்துகொள்வதற்காக கள ஆய்வின்போதே பணிகளைப் புகைப்படம் எடுத்து உடனடியாக விரைவு கைபேசி (smart phone) மூலம் அனுப்பும் வசதி அறிமுகப்படுத்தப்படும். மென்பொருள் ஆய்வு மற்றும் களப்பரிசோதனைக்குப் பின் இந்த வசதி விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்.

## 6. பணியாளர் நலன்பேணும் நடவடிக்கைகள்

- மாவட்ட நிர்வாகத்தின் செயல்பாடுகளை செம்மையாக்கவும், அரசு அலுவலர்களுக்கு உரிய நேரத்தில் பதவி உயர்வுகள் வழங்குவதை உறுதி செய்யவும், அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய கட்டாயப் பயிற்சியினை ஒன்றுக்கு மேற்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் தொடர்ந்து அளிக்க அரசு முடிவு செய்தது. இதன்படி புதிதாக தேர்வு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்கள்/ஊர் நல அலுவலர்கள் உட்பட பல்வேறு நிலை பணியாளர்களுக்கு பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிறுவனத்துடன் சேர்த்து திருச்சி, வேலூர், கோயமுத்தூர் மற்றும் தூத்துக்குடி காவலர் பயிற்சி கல்லூரிகளில் அடிப்படைப் பயிற்சி வழங்கப்பட உள்ளது.



- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்தில் பணியமைப்பு தொடர்பாக கையாளப்படும் இனங்கள் தொடர்பாக 31 மாவட்டங்களில் பணி புரியும் அலுவலர்களால் நீதிமன்றங்களில் தொடரப்படும் வழக்குகளின் பல்வேறு நிலைகளை அறிந்து கொள்ள சிறப்பு மென்பொருள் (Special Software) அறிமுகப்படுத்த அரசு உத்தேசித்துள்ளது.
- மாநில மற்றும் மாவட்ட அளவில் பணி புரிந்து வரும் உதவி இயக்குநர்கள் மற்றும் அதற்கு மேல் நிலையில் உள்ள அலுவலர்களின் பணியமைப்பு விவரங்கள் அடங்கிய பட்டியல் தயாரித்து வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்தில் பணிபுரியும் பணியாளர்களின் விடுப்பு உட்பட அனைத்து அரசு சலுகைகள் தொடர்பான விவரங்களை தேசிய தகவல் மையம் (NIC) உதவியுடன் 2012 – 13ஆம் ஆண்டு முதல் இணையதளத்தின் மூலம் கண்காணிப்பதை நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- ஊராட்சி செயலர்களின் நீண்ட நாள் கோரிக்கையினைக் கருத்தில்கொண்டு ஊராட்சி செயலர் பதவிக்கு சிறப்பு பணி விதிகள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது
- தலைமைச் செயலகத்தில் உள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்கள் மற்றும்

பணியாளர்களுக்கு ரூ.4.75 லட்சம் மதிப்பிலான கணினி மற்றும் உபகரணங்கள் வழங்க பகுதி II திட்டத்தின் கீழ் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் தற்போது 25 கணினிகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வரும் முதன்மை server-க்கு பதிலாக புதிய நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய server நிறுவ முடிய செய்யப்பட்டுள்ளது.

- மேலும் மாவட்டங்களில் வளர்ச்சித் துறை நிர்வாகத்தை மேம்படுத்தும் வகையில் சிவகங்கை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்களுக்கு குடியிருப்புக் கட்டிடங்கள் ரூ.169 லட்சம் மதிப்பீட்டில் பகுதி II திட்டத்தின் கீழ் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் திருச்சி, திருப்பூர், நீலகிரி மற்றும் விருதுநகர் மாவட்டத்தைத் தவிர ஏனைய அனைத்து மாவட்டங்களுக்கும் திட்ட இயக்குநர்களுக்கும் குடியிருப்புக் கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கும் திருச்சி மாநகராட்சிப் பகுதியில் திட்ட இயக்குநர் குடியிருப்பு கட்டத் தேவையான நிலம் தேர்வு செய்யப்பட்டவுடன் குடியிருப்புக் கட்டிடம் கட்ட தனியே முன்மொழிவு பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- மாவட்ட அளவிலான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்கள் மாநிலத் தலைமையகத்திற்கு ஒவ்வொரு மாதமும் ஆய்வுக் கூட்டங்களுக்கு வருகின்றனர். அந்நேரங்களில்



தங்கும் வசதியின்றி மிகவும் அவதிக்குள்ளாகின்றனர். அதுபோன்றே, மத்திய அரசிலிருந்து ஆய்விற்காகவும், தல ஆய்விற்காகவும் வருகின்ற உயர் அலுவலர்களுக்கு தங்கும் வசதி செய்து தருவதிலும் சிரமம் உள்ளது.

- ஆய்வுக் கூட்டங்களுக்காக சென்னை வரும் அலுவலர்கள் பயன்பெறும் வகையிலும், தமிழகத்திற்கு வரும் மத்திய அரசு அலுவலர்கள் வசதிக்காகவும், சென்னை, நெற்குன்றத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு சொந்தமான இடத்தில் தங்கும் விடுதிகள் அமைக்கப்படும்.
- ஊரக வளர்ச்சி இயக்ககம் மற்றும் மாற்றுப் பணிகளில் சென்னையில் பணிபுரிகின்ற கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் நிலை அலுவலர்கள் குடியிருக்க ஏதுவாக சென்னை, நெற்குன்றத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு சொந்தமான இடத்தில் தங்கும் அலுவலர் குடியிருப்புகள் கட்டித்தரப்படும்.
- ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் தொடர்ச்சியாக உள்ள சில கிராம ஊராட்சிகளை (Group of Contigous Village Panchayats) ஒரு தொகுதியாக அமைத்து தொகுதித் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (Group Deputy Block Develoment Officer) என்ற அமைப்பினை ஏற்படுத்திட அரசு எண்ணியுள்ளது. ஒவ்வொரு

ஊராட்சி ஒன்றியத்திலும் குறைந்தபட்சம் 5 துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஊராட்சி நிர்வாகம், தணிக்கை, ஆதி திராவிடர் நலம், சிறுசேமிப்பு (ம) மக்கள் தொடர்பு, தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், வீட்டு வசதி (ம) சுகாதாரம் போன்ற பல்வேறு பணிகளை கவனித்து வருகின்றனர். நிர்வாகத்தினை மேம்படுத்திட ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு குறிப்பிட்ட பகுதியினை தொகுதி என நிர்ணயம் செய்து, அந்த தொகுதிக்குட்பட்ட அனைத்து பணிகளையும், அத்தொகுதிக்கென நியமனம் செய்யப்படும் தொகுதி துணை வட்டார வளர்ச்சி அலுவலரால் கவனிக்கப்படும் வகையில், தொகுதி துணை வட்டார வளர்ச்சி அலுவலர் என்ற புதிய முறையை அறிமுகப்படுத்தலாம். இத்தொகுதி துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தங்களுக்கென வரையறுக்கப்பட்டுள்ள ஊராட்சிப் பகுதிக்குட்பட்ட அனைத்துப் பணிகளையும் கவனிப்பர்.

## 7. திறன் மேம்பாடு

### 7.1 . மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள்

தமிழக அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் இத்துறையின் பல்வேறு நிலைகளில் பணிபுரியும்



அலுவலர்கள் ஆகியோர், தத்தம் கடமைகளையும், பொறுப்புகளையும் சிறப்பாக நிறைவேற்றிட தேவையான பல்வேறு பயிற்சிகளை, அவர்களுக்கு தொடர்ந்து அளித்து வருகின்றது. இப்பயிற்சிகளை அளிப்பதற்கென இத்துறையில் இரு வகையான பயிற்சி அமைப்புகள் உள்ளன.

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம், மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள் இவற்றின் மூலம், ஊராட்சி நிர்வாகம், திறன் மேம்பாடு, கணக்குகள், தணிக்கை, பணியமைப்பு, நவீன தொழில் நுட்பம், கணினிப் பயன்பாடு, மத்திய, மாநில அரசுகளின் வளர்ச்சித் திட்டங்கள், மேலாண்மை, தலைமைத்துவம், சுய உதவிக் குழுக்கள் மேம்பாடு, மரபு சாரா எரிசக்தி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, ஊரகச் சுகாதாரம், பட்டறிவுப் பயிற்சிகள் போன்ற பல்வேறு பொருட்கள் குறித்து பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

### மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள்

மாநிலத்தில் 5 இடங்களில் அமைந்துள்ள 5 மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் மூலம் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களில் கிராம ஊராட்சி செயலர், ஊர் நல அலுவலர், இளநிலை உதவியாளர், உதவியாளர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர், பணி மேற்பார்வையாளர், சாலை ஆய்வாளர் போன்ற ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுக்கும், கிராம ஊராட்சி தலைவர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் சார்பு துறையினருக்கும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மேற்படி மண்டல ஊரக

வளர்ச்சி பயிற்சி நிறுவனங்கள் (i) திருவண்ணாமலை மாவட்டத்தில் சத்திய விஜய நகரம், (ii) கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி அணை, (iii) ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர், (iv) தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை மற்றும் (V) மதுரை மாவட்டத்தில் தே.கல்லுப்பட்டி ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. ஒவ்வொரு பயிற்சி நிறுவனத்திற்கென பயிற்சிக்காக எல்லை மாவட்டங்கள் வகுத்தளிக்கப்பட்டுள்ளன.

**பணியமைப்பு**

மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனத்தில், கூடுதல்/இணை இயக்குநர் நிலையில் முதல்வர்கள், ஊரக வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் நிலையிலான விரிவுரையாளர்கள், அயற்பணியில் சார்பு துறையிலிருந்து நியமிக்கப்படும் விரிவுரையாளர்கள், பண்ணை மேற்பார்வையாளர்கள், பணிமனை உதவியாளர்கள் மற்றும் நிர்வாக பணியமைப்பினர் என நிரந்தரமான நிர்வாக கட்டமைப்பு உள்ளது. இந்நிறுவனங்களில் ஆண்டு முழுவதும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

**பயிற்சி விவரம்**

இப்பயிற்சி நிறுவனங்களில் பயிற்சிகளாக தொடர்ந்து நடத்தப்படும் 10 பயிற்சிகள், கணிணி திறன் மேம்பாட்டுக்கான 5 பயிற்சிகள் என மொத்தம் 15 வகையான பயிற்சிகள் வழக்கமாக நடத்தப்பட்டு வருகின்றன. இவை தவிர, சுய உதவி குழுக்களுக்கான பயிற்சிகள், இந்திரா



நினைவு குடியிருப்புத் திட்டம், ராஷ்ட்ரீய கிராம சுவராஜ் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் நடத்தப்படும் பயிற்சிகள் என பல்வேறு வகை பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் அவ்வப்போது அரசு அறிவிப்பின் மூலம் வெளியிடப்படும் திட்டங்கள், அதற்கான பயிற்சிக்கென ஒதுக்கப்படும் நிதி ஆகியவற்றின் அடிப்படையிலும் நடத்தப்படும் சிறப்பு பயிற்சிகள், சார்பு துறைகளுக்காக மூலம் இந்நிறுவனங்களில் நடத்தப்படும் பயிற்சிகள் என பல்வகை பயிற்சிகள் மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் மூலம் நடத்தப்படுகின்றன.

**நிதி**

மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் ஊதியம் மற்றும் ஊதியம் சாராத செலவினம் அரசின் வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீடாக ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. இது தவிர, மத்திய அரசின் தொடர் செலவின மானியமாக ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனத்திற்கும் ரூ.10 லட்சம் ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி தொடர்பான செலவினங்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும், உள்கட்டமைப்பு வசதிக்காக மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள் கோரும் நிதியினை 100 சதவீத மான்யமாக மத்திய அரசின் நிதி உதவியாக, தொடரா செலவினத்தின் கீழ் தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனம் வழங்குகிறது.

**7.2. மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம்**

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின்

பிரதிநிதிகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக 1961ஆம் ஆண்டு நிறுவப்பட்ட முதன்மை பயிற்சி நிறுவனம் ஆகும். இந்நிறுவனம் தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம் 1975ன் படி பதிவு செய்யப்பட்டு 1991ம் ஆண்டு முதல் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள மறைமலை நகரில் இயங்கி வருகிறது.

**7.2.1. மாநில ஊரக வளர்ச்சி நிறுவன குறிக்கோள்கள்:**

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் குறிக்கோளானது மனித வள மேம்பாட்டை வளர்க்கும் விதமாக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் திறமை, அறிவு மற்றும் செயல்திறனை மேம்படுத்தி, அதன் மூலமாக அவர்களின் மேலாண்மையை உயர்த்துவதுடன் ஏழை மக்கள் பயன்படும் வகையில் அரசின் திட்டங்களை செயல்படுத்துவதாகும்.

**7.2.2. நிர்வாக மேலாண்மை:**

தமிழக அரசு, மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தை மேலாண்மை செய்வதற்காக ஆட்சி மன்ற குழு மற்றும் செயற்குழு ஆகிய இரண்டு குழுக்களை ஏற்படுத்தியுள்ளது. ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்துறையின் முதன்மைச் செயலர் இரண்டு குழுக்களுக்கும் தலைவர் ஆவார். ஆட்சி மன்றக்குழு ஆண்டிற்கு ஒருமுறையும் செயற்குழு ஆறு மாதத்திற்கு ஒரு முறையும் கூடுகிறது. மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் ஊரக வளர்ச்சி (ம)



ஊராட்சித்துறையின் கூடுதல் இயக்குநர் நிலையில் நியமிக்கப்பட்டு மேற்படி குழுக்களின் உறுப்பினர் செயலர் நிலையில் இந்நிறுவனத்தின் நிர்வாகத்தினை கண்காணிப்பு செய்கிறார்.

**7.2.3. விரிவுரையாளர்கள்:**

தமிழக அரசு, இந்நிறுவனத்திற்கு விரிவுரையாளர் பணியிடங்களை அனுமதித்து உள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை, வேளாண்மைத்துறை ஆகிய துறைகளிலிருந்து அலுவலர்களை விரிவுரையாளர்களாக அயற்பணியிலும் மற்றும் விரிவுரையாளர்களை நேரடி நியமனம் மூலமாகவும் பணியமர்த்தப்படுகிறார்கள். மேலும், ஒப்பந்த அடிப்படையில் 5 சிறப்பு விரிவுரையாளர்கள் பணியிடங்களை மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம், மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்திற்கு அனுமதித்துள்ளது.

**7.2.4. பயிற்சிக்கான நிதி ஆதாரம்:**

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் பயிற்சி திட்டங்களை நடத்துவதற்கு கீழ்கண்டவாறு நிதி ஆதாரங்களை பெறுகிறது.

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம், தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம், ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து மக்களை நோக்கி செல்லுதல்

போன்ற திட்டங்களை செம்மையாக செயல்படுத்திட அளிக்கப்படும் பயிற்சிகளுக்கும் 100 விழுக்காடு நிதியுதவி மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் அளிக்கிறது.

- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புக்களின் பிரதிநிதிகள், மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலர்களின் செயல்திறனை மேம்படுத்திட பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மானிய நிதித்திட்டத்தின் கீழ் நடத்தப்படும் பயிற்சிகளுக்கு 100 சதவீத நிதியுதவியை மத்திய அரசின் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் அளிக்கிறது. தற்போது இத்திட்டம் தமிழகத்தில் விழுப்புரம், திருவண்ணாமலை, கடலூர், திண்டுக்கல், நாகப்பட்டினம் மற்றும் சிவகங்கை ஆகிய 6 மாவட்டங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எஞ்சிய 25 மாவட்டங்களின் பயிற்சி செலவினங்களுக்கான நிதியினை RGSY திட்டத்தின் கீழ் மத்திய அரசு 75 சதவீதமும், மாநில அரசு 25 சதவீதமும் நிதியினை பகிர்ந்து வழங்குகின்றன.
- ஐதராபாத்தில் செயல்பட்டு வரும் தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனம் (NIRD) ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி குறித்த பயிற்சி, மேலாண்மை திறன் வளர்த்தல் பயிற்சி, புவியியல் தகவல் அமைப்பு பயிற்சி, கணிணி தொழில் நுட்ப பயன்பாட்டுப் பயிற்சி, மகாத்மா காந்தி



தேசிய ஊரக வேலை உறுதித்திட்ட பயிற்சி, இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம், பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம் குறித்த பயிற்சிகளை அளித்திட 100 விழுக்காடு நிதி உதவி அளிக்கிறது.

- நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயிற்சி அளிப்பதற்கான நிதியுதவியை மத்திய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அளிக்கிறது.
- மத்திய அரசின் சார்புச் செயலர்கள் நிலையில் உள்ள அலுவலர்களுக்கான களப்பயிற்சியினை அளித்திட மத்திய அரசின் பணியாளர்கள் மற்றும் பயிற்சித்துறை நிதியுதவி வழங்குகிறது.

### 7.2.5. நிர்வாகச் செலவினங்கள்:

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம், நிர்வாகச் செலவினத்திற்குக் கீழ்க்கண்டவாறு நிதியுதவி (Grants-in-Aid) பெறுகிறது.

**ஊதிய மானியம்**

- மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் விரிவுரையாளர்கள் மற்றும் நிர்வாகப் பணியாளர்களின் ஊதியம் மற்றும் இதர செலவினங்களை மேற்கொள்ள மத்திய மற்றும்

மாநில அரசு 50:50 என்ற விகிதத்தில் நிதியினைப் பகிர்ந்து வழங்குகிறது.

- ஓராண்டு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் 5 சிறப்பு விரிவுரையாளர்களின் ஊதியச் செலவினம் முழுவதும் (100 விழுக்காடு) மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் வழங்கப்படுகிறது.

**ஊதியம் அல்லாத மானியம்**

- மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் அலுவலகக் செலவினங்களுக்காக தமிழக அரசு ஆண்டுதோறும் நிதி வழங்குகிறது.

**தொடராச் செலவின மானியம்**

- மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்திடும் பொருட்டு பயிற்சி வகுப்புகள் மற்றும் தங்கும் விடுதிகள் கட்டுதல், பயிற்சி அளிக்கத் தேவையான உபகரணங்கள் ஆகியவற்றிற்கான செலவினங்களை மேற்கொள்ள மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் 100 விழுக்காடு நிதியுதவி அளிக்கிறது.

### 7.2.6. பயிற்சி பங்கேற்பாளர்கள்

மாநில ஊரக வளர்ச்சி நிறுவன பயிற்சி பங்கேற்பாளர்கள் விவரம் பின்வருமாறு :



1. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள்
    - மாவட்ட ஊராட்சித் தலைவர்கள்
    - மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள்
    - ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள்
    - ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர்கள்
    - கிராம ஊராட்சித் தலைவர்கள்
2. அலுவலர்கள் மற்றும் பிற பங்கேற்பாளர்கள்
    - இணை இயக்குநர்கள்
    - உதவி இயக்குநர்கள்
    - வட்டார வளர்ச்சி அலுவலர்கள்
    - செயற்பொறியாளர்கள்
    - உதவி செயற்பொறியாளர்கள்
    - உதவி பொறியாளர்கள்
    - சுய உதவிக்குழு மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு பிரதிநிதிகள்
    - வங்கி அலுவலர்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் பிறர்

### 7.2.7. பயிற்சி முறை:

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் பங்கேற்புடனான பயிற்சி முறையினைப் பின்பற்றி விரிவுரை மற்றும் கலந்துரையாடல் முறையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் பயிற்சி விளையாட்டுக்கள், தனி நடிப்பு, புத்துணர்வு முறைகள், குழு விவாதங்கள், பயிற்சி

அட்டைகள் தயாரித்தல், பட்டறிவுப் பயணம் போன்ற முறைகள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி அமர்வுகள் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் விரிவுரையாளர்கள், மாநில அரசுத்துறை அலுவலர்கள், கல்வி நிறுவனங்களின் பயிற்சியாளர்கள், சிறந்த ஊராட்சித் தலைவர்களைக் கொண்டு திறம்பட நடத்தப்படுகிறது. பயிற்சியாளர்கள் கேட்கும் சந்தேகங்களுக்கும், வினாக்களுக்கும் தக்க முறையில் குழு விவாதங்கள் மூலம் பதிலளிக்கப்படுகிறது.

**7.2.8. பயிற்சிகளை நடத்துதல்:-**

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் உறைவிடப் பயிற்சிகளை மறைமலைநகர் நிறுவன வளாகத்திலும், வெளி வளாகப் பயிற்சிகளை மாவட்ட, வட்டார, கிராம ஊராட்சிகள் அளவிலும் நடத்துகின்றது.

**7.2.9. பயிற்சி வல்லுநர்கள்:**

பயிற்சிகளில் பெருமளவில் பயிற்சியாளர்கள் பங்கேற்பதையும் பயிற்சியின் தரத்தையும் உறுதி செய்யும் பொருட்டு மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் பின்வரும் சிறந்த நிறுவனங்களிலிருந்து கௌரவ விரிவுரையாளர்கள் மற்றும் வல்லுநர்களைக் கொண்டு செயல்படுத்தி வருகிறது.

- தேசிய தகவல் தொழில் நுட்ப மையம், சென்னை
- தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனம், ஹைதராபாத்



- ஊரகத் தொலையுணர்வு மையம் (அண்ணா பல்கலைக்கழகம், சென்னை)
- அண்ணா மேலாண்மை நிறுவனம், சென்னை
- எஸ்.ஆர்.எம்.பல்கலைக்கழகம், காட்டாங்கொளத்துார், காஞ்சிபுரம் மாவட்டம்.
- விஞ்ஞான விவசாய மையம், காட்டுப்பாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம்
- கால்நடை ஆராய்ச்சி மையம், பொத்தேரி, காஞ்சிபுரம் மாவட்டம்
- சென்னை பல்கலைக்கழகம், சென்னை
- பொது சுகாதார நிறுவனம், பூந்தமல்லி, திருவள்ளூர் மாவட்டம்
- வேளாண்மை பொறியியல் துறை, சென்னை
- டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி மையம், சென்னை
- சி.பி.இராமசாமி ஆராய்ச்சி மையம், சென்னை
- சார்புத் துறைகளைச் சார்ந்த அலுவலர்கள்
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையைச் சார்ந்த அலுவலர்கள்
- தேசிய மற்றும் மாநிலத் தரக் கண்காணிப்பாளர்கள்.

சிறந்த ஊராட்சி மன்றத் தலைவர்கள் அரசுசாரா அமைப்புகள், பணியிலுள்ள மற்றும் பணிஒய்வு பெற்ற அலுவலர்கள் ஆகியோரின் சேவையைப் பயன்படுத்திட

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் பயிற்சிகளை நடத்தி வருகிறது.

### 7.2.10. உள்கட்டமைப்பு வசதி:

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் பயிற்சி நடத்துவதற்கு போதுமான காணொலி காட்சிக் கருவிகள் அடங்கிய குளிரூட்டப்பட்ட கருத்தரங்கு அறைகள், படிப்பறையுடன் கூடிய நூலகம், இணையத்தள இணைப்பு வசதிகளுடன் கூடிய 25 கணினிகள் அடங்கிய கணினிக்கூடம், 130 பங்கேற்பாளர்கள் தங்கக் கூடிய அளவிலான உணவகத்துடன் கூடிய தங்கும் விடுதி, தானியங்கி மின்னாக்கி (125 KVA) ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளது

### 7.2.11. 2011–12ம் ஆண்டில் நடைபெற்ற பயிற்சிகள்:-

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் 2011–12ம் ஆண்டு 408 பயிற்சிகளை நடத்தியுள்ளது. இப்பயிற்சிகளின் மூலம் 22,322 பயிற்சியாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். பயிற்சியாளர்களின் பயன்பாட்டிற்காக மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் 5 பயிற்சி கையேடுகளை தயாரித்துள்ளது. பஞ்சாயத்து ராஜ் பயிற்சியில் கலந்து கொள்ளும் பயிற்சியாளர்களுக்கு இந்த புத்தகத் தொகுப்பு வழங்கப்பட்டு வருகிறது.



**கிராம ஊராட்சித்தலைவர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சி கையேடுகள் விவரம்:**

| | |
|---|---|
| **கையேடு 1** ஊராட்சி நிர்வாகம் குறித்த கையேடு | ஊராட்சி நிர்வாகம் குறித்த இந்த கையேடானது மிக எளிமையான தமிழில் அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் உதாரணங்கள் மற்றும் விளக்கப்படங்களோடு தயார் செய்யப்பட்டுள்ளது. ஊரக உள்ளாட்சி அமைப்புக்களின் பிரதிநிதிகள் குறிப்பாக கிராம ஊராட்சி தலைவர்களின் கடமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள், கூட்டங்கள் நடத்தும் முறை, ஊராட்சிக்கான வருவாய், கணக்கு பராமரிப்பு மற்றும் தணிக்கை ஆகியவை குறித்து விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இந்த கையேட்டினை பயன்படுத்துவதன் மூலம் கிராம ஊராட்சி தலைவர்கள் தங்களுடைய பணிகளை செவ்வனே செய்ய இயலும். |
| **கையேடு 2** ஊரக வளர்ச்சி திட்டங்கள் குறித்த கையேடு | மத்திய அரசு மற்றும் மாநில அரசு செயல்படுத்தும் பல்வேறு ஊரக வளர்ச்சித்திட்டங்கள் குறித்த முழு விவரங்கள் இக்கையேட்டில் தொகுத்துக் கொடுக்கப் பட்டுள்ளன. திட்ட நோக்கங்கள், திட்டத்திற்கான நிதி பங்கீடு, பயனாளிகள் தேர்வு, பணிகளை தேர்ந்தெடுத்தல் ஆகியவை இந்த கையேட்டில் விவரிக்கப்பட்டுள்ளன. இக்கையேடானது கிராம ஊராட்சித் தலைவர்கள் ஊரக வளர்ச்சி திட்டங்களை திறம்பட செயல்படுத்த மிக உதவியாக இருக்கும். |

| | |
|---|---|
| **கையேடு 3**<br>மனித மேம்பாடு நடவடிக்கைகள் குறித்து ஊராட்சிக்கான தகவல்கள் | இந்த கையேட்டில் தாய் சேய் நலம், குடும்ப நலம், ஊட்டச்சத்து, குழந்தைகளுக்கான உரிமைகள், தொற்றா நோய்கள் குறித்த விழிப்புணர்வு மற்றும் தற்காப்பு விளக்கமாக தரப்பட்டுள்ளன. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு இது போன்ற மனித மேம்பாடு குறித்த பொது தகவல்கள் அளிப்பது இதுவே முதன் முறை. |
| **கையேடு 4**<br>ஊராட்சியின் வளர்ச்சிக்கான பொது தகவல்கள் | கிராம ஊராட்சியின் ஒட்டு மொத்த மேம்பாட்டிற்கான பணிகளில் ஆரம்ப கல்வி, மழைநீர் சேகரிப்பு, சுற்றுப்புற சூழல் மேம்பாடு, திடக்கழிவு மேலாண்மை, முழு சுகாதாரம், பேரிடர் தடுப்பு மற்றும் மேலாண்மை ஆகியவை குறித்த தெளிவான விளக்கங்கள் கிராம ஊராட்சித் தலைவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையாக அளிக்கப்பட்டுள்ளது. |
| **கையேடு 5**<br>தமிழ்நாடு ஊராட்சிகள் சட்ட பிரிவுகள், விதிகள் மற்றும் அரசாணைகள் தொகுப்பு. | இந்த கையேட்டில் ஊராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி திட்டங்கள் ஆகியவை குறித்த தமிழ்நாடு ஊராட்சிகள் சட்ட பிரிவுகள், விதிகள் மற்றும் அரசாணை தொகுப்புகள், செயல்முறை ஆணைகள் ஆகியவை தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. இவற்றை அறிந்துகொண்டு கிராம ஊராட்சித் தலைவர்கள் சட்டப்படி தங்களுடைய கடமைகளை நிறைவேற்ற இயலும். |



### 7.2.12. மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்:

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த இந்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் ரூ.23.75 கோடி நிதியினை கீழ்கண்ட பணிகளுக்கு வழங்கியுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நிறுவன வளாக சாலை வசதி மேம்பாடு (707 மீ) | 34.50 |
| 2 | மதில்சுவர் கட்டுமானம்(640 மீ) | 30.50 |
| 3 | பயிற்சியாளர் தங்கும் விடுதிக் கட்டிடம் ( தரைதளம் + 2 தளங்கள்)<br>தரைதளம் 14 அறைகள் – சமையலறை, உணவருந்தும் அறை,வரவேற்பறை மற்றும் மின்தூக்கி வசதி<br>முதல் தளம் 14 அறைகள் – யோகா பயிற்சிக்கூடம், உடற்பயிற்சியகம்,கணிணி மற்றும் பொழுதுபோக்குக் கூடம்<br>இரண்டாம் தளம் 14 அறைகள் | 1,436.13 |
| 4 | 600 நபர்கள் அமரும் வசதி கொண்ட பல்நோக்கு கருத்தரங்கக்கூடம், சமையல் கூடம், உணவருந்தும் அறை, (38,489 ச.அடி) – அவ்வவ்போது தடுப்புகள் அமைத்தல் | 814.31 |
| 5 | தடையில்லா மின்சார கருவி – (10 கி.வா திறன் கொண்டது 2 எண்ணிக்கை + 5 கி.வா திறன் கொண்டது 1 எண்ணிக்கை | 7.00 |

| | | |
|---|---|---|
| 6. | கணினிகள் – (காணொலி கருவிகள் + 30 கணினிகள் ) | 22.50 |
| 7 | தற்போதுள்ள பயிற்சியாளர்கள் தங்கும் விடுதியில் குளிர் சாதன வசதி (67 எண்ணிக்கை) | 30.30 |
| | மொத்தம் | **2,375.24** |

### 7.2.13. 2012–13ம் ஆண்டிற்கான பயிற்சி திட்டங்கள்:

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கும், அலுவலர்களுக்கும் கீழ்கண்ட தலைப்புகளில் பயிற்சி நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

- ஊராட்சி நிர்வாகம்
- ஊராட்சி கணக்குகள் மற்றும் தணிக்கை
- பணியமைப்பு
- கணினி மேம்பாடு
- மத்திய அரசின் திட்டங்கள்
- மாநில அரசின் திட்டங்கள்
- பேரிடர் மேலாண்மை
- ஊராட்சிகளில் பணிகளை செயல்படுத்துவதில் உள்ளதொழில் நுட்பங்கள்
- தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005
- பரவலாக்கப்பட்ட திட்டம்



**2012–13ம் ஆண்டில் கீழ்கண்ட பயிற்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும்.**

- முழு சுகாதார இயக்கம்
- மழைநீர் சேகரிப்பு
- திடக்கழிவு மேலாண்மை
- சூரிய மின்சக்தி
- தாய் திட்டம் (தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம் )
- பின்தங்கிய பகுதிகளுக்கான மான்ய நிதி திறன் வளர்த்தல் திட்டம் மற்றும் ராஷ்ட்ரிய கிராம் சுவராஜ் யோஜ்னா, ஆகிய பயிற்சி திட்டங்களின் கீழ் ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்களுக்கான பயிற்சி
- ஆராய்ச்சி கூடத்திலிருந்து மக்களை நோக்கி திட்டம் செயல்படுத்தப்படும் புதிய வட்டாரங்களில் உள்ள பாரத் நிர்மான் தன்னார்வலர்களுக்கான பயிற்சி.
- பரவலாக்கப்பட்ட திட்டம்

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் 2012–13ஆம் ஆண்டில் 1.19 லட்சம் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு ரூ.10.71 கோடி மதிப்பீட்டில் பயிற்சி அளிக்க திட்டமிட்டுள்ளது.

## 8. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

மகளிரை ஆற்றல் மிக்கவர்களாக்க வேண்டும் எனும் நோக்கத்தில் மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தை தன்னகத்தே கொண்டுள்ள மாநிலங்களில் **1983** ஆம் ஆண்டு இந்நிறுவனத்தை உருவாக்கிய தமிழ்நாடு ஓர் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. சமூக ஒருங்கிணைப்பின் மூலம் மகளிரை சுய உதவிக் குழுக்களாக அமைத்து அவர்களிடையே சேமிப்பு மற்றும் சிக்கனத்தை ஊக்குவிப்பதே முக்கிய அணுகுமுறையாகக் கடைபிடிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் சுய உதவிக் குழு இயக்கம் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் உதவி பெற்ற மகளிர் மேம்பாட்டுத் திட்டத்துடன் **1991–92–**ம் ஆண்டு தொடங்கப்பட்டது. கடந்த **20** ஆண்டுகளில், சுய உதவிக் குழு இயக்கம் மாநிலத்திலுள்ள அனைத்துப் பகுதிகளிலும் பரந்து விரிந்துள்ளது. தற்போது மகளிர் திட்டத்தின் கீழ் **85.70** இலட்சம் மகளிரைக் கொண்ட **5.56** இலட்சம் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச் சுய உதவிக் குழுக்கள் இதுவரை ரூ.**3,374.60** கோடிக்கும் மேலாகச் சேமித்ததுடன் பல்வேறு வங்கிகளிலிருந்து ரூ.**15,633.83** கோடி கடனாகவும் பெற்றுள்ளன.



**சுய உதவிக் குழுக்கள் பற்றிய விபரம்**

| | |
|---|---|
| சுய உதவிக் குழுக்களின் மொத்த எண்ணிக்கை | 5.56 இலட்சம் |
| மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | 85.70 இலட்சம் |
| ஊரக சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 3.72 இலட்சம் |
| ஊரக சுய உதவிக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை | 57.37 இலட்சம் |
| நகர்ப்புற சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 1.84 இலட்சம் |
| நகர்ப்புற சுய உதவிக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை | 28.33 இலட்சம் |
| மொத்த சேமிப்புத்தொகை | 3,374.60 கோடி |
| வங்கிக் கடன் இணைப்பு பெற்ற சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 4.85 இலட்சம் |
| **மொத்த வங்கிக் கடன் தொகை** | **15,633.83 கோடி** |

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் இரு பெரும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

I. மாநில அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் ‘‘மகளிர் திட்டம்’’,

II. மத்திய, மாநில அரசுகளால் **75:25** என்ற விகிதத்தில் நிதி பங்கீட்டுடன் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டமான பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டம் (SGSY) மறுசீரமைக்கப்பட்டு **‘‘ஆஜீவிகா’’** என்ற பெயரில் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கமாக (NRLM) தொடங்கப்படவுள்ளது.

## 8.1. மகளிர் திட்டம்

### மகளிர் திட்டத்தின் செயல்பாடுகள்

1. புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்
2. சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி
3. கலாச்சாரப் போட்டிகள்
4. திறன் பயிற்சி
   அ) இளைஞர் தொழில் திறன் பயிற்சி
   ஆ) தொழில் மேம்பாட்டுப் பயிற்சி
5. சுயஉதவிக் குழுக்களுக்குக் கடனுதவி
   அ) சுழல் நிதி
   ஆ) வங்கிகள் மூலமான கடன் இணைப்பு
6. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் குடிசைப் பகுதி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல்
   அ) ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மறுசீரமைத்தல் மற்றும் திறன் மேம்பாடு
   ஆ) குடிசைப் பகுதி அளவிலான கூட்டமைப்புகளை உருவாக்குதல்
   இ) ஒரு ஊராட்சி – ஒரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு
   ஈ) ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்குப் பெருங்கடன்
7. நுண்நிதி நிறுவனங்களை (MFIs) முறைப்படுத்துதல்.



8. சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துதல்
   அ) பொருட்காட்சிகள்
   ஆ) வணிக குறியீடு (Branding)
9. சிறப்பாக செயல்படும் சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் வங்கிகளுக்கான விருதுகள்.

### 8.1.1. சுய உதவிக் குழு அமைத்தல்

**2011–12** ஆம் ஆண்டில் அட்டவணை வகுப்பினர், பழங்குடியினர், இதுவரை மகளிர் திட்டத்தில் சேராத மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பெண் தொழிலாளர்கள் கிராம ஊராட்சிப் பகுதிகளில் விடுபட்ட ஏழை மகளிர் மற்றும் நகர்ப்புறக் குடிசைப் பகுதிகளில் வசிப்போர் ஆகியோரை உள்ளடக்கி **65,000** சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் சமுதாயத்தில் விளிம்பு நிலையில் உள்ளவர்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர்களைக் கொண்டு சிறப்பு குழுக்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

**2012–13**–ஆம் ஆண்டில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் தீவிரமாகச் செயல்படுத்தப்படும் முதற் கட்ட **15** மாவட்டங்களைச் சேர்ந்த **60** வட்டாரங்களில், மக்களின் பங்கேற்புடன் மக்கள் நிலை ஆய்வு நடத்தி விடுபட்ட ஏழைகள், சமுதாயத்தில் விளிம்பு நிலையில்

உள்ளோர் மற்றும் நலிவுற்றோர் கண்டறியப்பட்டு அவர்கள் சுய உதவிக் குழு அமைப்பில் இணைக்கப்படுவர்.

**8.1.2. சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கான திறன் பயிற்சி**

மகளிர் சுய உதவிக்குழுக்களில் பல, வெவ்வேறு காரணங்களால் கடந்த சில ஆண்டுகளாக செயல்படாமலும், பலவீனமடைந்தும் உள்ளன. இக்குழுக்களை உயிர்ப்பித்து, வலுவாக்கி செயல்பாட்டிற்கு கொண்டு வர புத்தாக்கப் பயிற்சி வழங்கப்பட வேண்டும். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் தீவிர செயல்பாட்டில் இல்லாத வட்டாரங்களில் (பகுதி 1 வட்டாரங்கள் நீங்கலாக) வலுவிழந்து செயல்பாட்டில் இல்லாத மகளிர் சுய உதவிக்குழுக்களை கண்டறிந்து, அவை ஒருங்கிணைந்து செயல்படும் பொருட்டு புத்தாக்கப்பயிற்சி வழங்கப்படும். அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்கள் மூலம் மகளிர் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட குழுக்கள் தவிர பிற அரசு நிறுவனங்கள் மற்றும் மகளிர் திட்டத்தால் அங்கீகரிக்கப்படாத தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும் மகளிர் சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மகளிர் திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட கூட்டமைப்பை ஒருங்கிணைப்பு மையமாக்குவதற்காக, ஊராட்சியில் உள்ள அனைத்து குழுக்களையும் கூட்டமைப்பில் இணைத்து ஒரு குடையின் கீழ் கொண்டு வருதல் வேண்டும். தற்போது மகளிர் திட்டம் மூலம் அமைக்கப்பட்ட கூட்டமைப்புகளில் மகளிர் திட்டம் அல்லாத சுய உதவிக் குழுக்கள்



இணைவதில்லை. மகளிர் திட்டம் மூலம் அமைக்கப்படாத குழுக்களை மகளிர் திட்டத்தில் ஒருங்கிணைக்கும் போது, அவர்களுக்கு மகளிர் திட்ட குழுக்களுக்கு வழங்கப்படும் ஊக்குநர், பிரதிநிதி மற்றும் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சியினை வழங்கிய பின்னர் கூட்டமைப்பில் இணைக்க வேண்டும். இப்பயிற்சிக்காக தற்போது நடைமுறையில் உள்ள ஊக்குநர், பிரதிநிதி மற்றும் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சித்திட்டங்களை ஒருங்கிணைத்து ஒரு புதிய பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு இக்குழுக்களுக்கு அறிமுகப் பயிற்சி வழங்கப்படும்.

**8.1.3. மகளிர் சுய உதவிக்குழுக்கள் ஒன்றிணைந்து, ஒற்றுமையுடன் செயல்படுவதை மேம்படுத்த கலாச்சாரப் போட்டிகள்**

மகளிர் சுய உதவிக்குழு மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களின் ஒற்றுமை, கூட்டு முயற்சி மற்றும் ஒருங்கிணைந்த செயல்பாடுகளை வலுப்படுத்த வட்டார மற்றும் மாவட்ட அளவில் கலாச்சாரப்போட்டிகள் நடத்தப்படுகிறது. இந்த கலாச்சாரப் போட்டிகள் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கிடையே மிகச் சிறப்பான வரவேற்பு பெற்றதோடு, மகளிரிடையே கூட்டு முயற்சி மற்றும் ஒற்றுமையை ஏற்படுத்துவதிலும், மறைந்து இருக்கும் திறமைகளை வெளிக்கொணர்ந்து குழுமனப்பாங்கை உறுதி செய்வதிலும் வெற்றி கண்டுள்ளது.

இம்மாபெரும் வெற்றியினைத் தொடர்ந்து மகளிர் சுய உதவிக்குழுவினரை ஊக்குவிக்கும் வகையிலும், அவர்களிடையே ஒற்றுமையை வளர்க்கும் நோக்கத்திலும், 2012–13–ஆம் ஆண்டிலும் இதனை தொடர்ந்து நடத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

**8.1.4. இளைஞர் மற்றும் மகளிருக்கான திறன் பயிற்சி**

**அ. இளைஞர்களுக்கான திறன் பயிற்சி**

படித்த இளைஞர்கள் மத்தியில் வேலைவாய்ப்பின்மை முரண்பாடான சூழலை வெளிப்படுத்துவதாக உள்ளது. படித்த கிராமப்புற இளைஞர்கள் மத்தியில் பெரிய அளவிலான வேலைவாய்ப்பின்மை ஒருபுறமும், அதே சமயத்தில் சில தொழில்கள் மற்றும் வணிக தொகுப்புகளுக்குத் திறனுள்ள மனித வளப் பற்றாக்குறை மறுபுறமும் உள்ளது. கிராமப்புற இளைஞர்களுக்கு வேலை சார்ந்த திறன் பயிற்சி வழங்குவதன் மூலம், மேற்கண்ட சூழ்நிலையை மாற்றி, தொழில் திறனுள்ள மனிதவள இடைவெளியை சரி செய்ய இயலும்.

2011-12ம் ஆண்டில், இளைஞர் தொழில் திறன் பயிற்சிக்கான வழிகாட்டு நெறிமுறைகளை சீர்படுத்தி, பாடத்திட்டங்களை நிலைப்படுத்தி, பயிற்சி நிறுவனங்களை அங்கீகரித்து, தரமான பயிற்சி மூலம் 80% இளைஞர்களுக்கு மாதத்திற்கு குறைந்தபட்சம் ரூ.4000/- ஊதியத்துடன் வேலைவாய்ப்பு வழங்குவதை உறுதி செய்ய இவ்வரசு முயற்சிகளை மேற்கொண்டது. மேலும் தேசிய தொழில் பயிற்சி மையம் (NCVT) மற்றும் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி தலைமை இயக்குநர் (DGET) ஆகியோரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பாடத்திட்டங்களை கொண்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் மாற்றுத்திறனாளிகள் (3%), அட்டவணை வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் (25%), திருநங்கையர் (5%) மற்றும் சிறுபான்மையினர் (3.5%) பிரிவைச் சேர்ந்த இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கவும் உறுதி செய்யப்பட்டது.

2011–12ம் ஆண்டில் முன்னோடித் திட்டமாக “திறன் ரசீது திட்டம்” (Skill Voucher Scheme) கணினி பயிற்சிக்கு அறிமுகப்படுத்தப்பட்டு, ஹெச் சி எல் (HCL), சி.எஸ்.சி (CSC) மற்றும் அப்பல்லோ (Apollo) போன்ற அங்கீகரிக்கப்பட்ட கணினி பயிற்சி நிறுவனங்களில் இளைஞர்கள் தாங்கள் விரும்பும் நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்து, விருப்பப்பட்ட பயிற்சிகளில் சேர வழிவகை செய்யப்பட்டது. 25,000 இளைஞர்களுக்கு ரூ. 20 கோடி மதிப்பீட்டில் அலைபேசி பாகங்களை இணைத்தல், ஜே சி பி (JCB) இயக்குபவர், சி என் சி லேத் (CNC lathe) இயக்குபவர், கணினி பயிற்சிகள் போன்ற பல்வேறு வகையான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் அங்கமான இளைஞர் திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஒரு முக்கிய அங்கமாக அமையும். முன்னோடித் திட்டமாக கணினி பயிற்சிக்கு அறிமுகப்படுத்தப்பட்ட “திறன் ரசீது திட்டம்” திறன் வளர்ச்சி இயக்கத்தால் ஒப்புதல்

அளிக்கப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி **2012-13** ஆம் ஆண்டில் மேலும் பல பாட திட்டங்களுக்கும், பயிற்சி பிரிவுகளுக்கும் விரிவு படுத்தப்படும்.

### ஆ. தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம்

சுய தொழில் பயிற்சி அளிப்பதில் நிபுணத்துவம் பெற்ற பயிற்சி நிறுவனங்களின் மூலம் சுயமாகவோ அல்லது குழுவாகவோ சுய தொழில் மேற்கொள்ள ஆர்வமுள்ள மகளிருக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் வழங்கப்படுகிறது. மூலப்பொருட்கள் கொள்முதல், இயந்திரங்கள், மதிப்புக்கூட்டுதல், பேக்கேஜிங், பெயரிடுதல், விலை நிர்ணயித்தல் மற்றும் சான்றளித்தல் போன்ற அம்சங்களை உள்ளடக்கி இப்பயிற்சி வழங்கப்படுகிறது.

**2012–13**ம் ஆண்டில், தொழில் தொகுப்பு மேம்பாட்டிற்காக தெரிவு செய்யப்படும் வாழ்வாதார நடவடிக்கைகளின் அடிப்படையில், கண்டறியப்படும் குறிப்பிட்ட திறன் வளர்ப்பு பயிற்சி, தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி திட்டத்தின் கீழ் பெண்களுக்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலமாக வழங்கப்படும்.

### 8.1.5. சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் உதவி

### அ. நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி

ஒவ்வொரு சுய உதவிக் குழுவும், சேமிப்பு, சிக்கனம் மற்றும் உள்கடன் சுழற்சி ஆகிய நடவடிக்கைகளை தங்கள் குழு உறுப்பினர்களுக்குள் ஆரம்ப கால நடவடிக்கைளாக



செய்து வருகின்றனர். ஆறு மாத கால செயல்பாட்டின் முடிவில் இக்குழுக்கள் நிர்ணயிக்கப்பட்ட காரணிகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டு அதில் தேர்ச்சி பெறும் குழுக்களுக்கு மானியத்துடன் கூடிய சுழல் நிதி வழங்குவதன் மூலம், குழுவின் தொகுப்பு நிதி அபிவிருத்தி செய்யப்படுகிறது. **2011–12**ம் ஆண்டில் **13,461** நகர்புற சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.

**2012–13**ம் ஆண்டு, **20,000** நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கப்படும்.

### ஆ. வங்கிகள் மூலம் கடனுதவி

சுய உதவிக் குழுக்களுக்கு தேவைக்கேற்ப உரிய காலத்தில் நியாயமான வட்டியில் கடன் கொடுப்பதின் மூலமே பெண்களுக்கான பொருளாதார மேம்பாடு சாத்தியமாகும். சுய உதவிக் குழுக்கள் முதல் தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற பின்னரே வங்கிகள் மூலம் கடன் பெற தகுதி பெறுகின்றன. **2011–12**ம் ஆண்டில், கடன் இணைப்பாக **4,000** கோடி ரூபாய் என்ற உயரிய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, அதனை விஞ்சிய வகையில் **4,030** கோடி ரூபாய் கடன் இணைப்பு வழங்கி சாதனை படைக்கப்பட்டுள்ளது.

**2012–13**ம் ஆண்டில், சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் மூலம் **4,000** கோடி ரூபாய் கடன் இணைப்பு வழங்கப்படும்.

**8.1.6. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல்**

**அ. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மறுசீரமைத்தல் மற்றும் திறன் வளர்த்தல்**

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு என்பது, சுய உதவிக் குழுக்கள் தங்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும், பிரச்சனைகளுக்கு உரிய தீர்வு காண்பதற்கும், ஒன்று கூடி தீர்மானிக்க, ஒரு பங்கேற்பு களமாக அமைகிறது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு நிர்வாகம், நிதி மேலாண்மை, சமூகத் தணிக்கை போன்ற இனங்களில் பயிற்சி அளிப்பதன் மூலம் உயிரோட்டமுள்ள சமுதாய நிறுவனங்களாக உருவாக்கப்படுகின்றன. சுய உதவிக் குழுக்கள் தனியாக சாதிக்க முடியாததை, கூட்டமைப்பில் இணைந்து தங்களுடைய கூட்டு திறனையும், ஆற்றலையும் ஒருங்கிணைத்து, உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதல் மூலம் பொருளாதாரப் பயன்களை அடைய முடியும்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஒருங்கிணைந்த, வெளிப்படைத் தன்மை வாய்ந்த மக்கள் இயக்கமாக விளங்கவும், அவற்றை தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், **1975**ன் கீழ் பதிவு செய்து சட்ட அங்கீகாரம் வழங்கி அவற்றின் நிர்வாக திறன் மற்றும் நிலைத்த தன்மையை மேம்படச் செய்வதே கூட்டமைப்புகளை மறுசீரமைப்பதின் தலையாய நோக்கமாகும்.



**12,524** ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்களில் இதுவரை **10,494** ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டு **5,850** கூட்டமைப்புகளுக்கு ஊக்க நிதி வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள **2,030** ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளும் மறுசீரமைக்கப்பட்டு, பதிவு செய்யப்படும். **2012–13**ம் ஆண்டில் தரமதிப்பீட்டில் தகுதி பெறும் **3000** ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூபாய் ஒரு இலட்சம் வீதம் ஊக்க நிதி வழங்கப்படும்.

**ஆ. குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்புகள் அமைத்தல்**

நகர்ப்புற குடிசைப்பகுதிகளில் உள்ள ஏழைப் பெண்கள் சுய உதவிக் குழு இயக்கத்தில் இணைந்து பயனடையும் வகையில், நகர்ப்புறங்களில் சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்படுகின்றன. நகர்ப்புற ஏழைப் பெண்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கு ஒரு நிறுவன அமைப்பை அளிப்பதற்காக குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்படுகின்றன. குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்புகள் (SLFs), சட்ட ரீதியான அங்கீகாரம் பெறுவதற்கு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975-ன் கீழ் பதிவு செய்யப்படுகின்றன. இதுவரை, **399** குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்புகள் (SLFs) உருவாக்கப்பட்டுள்ளன. **2012–13**ம் ஆண்டில், குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்புகள் (SLFs),

நகர்ப்புற அண்டைவீட்டு கூட்டமைப்புகள் (UNFs) எனப் பெயர் மாற்றம் செய்யப்படும்.

2012–13ம் ஆண்டு புதிய சுய உதவிக் குழுக்கள் அறிவிக்கப்பட்ட நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் அமைக்கப்பட்டு அவை நகர்ப்புற அண்டை வீட்டு கூட்டமைப்புகளுடன் இணைக்கப்படும்.

### இ. ஒரு கிராம ஊராட்சிக்கு ஒரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு

தற்போதுள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் மகளிர் திட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்களின் மூலமாக அமைக்கப்பட்ட குழுக்கள் மட்டுமே உறுப்பினர்களாக இணைந்துள்ளன. இதனால் மகளிர் திட்டத்திலுள்ள சுய உதவிக்குழுக்கள் மட்டுமே பயன்பெற்று இந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மகளிர் திட்டத்தின் கூட்டமைப்புகளாகவே உள்ளன. மற்ற நிறுவனங்களால் அமைக்கப்பட்ட சுய உதவிக்குழுக்கள் அதே ஊராட்சியில் இருந்தும் மகளிர் திட்டத்திலோ அல்லது புதுவாழ்வு திட்டத்திலோ அமைக்கப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் சேருவதில்லை. பல்வேறு துறைகளிலுள்ள பலதரப்பட்ட திட்டங்களை ஊராட்சி அளவில் ஒருங்கிணைப்பதால் கிடைக்ககூடிய பயன்களை, அனைத்து சுய உதவிக் குழுக்களும் ஒரு குடையின் கீழ் வரும் போது பெறலாம். மகளிர் திட்டத்தினால் உருவாக்கப்படும் ஊராட்சி



அளவிலான கூட்டமைப்பு, அந்த ஊராட்சியிலுள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களையும் ஒன்றிணைக்கும் மையமாகவும், ஒன்றுக்கொன்று தொடர்பு ஏற்படுத்தும் அமைப்பாகவும் செயல்படும்.

ஒரு ஊராட்சியிலுள்ள அனைத்து சுய உதவிக்குழுக்களையும், அந்த ஊராட்சியில் மகளிர் திட்டத்தால் உருவாக்கப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினர்களாக சேர்த்து, “ஒரு கிராம ஊராட்சிக்கு ஒரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு’’ என தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் தீவிர செயல்பாடுள்ள முதற்கட்ட 15 மாவட்டங்களைச் சேர்ந்த 60 வட்டாரங்களில் செயல்படுத்தப்படும்.

### ஈ. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்குப் பெருங்கடன்

சுய உதவிக் குழுக்களின் பல்வேறு செயல்பாடுகளில் பக்கபலமாக விளங்கி வழிநடத்திச் செல்லும் ஓர் வலுவான மையமாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் உருவாகி வருகின்றன. நிதி இடையீட்டாளராக செயல்படுவது ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் முக்கிய பொறுப்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வங்கிகளிலிருந்து கடன் பெற்று, உறுப்பினர் சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் வழங்குகின்றன. இக்கடன்களுக்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் 3.5 விழுக்காடு வட்டி கூடுதலாக வைத்து, 15 விழுக்காட்டிற்கு மிகாமல் வட்டி நிர்ணயம் செய்கின்றனர்.

இந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், காலப்போக்கில் சமுதாய அளவிலான நிதி நிறுவனங்களாக உருவெடுக்கும். இதுவரை 419 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ரூ.100.54 கோடி பெருங்கடனாக பல்வேறு வங்கிகள் மூலம் பெற்றுள்ளன.

2012–13ம் ஆண்டில், 400 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன் பெற்றுத் தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 8.1.7. நுண்நிதி நிறுவனங்களை (MFIs) முறைப்படுத்துதல்

நுண்நிதி நிறுவனங்கள் கம்பெனிகள் சட்டம் 1956–ன் கீழ் பதிவு செய்யப்பட்டு இந்திய ரிசர்வ் வங்கியால் அங்கீகாரம் பெற்ற வங்கி சாரா நிதி நிறுவனங்கள் – நுண் நிதி நிறுவனங்களாகும். நுண்நிதி நிறுவனங்கள், கூட்டு பொறுப்புக் குழுக்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் தனிநபர்களுக்கு 26 சதவீதத்திலிருந்து 50 சதவீதம் வரை அதிகமான வட்டியில் கடன் வழங்குகின்றன. இந்நுண் நிதி நிறுவனங்கள் கடுமையான முறைகளைக் கையாண்டு கடன்களை வசூலித்ததனால் ஆந்திர அரசு இந்நுண் நிதி நிறுவனங்களைக் கண்காணித்து முறைப்படுத்த ஒரு சட்டம் கொண்டு வந்தது. இதனைத் தொடர்ந்து இந்திய ரிசர்வ் வங்கி “மாலேகாம்” தலைமையிலான குழுவை அமைத்து ஊரக பகுதிகளில் நுண் நிதி நிறுவனங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்து, அறிக்கை சமர்ப்பிக்கக் கோரியது. இக்குழு இந்திய ரிசர்வ் வங்கிக்கு தங்களுடைய



அறிக்கையை சமர்ப்பித்ததைத் தொடர்ந்து இந்திய ரிசர்வ் வங்கி நாட்டிலுள்ள அனைத்து நுண்நிதி நிறுவனங்களும் கடைப்பிடிக்கவேண்டிய வழிகாட்டு நெறிமுறைகளைப் பிறப்பித்து வங்கிகளுக்கு சுற்றறிக்கை அனுப்பிவைத்தது. நுண்நிதி சட்ட முன்வரைவு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளது. அதுவரை இந்திய ரிசர்வ் வங்கியின் நெறிமுறைகள் நடைமுறையில் இருக்கும்.

மாநில அளவிலான வங்கியாளர் குழுக்கூட்டங்களில் நுண்நிதி நிறுவனங்களுக்கு வங்கிகளால் வழங்கப்படும் கடன்களை இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில் ஆய்வு செய்ய வேண்டும் என தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளை தனது தீர்ப்பில் நுண்நிதி நிறுவனங்களை தமிழக அரசு கண்காணித்து நெறிமுறைப்படுத்தி சுயஉதவிக் குழு இயக்கத்தைப் பாதுகாக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், உடனடியாக தமிழ்நாட்டில் நுண்நிதி நிறுவனங்களின் செயல்பாடுகளை நெறிப்படுத்தும் விதமாக, இந்த நிறுவனங்களைக் கண்காணித்து அவற்றின் செயல்பாட்டினை வங்கியாளர்கள் மற்றும் மகளிர் திட்ட தொண்டு நிறுவனங்களுக்கான மாதாந்திர ஆய்வுக் கூட்டங்களில் ஆய்வு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர்களை அறிவுறுத்தியுள்ளது. மேலும், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களை எச்சரிக்கை செய்து நுண்நிதி

நிறுவனங்களின் கடன் வலையில் விழாதவாறு பாதுகாக்க ஊராட்சி அளவில் விழிப்புணர்வு முகாம்களை நடத்த வலியுறுத்தப்பட்டது. சுய உதவிக் குழுக்களுக்கிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர்களால் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பத்திரிக்கைச் செய்தி மூலம் வேண்டுகோள் விடப்பட்டது. இந்திய ரிசர்வ் வங்கியால் நிர்ணயிக்கப்பட்டுள்ள 26 விழுக்காட்டுக்கு மேல் அதிகப்படியான வட்டி வசூலித்து தவறு இழைக்கும் நுண்நிதி நிறுவனங்கள் மீது, மாநில கந்துவட்டிச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

### 8.1.8. சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துதல்

மகளிர் சுய உதவிக் குழுவினர் கைவினைப்பொருட்கள், கைத்தறி, உணவு, மூலிகை பொருட்கள் மற்றும் செயற்கை நகைகள் போன்ற பல்வேறு வகையான பொருட்களை உற்பத்தி செய்து வருகின்றனர். மகளிர் திட்டத்தின் மூலம் சுய உதவிக் குழு உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்திட மதிப்புக் கூட்டல், பேக்கேஜிங், லேபலிங், வணிக குறியீடு போன்ற பல்வேறு இனங்களில் பயிற்சிப் பட்டறை / கருத்தரங்குகள் நடத்துவதன் மூலமாக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு மேற்படி பொருட்கள் வெளிச்சந்தையில்



போட்டியிடும் அளவிற்கு தனித்தன்மையோடு சிறந்து விளங்க ஆவன செய்யப்படுகிறது.

மதுரை குறு மற்றும் சிறு தொழில் சங்கத்துடன் (MADITSSIA) இணைந்து 10 மாவட்டங்களைச் சேர்ந்த 500 மகளிர் சுய உதவிக் குழு பிரதிநிதிகளுக்கு மண்டல அளவிலான கருத்துப்பட்டறை நடத்தப்பட்டது. நிறுவன மேலாண்மையில் உள்ள நுணுக்கங்களை அறிந்து கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு இக்கருத்தரங்கு சுய உதவிக்குழுக்களுக்கு ஒரு முதல் அனுபவமாக அமைந்தது. மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை இளைஞர்களிடையே பிரபலப்படுத்தி விற்பனையை மேம்படுத்த, கல்லூரி வளாகங்களில் “கல்லூரி சந்தைகள்” (College Bazaars) முதற் கட்டமாக நடத்தப்பட்டது.

#### அ. வணிக குறியீடு (Branding)

பொருட்கள் வாங்கும் போது வாடிக்கையாளர்கள் வணிக குறியீட்டிற்கு (Branding) முக்கியத்துவம் கொடுப்பதால், சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்துவது பெரும் சவாலாகவே உள்ளது. வணிக குறியீடு மற்றும் கண்கவர் பேக்கேஜிங் ஆகியவை பொருட்களின் தரத்துடன் தொடர்பு படுத்தப்படுகிறது. சுய உதவிக் குழுக்களின் பல்வேறு உற்பத்திப் பொருட்களை நிலைப்படுத்தி அதற்கு தேவையான சான்றினை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து பெற அரசு முயற்சி மேற்கொள்ளும்.

இவ்வாண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப்பொருட்கள் வெளிச் சந்தையில் போட்டியிட தக்க வகையில் ஒரே மாதிரியான தனித்தன்மையுடன் கூடிய வணிக குறியீட்டு சின்னம் மற்றும் முத்திரை (Brand Logo & Monogram) வெளியிடப்படவுள்ளது.

2012 –13ம் ஆண்டில் சுய உதவிக் குழுக்களால் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படும் விற்பனை வாய்ப்புள்ள ஐந்து பொருட்களைத் தேர்வு செய்து நிலையான செயல்பாட்டு நெறிமுறைகளை (Standard operating procedures) வகுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**ஆ. கண்காட்சிகள்**

சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்துவதில் கண்காட்சிகள் முக்கிய பங்கு வகிப்பது நிரூபணமாகியுள்ளது. மாவட்ட மற்றும் மாநில அளவில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை அறிமுகப்படுத்தி சந்தைப்படுத்த கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. புது தில்லியில் நடைபெற்ற இந்திய பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சி மற்றும் இந்திய அரசின் ஊரக வளர்ச்சி துறையின் மூலம் நடத்தப்படும், மண்டல அளவிலான "சாராஸ்" (SARAS) கண்காட்சிகளிலும் சுய உதவிக் குழுக்கள் பங்கேற்று வருகின்றன.



இவ்வாண்டு, புத்தாண்டு மற்றும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு "மகளிர் மேளா-2012" என்ற பெயரில் 30 நாட்கள் நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடத்தப்பட்ட மாநில அளவிலான கண்காட்சி பொது மக்களின் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்று 28 இலட்சம் ரூபாய்க்கும் மேலாக விற்பனை செய்யப்பட்டது. 2011-12ம் ஆண்டில் அனைத்து மாவட்டங்களிலும் 79 கண்காட்சிகள் நடத்தப்பட்டு, அதன் மூலமாக 5.63 கோடி ரூபாய் மதிப்பிலான சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

2012–13ம் ஆண்டில், மாநில மற்றும் மண்டல அளவிலான கண்காட்சிகள், சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்த பெரிய அளவில் புதிய வணிக பெயரில் நடத்தப்படும். மகளிர் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் விற்பனை விரிவாக்கத்திற்கான வாய்ப்புகளை மேம்படுத்தி, சந்தையில் காலூன்ற ஏதுவாக குறிப்பிட்ட நிகழ்வுகள் மற்றும் பண்டிகை காலங்களில் சிறப்பு கருப்பொருளுடன் கூடிய கண்காட்சிகள் நடத்தப்படவுள்ளன.

மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கங்களை தொழில் நுட்ப வல்லுனர் குழுக்களை கொண்டு புதுப்பித்து, மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்துடன் இணைப்பு ஏற்படுத்தி, பொருட்கள் உற்பத்தியிலும் விற்பனையிலும் மகளிர் சுய உதவிக் குழுக்களை வழிநடத்திட

திட்டமிடப்பட்டுள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை இணைய தளம் மூலம் சந்தைப்படுத்தவும் ஏற்றுமதி வாய்ப்பினை உருவாக்கவும் "மதி பஜார்" என்ற பெயரில் இணைய தளம் தொடங்கப்படவுள்ளது.

### 8.1.9. சிறப்பாகச் செயல்படும் சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் வங்கிகளுக்கான விருதுகள்

தமிழ்நாடு அரசு, சிறப்பாகச் செயல்படும் சுய உதவிக்குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் செயல்திறனுக்கு அங்கீகாரம் வழங்க மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் விருதுகள் வழங்கி வருகின்றது. இவ்விருதுகள் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் செயல்பாடுகளை ஊக்குவிப்பதோடு அவைகளுக்குள் ஆரோக்கியமான போட்டியையும் உருவாக்குகின்றன. ஆண்டுதோறும், மாநில அளவில் சிறந்த ஐந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், 10 சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும் ரொக்க பரிசாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும் மாவட்ட அளவில், ஒரு சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கு ரொக்க பரிசாக ஒரு இலட்ச ரூபாயும், மூன்று சிறந்த மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு தலா 25,000 ரூபாயும் ரொக்க பரிசாக வழங்கப்படுகிறது. வட்டார



அளவில், சிறப்பாக செயல்படும் ஒரு சுய உதவிக் குழுவிற்கு சான்றிதழ் வழங்கப்படுகிறது.

சுய உதவிக் குழுக்களின் பொருளாதார மேம்பாட்டில் வங்கிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு கடன் வழங்குவதில் மிகச் சிறப்பாகச் செயல்படும் வங்கிகளுக்கு மாநில மற்றும் மாவட்ட அளவில் விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. மாநில அளவில் மூன்று சிறந்த வங்கிகளுக்கும், ஐந்து வங்கிக் கிளைகளுக்கும் விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் ஒரு சிறந்த வங்கி மற்றும் மூன்று வங்கிக் கிளைகள் இவ்விருதினைப் பெறுகின்றன. மாநில அளவில் சிறந்த வங்கிகளுக்கு நினைவு பரிசும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகிறது. சிறந்த வங்கி கிளைகளுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே ஒரு இலட்சம் ரூபாய், 75,000 ரூபாய் மற்றும் 50,000 ரூபாய் ரொக்கமாக வழங்கப்படுகிறது. மாவட்ட அளவில் சிறந்த வங்கிக்கு நினைவு பரிசும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகிறது. சிறந்த வங்கி கிளைகளுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே 15,000 ரூபாய், 10,000 ரூபாய் மற்றும் 5,000 ரூபாய் ரொக்கமாக வழங்கப்படுகிறது. இவ் விருதுகள் மூலம் வங்கிகள் மற்றும் வங்கிக் கிளை மேலாளர்கள் சுய உதவிக் குழுக்களுக்குத் தேவையான அளவு, உரிய காலத்தில் கடன் வழங்க ஊக்குவிக்கப்படுகின்றனர்.

## 8.2. பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்பு திட்டம் (SGSY)

பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம், **1999–**ம் ஆண்டு முதல் மத்திய அரசின் வறுமை ஒழிப்புத் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டு, மத்திய, மாநில அரசுகளால் **75:25** என்ற விகிதத்தில் நிதி வழங்கப்பட்டு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் மூலமாக செயல்படுத்தப்பட்டு வந்தது. இத்திட்டம் **2008**-ல் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கு மாற்றப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் சுய உதவிக் குழுக்களை நுண்கடன் பெறும் நிலையிலிருந்து சிறுதொழில் முனைவோர் நிலைக்கு உயர்த்துவதாகும். இத்திட்டத்தின் முக்கிய கூறுகள்:

1) சுழல் நிதி
2) பொருளாதாரக் கடனுதவி
3) பயிற்சி
4) கட்டமைப்பு வசதிகள்

**2011–12**ம் ஆண்டில், மத்திய அரசால் **22,214** சுய உதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு முழுவதுமாக எய்தப்பட்டுள்ளது. மேலும் **7,464** தகுதிவாய்ந்த சுய உதவி குழுக்களுக்கு பொருளாதாரக் கடனுதவியும் மற்றும் **22,214** சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு தொழில்களில் ஈடுபட தொழில் திறன் பயிற்சி அளிக்கும் பணியும் நடை பெற்று வருகிறது.



பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டமானது, **2012–13**ம் ஆண்டிலிருந்து மறுசீரமைக்கப்பட்டு **“ஆஜீவிகா” – தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமாக** நடைமுறைப்படுத்தப்படும்.

### 8.2.1 ஆஜீவிகா – தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

மத்திய அரசு வருமானம் தரக்கூடிய சொத்துக்கள், வாழ்வாதார வாய்ப்புகள் மற்றும் சுய வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தந்து ஏழை மக்களது வறுமையை ஒழிக்கும் நோக்கத்தில் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. சமூக ஒருங்கிணைப்பு அணுகு முறையில் சுய உதவிக் குழுக்களாக, ஏழைக் குடும்பங்களை பெண்கள் மூலம் சென்றடையும் பொருட்டு பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத்திட்டம் (SGSY) உருவாக்கப்பட்டது. எனினும், வறுமை ஒழிப்பு என்ற பெரிய பணி முழுமை அடையவில்லை. அதற்காக மத்திய அரசு பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத்திட்டத்தினை (SGSY) மறுசீரமைத்து, தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் (NRLM) ஆஜீவிகா என்ற பெயரில் தேசிய அளவில் நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளது.

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் விரிவான வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில் தமிழ்நாட்டில் இத்திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் என வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் தொலைநோக்கு கொள்கைகள், மாநில மக்களின் தேவைக்கேற்பவும், ஏழை மக்களின் நிறைவேற்றப்படாத தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கிலும் அமையும்.

**i) குறிக்கோள், வழி நடத்தும் கொள்கைகள் மற்றும் அடிப்படைக் கோட்பாடுகள்**

**அ .குறிக்கோள்**

மிகவும் வறிய நிலையில் உள்ள ஏழை மக்களைக் கண்டறிந்து சுய உதவிக் குழுக்களாக ஒருங்கிணைத்து அவர்களுக்கான நிலைத்த / நீடித்த தன்மையுடைய அமைப்புகளை உருவாக்கி சுயமாக நிர்வாகம் செய்ய பல்வேறு திறன் பயிற்சிகள் மூலம் வலுப்படுத்தி, இலாபம் தரக்கூடிய சுய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி தருவதன் மூலம் அவர்களது வாழ்வாதார நிலையை உயர்த்தி, வறுமையை ஒழிப்பதே தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் குறிக்கோளாகும்.

**ஆ) வழிநடத்தும் கொள்கைகள்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிநடத்தும் கொள்கைகள் பின்வருமாறு:

- ஏழைகளிடம் இயற்கையாகவே வறுமையிலிருந்து விடுபடுவதற்குத் தேவையான திறமையும் மனோதிடமும் உள்ளது.
- சமூக ஒருங்கிணைப்பு மற்றும் ஏழை மக்களுக்கான அமைப்புகளை வலுப்படுத்துவதன் மூலம் ஏழைகளை ஏழ்மை நிலையிலிருந்து விடுபடச் செய்து அவர்களது திறமைகளை வெளிக்கொணர இயலும்.
- தகவல் பரவலாக்கத்தை எளிதாக்குதல், திறன் வளர்த்தல், திறன் மேம்பாடு அளித்தல், கடன் பெறுவதை எளிதாக்குதல், தொழில் தொடங்க மற்றும் தொடர்ந்து நடத்தத் தேவையான உதவிகளை வழங்குதல் ஆகியவற்றின் மூலம் ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த இயலும்.
- மகளிரின் பொருளாதார மேம்பாடு, குடும்பம் மற்றும் சமுதாயத்தில் நேரடியான மற்றும் உறுதியான தாக்கத்தை ஒட்டுமொத்தமாக ஏற்படுத்தும்.

**இ) அடிப்படைக் கோட்பாடுகள்**

கீழ்க்கண்ட அடிப்படைக் கோட்பாடுகள் அனைத்து செயல்பாடுகளையும் வழிநடத்துவதாக அமையும்.

- ஏழை மக்களை இலக்காகக் கொண்டு அவர்களில் அட்டவணை வகுப்பினர், பழங்குடியினர், மாற்றுத் திறனாளிகள், முதியோர், நலிவுற்றோர் மற்றும் ஆதரவற்றோருக்கு முன்னுரிமை அளித்தல்
- திட்டமிடல், செயலாக்கம், கண்காணிப்பு, மேலாண்மை ஆகிய செயல்பாடுகளில் ஏழை மக்களை ஈடுபடுத்துவது
- ஏழைகளுக்கானஅமைப்புகளின் நடவடிக்கைகளில் ஒளிவுமறைவின்மை மற்றும் பொறுப்புடைமையை உறுதி செய்தல்

- மக்கள் நிறுவனங்கள் தற்சார்பும் நிலைத்த தன்மையும் அடைவதை உறுதி செய்தல்.

**ii) நோக்கங்கள்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் கிராமப்புற ஏழை மக்களின் நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்கும் நோக்கில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளை உள்ளடக்கிய **31** மாவட்டங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்களைக் கண்டறிந்து, ஐந்து முதல் ஏழு வருடங்களில் அவர்களை வறுமையிலிருந்து விடுபடச் செய்யும் நோக்கில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். "**ஊரக ஏழை மக்களுக்கான வலுவான மற்றும் உயிரோட்டமான அமைப்புகளை உருவாக்கி வாழ்வாதாரத்தை உயர்த்தி, நிதி மற்றும் பல்வேறு சேவைகளை முறையாகப் பெற வழிவகை செய்து குடும்ப வருமானத்தைப் பெருக்குவதே**" இவ்வியக்கத்தின் நோக்கமாகும். மேலும் நிதி ஆதாரங்களை பெருக்குதல், வாழ்வாதார உதவிகள், பொது சேவைகள் மற்றும் அவர்களுக்குரிய அடிப்படை உரிமைகளைப் பெற வைப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனமும் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படும் புது வாழ்வு திட்டமும் சுய உதவிக் குழு இயக்க செயலாக்கம் மற்றும் ஏழை மக்களுக்கான அடித்தட்டு அமைப்புகளை உருவாக்குவதில் பெற்ற ஆழ்ந்த அனுபவத்தால், பொன் விழா கிராம சுய



வேலை வாய்ப்புத் திட்டத்தினைத் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமாக செயல்படுத்துவது தமிழ்நாட்டிற்கு மிகப் பெரிய சவாலாக இருக்காது. தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் ஏற்கனவே உள்ள ஏழைகளுக்கான அமைப்புகளை வலுப்படுத்தி மேலும் புதிய அமைப்புகளான உற்பத்திக் குழுக்கள், ஒத்த தொழில் குழுக்கள், கூட்டமைப்புகள் போன்றவற்றைக் குறிப்பிட்ட நோக்கத்திற்காக உருவாக்கி, வழிநடத்தி, திட்ட நடவடிக்கைகளின் மூலம் இடைவெளிகளைக் கண்டறிந்து, சரிசெய்து, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை அரசு மற்றும் பிற நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் செயல்படுத்திட உறுதுணையாக விளங்கும்.

**iii) முக்கிய விளைவுகள்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் மூலம் கீழ்க்கண்ட முக்கிய நன்மைகளை அடைய இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- திறமையாகவும் உணர்வு பூர்வமாகவும் சுய செயல்பாடு கொண்ட திட்ட செயலாக்க அமைப்பினை உருவாக்கி, ஊரக அடித்தட்டு அமைப்புகளை வலுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளல்.
- தகுதியுள்ள ஏழை மக்கள் அனைவரையும் அவர்களுக்கான மக்கள் அமைப்புகளில் உறுப்பினராக்குதல்

- தொகுப்பு நிதி நிலையை உயர்த்தி, அதன் மூலம் மக்கள் அமைப்புகள் நியாயமான வட்டியில் வங்கிக் கடன் பெறுவதற்கு வழி வகை செய்தல்
- பல்வேறு திட்டங்களின் நிதி மற்றும் சேவைகளை ஒருங்கிணைத்து அதன் பயன்களை தகுதியுள்ள ஏழை மக்கள் பெற்று மேம்பாடு அடையச் செய்தல்.
- வருமானம் தரக்கூடிய சொத்துக்களில் ஏழை மக்கள் முதலீடு செய்வதன் மூலம் அவர்களது வாழ்வாதாரத்தைப் பெருக்கி உயரிய வருமானத்தைப் பெற வழி வகை செய்தல்.
- இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துவதன் மூலம் சுய தொழில் மற்றும் உழைப்பூதிய வேலைவாய்ப்பு பெற வழி வகை செய்தல்

## iv) திட்ட அணுகுமுறைகள்

திட்டம் செயல்படுத்தப்படவுள்ள அனைத்து கிராமங்களிலும் கீழ்க்கண்ட அணுகுமுறைகள் மேற்கொள்ளப்படும்.

- சமூக உள்ளாக்கம் மற்றும் முழுமையான சமூக ஒருங்கிணைப்பு
- ஏழைகளுக்கான மக்கள் அமைப்புகளை உருவாக்குதல்
- நிதி உள்ளாக்கம்



- பொருளாதாரச் செயல்பாடுகள் மூலம் ஏழைகளுக்கு நிலையான வாழ்வாதாரங்களை உருவாக்குதல்
- திறன் மற்றும் வேலை வாய்ப்பு
- சேவைகள் உரியவர்களை சென்றடைவதை உறுதி செய்தல் (சமூக வல்லுநர்கள் மற்றும் சமூகத்தின்பால் பற்று கொண்டு மக்களின் மேம்பாட்டிற்கான நடவடிக்கையில் ஈடுபடுபவர்களின் மூலமாக)
- அரசின் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து நிதி ஆதாரங்களை பெருக்குதல்

## v) திட்ட செயலாக்கப் பகுதிகள் மற்றும் குறியிலக்கு

தமிழ்நாட்டிலுள்ள **32** மாவட்டங்களில் சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படும். தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் நிதி நீங்கலாக, தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம் நான்கு மாவட்டங்களில் உலக வங்கி ஆதரவுடன் செயல்படுத்தப்படும். இந்த நான்கு மாவட்டங்களிலும், **16** வட்டாரங்களில் மட்டுமே, வறுமை ஒழிப்பிற்கான ஒரே வகையான அணுகுமுறையை, மாநிலத்தின் பிற பகுதிகளிலும் '**திட்ட கருத்தாக்க நிரூபணமாக**' **(Proof of Concept)** செயல்படுத்திட தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் பணியாளர்கள், சமூக முதலீட்டு நிதியுதவி மற்றும் ஏழைகளுக்கான பிற வகையான

உதவிகள் மற்றும் சேவைகளும் உள்ளடக்கி நிதி முதலீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டத்தினை (NRLP) தீவிரமாகச் செயல்படுத்த உள்ள மாவட்டங்கள், உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய புது வாழ்வு திட்டம் செயல்படுத்தப்படாத மாவட்டங்களாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் மொத்தமுள்ள **385** வட்டாரங்களில், **120** வட்டாரங்களில் புது வாழ்வு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மீதமுள்ள **265** வட்டாரங்களில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM) மூன்று ஆண்டுகளில் படிப்படியாகச் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM) தீவிரமாக செயல்படுத்தப்படும் வட்டாரங்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்களின் (BPL) எண்ணிக்கை மூலம் வரிசைப்படுத்தப்பட்டு கீழ்க்கண்ட காரணிகள் மூலம் மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

- மொத்த தொழிலாளர்களில் விவசாயக் கூலிகளின் விகிதம்
- ஊரக மகளிர் எழுத்தறிவு விகிதம்
- தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய நிலை
- குழந்தை இறப்பு விகிதம்
- வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை
- அட்டவணை வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகை சதவிகிதம்



### vi) திட்டச் செயலாக்கப் பகுதிகள் – கட்டம்–I

- தேசிய மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் **2012–13** ஆம் ஆண்டில் தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின் **4** மாவட்டங்களைச் சார்ந்த **16** வட்டாரங்களை உள்ளடக்கி, **15** மாவட்டங்களைச் சார்ந்த **60** வட்டாரங்களில் செயல்படுத்தப்படும். திட்டம் செயல்படுத்தப்படும் வட்டாரங்கள் அடங்கிய வரைபடங்கள் கட்டம் வாரியாக இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.
- திட்டம் செயல்படுத்தப்படவுள்ள கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை – **2,323**

**முதற்கட்ட செயலாக்கப் பகுதிகள் (2012–13)**

| திட்டம் | மாவட்டங்கள் | வட்டாரங்கள் | கிராம ஊராட்சிகள் | தொடங்கப் படும் ஆண்டு |
|---|---|---|---|---|
| தே. ஊ. வா. இ (NRLM) | 11 | 44 | 1865 | 2012–13 |
| தே. ஊ. வா. தி (NRLP) | 4 | 16 | 458 | |
| மொத்தம் | 15 | 60 | 2323 | |

முதற் கட்டமாக பெரம்பலூர் மாவட்டத்தில் ஒரு வட்டாரத்திலும், அரியலூர் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் தலா இரண்டு வட்டாரங்களிலும், திண்டுக்கல், ஈரோடு, நீலகிரி, இராமநாதபுரம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும்

திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் தலா நான்கு வட்டாரங்களிலும், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் தலா ஐந்து வட்டாரங்களிலும், வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் தலா ஆறு வட்டாரங்களிலும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் தீவிரமாகச் செயல்படுத்தப்படும்.

**vii) 2012-13 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் திட்டமிடப்பட்டுள்ள செயல்பாடுகள்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மாநில அளவில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்படும். மாநில இயக்க மேலாண்மை அலகில் உத்தேசிக்கப்பட்டுள்ள முக்கிய செயல்பாடுகள் பின்வருமாறு:

- முழுமையாகச் செயல்படும் மாநில மேலாண்மை அலகினை உருவாக்குதல்

- மனித வள மேம்பாட்டு நிறுவனத்தை தேர்வு செய்து, பணியாளர்களை நியமித்து அவர்களுக்கு முதற்கட்ட பயிற்சியினை அளித்தல்.

- முதற்கட்ட ஆய்வு, செயலாக்க கண்காணிப்பு, மாற்றுத் திறனாளிகளை வழி நடத்தும் தொண்டு நிறுவனங்கள், மென்பொருள் நிறுவனம் மற்றும் தணிக்கையாளர்களைத் தேர்வு செய்தல்.

- தகவல் தொடர்பு மற்றும் கல்வி, மேலாண்மை தகவல் மையம் மற்றும் வேலை வாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சி ஆகியவற்றிற்கான தனிப்பட்ட பிரிவுகளை ஏற்படுத்துதல்

- மாவட்ட மற்றும் வட்டார மேலாண்மை அலகுகளை ஏற்படுத்துதல்

- மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கத்தினை உருவாக்குதல்

- குறிப்பிட்ட கருப்பொருளின் அடிப்படையில் மதிப்பீடு / ஆய்வு – பாலின பாகுபாடு / ஆற்றலளித்தல் / மாற்றுத் திறனாளிகள் / பழங்குடியினர்

- புது வாழ்வுத் திட்டத்தின் வறுமை ஒழிப்பு மற்றும் மேம்பாடு பற்றிய கணிப்பாய்வு / தாக்கம் பற்றிய அறிக்கை

**அ) தீவிர செயல்பாடுள்ள வட்டாரங்களில் மேற்கொள்ளப்படும் செயல்திட்டங்கள்**

முதற்கட்டமாக 15 மாவட்டங்களைச் சேர்ந்த 60 வட்டாரங்களில் தீவிர செயல்பாடுகள் கீழ்க்கண்டவாறு மேற்கொள்ளப்படும்.

- தகவல் தொடர்பு செயல்பாடுகளை பல்வேறு நிலைகளில் செயல்படுத்துதல்
- பல்வேறு அரசு துறை மற்றும் ஊராட்சி அமைப்புகளுக்கு பயிற்சி அளித்தல்
- தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இலக்கு மக்களைக் கண்டறிய, மக்களின் பங்கேற்புடன் மக்கள் நிலை ஆய்வு (PIP) நடத்துதல்
- கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் சமூக தணிக்கைக் குழுக்களை உருவாக்குதல்
- கிராம வளர்ச்சித் திட்ட அறிக்கை தயாரித்தல்
- கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திற்கு சமுதாய முதலீட்டு உதவி வழங்குதல்
- சுய உதவிக் குழுக்களை அமைத்தல்
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மறு சீரமைத்தல்
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு சமுதாய முதலீட்டு நிதி வழங்குதல்
- கிராம, வட்டார மற்றும் மாவட்ட அளவில் ஒருங்கிணைப்பு மன்றங்களை உருவாக்குதல்



- மேலாண்மை தகவல் அமைப்பு - வட்டார அளவில் ஆய்வு மற்றும் கண்காணிப்பு அமைப்புகளை உருவாக்குதல்
- திறன் மற்றும் கல்வித் தகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பை தயாரித்தல்
- வங்கிச் சேவை ஒருங்கிணைப்பாளர்களை நியமித்தல்

### ஆ) தீவிர செயல்பாட்டிற்கு உட்படுத்தாத ( Non-intensive) வட்டாரங்களின் செயல்திட்டங்கள்

தேசிய இயக்க மேலாண்மை அலகின் வழிகாட்டுதலின்படி, தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள், 2012-13 ஆம் ஆண்டில் 205 வட்டாரங்களிலும், 2013-14 ஆம் ஆண்டில் 105 வட்டாரங்களிலும் சாதாரண முறையில் செயல்படுத்தப்படும். 2013-14 ஆம் ஆண்டில் தீவிர செயல்பாட்டிற்கு வரும் வட்டாரங்களிலிருந்து, ஒரு வட்டாரத்திற்கு ஒரு ஊராட்சி என்ற விகிதத்தில் 100 ஊராட்சிகள், கிராம ஆதார மையங்களாக தேர்வு செய்யப்படும்.

**கிராம ஆதார மையங்களாக தேர்வு செய்யப்படும் ஊராட்சிகளில் கீழ்க்கண்ட செயல்பாடுகள் மேற்கொள்ளப் படும்.**

- சமூக மூலதன உருவாக்கம் (சமூக வல்லுநர்கள் மற்றும் சமூதாய வள பயிற்றுனர்கள்)

- சமூக ஒருங்கிணைப்பு
- அடிப்படைத் தகவல்களை சேகரித்தல்
- மக்களின் பங்கேற்புடன் மக்கள் நிலை ஆய்வு நடத்துதல் (PIP)
- கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தை உருவாக்குதல்
- திறன் மற்றும் கல்வி நிலையின் ஆய்வுத் தொகுப்பு உருவாக்குதல்

**இ) அனைத்து மாவட்டங்களிலுள்ள தீவிர செயல்பாடு மற்றும் சாதாரண செயல்பாடு உள்ள (Intensive & Non-intensive) வட்டாரங்களில் மேற்கொள்ளப்படும் செயல் திட்டங்கள்**

**1. திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு**

- வேலை வாய்ப்பு நிலை ஆய்வு / மதிப்பீடு
- வேலை வாய்ப்பு முகாம்
- இளைஞர் தொழில் திறன்பயிற்சிக்கான மாவட்டத் திறன் மையம்
- தொழில் முனைவோர் பயிற்சிகள்
- வேலை வாய்ப்புடன் கூடிய இளைஞர் தொழில் திறன் பயிற்சி

**2. ஒருங்கிணைப்பு மற்றும் ஒன்றிணைத்தல்**

- வட்டார அளவில் துறை ரீதியான செயல் திட்ட கருத்துப்பட்டறைகள்



- வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் ஒருங்கிணைப்பு குழுக்கள்

**3. வாழ்வாதார தொகுப்புகள்**

- ஒரு மாவட்டத்திற்கு ஐந்து என்ற முறையில் ஒத்த தொழில் குழுக்களை ஊராட்சி மற்றும் பகுதி அளவில் உருவாக்குதல்.
- ஒரு கிராமம் – ஒரு உற்பத்திப் பொருள் என்ற அடிப்படையில் ஒத்த உற்பத்திப் பொருள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள குழுக்களை உருவாக்குதல்.
- சிறு தொழில் சங்கங்களுடன் இணைப்பு ஏற்படுத்துதல்
- புதிய யுக்தி அமைப்புகளை உருவாக்குதல்.
- கல்லூரி மாணவர்களுக்கு சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களின் மேம்பாட்டில் பயிற்சி அளித்தல்.

**4. நிதி உள்ளாக்கம்**

- வங்கி நண்பர்கள்
- அனைத்து ஏழைக் குடும்பங்களுக்கும் நிதி பற்றிய விழிப்புணர்வு
- ஏழைகளுக்கான ஓய்வூதியம் மற்றும் காப்பீட்டுத் திட்டங்கள்.

**5. சந்தைப்படுத்துதல்**

- மதிப்பு கூட்டுதல் மற்றும் நிலைப்படுத்துதல்
- சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களுக்கு வணிக குறியீடு.
- மாவட்டம் மற்றும் மாவட்டங்களுக்கிடையே சுய உதவிக் குழு பொருட்களை சந்தைப்படுத்துதல்.
- தனியார் மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்துதல்.
- மாநில மற்றும் மண்டல அளவில் கண்காட்சி மற்றும் விற்பனை மூலம் சந்தைப்படுத்துவதற்கு வழி வகை செய்தல்.
- வாங்குவோர் மற்றும் விற்போர் சந்திப்பு (மாவட்ட மற்றும் மண்டல அளவில் )

**6. விருதுகள்**

- சிறப்பாக செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு விருது
- வங்கியாளருக்கு விருது

**7. மதிப்பீடு மற்றும் கணிப்பாய்வு**

- மேலாண்மை தகவல் தனிப்பிரிவு
- ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு பிரிவு



**8. தகவல் மற்றும் ஆவணப்படுத்துதல் பிரிவு**

- தகவல் தொடர்பு பரிமாற்ற சாதனங்களை உருவாக்குதல்
- கையேடுகள் மற்றும் பாடத்திட்டங்களை அச்சடித்து விநியோகித்தல்
- ஆவணப்படுத்துதல் மற்றும் பரவலாக்குதல்

**viii) திட்ட கூறு அளவிலான நிதி ஒதுக்கீடு**

2012 -13ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு **31,118.98** இலட்ச ரூபாயாக திட்டமிடப்பட்டு, கீழ்க்கண்ட திட்ட கூறுகளில் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் (NRLM) மற்றும் தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம் (NRLP) ஆகியவற்றின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **திட்ட கூறு** | **பொருள்** | **தொகை ரூ. இலட்சத்தில்** |
|---|---|---|---|
| 1 | அ | நிறுவனம் மற்றும் மனித வள மேம்பாடு | 75.00 |
| 2 | ஆ | மாநில வாழ்வாதார உதவி | 25,396.17 |
| 3 | இ | புதிய யுக்திகள் மற்றும் கூட்டாண்மை | 1,360.00 |
| 4 | ஈ | திட்ட செயலாக்க உதவி | 399.30 |
| 5 | உ | திறன் மற்றும் வேலை வாய்ப்பு | 3,888.51 |
| | | மொத்தம் | **31,118.98** |

**ix) நிதி பங்கீடு**

(ரூ. இலட்சத்தில்)

| வ.எண் | பொருள் | மத்திய அரசு | தமிழக அரசு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் (NRLM) | 19,044.01 | 6,348.01 | 25,392.02 |
| 2 | தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம் (NRLP) | 5,726.96 | - | 5,726.96 |
| | **மொத்தம்** | **24,770.97** | **6,348.01** | **31,118.98** |

## 8.3 2012-13ம் நிதியாண்டில் எடுக்கப்படவுள்ள புதிய முயற்சிகள்

### 8.3.1 ஒரு கிராமம் – ஒரு உற்பத்திப்பொருள்

"ஒரு கிராமம் - ஒரு உற்பத்தி பொருள்" என்ற கோட்பாட்டின் அடிப்படையில் ஒரே மாதிரியான தொழிலில் ஈடுபட்டுள்ள குழுக்களை கண்டறிந்து அவைகளை ஊக்குவித்து ஒரு கிராம அளவில் அல்லது சில கிராமங்களை இணைத்து விவசாயம் சாராத தொழிலாளர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு தொழில் தொகுப்புகள் உருவாக்கப்படும்.

இந்த தொழில் தொகுப்புகளின் மூலம் அவர்களின் தொழில் திறனை மேம்படுத்தி, தொழில் வாய்ப்புகளைப் பெற தேவையான இணைப்புகளை உருவாக்கி, பெருமளவில் பொருள் தயாரிப்பினால் ஏற்படும் நன்மைகளை அடையச்



செய்து, பரவலான சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்துவதுடன் ஏற்றுமதி திறனும் மேம்படுத்தப்படும்.

2012-13ம் நிதியாண்டில் ஒரு கிராமம் - ஒரு உற்பத்தி பொருள் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஐந்து தொழில் தொகுப்புகள் ஏற்படுத்தப்படவுள்ளது. மாநிலத்தில் மொத்தமாக 150 தொழில் தொகுப்புகள் ஏற்படுத்தப்படும்.

### 8.3.2 சுய உதவிக் குழு உற்பத்தி பொருட்களை மேம்படுத்தவும், பிரபலப்படுத்தவும் "கல்லூரி சந்தைகள்" (College Bazaar) ஏற்பாடு செய்தல்

சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களை கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்களிடையே பிரபலப்படுத்துவதற்காக "கல்லூரி சந்தைகள்" (College Bazaar) தமிழ் நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் ஏற்பாடு செய்யப்படும். இதன் மூலம் மேலாண்மையியல் துறையில் பயிலும் கல்லூரி மாணவர்களைக் கண்டறிந்து, அவர்களை கொண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களால் மேற்கொள்ளப்படும் தொழில்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல், தொழில் வாய்ப்புகளை கண்டறிதல், மாற்று பொருட்கள் தயாரிப்பு, உற்பத்தி செய்யும் முறையை மேம்படுத்துதல், மதிப்பு கூட்டுதல், பேக்கேஜிங், விலை நிர்ணயம் செய்தல் மற்றும் சந்தைப்படுத்துதல் போன்றவற்றில் சுய உதவிக் குழுக்களுக்கு உதவி செய்யப்படும்.

2012–13ம் ஆண்டில் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை மேம்படுத்திப் பிரபலப்படுத்தும் நோக்கில் ஒரு மாவட்டத்திற்கு மூன்று "கல்லூரி சந்தைகள்" என மொத்தம் 100 கல்லூரி சந்தைகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 8.3.3. மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்

அடையாள அட்டைகள் தற்போது மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்குத் தனிப்பட்ட முறையில் அடையாள அட்டை வழங்கப்படுவதில்லை. மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் முறையான அடையாள அட்டை இல்லாத காரணத்தால் அரசு அலுவலகங்கள் மற்றும் பிற நிறுவனங்களுக்குச் செல்லும் பொழுது மிகுந்த இன்னல்களுக்கு ஆளாகின்றனர். அடையாள அட்டை பெறுவதன் மூலம் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் தன்னம்பிக்கையும், மரியாதையையும் பெறுவார்கள்.

2012–13ம் நிதி ஆண்டில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் முதற் கட்டமாக செயல்படுத்தப்படவுள்ள 15 மாவட்டங்களைச் சேர்ந்த 60 வட்டாரங்களில் உள்ள சுய உதவிக் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் அடையாள அட்டை வழங்கப்படும்.



### 8.3.4. சுய உதவிக்குழுக்களின் உற்பத்திப் பொருட்களை மேம்படுத்தி, சந்தைப்படுத்த மாநில அளவிலான விற்பனைச் சங்கத்தினை தோற்றுவித்தல்

சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்துவதற்காக இதுவரை மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கங்கள் மட்டுமே செயல்பாட்டில் உள்ளன. மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கம் இது வரை அமைக்கப்படவில்லை. இந்த நிதியாண்டில் மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கத்தை உருவாக்கி தற்போது செயல்பட்டு வரும் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கங்களுடன் தொடர்பு ஏற்படுத்தி, அவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து அதன் மூலம் சுய உதவிக் குழு உற்பத்தி பொருட்களை மேம்படுத்தி மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவில் சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

### 8.3.5. "மதி பஜார்" - சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் இணைய வழி விற்பனைக்காக புதிய இணையதளம் உருவாக்குதல்

2004ம் ஆண்டு மகளிர் சுய உதவிக் குழு உற்பத்தி பொருட்களின் விற்பனை வாய்ப்பினை மேம்படுத்திட உருவாக்கப்பட்ட **"ரூரல் பஜார்"** (Rural Bazaar) என்னும் இணையதளம் செயலிழந்துள்ளது. தற்பொழுது இந்த இணையதளத்தினை புதுப்பித்து, மறுசீரமைத்து, மகளிர் சுய

உதவிக் குழு உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தும் வகையில் பொருட்கள் குறித்த தேடல்கள், மாவட்ட / விலை குறித்த தேடல்கள், வாங்குவோர் மற்றும் விற்போர் இடையே தகவல் பரிமாற்றம் மற்றும் அனைத்து மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்க மேலாளர்கள் வாடிக்கையாளர்களிடம் எளிதில் தொடர்பு கொள்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தி "மதி பஜார்" (Mathi Bazaar) என பெயரிடப்படும். மேலும், இவ்விணையதளத்தில் இணையவழியில் பணம் செலுத்தியும், அஞ்சல் வழியில் பணம் செலுத்தியும் பொருட்கள் பெறுவதற்கு வழிவகை செய்யப்படும்.

### 8.3.6. சமூக அநீதிகளுக்கு எதிராக போராடும் சுய உதவிக் குழுக்களுக்கு விருது

மகளிர் சுய உதவிக் குழுக்கள், பெண்களுக்கு எதிராக நடைபெறும் சமூக அநீதிகள் மற்றும் வன்கொடுமைகளை எதிர்த்து போராடி வருகின்றனர். இவ்வாறான சமூக அநீதிகள் மற்றும் வன்முறைகளுக்கு எதிராக ஒன்று கூடிப் போராடும் மகளிர் சுய உதவிக் குழு பெண்களுக்கு விருது வழங்கினால் அவர்கள் பெண்களை பாதிப்புக்குள்ளாக்கும் சமூக பிரச்சனைகளை எதிர்த்து போராடுவதற்கு ஊக்குவிக்கப்படுவார்கள். இவ்விருது முதன்முறையாக இவ்வாண்டு தோற்றுவிக்கப்படும்.



### 8.3.7. சுய உதவி குழுக்களுக்கான ஓய்வூதியம் மற்றும் காப்பீட்டுத் திட்டம்

மாநில அரசால் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் பயனடையும் வகையில் ஓய்வூதியம் மற்றும் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இந்த திட்டத்தில் ஓய்வூதியம் வழங்கப்படுவதுடன் உறுப்பினர்களுக்கு உயிர் மற்றும் உடமைகளுக்கு முழுமையான காப்பீடு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் இந்த நிதியாண்டில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் முதற் கட்டமாக செயல்படுத்தப்பட உள்ள 15 மாவட்டங்களைச் சேர்ந்த 60 வட்டாரங்களில் முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் அனைத்து வட்டாரங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

### 8.3.8. தமிழ்நாட்டின் 20 ஆண்டு கால சுய உதவிக்குழு இயக்கம் பற்றிய அறிக்கை

சுய உதவிக் குழு இயக்கம் 20 ஆண்டு காலத்தில் பல முக்கிய கட்டங்களை கடந்து வந்துள்ளது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், மகளிர் சுய உதவிக் குழு இயக்கத்தின் தாக்கத்தால் மகளிர் அடைந்துள்ள மேம்பாட்டின் பல நிலைகளை, குறிப்பாக சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மேம்பாடு பற்றி ஆய்வு மேற்கொள்ளும். ஆய்வறிக்கையும், சுவாரசியமான நிகழ்வுகளும் தொகுக்கப்பட்டு புத்தக வடிவில் "ஊரக மகளிர் மேம்பாட்டில் மகளிர் சுய உதவிக்குழு இயக்கத்தின் பங்கு" என்ற

தலைப்பில் தமிழகத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்கள் தொடங்கப்பட்டு 20 ஆண்டுகள் நிறைவடைந்ததன் நினைவாக வெளியிடப்படும்.

### 8.3.9. 100% கல்வியறிவு பெற்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு விருது வழங்குதல்

எழுத்தறிவு, பெண்களின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு இன்றியமையாத காரணியாக இன்றும் விளங்குகிறது. இன்றளவும், ஊரக பகுதிகளில் ஏழை மகளிர் எழுத்தறிவும், எண்ணறிவும் இன்றி உள்ளனர். சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தங்கள் குழுக்களில் உள்ள கல்வியறிவற்ற மகளிருக்கு கல்வி அறிவுபெற்ற உறுப்பினர்களை கொண்டு கற்றுத்தர எடுக்கும் கூட்டு முயற்சி அங்கீகரிக்கப்பட்டு விருது வழங்கப்படும். முதன்முறையாக, இந்த நிதியாண்டு முதல் தங்களது கூட்டமைப்பில் உறுப்பினர்களாக உள்ள அனைத்து சுய உதவிக் குழு உறுப்பினர்களையும் கற்றவர்களாக உருவாக்கும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு இவ்விருது வழங்கப்படும்.

## 8.4 2012–13ம் ஆண்டில் உத்தேசிக்கப்பட்ட முக்கிய செயல்பாடுகள்

1. ஆஜீவிகா (Aajeevika) - தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் முதற்கட்டமாக 15 மாவட்டங்களைச் சேர்ந்த 60 வட்டாரங்களில் மக்களை முன்நிறுத்தி அவர்களே தங்களின்



முன்னேற்றத்திற்கு பொறுப்பாகும் அணுகு முறையுடன் ஊரக வறுமை ஒழிப்புத் திட்டமாக 2012-13ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட உள்ளது.

2. ஒரு ஊராட்சிக்கு ஒரு உற்பத்தி பொருள் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா ஐந்து தொழிற் தொகுப்புகள் உருவாக்கப்படும்.

3. மகளிர் சுய உதவிக்குழுக்களின் உற்பத்தி பொருட்களை பிரபலப்படுத்தி மேம்படுத்தும் வகையில் 100 கல்லூரி சந்தைகள் நடத்தப்படும்.

4. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படவுள்ள 15 மாவட்டங்களைச் சேர்ந்த 60 வட்டாரங்களில் உள்ள மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் தனிநபர் அடையாள அட்டை வழங்கப்படும்.

5. மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கத்தை உருவாக்கி தற்போது செயல்பட்டு வரும் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கங்களுடன் தொடர்பு ஏற்படுத்தி, அதன்மூலம் சுய உதவிக் குழு உற்பத்தி பொருட்களை மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவில் சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

6. சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களுக்காக தனித்தன்மை வாய்ந்த வணிக

குறியீடு (Brand) வியாபாரச் சின்னம் (Logo) மற்றும் முத்திரை (Monogram) வெளியிடப்படும்.

7. மகளிர் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் இணையவழி விற்பனைக்காகவும், ஏற்றுமதி வாய்ப்பினை உருவாக்கவும், “மதிபஜார்” (Mathi bazaar) எனும் புதிய இணையதளம் தொடங்கப்படும்.

8. சமூக அநீதியை எதிர்த்து போராடுவதில் முன்நிற்கும் சுய உதவிக் குழுக்களுக்கு புதிய விருது வழங்கப்படும்.

9. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தீவிரமாக செயல்படுத்தப்படும் 15 மாவட்டங்களில் உள்ள 60 வட்டாரங்களில் ஒய்வூதியத்துடன் கூடிய காப்பீட்டு திட்டம் முதன் முறையாக செயல்படுத்தப்படும்.

10. தமிழகத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்கள் தொடங்கப்பட்டு 20 ஆண்டுகள் நிறைவடைந்ததன் நினைவாக “கிராமப்புற பெண்கள் மத்தியில் மகளிர் சுய உதவிக்குழுக்களின் தாக்கம்“ என்ற பெயரில் ஆய்வு அறிக்கை வெளியிடப்படும்.

11. இளைஞர் தொழிற் திறன் பயிற்சித் திட்டத்தின் “திறன் ரசீதுத் திட்டம்” (Skill Voucher Scheme) அதிக வேலைவாய்ப்புள்ள பயிற்சிப் பிரிவுகளுக்கு விரிவுபடுத்தப்படும்.



12. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலுள்ள அனைத்து சுய உதவிக் குழு உறுப்பினர்களையும் கற்றவர்களாக உருவாக்கும் கூட்டமைப்புகளுக்கு ஒரு புதிய விருது வழங்கப்படும்.

## 9.புது வாழ்வு திட்டம்

### 9.1 அறிமுகம்

தமிழ்நாடு அரசின் முன்னோடித் திட்டமான புது வாழ்வு திட்டம் வறுமையை ஒழித்து, அனைத்து தரப்பினர்களின் வளர்ச்சியை உள்ளடக்கியதாகும். உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டம், மக்களை முன்நிறுத்தி அவர்களே தங்களின் முன்னேற்றத்திற்கு பொறுப்பாகும் அணுகுமுறையைப் பின்பற்றி ஏழைகள் மற்றும் வசதி வாய்ப்பற்ற மக்களை, ஒட்டு மொத்த சமுதாய வளர்ச்சி பாதையில் இணைந்திட வழி வகுத்துள்ளதுடன் அவர்கள் முக்கிய முடிவுகள் மேற்கொள்ளவும், முழுமையாக இத்திட்டத்தில் பங்கேற்று தங்களின் வளர்ச்சியை தாங்களே கண்காணிக்கத் தக்க ஆற்றல் பெற்றவர்களாகவும் உருவாக்கியுள்ளது. இத்திட்டம் கிராம அளவில் மக்களை ஆற்றல்படுத்துதல் மற்றும் நிலையான வாழ்வாதார மேம்பாடு ஆகிய இரட்டைச் சவால்களை, சரியான பயனாளி தேர்வின் அடிப்படையில் வெளிப்படையான வள ஆதார பங்கீடு மற்றும் மக்கள் பங்கேற்பு முறையிலான நடவடிக்கைகள் மூலம் பின்பற்றுகிறது.

இத்திட்டம் வலுவான மக்கள் அமைப்புகளை பல்வேறு செயல்பாடுகளின் மையமாக உருவாக்கியுள்ளது. முனைப்புடன் செயலாற்றும் இவ்வமைப்புகள் மக்களின் திறன் வளர்ப்பதிலும், நிலைத்த வாழ்வாதார மேம்பாடு அடைய ஆவன செய்வதிலும், வெளிப்படைத் தன்மையுடன் சமுதாய பொறுப்புணர்ச்சியுடன் செயல்படுவதிலும் சிறப்புற்று விளங்குகிறது.

**9.2 திட்ட செயலாக்க பகுதிகள்**

இத்திட்டம் நவம்பர் 2005–ல் நமது மாநிலத்தின் 16 மாவட்டங்களில் மிகவும் பின்தங்கிய 70 வட்டாரங்களில் உள்ள 2,509 ஊராட்சிகளில் 5.8 இலட்சம் ஏழை குடும்பங்கள் பயனடையும் வகையில் ரூ.717 கோடி செலவினத்தில் துவக்கப்பட்டது. மேலும் 2011–12ல், 10 மாவட்டங்களில் பின்தங்கிய 50 வட்டாரங்களில் உள்ள 1,661 ஊராட்சிகளில் 3.8 இலட்சம் ஏழை குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ.950 கோடி செலவினத்தில் இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. செப்டம்பர் 2014 வரை நீட்டிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தில் கூடுதலாக எடுத்துக்கொள்ளப்பட்ட திட்டப் பகுதிகள் உட்பட மொத்தம் 9.8 இலட்சம் ஏழை குடும்பங்கள் பயனடைவர்.

**9.3 திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்**

வலுவான மற்றும் பொறுப்புணர்வுடன் கூடிய அடித்தள மக்கள் அமைப்புகள் மூலம் மிகவும் ஏழை மற்றும் நலிந்த பிரிவினரின் வாழ்க்கை தரம் மேம்பாடு அடைந்து,



சமூக பொருளாதார பங்களிப்பு மற்றும் ஆற்றல் பெற்றிடச் செய்வதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும்.

ஏழை மக்களின் திறன் வளர்ப்பிற்கும் அவர்கள் நிலையான வாழ்வாதாரத்திற்கு தேவைப்படும் நிதி பெறுவதற்கும் திட்டம் தனி கவனம் செலுத்துகிறது. மக்களை முன்நிறுத்தி அவர்களே தங்களின் முன்னேற்றத்திற்கு பொறுப்பாகும் அணுகுமுறையை பின்பற்றுகிறது. இவை அனைத்து தரப்பினர்களுக்கும் பொருந்தும் உயிர் மூச்சு கொள்கைகள், சமுதாய பொறுப்புணர்ச்சி மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகிய நெறிமுறைகளை அடிப்படையாகக் கொண்டது.

**9.4 திட்டச் செயலாக்க முறை**

இத்திட்டம் ஏழை மக்களின் தேவைகளை அறிந்து மக்களை முன்நிறுத்தி தங்களின் முன்னேற்றத்திற்கு தாங்களே திட்டமிட்டு செயலாற்றும் அணுகுமுறையை பின்பற்றி, முனைப்பான செயல்பாடுகளால் நிலையான வாழ்வாதாரம் மூலம் வருவாய் பெருகிட வழிவகை செய்கிறது. மேலும், பல்வேறு அரசு திட்ட பயன்கள் மற்றும் தங்கள் உரிமைகளை பெற்றிட தொடர்புடைய துறைகளுடன் இத்திட்டம் இணைந்து செயல்படுகிறது.

வாழ்வாதார மேம்பாடு மற்றும் ஆற்றலளிப்பு ஆகிய இரட்டை குறிக்கோள்களை அடைந்திட, கீழ்கண்ட இரு வகையான செயல் திட்டங்கள் திட்டப் பகுதிகளில் பின்பற்றப்படுகின்றன:

- ஏற்கனவே திட்ட செயலாக்கத்தில் உள்ள 16 மாவட்டங்களில் இலக்கு மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட நிதி முதலீடுகள் மற்றும் முயற்சிகளை வலுப்பெறச்செய்து ஒருமுகப்படுத்துவதே முதல் செயல் திட்டமாகும். அடித்தள மக்களமைப்புகள் நிலைத்த ஆதாரம் பெற்று செயல்படவும் உயர்நிலை திட்ட விரிவாக்கம் மேற்கொள்ளவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. இலக்கு மக்களின் நிலையான வாழ்வாதாரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கம் ஏற்படுத்தும் வகையில் இத்திட்டச் செயல்பாடுகள் அமையும்.
- இரண்டாவது செயல்திட்டம் கூடுதலாக எடுத்துக் கொள்ளப்பட்ட 10 மாவட்டங்களில் ஏற்கனவே திட்ட செயலாக்கத்திலுள்ள மாவட்டங்களில் பின்பற்றப்பட்ட செயல்திட்டங்களின் அடிப்படையில், ஏழை எளியோர் மற்றும் நலிந்தோர் கண்டறியப்பட்டு, ஆற்றலளிப்பு மற்றும் சமுதாய ஒருங்கிணைப்புடன் செயலாற்றிட நடவடிக்கை மேற்கொள்ளபடும். உயிர்மூச்சு கொள்கை மற்றும் நல்லாட்சி நெறிமுறைகள் அனைத்து செயல்பாடுகளிலும் பிரதிபலிக்கும் வகையில் கண்டிப்பாக பின்பற்றப்படும்.



### 9.5 திட்டச் செயலாக்க அமைப்பு

**அ) மாநில அளவில்**

தமிழ்நாடு புதுவாழ்வு சங்கம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் தலைமையில் செயல்படுகிறது. இச்சங்கம் மாநில அளவில் திட்ட நிர்வாகத்தினை மேற்கொள்கிறது.

திட்ட இயக்குநர் தலைமையில் மாநில திட்ட மேலாண்மை அலகு செயல்படுகிறது. திட்ட செயல்பாடுகளை வழிநடத்த வேண்டிய சிறப்புத் திறன்கள் கொண்ட வல்லுநர் குழு ஒன்று இதில் அடங்கும். திட்ட விரிவாக்கத்தால் ஏற்பட்ட கூடுதல் வேலைப்பளுவை சமாளிக்கத் தேவையான கூடுதல் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

**ஆ) மாவட்ட அளவில்**

மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மாவட்ட அளவிலான சங்கம் செயல்படுகிறது. மாவட்ட திட்ட செயலாக்க அலகிற்கு மாவட்ட திட்ட மேலாளர் தலைமை வகிக்கிறார். இவருடன் இணைந்து செயல்பட உதவித் திட்ட மேலாளர்கள் மற்றும் களப்பணியாளர்கள் அடங்கிய அணி இயங்குகிறது. திட்ட செயலாக்கம் மற்றும் ஒருங்கிணைப்பிற்கு மாவட்ட திட்ட அலகே பொறுப்பு.

**இ) பகுதி அளவில்**

அடித்தள மக்களமைப்புகளுக்கு உறுதுணையாக 10–15 கிராம ஊராட்சிகள் அடங்கிய ஒவ்வொரு களப்பகுதிக்கும் 5 நபர்கள் கொண்ட திட்ட ஒருங்கிணைப்பு அணி செயல்படுகிறது.

**ஈ) கிராம அளவில்**

கிராம அளவிலான திட்ட செயல்பாட்டிற்கு திட்டத்தால் கண்டறியப்பட்ட இலக்கு மக்களை உள்ளடக்கிய தன்னாட்சி அமைப்பாக கிராம வறுமை ஒழிப்பு சங்கம் செயல்படுகிறது. மிகவும் ஏழைகள், மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட நலிந்தோர் மற்றும் மலைவாழ் மக்கள் தேவையான சேவைகளை பெற்றிட அவர்களின் நலனுக்காக செயல்படக்கூடிய வலுவான மக்களமைப்புகளை உருவாக்குவதில் திட்டம் கவனம் செலுத்துகிறது.

கிராம அளவில் செயல்படும் இவ்வமைப்புகள் அனைத்து திட்ட செயல்பாடுகளையும் மேற்கொள்கின்றன. இவை சமூக நடவடிக்கைகள் மூலம் இலக்கு மக்களின் நலம் பேணி அவர்களின் கடைநிலை தேவைகளை உறுதி செய்யும் மக்கள் அமைப்புகளாக உருவாகியுள்ளன.

## 9.6 திட்டத்தின் முக்கிய செயல்பாடுகள்

**விழிப்புணர்வு ஏற்படுத்தும்** வகையில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் தகவல் தொடர்பு நடவடிக்கைகள், சீரான திறன் வளர்ப்பு பயிற்சிகள் ஆகியவை மூலம் மக்களமைப்புகள் மற்றும் இலக்கு மக்கள் திறன்கள் மேம்படுத்தப்படுகின்றன.

**மக்களின் பங்கேற்புடன் இலக்கு மக்களைக் கண்டறிதல்** ஒரு சிறந்த முறையாக உருவெடுத்துள்ளது. இது சமூக வரைப்படம் மற்றும் பொருளாதார நிலை மதிப்பீட்டின் அடிப்படையில் இலக்கு மக்களை கண்டறியும் முறையை பயன்படுத்தி வறுமையை அகற்றும் பல்வேறு யுக்திகளை



கையாண்டு வறுமையின் பிடியிலிருந்து வெளிக் கொணர்வதற்கும், திட்ட பயன்கள் நேரடியாக சென்றடைவதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

**கிராம அளவில் மக்கள் அமைப்புகளான** கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், இலக்கு மக்களுக்கான சேவைகள் மற்றும் உரிமைகளை பெற்றிட முனைப்புடன் செயல்படுகிறது. சமூக தணிக்கைக் குழுக்கள், திட்ட உயிர்மூச்சுக் கொள்கைகள் பின்பற்றப்படுவதை கண்காணிக்கும் அமைப்பாக செயல்படுகிறது. திட்டம் மற்றும் வங்கிகளிடமிருந்து சமுதாயத்தின் நிதித் தேவையை பூர்த்தி செய்வதற்கு நிதி பெற்றுத் தரும் இடை நிதி நிறுவனமாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் பணிபுரிகின்றன. ஒத்த தொழில் குழுக்கள், ஏழை மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான வாழ்வாதார வாய்ப்புகளை ஏற்படுத்தி வளர்ச்சி பரிமாணத்தின் அனுகூலங்களை பெற்றுத் தரும். இலக்கு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் மேற்கூறப்பட்ட அனைத்து மக்களமைப்புகளுக்கும் திட்ட பணியாளர்கள் உறுதுணையாக இருப்பர். நீடித்த நிலைத்த தன்மை அடைவதையும், சேவைகள் கடைநிலை மக்களுக்கு சென்றடைவதையும் இம்மக்கள் அமைப்புகளே உறுதி செய்கின்றன.

**நலிவுற்ற தன்மை குறைப்பு மற்றும் சமூக பாதுகாப்பு** பெற்றிட, முனைப்புடன் கூடிய சிறப்பான சேவைகள் மூலம் மிகவும் எழை, இளைஞர், மாற்றுத் திறனாளி மற்றும் மலை வாழ் மக்கள் உள்ளிட்ட நலிவுற்ற மக்கள் பயன் அடைந்திட

இத்திட்டம் உறுதி செய்கிறது. மக்கள் பங்கேற்புடன் அவர்களை பாதிக்கக்கூடிய இடர்களை கண்டறிந்து அவற்றை தவிர்த்திட நடவடிக்கைகள் மேற்கொண்டு ஆற்றலளிப்பின் அடுத்த நிலைக்கு கொண்டு செல்லுதல் மற்றும் இலக்கு மக்களிடையே நிலைத்த வாழ்வாதாரத்தை உருவாக்கிடுதல் திட்டத்தின் மற்றுமொரு முக்கிய குறிக்கோள் ஆகும். ஆயுள் மற்றும் மருத்துவ காப்பீடு, பல்வேறு சமூக பாதுகாப்பு திட்டங்களின் கீழ் ஒய்வூதியம் போன்ற பயன்களைப் பெற்றுத் தருதல், மருத்துவ உதவி, உணவு மற்றும் சுய தேவைகள் போன்றவற்றை பூர்த்தி செய்வதின் மூலம் சமூகப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது. நலிவுற்ற தன்மை குறைப்பு மூலம் இலக்கு மக்கள் குடும்பங்கள் மீண்டும் வறுமையின் கோரப்பிடியில் சிக்கி விடாமல் சமாளிக்கும் ஆற்றல் பெற்றிட திட்டம் வழிவகை செய்கிறது.

**இளைஞர்கள் வேலைவாய்ப்பிற்கான திறன் வளர்ப்பு** பெறும் வகையில் வேலைவாய்ப்பு சந்தையில் தேவைப்படும் திறன்களை கண்டறிந்து, அதன் அடிப்படையில் அவர்களின் திறன்களை வளர்த்து ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது, வாழ்வாதார மேம்பாட்டிற்காக திட்டத்தால் மேற்கொள்ளப்படும் ஒரு பெரும் முயற்சியாகும். 18 முதல் 35 வயதுடைய வேலைவாய்ப்பற்ற அல்லது தகுந்த வேலைவாய்ப்பில்லாத இளைஞர்களுக்கு உரிய பயிற்சிகளின் மூலம் தேவையான திறன்களை மேம்படுத்தி வேலை பெறச் செய்வது அல்லது அவர்களை வேலை வாய்ப்பு



முகாம்களில் கலந்து கொள்ளச் செய்து நேரடி வேலைவாய்ப்பு பெற வழிவகை செய்யப்படுகிறது.

**வாழ்வாதார கூட்டமைப்பு மேம்பாட்டு நடவடிக்கைகள்,** கிராமம் மற்றும் கிராமங்களுக்கு இடையே ஒத்த தொழில் குழுக்கள் வாயிலாகவும் கிராமம், பகுதி, ஒன்றியம் அல்லது மாவட்ட அளவில் தொழில் கூட்டமைப்புகள் அமைப்பதன் மூலமாகவும் மேற்கொள்ளப்படுகிறது. நடைமுறையில் உள்ள வாழ்வாதாரங்களை வலுப்பெறச் செய்வதோடு, புது வாழ்வதார மேம்பாட்டிற்கான வாய்ப்புகளைக் கண்டறிவது மற்றும் சந்தைப்படுத்துதலை கருத்தில் கொண்டு கிராம அளவில் (பண்ணை மற்றும் பண்ணை சாரா) தொழில் நடவடிக்கைகளை திட்டம் மேற்கொள்ளும். ஒத்த தொழில் குழுக்கள் மற்றும் தொழில் கூட்டமைப்புகளை அமைப்பதன் மூலம், தொழில் பெருக்கத்தால் கிடைக்கும் நன்மைகள், பொதுவான உள்கட்டமைப்புகள், கூட்டுக்கொள்முதல் மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகியவற்றால் ஏற்படும் பயன்களை மக்கள் பெற இயலும்.

**நிறுவன கூட்டமைப்புகளின் மேம்பாடானது,** திட்ட காலத்திற்கு பின்பும் மக்கள் தொடர்ந்து சேவைகளை பெற்றிடும் வகையில் மக்கள் அமைப்புகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்புகள் தொடர்ந்து கிராம அளவிலான மக்களமைப்புகளுக்கு உறுதுணையாக இருந்து, தேவையான உதவிகளை புரிந்து, நீடித்த நிலைத்த தன்மை பெற்று வலுவான அமைப்புகளாக உருவாக பணியாற்றும். இவை இலக்கு மக்கள் தரமான

சேவைகளை பெறுவதற்கு வாழ்வாதார மேம்பாட்டிற்கான கூட்டு நடவடிக்கைகளை கண்டறிந்து அவற்றை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்வதுடன் கிராமங்களுக்கிடையே எழும் பிரச்சினைகளை தீர்க்கவும் உதவும்.

**9.7 சாதனைகள் 31.03.2012 வரை:**

| வ. எண் | நடவடிக்கைகள் | 31.03.2012 வரை | மே 2011 முதல் |
|---|---|---|---|
| திட்ட நிதி | | | |
| 1 | மக்கள் பங்கேற்புடன் மக்கள் நிலை ஆய்வு செய்து இலக்கு மக்களை கண்டறிந்து கிராம சபையில் ஒப்புதல் பெறுதல் | முடிவடைந்துள்ளது | முடிவடைந் துள்ளது |
| 2 | கிராம வறுமை ஒழிப்பு சங்கம் ஏற்படுத்துதல் | முடிவடைந்துள்ளது | முடிவடைந் துள்ளது |
| 3 | பெண்கள் மற்றும் இளைஞர்களைக் கொண்டு சுய உதவிக் குழுக்களை உருவாக்குதல் | 15,022 | 334 |
| 4 | மாற்றுத் திறனாளிகளைக் கொண்டு சுய உதவிக் குழுக்களை உருவாக்குதல் | 7,996 | 119 |
| 5 | மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கு வாழ்வாதார நடவடிக்கைகள் தொடங்குவதற்கு வழங்கப்பட்ட நிதி உதவிகள் | 1,63,580 | 13,541 |
| 6 | வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சி அளிக்கப்பட்ட இளைஞர்கள் | 1,70,063 | 25,330 |
| 7 | வேலை வாய்ப்பு பெற்றுள்ள இளைஞர்கள் | 1,43,709 | 40,730 |
| 8 | மறு சீரமைக்கப்பட்டுள்ள ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்புகள் | 2,400 | 65 |



| வ. எண் | நடவடிக்கைகள் | 31.03.2012 வரை | மே 2011 முதல் |
|---|---|---|---|
| 9 | வழங்கப்பட்டுள்ள வாழ்வாதார நிதி | ரூ.208.13 கோடி | ரூ.80.21 கோடி |
| 10 | அமைக்கப்பட்ட ஒத்த தொழில் குழுக்கள் (பூச்சரம்) | 3,370 | 1,521 |
| திட்ட நிதிக்குட்படாத சாதனைகள் | | | |
| 11 | சுழல் நிதி பெற்ற புதிய மற்றும் மாற்று திறனாளிகளுக்கான சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 19,868 | 2,454 |
| 12 | சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட முதல் நிதியுதவி | ரூ.116.43 கோடி | ரூ.14.65 கோடி |
| 13 | இரண்டாம் தவணை நிதியுதவிப் பெற்ற சுயஉதவிக்குழுக்களின் எண்ணிக்கை | 8,144 | 2,889 |
| 14 | சுயஉதவிக்குழுக்களுக்கு வழங்கப்பட்ட இரண்டாம் நிதியுதவி | ரூ.104.89 கோடி | ரூ.35.90 கோடி |
| 15 | திட்டத்தின் முயற்சியால் பராமரிப்புத் தொகை பெற்ற மாற்று திறனாளிகளின் எண்ணிக்கை | 9,071 | 2,612 |
| 16 | உபகரணங்கள் மற்றும் கருவிகள் பெற்ற மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை | 19,114 | 5,033 |
| 17 | திட்ட முயற்சியால் ஒய்வூதியம் பெற்றவர்களின் எண்ணிக்கை | 68,641 | 15,727 |

**9.8 விருது**

சமீபத்தில் நடைபெற்ற சமூகப் பொறுப்புணர்வுக்கான “உலகளாவிய ஐந்தாவது மக்கள்

முன்னிலை விருது'' தேர்வில் புது வாழ்வு திட்டம் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. இவ்விருது, "வறுமை ஒழிப்பு மற்றும் விடுபட்ட மக்களை ஒருங்கிணைப்பதில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியதற்காகவும்; பல்வேறு சமூக பொறுப்புணர்வு யுக்திகளை தேவைக்கேற்ப தக்க முறையில் கையாண்டதற்காகவும்; மாற்றுத் திறனாளிகள், மலைவாழ் மக்கள் மற்றும் பெண்களிடையே முனைப்புடன் செயலாற்றி வரவேற்கத்தக்க விளைவுகளை உருவாக்கியதற்காகவும்" வழங்கப்பட்டுள்ளது.

## 9.9 புதிய செயல்பாடுகள் மூலம் வறுமைக்கான காரணங்களை கண்டறிந்து ஆற்றலளித்தல்

ஏழை மக்களுக்கு ஆற்றலளித்தல், வாழ்வாதாரத்தை உருவாக்குதல், வருவாயினை அதிகப்படுத்துதல் போன்றவற்றின் விளைவாக மட்டுமே வறுமையைக் குறைக்க முடியாது. பதிலாக, வறுமையைக் குறைப்பதற்கு, அடிப்படை காரணங்களான சுகாதாரம், கல்வி, ஊட்டச்சத்து, துப்புரவு, தகவல்களை அறிவதற்கான வாய்ப்பு போன்றவற்றின் வாயிலாகவும் வறுமையை குறைப்பதற்கான புதிய வழிமுறைகள் கையாளப்படும். இலக்கு குடும்பங்கள் வாழ்வாதாரம் மற்றும் ஆற்றலளிப்பு மேம்பட புது வாழ்வு திட்டம் பாடுபடுகிறது. இப்புதிய முயற்சியின் அடிப்படை நோக்கம் ஏழ்மையைக் கட்டுப்படுத்துவதற்கு பெரிதும் உகந்த வழிமுறைகளை திட்டத்தின் வாயிலாகவும் அரசின் பிற



திட்டங்களின் மூலமாகவும், திட்ட செயலாக்கத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும்.

### 9.9.1 கிராம அறிவு மையங்கள்

கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் திட்ட செயல்பாடுகள் அல்லாமல் மக்களுக்கான உரிமைகள், அரசின் திட்டங்கள் குறித்த விபரங்களை அறிய வழிவகுக்கும் அமைப்பாக செயல்படுகின்றன. கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் அடிப்படை வசதியான கணினி மற்றும் அச்சுப் பொறியினை பெற்றிருக்கின்றன. இவ்வசதிகள் தற்போது தகவல் மேலாண்மைக்கான புள்ளி விவரங்களை சேகரிக்கவும் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் கணக்குகளைப் பராமரிக்கவும் மட்டுமே பயன்படுகிறது. கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களில் தற்போதுள்ள அடிப்படை வசதியினை பயன்படுத்தி திட்ட அணியினர் வழிகாட்டலுடன் கிராம அறிவு மையங்களாக செயல்படும். இவ்வாறு செயல்பட தேவைப்படும் கட்டமைப்புகளான அகன்ற அலைவரிசை (Broad Band), இணையப்படக் கருவி (Web Camera), கல்வி குறுந்தகடு (Educational CD) மற்றும் போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்களைக் கொண்டதாகவும் இருக்கும். இவ்வமைப்புகள் அன்றன்றைய சந்தை நிலவரம், தொலைமருத்துவம், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு மற்றும் வாழ்க்கை வழிகாட்டி போன்ற செய்திகளை ஒருங்கே கொண்டதாகவும் இருக்கும். மேலும் மாணவர்களின் கல்விக்குத் தேவையான உள்ளீடுகள் மற்றும் இணையதள

உதவியுடன் உலகத்தையே காணக் கூடிய மையமாகவும் செயல்படும். திட்ட செயலாக்கத்தில் உள்ள 2,509 கிராமங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

### 9.9.2 சுகாதார கண்காணிப்புத் திட்டம்

நோயுறுதல், மோசமான சுகாதாரம், போதிய கல்வியின்மை, ஆரோக்கியமற்ற உணவு பழக்கங்கள் போன்ற சமுதாயத்தை சீர்குலைக்கும் வறுமைக்கான காரணிகளை முழுமையாக எதிர் கொள்ள வேண்டும். இத்திட்டம், இலக்கு மக்கள் குடும்பங்களை மருத்துவ காப்பீட்டு திட்டத்துடன் இணைய வழிவகை செய்துள்ளது. கடந்த வருடம் கிராம பெண்கள் மற்றும் கருவுற்ற தாய்மார்களின் நலன் கருதி இரத்தசோகை கட்டுப்படுத்தும் பொருட்டு, அவர்களின் உயரத்திற்கு தக்க எடை (BMI) கண்டறிய "எடை பார்க்கும் கருவி"யும் வழங்கப்பட்டது.

ஏழை எளிய இலக்கு மக்கள் தங்களின் ஆரோக்கியத்தை உடனுக்குடன் கண்டறிந்து தேவையான சரி செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாக சுகாதார அட்டை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அட்டையில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஒருவரின் உயரம், எடை, இரத்த பிரிவு, இரத்த அழுத்தம், சர்க்கரை அளவு மற்றும் இரத்த சிவப்பு அணுக்களின் எண்ணிக்கை போன்றவற்றின் அளவுகள் பதிவு செய்யப்படும். இதனால் குறித்த காலத்தில் தங்களின் உடல்நிலை பற்றிய தகவல்களை அறிந்து சரியான சிகிச்சை பெற வழிவகை



செய்யப்படுகிறது. கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் இலக்கு மக்களை ஒருங்கிணைத்து அவர்களை பரிசோதனைகளுக்கு உட்படுத்தி அவர்களின் ஆவணங்களை பாதுகாப்பதில் முக்கிய பங்குவகிக்கின்றன. கிராம சுகாதார செவிலியர்களின் சேவைகளை பயன்படுத்தி இலக்கு மக்களின் நலன் கண்காணிக்க வழிவகை மேற்கொள்ளப்படும்.

### 9.9.3 இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டுதல்

கல்வியும், திறன் வளர்ப்பும் தனி நபரின் வாழ்க்கை தரத்தை மாற்றியமைக்கும் சக்தி வாய்ந்தவை. இதன் தாக்கம் பல தலைமுறைகளை தாண்டி நிற்கும் வல்லமை பெற்றது. இதன் எதிர்மறை பாதிப்புகள் கிராமப் பகுதிகளின் ஒதுக்கப்பட்ட ஏழை எளிய மக்களிடையே அதிகமாக காணப்படுகிறது. கிராமப்புற ஏழை மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் தங்களை அடுத்த மேன்மையான நிலைக்கு கொண்டு செல்ல உதவும் அரசு மற்றும் தனியார் துறைகளின் மூலம் கிடைக்கப் பெறும் உயர் கல்விக்கான தகவல்கள், உதவிகள் மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சிகள் பற்றிய தகவல்கள் ஏதும் அறியாமல் உள்ளனர். தங்களது அறியாமையினாலும், போதுமான ஆலோசனை கூறுவோர் இல்லாமையினாலும் தேவையான அதிக மதிப்பெண்கள் பெற்றிருந்தும் இந்த கிராமப்புற மாணவர்களால் காலத்திற்கேற்ப சிறந்த தொழிற்கல்வியையோஅல்லது தொழில் நுட்ப கல்வியையோ பெற இயலவில்லை. இவற்றை

கருத்தில் கொண்டு கிராமப்புறங்களில் உள்ள ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்களை/ வல்லுநர்களைஅனைத்து ஊராட்சிகளிலும் கண்டறிந்து தக்க ஆலோசனைகளை வழங்க வழிவகை செய்யப்படும். ஏற்கெனவே பணியில் உள்ள 2 சமூக வல்லுநர்களுடன் (வேலை வாய்ப்பு) சேர்ந்து பணியாற்றுவர். அவர்களுக்கு வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் திட்ட வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்படும். இளைஞர்களுக்கு அளிக்கப்படும் இந்த வழிகாட்டுதல் மூலம் இவர்கள் சிறந்த மேற்படிப்பு மற்றும் தங்களது வாழ்க்கையில் முன்னேற வழிவகை செய்வதே முக்கிய நோக்கம் ஆகும். இவர்கள் பன்னிரெண்டாம் வகுப்பு படித்த மாணவர்கள் படிக்க ஏதுவான பலவகை படிப்புகளைப் பற்றியும், வேலை வாய்ப்புடன் கூடிய படிப்பினைத் தரும் கல்லூரியைப் பற்றிய விவரத்தையும் தருவார்கள். மேலும் அவர்கள் அரசு மூலம் கிடைக்கும் கல்வி உதவித் தொகை மற்றும் கல்விக் கடன் போன்ற முறையான தகவல்களையும் அளிப்பார்கள். கிராம வறுமை ஒழிப்பு சங்க மேற்பார்வையில் மேற்கொள்ளப்படும் கிராம அறிவுப் பட்டறை மற்றும் மேற்படிப்பு வழிகாட்டுதல் மையம், தலைமுறைகளுக்கு இடையே தகவல் பற்றாக்குறையை போக்குவதன் மூலம் தொடர்ந்து குடும்பங்கள் வறுமையின் பிடியில் சிக்கி தவிப்பதிலிருந்து மீட்க முடியும்.

**9.9.4 தனிநபர் அடையாள அட்டை**

தற்போது தனி நபருக்கு அல்லாது சுய உதவிக்குழுக்களுக்கு மட்டுமே அடையாள அட்டை



வழங்கப்பட்டு வருகிறது. சுய உதவிக்குழு பெண்கள், அரசு அலுவலகங்கள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு சேவை பெறச் செல்லும் போது சரியான அடையாள அட்டையின்றி பல்வேறு இன்னல்களை எதிர்கொள்ள நேரிடுகிறது. ஒவ்வொரு சுய உதவிக்குழு பெண்ணும் அடையாள அட்டையை பெற்றிருப்பின் அவர்கள் தன்னம்பிக்கையும், மதிப்பும், மரியாதையும் பெறுவார்கள். தற்போது திட்டம் செயல்பட்டு வரும் அனைத்து பகுதிகளிலும் உள்ள சுய உதவிக்குழு பெண்களுக்கும் அவர்களின் புகைப்படம் மற்றும் இரத்தப் பிரிவு, தொடர்பு முகவரி போன்ற முக்கிய விவரங்கள் உள்ளடக்கிய அடையாள அட்டை வழங்கப்படும்.

**9.9.5 மனநலம் குன்றியவர்களுக்கான சமூகம் சார்ந்த அணுகுமுறை**

மன நலம் குன்றியவர்களுக்கு தரமான வாழ்க்கை முறையை ஏற்படுத்தும் வகையில் மருத்துவ உதவி மற்றும் மறுவாழ்விற்கான சேவைகள் மூலம் சமூக செயல்பாடுகளில் அவர்களுடைய பங்களிப்பை ஏற்படுத்தி வாழ்வாதார பயன்களையும் பெறச் செய்தல். மன நலம் குறித்த விவரங்களை கிராம மக்களுக்கும், மக்கள் அமைப்புகளுக்கும், சமூகம் சார்ந்த கலந்தாய்வுகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். மன நலம் குன்றியவர்களின் தேவைகளை கண்டறிந்து சமூக பாதுகாப்பு, திறன் வளர்த்தல், வாழ்வாதாரத்தை உயர்த்துதல் போன்ற வாய்ப்புகள் ஏற்படுத்தி அவர்கள் மீண்டும் முழுமை பெற்று மனித சமுதாயத்திற்கு பயனுள்ள வகையில் செயலாற்றிட

வழிவகை செய்யப்படும். கள அளவில் உள்ள தொழில் நுட்ப முகவர்களைத் தவிர அனைவருக்கும் கல்வி இயக்கம் (SSA) மற்றும் மாவட்ட மனநலத் திட்டங்களின் பயன்களையும் பெற்றுத் தர இத்திட்டம் செயல்படும்.

ஜப்பானிய கொள்கை அடிப்படையிலான மனித வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.13.6 கோடியில் 2012–13ம் ஆண்டில் 16 திட்ட மாவட்டங்கள் உள்ளடக்கிய 2,509 கிராம ஊராட்சியில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

**9.9.6 வாழ்வாதாரத்தில் உடனுறை பயிற்சித் திட்டம்**

மிகவும் ஏழை பெண்களை கொண்ட ஒத்த தொழில் குழுக்களுக்கு கூட்டுக் கொள்முதல், பகுப்பாய்தல், மதிப்பு கூட்டுதல், உற்பத்தி செலவு குறைத்தல், தரக்கட்டுபாடு, சந்தை படுத்தும்விதம், விலை நிர்ணயம், குறியிடுதல், உற்பத்தி பொருளை பாதுகாத்து கையாளுதல், மாற்று உற்பத்தி செய்தல், மேலாண்மை திறன் வளர்த்தல் போன்றவற்றில் உடனிருந்து வழங்கும் பயிற்சி தேவைப்படுகிறது. மேலும் அவர்களுக்கு தொழில் முனைவோர் திறனும் குறைந்து காணப்படுகிறது. கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்கள் தங்கள் பாட திட்டங்களின் ஒரு பகுதியாக திட்ட செயல்முறைகளை மேற்கொள்கின்றனர். இந்த திட்டம் கல்வி நிறுவனங்களுடன் சேர்ந்து மேலாண்மை படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு 6 மாதம் ஒத்த தொழில் குழுக்களுடன் உடனிருந்து பயிற்சி அளிக்கும் திட்டத்தை ஏற்படுத்த உள்ளது. கிராமப்புறங்களுக்கு சென்று அங்கு செயல்படும் ஒத்த



தொழில் குழுக்களுக்கு தற்சமயம் அவர்கள் நடைமுறைபடுத்தும் திட்டத்தை வலுவுற செய்யவும், புதிய சந்தைபடுத்தும் முறை மூலம் தங்களது பொருளாதாரத்தை மேம்படுத்தவும் உடனிருந்து மாணவர்கள் பயிற்சி அளிப்பார்கள்.

**9.9.7 சமூக கணக்கியல் மென் பொருள்–ச–கணக்கு பதிவியல் (C - Book Keeping)**

இலக்கு மக்களின் நலனை கருத்தில் கொண்டு மக்கள் அமைப்புகளுக்கு இத்திட்டம் ஒப்புயர்வற்ற முக்கியத்துவம் அளித்து வருகிறது. இம்மக்கள் அமைப்புகள் தங்கள் கணக்குகளை பதிவு செய்து பராமரிப்பதோடு அதற்கான அறிக்கையினையும் அனுப்பி வைக்கிறது. இம்மக்கள் அமைப்புகளுக்கான கணக்கிடலையும் அறிக்கை அனுப்புதலையும் எளிமைப்படுத்தும் முகத்தான் மென் பொருள் ச–கணக்கு பதிவியலினை சமூக அமைப்புகளின் திறன், புரிதல் மற்றும் வல்லமை ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டு ‘டேலி‘ (Tally)யின் பின்னணியில் வடிவமைக்கப் பட்டுள்ளது. இம்மென் பொருளை உபயோகப்படுத்துதன் மூலம் வெளிப்படைத் தன்மையையும், புள்ளி விவரங்கள் உடனுக்குடன் கிடைப்பதற்கும், கண்காணிப்பு எளிமையாகிடவும் ஏதுவாகிறது. திட்ட பகுதிகளுக்கு உட்பட்ட அனைத்து கிராமங்களிலும் இவ்வசதி இவ்வாண்டிலேயே கிடைக்க பெறும்.

**9.10 நிதி செலவினம்**

**31.03.2012 வரை**

திட்ட தொடக்க காலத்திலிருந்து **31.03.2012** வரையில் தற்போது செயல்பட்டு வரும் மாவட்டங்கள் மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கீட்டின் கீழ் செயல்பட்டு வரும் புதிய மாவட்டங்களையும் சேர்த்து **ரூ.720.99** கோடி செலவிடப்பட்டுள்ளது.

**01.04.2011 முதல் 31.03.2012 வரை**

**1.4.2011** முதல் **31.03.2012** வரையிலான இத்திட்ட செலவினம் ரூ.**131 . 87** கோடி ஆகும்.

தற்போது திட்டம் செயல்பட்டு வரும் மாவட்டங்கள் மற்றும் புதிய திட்ட மாவட்டங்களையும் சேர்த்து **2012–13**ம் ஆண்டிற்கு ரூ.**350** கோடி அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**10. சுனாமி மறுவாழ்வுத் திட்டங்கள்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் செயல்படுத்தப்படும் சுனாமி மறுவாழ்வுத் திட்டங்களை மேற்பார்வையிட சென்னையில் சுனாமி திட்ட செயலாக்க அலகு **01.08.2005** முதல் ஏற்படுத்தப்பட்டது.

சுனாமி திட்ட செயலாக்க அலகு மூலம் கடலோர மாவட்டங்களில் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(I) சுனாமி அவசர கால உதவித் திட்டம் (Tsunami Emergency Assistance Project) ரூபாய் **292.50** கோடி நிதியில் வாழ்வாதார முன்னேற்றம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகளுக்காக ஆசிய வளர்ச்சி வங்கியின் (ADB) கடன் மற்றும் மான்யத்துடன் **2005**ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு **31.10.2009** அன்று நிறைவடைந்தது.

(II) இராஜீவ்காந்தி மறுவாழ்வுத் திட்டம் (Rajiv Gandhi Rehabilitation Package) ரூபாய் **716** கோடி மதிப்பீட்டில் மத்திய அரசு மான்யத்துடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக்கட்டுதல் மற்றும் அடிப்படை வசதி ஏற்படுத்தித் தரும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(III) அவசரகால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டம் (Emergency Tsunami Reconstruction Project) ரூபாய் **670** கோடி மதிப்பீட்டில் உலக வங்கிக் கடனுதவியுடன் கடலோர சமுதாயத்தின் பாதிப்புகளை குறைக்கும் நோக்கத்துடன் (Vulnerability Reduction of Coastal Communities) எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக் கட்டுதல் மற்றும் வழிகாட்டுப் பலகைகளுடன் கூடிய வெளியேறும் சாலைகள் அமைத்தல் ஆகும். இத்திட்டம் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம்,

தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களுடன் கூடுதலாக திருவாரூர் மாவட்டத்தில் அவசரகாலத்தில் எளிதாக தப்பி செல்லத்தக்க வழிகாட்டுப் பலகைகளுடன் கூடிய வெளியேறும் சாலைகள் அமைக்கும் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**I0.1 ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் சுனாமி அவசரகால உதவித் திட்டம் (TEAP)**

இத்திட்டம் ரூபாய் 292.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் கீழ்க்கண்ட இரண்டு உட்கூறுகளைக் கொண்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. i) கடலோர குடியிருப்புகளில் வாழும் மக்களின் வாழ்வாதாரங்களுக்கான 2,70,308 பயனாளிகள் பயன்பெறும் வகையில் சுமார் ரூ.183.23 கோடி மதிப்பீட்டில் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது, ii) சேதமடைந்த உள்கட்டமைப்புகளை மீண்டும் உருவாக்க 821 உள்கட்டமைப்பு பணிகள் மற்றும் துப்புரவுப் பணிகள் ரூபாய் 96.27 கோடி மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**I0.2 இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம் (RGRP)**

இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம் மத்திய அரசின் நிதி உதவியுடன் ரூ.716 கோடி மதிப்பீட்டில் 11 கடலோர மாவட்டங்களில் சுனாமி திட்ட செயலாக்க அலகு மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது, இத்திட்டம் கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டர் வரை அமைந்துள்ள



எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக்கட்டுதல் இத்திட்டத்தின் முக்கிய உட்கூறு ஆகும். இத்திட்டம் 2006லேயே உருவாக்கப்பட்டு செயல்பட்டிருந்தாலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும் 1102 வீடுகள் நிறைவு பெறாமல் இருந்து வந்தது. தற்போதைய அரசு இதை ஒரு சவாலாக ஏற்று செயல்பட்டதன் காரணமாக தேவையான வள ஆதாரங்களை ஏற்படுத்தி இவ்வீடுகளை முழுமையடைய செய்ய உறுதியான நடவடிக்கையை மேற்கொண்டது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 629 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டு மீதமுள்ள 473 வீடுகள் விரைவில் முழுமையாகக் கட்டி முடிக்கப்படும்.

**10.3 உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் அவசர கால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டம் (ETRP)**

சுனாமியால் கடலோரப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கவும், எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக் கட்டிடவும் தமிழ்நாடு அரசு உலக வங்கி நிதி உதவியுடன் அவசரகால சுனாமி மறுகட்டமைப்பு திட்டத்தை 2005ல் ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டம் உலக வங்கி கடன் உதவியுடன் சுமார் ரூபாய் 670 கோடி முதலீட்டில் கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டர் முதல் 1000 மீட்டர் தொலைவிற்குள் உள்ள எளிதில் பாதிப்புக்குள்ளாகும் எனக் கண்டறியப்பட்ட வீடுகளை மீளக் கட்டித்தர உருவாக்கப்பட்டது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன:

i) வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்

ii) சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை குறுகிய காலத்திற்குள் மீட்டெடுத்தல்

iii) வருங்காலங்களில் கடலோர சமுதாயத்தினருக்கு ஏற்படும் இயற்கை பாதிப்புகளான சூறாவளி, புயல், வெள்ளம் மற்றும் சுனாமி போன்றவற்றிலிருந்து ஏற்படும் இடர்களைக் குறைத்தல்

**10.3.1. திட்டத்தின் உட்கூறுகள்**

**அ) பாதிப்பிற்குள்ளாகக் கூடிய வீடுகளை மீளக் கட்டுதல்:**

எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகள் வருவாய்த் துறையினரால் அடையாளம் காணப்பட்டு, இத்திட்டத்தின் கீழ் இதற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட தொண்டு நிறுவனங்களின் மூலம் சரி பார்க்கப்பட்டு 15,056 வீடுகள் எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகள் எனக் கண்டறியப்பட்டது.

இந்த வீடுகள் 11 கடற்கரை மாவட்டங்களிடையே 157 தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டன. 157 தொகுப்புகளுக்கும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் 15,056 வீடுகள் மறுகட்டமைப்புக்கு தகுதியுடையதாக தேர்வு செய்யப்பட்டு, இதில் முதல் கட்டமாக 5,619 வீடுகள் 61 தொகுப்புகளில் மே – ஜூலை 2010லும் இரண்டாம் கட்டமாக, 9,437 வீடுகள்



96 தொகுப்புகளில் ஆகஸ்டு – அக்டோபர் 2010ல் எடுக்கப்பட்டுள்ளன.

மார்ச் 15, 2012ம் தேதிய நிலவரப்படி, எடுக்கப்பட்ட 14,364 வீடுகளில் 7,613 வீடுகள் இதுவரை கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 1,810 வீடுகள் கூரைகள் அமைக்கப்பட்டுள்ள நிலையிலும், 1,104 வீடுகள் கூரை மட்ட நிலையிலும், 624 வீடுகள் ஜன்னல் மட்டம் நிறைவடைந்த நிலையிலும், 983 வீடுகள் ஜன்னல் மட்டம் நிலையிலும், 1,367 வீடுகள் அடித்தள நிலையிலும், 863 வீடுகள் அடித்தளத்திற்கு கீழ் நிலையிலும் உள்ளன. இதன் மொத்த ஒப்பந்த மதிப்பு ரூ.543.86 கோடியாகும்.

தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இடமாற்றுத் தொகையாக ரூ.1000 வழங்கப்பட்டுள்ளது. மேலும் வாடகைத் தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.500ம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாடகைத் தொகை அதிகபட்சமாக 18 மாதங்கள் வரை வழங்கப்படுகிறது.

**ஆ) அவசரகாலத்தில் வெளியேறுவதற்கான சாலைகள் மற்றும் வழிகாட்டும் பலகைகள் அமைத்தல்:**

கடலோரப்பகுதிகளில் அவசர காலத்தில் எளிதாக வெளியேறித் தப்பித்துச் செல்லத்தக்க வழிகாட்டுப் பலகையுடன் கூடிய சுமார் 45 கிமீ நீளத்திற்கு வெளியேறும் சாலைகளை சுமார் ரூ.25 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

## 11. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

### 11.1 திட்டக் குறிக்கோள□ மற□றும் நோக்கம் :–

சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆறு மாவட்டங்களில் உள்ள கடலோரப் பகுதிகளில் வாழும் மக்களின் இழந்த வாழ்வாதாரத்தை மீட்டு அதை மேம்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய இலக்கு ஆகும். மக்களின் திறமைகளை அடையாளம் கண்டு அதை மேன்மேலும் வளர்த்து, வருமானம் தரும் நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துதல் இதன் நோக்கமாகும். புதிய உத்திகளைக் கையாண்டு இயற்கை வளங்களை திறனுடன் பயன்படுத்துதலும் அவற்றை வளர்ச்சி அடையச் செய்தலும் முக்கிய அம்சங்களாகும்.

### 11.1.1 திட்டம் – ஒரு பார்வை :–

| | | |
|---|---|---|
| திட்ட காலம் | : | 8 ஆண்டுகள் (2016 வரை) |
| திட்ட மதிப்பீடு | | ரூ.283.69 கோடி |
| பயனடைவோர் | : | 1.55 இலட்சம் குடும்பங்களை சார்ந்த சுமார் 6 இலட்சம் பேர் |
| திட்டப் பகுதி | : | 24 ஊராட்சி ஒன□றியங்கள் (109 ஊராட்சிகள□) |
| செயல□படும் மாவட்டங்கள் | : | திருவள□ளூர், காஞ□சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகபட்டினம் மற□றும் கன□னியாகுமரி |



### 11.1.2 திட்டப் பயனாளிகள்

சுனாமியால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கப்பட்ட கீழ□க்கண்ட கடலோரப் பகுதியில் வசிக்கும் மக்கள், அதாவது :–

- கடலோரப் பகுதிகளில் மீன்பிடி தொழில□ மற்றும் விவசாயத்தில□ ஈடுபட்டுள□ள கூலித் தொழிலாளர்கள□
- வள□ளம், சிறு படகு போன□றவற□றை பயன□படுத்தி கரையோரங்களில□ மீன□பிடிக்கும் மீனவர்கள□
- சிறிய அளவில□ வியாபாரம் செய□யும் பெண் மீன□ வியாபாரிகள□ மற□றும் பதப்படுத்துவோர்
- பிற சிறு தொழில□ செய□வோர் (உ.ம் :– சங்கு, சிப்பி சேகரிப்போர்)
- சிறு மற□றும் குறு விவசாயிகள□
- சமுதாய பங்கேற□புடன□ கண்டறியப்பட்ட மிகவும் ஏழைகள□ மற□றும் ஏழைகள□

### 11.1.3 திட்டக் கூறுகள் :–

**1. கடலோர வள ஆதார மேலாண்மை**

**அ. சமுதாய ஆதரவு :**

இத்திட்டத்தை செயல்படுத்துவதில் அடித்தட்டளவில் கூட்டு வள மையங்கள் உதவி புரிகின்றன. ஒவ்வொரு கூட்டு வள மையமும் 5 முதல் 7 வரையிலான கடலோர

ஊராட்சிகளை கொண்டுள்ளது. அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் துணையுடன் திட்டப்பகுதியில் 28 கூட்டு வள மையங்கள் துவக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கூட்டு வள மையத்திலும், ஒரு குழு ஒருங்கிணைப்பாளர் (Cluster Coordinator), ஒரு திட்ட செயலாக்குநர் (Cluster Facilitator) மற்றும் ஒரு வியாபார ஊக்குவிப்பவர் (Business Promoter) ஆகியோர் இடம் பெறுகின்றனர்.

**ஆ. சமுதாய வள ஆதாரங்களுக்கான திட்டமிடுதல்:**

சமுதாயத்திற்கு தேவையான அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை கண்டறிந்து அவற்றை முன்னுரிமைப்படுத்த ஏதுவாக சமுதாய பங்கேற்புடன் கூடிய வள ஆதார வரைபட(Resource Map) முயற்சிக்கு கூட்டு வள மைய பணியாளர்கள் முனைப்புடன் உதவி புரிகின்றனர். உள்கட்டமைப்பு தேவைகளுக்கான நுண் திட்டங்கள், ஊரக பங்கேற்பு செயல்பாடு மூலம் வடிவமைக்கப்படுகின்றன. அவை சுற்றுப்புற சூழலுக்கு உகந்ததாகவும் மற்றும் பாலின வேறுபாடு காரணமான பிரச்சினைகளை தீர்வு செய்யும் நோக்கிலும் தயாரிக்கப்படும்.

இத்திட்டத்தை செயலாக்க திட்ட நிதியாக 90% நிதியும், சமுதாய பங்குத் தொகையாக 10% நிதியும் சமுதாயத்திற்கு அளிக்கப்படுகிறது.

**இ. மீன□ வள மேலாண்மை:**

கடல்சார்ந்த மற□றும் மீன□ வளங்கள் தொடர்பான பிரச்சினைகளைக் கண்டறிவதும், அவற்றை மேலாண்மை



செய்வதும் சுற□றுச்சூழல□ மற□றும் வாழ□வாதார மேம்பாடுத் திட்டமிடுதலில் மிகவும் முக்கிய அம்சமாகும். பொறுப்பான மற□றும் பாதுகாப்பான மீன□பிடி வழிமுறைகளை ஊக்கப்படுத்துதல□, சுற□றுச்சூழல□ மேலாண்மை ஆகியவை பற்றி மீனவர்கள் தெரிந்து கொள்ள ஏதுவாக கருத்துப் பட்டறைகளும் விழிப்புணர்வு பயிற□சிகளும் கிராம, மாவட்ட மற்றும் மாநில அளவில் நடத்தப்பட்டு வருகின்றன.

**11.1.4. ஊரக நிதி மற□றும் இடர்ப்பாடு தவிர்க்கும் வழிமுறைகள□:–**

**அ. சுய உதவிக் குழுக்களுக்கு கடன் உதவி:**

மாவட்ட செயலாக்க அலுவலகம், மகளிர் திட்டத்துடன□ இணைந்து சுய உதவிக் குழுக்களை தொடர்ந்து தரமதிப்பீடு செய□து அவற்றை நேரடி வங்கிக் கடன□ பெறுவதற□கு பரிந்துரைக்கிறது. சுய உதவிக் குழுக்கள் மற்றும் மறுசீரமைக்கப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள□ அவற்றின் கடன□ திரும்ப செலுத்தும் செயல□திறன் ஆகியவற்றை வங்கி அலுவலர்கள் தெரிந்து கொள்ள ஏற்பாடு செய்யப்படுகிறது. வங்கி அலுவலர்களுக்கு பட்டறிவுப் பயணங்கள□ மேற□கொள□ளப்பட்டு தகுதி வாய□ந்த குழுக்களுக்கு உரிய நேரத்தில□ கடனுதவி வழங்க வழிவகை செய்யப்படுகிறது.

**ஆ. இடர் மேலாண்மை மற□றும் காப்பீடு:**

மீனவர் சமுதாயத்தின் இடர் மேலாண்மைத் தேவை தொடர்பான கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. பேரழிவின் போது ஏற்படும் இழப்புகளை ஈடுசெய்ய ‘‘துயர்

துடைப்பு நிதி'' மக்களுக்கு குறைந்த வட்டியில் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதியின் 4/5 பங்கு திட்ட நிதியாகவும், 1/5 பங்கு பயனாளிகளின் பங்குத் தொகையாகவும் பெறப்பட்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளால் (PLFs) நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. காப்பீடு தொடர்பான கருத்தரங்குகள் நடத்தப்பட்டு, தங்களுக்கு பொருத்தமான காப்பீடு திட்டத்தை மக்களே தேர்ந்தெடுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்கள், மீனவர்கள் மற்றும் மீன் விற்பனை சங்க உறுப்பினர்களுக்கும் இது தொடர்பான கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றது. உயிர், உடல்நலம், தனிநபர் விபத்துகள் மற்றும் சொத்துக்கள் ஆகியவற்றில் ஏற்படும் இழப்புகளை ஈடு செய்யும் வகையில் காப்பீட்டுத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான கடலோர மக்கள் இக்காப்பீட்டுத் திட்டங்களில் தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர்.

**இ. தொழில் முயற்சிக்கான மூலதன நிதி:**

சுய உதவிக் குழுக்கள், மீனவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் தனி நபர்கள் வங்கிகளிலிருந்து பெறும் தொழிற் கடன்களுக்கு அதிகமாக நிதி தேவைப்படின், அதை பூர்த்தி செய்ய இந்த நிதி பயன்படுகின்றது. இந்நிதியானது இத்துறையில் அனுபவம் வாய்ந்த தொழில் சார்ந்த வல்லுநர்களால் அல்லது நிறுவனங்களால் நிர்வகிக்கப்படும். இந்த வல்லுநர்கள் / நிறுவனங்கள் வெற்றிகரமான தொழில் நடத்துவதற்கு தேவையான உதவிகளை அளிக்க வல்லவராக இருப்பர்.



**11.1.5 வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் திறன் வளர்ப்புப் பயிற்சி:–**

**அ. சுய உதவிக் குழுக்களுக்கான உதவி:**

சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் தரமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. வலுவற்ற சுய உதவிக் குழுக்கள் கண்டறியப்பட்டு, அவற்றிற்கு திறன் வளர்ப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதுபோல் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளும் மறுசீரமைப்பு செய்யப்பட்டு, அவற்றின் நிர்வாகிகளுக்கு தக்க பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

**ஆ. மீன் விற்பனை சங்கங்கள் ஏற்படுத்துதல் :**

தென்னிந்திய மீன் விற்பனை சங்கங்களின் கூட்டமைப்பின் (SIFFS) உதவியுடன் 50 மீன் விற்பனை சங்கங்கள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. கட்டுமரம், வள்ளம் மற்றும் சிறு படகு மூலம் மீன்பிடிப்போர் மட்டுமே இவற்றில் உறுப்பினர் ஆகமுடியும். இச்சங்கங்களின் உறுப்பினர்கள் ஏற்கனவே அவர்கள் வாங்கிய கடன்களிலிருந்து மீட்க நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், படகு கட்டும் தளம், படகு இயந்திரம் பழுது நீக்கும் நிலையம் மற்றும் மீனவர் சங்கங்களின் கூட்டமைப்பு ஆகியவை அமைப்பது தொடர்பாக தென்னிந்திய மீன் விற்பனை சங்கங்களின் கூட்டமைப்பிலிருந்து பெறப்படும்

முன்மொழிவுகள் ஆய்வு செய்யப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டு வருகிறது.

**இ. இளைஞர்களுக்கான தொழில□ கல□விப் பயிற□சி:**

திட்ட செயலாக்க பகுதியில் உள்ள வேலையில்லா இளைஞர்களுக்கு பொருத்தமான தொழிலில் மூன்று மாதம் முதல் ஒரு வருட கால அளவிலான வேலை உத்தரவாதத்துடன் கூடிய தொழிற் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இப்பயிற்சி வழங்கும் நிறுவனங்கள் திட்ட கொள்முதல் வழிகாட்டு நெறிமுறைகளின்படி தேர்வு செய்யப்பட்டுள்ளன.

**ஈ. நுண் தொழில□ மேம்பாடு (Micro Enteprise):**

தொழில் செய்யும் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் மீன் விற்பனை சங்க உறுப்பினர்கள் மற்றும் ஏழ்மையான தனி நபர் ஆகியோர், அவர்களுக்கு சாத்தியமான மற்றும் பொருத்தமான தொழில் நிறுவனங்கள் தொடங்க ஊக்குவிக்கப்படுகின்றனர். தொழில் நுட்ப வல்லுநர்கள் / சிறப்பு நிறுவனங்கள் / கல்விக் கூடங்கள் ஆகியவை தொழில் உட்பிரிவுகளையும் அவை தொடர்பான ஆய்வுகளையும் மாவட்ட வாரியாக மேற்கொள்கின்றன. மேலும், திட்ட மேலாண்மை அலகு, நுண் தொழில் மேம்பாட்டில் அனுபவம் உள்ள அரசு சாரா தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து குறிப்பிட்ட தொழில் உட்பிரிவில் தொழில் தொகுப்புகள் ஏற்படுத்த முனைந்துள்ளது. திட்ட செயலாக்கப் பகுதியில் இதுவரை 56



நுண் தொழில் பிரிவுகள் கண்டறியப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**11.1.6. சமுதாயம் சார்ந்த கடல□ பாதுகாப்பு மற□றும் பேரிடர் மேலாண்மை :–**

கடல் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த பயிற்சிகள் மற்றும் பட்டறைகள் துறை சார்ந்த தொழில் நுட்ப வல்லுநர்களால் நடத்தப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடலோர பள்ளிக் குழந்தைகளுக்கு பேரிடர் மேலாண்மைக் கல்வி அவசியம் என்பதால், துவக்க பள்ளிகளில் சுற்றுச் சூழல் கல்வி பாடத்திட்டம் மற்றும் அதற்கான கையேடுகள் தயாரித்தல் குறித்தும் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. இவை தொடர்பான ஏடுகள் பள்ளி ஆசிரியர்களுக்கும் விளக்கப்படுகின்றன. கையேடுகள் தயாரித்தல், அச்சடித்தல் விநியோகித்தல் அவற்றின் சீராய்வு மற்றும் விழிப்புணர்வுக் கல்வியில் சிறந்த பள்ளிகளுக்கு பரிசுகள் வழங்குதல் ஆகியவையும் இப்பிரிவில் அடங்கும். மேலும், கடலோர பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கு நிதி மேலாண்மை குறித்த கல்வியறிவு புகட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**11.2 திட்ட மேலாண் அமைப்பு (Project Management Structure) கீழ்க்கண்டவாறு அமைந்துள□ளது.**

| அடிப்படை | அலகு | வழிகாட்டுதல□ |
|---|---|---|
| மாநில அளவில□ | திட்ட மேலாண்மை அலகு | ஊரக வளர்ச்சி மற□றும் ஊராட்சித் துறை முதன□மை செயலாளர் அவர்களின□ தலைமையில□ திட்ட |

| | | |
|---|---|---|
| | | வழிகாட்டுக் குழு செயல்படும் |



| | | |
|---|---|---|
| மாவட்ட அளவில் | மாவட்ட செயலாக்க அலுவலகம் | மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவிலான திட்டத்தை செயல்படுத்தும் ஆலோசனைக் குழு |
| கிராம அளவில் | கிராம கூட்டு மேம்பாட்டு மையம் | ஊராட்சித் துறை நிறுவனங்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் மரபு சார்ந்த நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய கிராம கூட்டு மேம்பாட்டு ஆலோசனைக் குழு |

**திட்ட நிதி ஒதுக்கீடு:**

**நிறுவன வாரியாக:**

| வ. எண். | நிறுவனம் | தொகை (ரூ.கோடியில்) | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் கடன் | 132.32 | 47 |
| 2 | தமிழக அரசு | 12.00 | 4 |
| 3 | வங்கி மற்றும் நுண்கடன் நிறுவனங்கள் | 100.61 | 35 |
| 4 | பயனாளிகளின் பங்களிப்பு | 38.76 | 14 |
| **மொத்தத் தொகை** | | **283.69** | **100** |

**திட்டக் கூறு வாரியாக:**

| வ.எண் | கூறுகள் | தொகை (ரூ.கோடியில்) | சதவீதம் |
|---|---|---|---|
| 1. | கடலோர பகுதியில் வள ஆதார மேலாண்மை | 41.16 | 14.51 |

| | | | |
|---|---|---|---|
| 2. | ஊரக நிதி மற்றும் இடர்பாடு நீக்கும் உபகரணங்கள் | 159.50 | 56.23 |
| 3. | வேலைவாய்ப்புகள் உருவாக்குதல் மற்றும் திறன் பயிற்சி அளித்தல் | 66.31 | 23.37 |
| 4. | சமுதாயம் சார்ந்த கடல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை | 1.80 | 0.63 |
| 5. | திட்ட மேலாண்மை | 14.92 | 5.26 |
| **மொத்தம்** | | **283.69** | **100** |

**செயல்பாடு வாரியான திட்ட ஒதுக்கீடு**

(ரூ. ஆயிரத்தில்)

| வ. எண் | கூறுகள் | தொகை (ரூ) | மொத்த தொகையில் சதவீதம் |
|---|---|---|---|
| அ. | **கடலோர பகுதியில் வள ஆதார மேலாண்மை** | | |
| 1. | சமுதாய வள திட்டமிடல் (திறன் மேம்பாடு) | 11,800 | |
| 2. | சமுதாயத்தின் பங்கு (கிராம கூட்டு மேம்பாட்டு மையங்களை நிறுவுதல்) | 1,07,802 | 4 |
| 3. | மீன்வள ஆதார மேலாண்மை (கருத்துப்பட்டறை, ஆய்வு மற்றும் மேம்பட்ட மீன்வள மேலாண்மைக்கான முன்னோடி நிதி) | 27,500 | 1 |
| 4. | சமுதாய உள்கட்டமைப்பு நிதி | 2,64,500 | 9 |
| **கூடுதல் தொகை** | | **4,11,602** | **14** |



| | | | |
|---|---|---|---|
| ஆ. | **ஊரக நிதி மற்றும் இடர்பாடு நீக்கும் உபகரணங்கள்** | | |
| 1. | புதிய முயற்சிக்கான மூலதன நிதி | 36,000 | 1 |
| 2. | வங்கிகள் மற்றும் நுண்நிதி நிறுவனங்களுக்கு உதவி அளித்தல் (மாவட்ட அளவில் நுண்நிதி நிறுவனங்களை நிறுவுதல், வங்கி மற்றும் நுண்நிதி பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் கருத்துப்பட்டறை ஏற்பாடு செய்தல்) | 12,120 | – |
| 3. | **இடர்பாடு தவிர்த்தல்** (காப்பீடு ஆய்வு மற்றும் முன்னோடி திட்டத்தால் அளிக்கப்படும் பேரிடர் மேலாண்மைக்கான பங்கீடு மற்றும் சுய உதவிக் குழுக்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு காப்பீடு பயிற்சி அளித்தல்.) | 39,170 | 1 |
| 4. | **பொருட்களின் உற்பத்தியை மேம்படுத்துதல் மற்றும் புதுமையை புகுத்துதல்** (பொருட்களின் உற்பத்தியை மேம்படுத்த நுண் நிறுவனங்களுக்கு நிதி அளித்தல், நுண்நிதி நிறுவனங்களுக்கு உதவி அளித்தல், ஆய்வு மற்றும் பட்டறிவுப் பயணம்) | 11,000 | – |
| 5. | **தொடர் கூடுதல் கடன் நிதி** (சுய உதவிக் குழுக்களுக்கு நுண் நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளால் வழங்கப்படும் கடன்) நுண் நிறுவனங்கள் மற்றும் மீன் விற்பனை சங்கங்கள் | 14,96,765 | 52 |
| **கூடுதல் தொகை** | | **15,95,055** | **56** |

| | | | |
|---|---|---|---|
| இ. | **வேலைவாய்ப்புகள் உருவாக்குதல் மற்றும் திறன் பயிற்சி அளித்தல்** | | |
| 1. | **சுய உதவிக் குழுக்களுக்கு உதவி அளித்தல்**<br>(சுய உதவிக் குழுக்களுக்கு உதவி: வரைபடம், பயிற்சி, பொருட்கள் மற்றும் கூட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவன ஊழியர்களுக்கு பயிற்சி அளித்தல்) | 17,388 | 1 |
| 2. | **வருமானத்தை பெருக்கும் நடவடிக்கைகளுக்கு உதவியளித்தல்**<br>(பயிற்சி அளித்தல், வியாபார அபிவிருத்தி, சிறப்பான வியாபார யுக்திக்கு பயிற்சி, புதிய தொழில் நுட்ப பயிற்சி, வியாபார இணைப்பு கருத்துப் பட்டறை | 36,970 | 1 |
| 3. | **மீன் விற்பனை சங்கங்கள்**<br>(கடன் சுமையிலிருந்து விடுவிக்க நிதி அளித்தல் மீன் விற்பனை கூடத்திற்கு கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல், பழுது பார்க்கும் பகுதி அமைத்தல், படகுத் துறை ஏற்படுத்துதல் மற்றும் நிர்வாக செலவினங்கள்) | 3,16,800 | 11 |
| 4. | **சிறு தொழில் மேம்பாடு**<br>(உப தொழில் கணக்கெடுப்பு, ஆய்வு, வியாபார மேம்பாட்டு சேவை, தொழில் நுட்ப முன்னோடி, தொழில் நுட்ப உதவி, வெளிநாட்டு பயிற்றுவிப்பவர்கள், பயிற்சி மற்றும் கருத்துப் பட்டறை) | 2,06,855 | 7 |



| | | | |
|---|---|---|---|
| 5. | **வாழ்வாதார பயிற்சிகள் அளித்தல்**<br>(ஆய்வு, வாழ்வாதார பயிற்சிக்கு உதவி அளித்தல், மீன்பிடி தொழில் திறன் வளர்ப்பு – பயிற்சி மற்றும் கருத்துப் பட்டறை) | 85,075 | 3 |
| | **கூடுதல் தொகை** | **6,63,088** | **24** |
| ஈ. | **சமுதாயம் சார்ந்த கடல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை** | | |
| 1. | **கடல் பாதுகாப்பு மேம்படுத்துதல்**<br>(ஒரு மாவட்டத்தில் ஆய்வு மேற்கொள்ளல், செல் பேசி மான்யம், பயிற்சி மற்றும் விளம்பரம்) | 3,000 | – |
| 2. | **கடலோர பள்ளிகளுக்கு உதவியளித்தல்**<br>(தேவையை ஆய்வு செய்தல், கருத்துப் பட்டறை, கல்வியளிக்கும் பயிற்சிக்கான கருவிகளை மேம்படுத்துதல், அச்சிடுதல், வெளியிடுதல்) | 15,000 | 1 |
| | **கூடுதல் தொகை** | **18,000** | **1** |
| உ. | **திட்ட மேலாண்மை** | | |
| 1. | **திட்ட மேலாண்மை அலகு**<br>(வாகன வசதி, சாதனங்கள், ஊதியம், அலுவலக செலவினங்கள், பயிற்சி) | 25,739 | 1 |
| 2. | **மாவட்ட அலுவலகங்கள்**<br>(வாகன வசதி, சாதனங்கள், ஊதியங்கள், அலுவலக செலவினங்கள், பயிற்சி) | 1,05,156 | 4 |
| 3. | **திட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு**<br>(வாகனங்கள், சாதனங்கள், ஊதியங்கள், தொழில் நுட்ப உதவி அளித்தல்) | 18,277 | 1 |
| | **கூடுதல் தொகை** | **1,49,172** | **5** |
| | **மொத்தத் தொகை** | **28,36,917** | **100** |

## திட்டக் கூறு வாரியான செலவினம் (2007-08 முதல□ 29.02.2012 வரை)

(ரூ.இலட்சத்தில்)

| திட்டக் கூறு எண் | திட்டக் கூறு | திட்ட ஒதுக்கீடு | 2010 – 11 வரை தமிழக அரசிலிருந்து பெறப்பட்ட தொகை | செலவினத்தொகை | | 29.02.2012 வரை உள□ள மொத்த செலவினம் | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2007-08 முதல□ 2010-11 வரை | 2011-12 (01.04.2011முதல□ 29.02.2012 வரை | | |
| I. | கடலோர வள ஆதார மேலாண்மை | 3851 | 3720 | 2643 | 1362 | 4005 | 109 |
| II. | ஊரக நிதி மற□றும் இடர்ப்பாடு தவிர்க்கும் வழிமுறைகள | 983 | 1010 | 62 | 49 | 111 | 10 |
| III. | வேலைவாய□ப்புகளை உருவாக்குதல□ மற□றும் திறன□ வளர்ப்புப் பயிற□சி | 6631 | 923 | 350 | 306 | 656 | 66 |
| IV. | சமுதாயம் சார்ந்த கடல□ பாதுகாப்பு மற□றும் பேரிடர் மேலாண்மை | 180 | 166 | 141 | 1 | 142 | 86 |
| V. | திட்ட மேலாண்மை | 1492 | 945 | 770 | 282 | 1052 | 110 |
| **மொத்தம்** | | **13137** | **6764** | **3966** | **2000** | **5966** | **88** |



## 2011 – 12 ஆண்டிற்கு திட்டக் கூறு வாரியான செலவினம்

(ரூ.இலட்சத்தில்)

| திட்டக் கூறு எண் | திட்டக் கூறு | நிதி ஒதுக்கீடு | செலவினம் 01.04.2011 முதல் 29.02.2012 வரை |
|---|---|---|---|
| I. | கடலோர வள ஆதார மேலாண்மை | 250.00 | 1362.35 |
| II. | ஊரக நிதி மற□றும் இடர்ப்பாடு தவிர்க்கும் வழிமுறைகள் | 97.00 | 48.65 |
| III. | வேலைவாய□ப்புகளை உருவாக்குதல□ மற□றும் திறன□ வளர்ப்புப் பயிற□சி | 1433.00 | 305.53 |
| IV. | சமுதாயம் சார்ந்த கடல□ பாதுகாப்பு மற□றும் பேரிடர் மேலாண்மை | 11.00 | 1.19 |
| V. | திட்ட மேலாண்மை | 296.00 | 282.50 |
| **மொத்தம்** | | **2087.00** | **2000.22** |
| **சாதனை சதவீதத்தில்** | | | **96 %** |

**2011–12** நிதியாண்டு முடிய, **25** மீன் விற்பனை சங்கங்கள□ ஏற□படுத்தப் பட்டுள□ளன. ( நாகப்பட்டினம் – **6**, திருவள□ளூர் – **5**, கன□னியாகுமரி –**8**,

கடலூர் – 4, விழுப்புரம் – 1 மற□ும் காஞ□சிபுரம் –1 ) 827 மீனவர்களை கடனிலிருந்து மீட்க கடன□ நிவாரண நிதியாக ரூ.154.62 இலட்சம் 18 மீன□ விற□பனை சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஊரக நிதி மற்றும் இடர்ப்பாடு தவிர்க்கும் வழிமுறை திட்டத்தின் கீழ□ துயர் குறைப்பு நிதியாக 3358 பயனாளிகளுக்கு ரூ.119.62 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் மாவட்டத்தில□ ஒரு மீனவர்கள□ சங்கக் கூட்டமைப்பு ஏற□படுத்தப்பட்டுள□ளது. சமுதாய அடிப்படையிலான கடலோர பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை திட்டக்கூறின□ கீழ□ கடலோர பள□ளி மாணவர்களுக்கு வள ஆதார மேலாண்மை, சுற□றுச் சூழல□, பேரிடர் மேலாண்மை, முதலுதவி போன□றவை குறித்த புத்தகங்கள□ ரூ.20.23 இலட்சம் மதிப்பில் 90000 மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 464 சமுதாய உட்கட்டமைப்பு பணிகள□ரூ.1862.66 இலட்சம் மதிப்பீட்டில□ கட்டி முடிக்கப்பட்டுள□ளன.

01.04.2011 முதல□ 31.03.2012 வரை 363 சமுதாய உட்கட்டமைப்பு பணிகள□ரூ.1426.09 இலட்சம் மதிப்பீட்டில□ கட்டி முடிக்கப்பட்டுள□ளன. 46 சமுதாய பரிமாற்ற பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதில் பங்கு பெற்றோர் பிற பகுதிகளில் அடைந்துள்ள வளர்ச்சியினை கற்று கொள்ள முடிந்தது. 15,993 கிராம மக்களுக்கு காப்பீட்டின் முக்கியத்துவம் குறித்த பயிற□சி வழங்கப்பட்டது. 16214 பேர் பல்வேறு காப்பீடு திட்டங்களில் இணைந்துள்ளனர். 1213 சுய



உதவிக் குழுக்கள் ரூ.23 கோடிக்கு மேல் வங்கிக் கடன் பெற்றுள்ளன. 28 பரீட்சார்த்த முயற□சி முறையில□ செயல□படுத்தப்படும் தொழில□கள் (Pilot Initiatives) மற□றும் 28 பண்ணை மற□றும் பண்ணைசாரா குறுந்தொழில்கள் (Sub Sector based Micro Enterprises) ரூ.290.02 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மூன்று மீன் விற□பனை சங்கங்கள் (காஞ்சிபுரம்–1 மற்றும் கன்னியாகுமரி –2) மாவட்டங்களில் ஏற□படுத்தப்பட்டுள்ளன. 405 மீனவர்கள், ரூ.85.30 இலட்சம் கடனிலிருந்து மீட்கப்பட்டுள□ளனர். 1241 இளைஞர்கள் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர் பயிற்சி பெற்றுள்ளனர்.

**12. வரவு செலவுத் திட்டம் 2012-13**

2012-13ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.11,698.94 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் எதிர்பார்க்கப்படும் வருவாய் செலவினம் ரூ.8,105.62 கோடி, மூலதனச் செலவினம் ரூ.3,593.17 கோடி மற்றும் அரசு ஊழியர்களுக்கு கடன் தொகை ரூ.0.15 கோடி ஆகும்.

**13. முடிவுரை**

இந்த அரசு ஊரகப் பகுதிகளின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்குத் தேவையான ஊரக அடிப்படைக் கட்டமைப்பு, ஊரக வீட்டு வசதி, ஊரக சாலை வசதிகள், அடிப்படை சேவைகள், வறுமை ஒழிப்பு, சுற்றுச்சூழல் பராமரிப்பு, முழு சுகாதாரம் ஆகிய அடிப்படை வசதிகளை செய்து

தருவதற்கான செயல் திட்டங்கள் மற்றும் உத்திகள் யாவும் இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் விவரிக்கப்பட்டுள்ளன. திட்டங்கள் யாவும் ஊராட்சி அமைப்புகள் மற்றும் இதர பங்கேற்பாளர்களுடன் இணைந்து ஊரக வளர்ச்சித் திட்டங்களை விரைவாக செயல்படுத்துவதற்கான முன் முயற்சிகளும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளோடு இணைந்து திட்டங்களை விரைவாகவும், தரமாகவும் செயல்படுத்த எடுக்கப்பட்ட கொள்கை முடிவுகளும் விளக்கப்பட்டுள்ளன. ஊரகப் பகுதிகளிலுள்ள அனைத்து குக்கிராமங்களிலும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டு செயல்படுத்தப்படும் “தாய் திட்டம்'', வளர்ச்சிக்கான திட்டமிடுதலில் ஒரு மைல்கல் ஆகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட, இந்த அரசின் முன்னோடித் திட்டமான “முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம்'', நாட்டிலேயே முதன் முறையாக கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளியவர்க்கு இலவசமாக வீடு வழங்கி, குடியிருப்பு பிரச்சனைக்கு தீர்வு காணும் திட்டமாகும்.

கிராமப்புற ஏழை எளிய மக்களின் வருமானத்தை உயர்த்தும் வகையிலும், ஒரு கிராம ஊராட்சியில் ஒரே சமயத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட பணிகளை மேற்கொண்டு அனைவருக்கும் வேலை வாய்ப்பு வழங்கும் வகையிலும், பணிகளைத் தெரிவு செய்வதில் சரியான வழிமுறைகளைக் கையாளுதல், பணிகள் தெரிவில் செயற்கைக்கோள்



வரைப்படங்களை பயன்படுத்துதல், தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்கள், சிறு, குறு விவசாயிகள் ஆகியோர் பயன் பெறும் வகையில் நில மேம்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம், புதிய தாக்கத்துடன் செயல்படுத்தப்படுகிறது.

இந்த அரசு உறுதி கொண்டபடி, அனைத்து ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்களும் புனரமைக்கப்பட்டு பயனாளிகள் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அகில இந்திய அளவில் தமிழகத்தை “திறந்த வெளியில் மலம் கழிப்பதை முற்றிலும் நீக்கிய மாநிலமாக” அறிவிப்பதை நோக்கி இந்த அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்கள் கடந்த அக்டோபர் **2011**ல் வெற்றிகரமாக நடத்தப்பட்டு, **1.19** இலட்சம் மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஊராட்சி அமைப்புகளில் பொறுப்பேற்றுள்ளனர்.

மகளிருக்கான ஆற்றல் அளித்திடும் மாநில அரசின் சீரிய திட்டமான மகளிர் திட்டத்தினை செயல்படுத்தும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட தொடர் முயற்சிகளால் தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் சுய உதவிக்குழு இயக்கம் பரந்து விரிந்துள்ளது. இதில் ஏழை எளிய மற்றும் விளிம்பு நிலை மகளிருக்கு முக்கியத்துவம் அளித்து அவர்களின் முன்னேற்றத்திற்கான திறன் வளர்ப்பு பயிற்சிகள்,

மானியத்துடன் கூடிய கடன் வசதிகள் ஆகியவற்றை அளித்து அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் நடத்தப்பட்ட இளம் வயதினருக்கான திறன் வளர்ப்பு பயிற்சிகள் முறைப்படுத்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட பயிற்சி வடிவமைப்பு, பயிற்சி நிறுவனங்களின் தர மதிப்பீடு, மென் திறன்கள் சார்ந்த பயிற்சிகள் மற்றும் பயிற்சி முடிந்த 80% பயிற்சியாளர்களுக்கு குறைந்த பட்சம் ரூபாய் 4,000/– மாத வருமானம் ஈட்டக்கூடிய வகையில் வேலைவாய்ப்பு ஏற்பாடுகள் ஆகியவை செய்யப்பட்டன. கணினி பயிற்சியில் பரிசோதனை முறையில் சேர்க்கப்பட்ட திறன் மேம்பாட்டு முறைகள் இதர பயிற்சிகள் அனைத்தும் விரிவுபடுத்தப்படவுள்ளன. சுய உதவிக்குழு இயக்கத்தின் மூலம் பெண்களை ஒருங்கிணைத்து அவர்களின் திறன்களை மேம்படுத்தி அவர்கள் சிறு தொழில் முனைவர்களாக மாறி, தொழில் திறன், சந்தைப்படுத்துதல், ஆகியவற்றில் சிறந்து விளங்கி, பல்வேறு தனிப்பட்ட வருமானம் ஈட்டக்கூடிய தொழில்கள் தொடங்கி நடத்தி வருகின்றனர். சுய உதவிக்குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் தரத்தினை மேலும் உயர்த்திடவும் இப்பொருள்களுக்கென்று தனி அடையாளப் பெயர்களிடவும், சந்தைப்படுத்துவதில் ஏற்கனவே உள்ள நிறுவன வணிக முத்திரையை பயன்படுத்துதல் போன்றவற்றை மாநில அளவில் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. தொழில் தொகுப்பு மற்றும் ஒரு கிராமத்தில் ஒரு பொருள் என்ற



தத்துவத்திற்கு இந்த ஆண்டில் முக்கியத்துவம் தரப்படும். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்திட தெரிவு செய்யப்பட்ட 15 மாவட்டங்களில் உள்ள 60 வட்டாரங்களில் இந்த ஆண்டு துவக்கப்பட்டு, பின்னர் தமிழகத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் முறையாக விரிவுபடுத்தப்படும். இத்திட்டமானது "புது வாழ்வு" திட்டத்தின் சமுதாய முனைப்பு வளர்ச்சி முறையினை பின்பற்றும். ஏழை எளிய மக்களைக் கண்டறிந்து அவர்களை சமுதாய செயல் அமைப்பாக மாற்றி அவர்கள் மூலம் தங்களுக்கு தேவையானவற்றை தாங்களே முடிவு செய்துகொள்ளும் அளவில் அவர்களுடைய தொழில் திறன்வளர்ப்பு, சிறிய கடனுதவிகள் ஆகியவற்றை வழங்கி அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் எடுக்கும்.

பல்வேறு துறைகள் செயல்படுத்தும் திட்டங்களை கிராம அளவில் ஒருங்கிணைத்து திட்டங்களின் பயன்கள் ஒன்றுக்கொன்று உதவிகரமாகவும், ஒன்று மற்றொன்றை ஊக்கப்படுத்தும் வகையிலும் அமையும் விதமாக முயற்சிகள் எடுக்கப்படும்.

2005ம் ஆண்டு இந்த அரசால் துவக்கப்பட்ட "புது வாழ்வுத்'' திட்டத்தில் சமுதாய முனைப்பு வளர்ச்சி சீரான முறையில் நன்கு செயல்படுத்த அரசு உறுதி கொண்டுள்ளது. இத்திட்டத்தில் பயன்படுத்தப்படும் மக்கள் பங்கேற்பு அணுகு முறையைப் பயன்படுத்தி சமுதாயத்தில் உள்ள ஏழை எளிய மக்களை கண்டறியும் முறை, அரசின் இதர திட்ட

செயல்பாடுகளுக்கு ஓர் முன்னோடியாகத் திகழ்கின்றது. வறுமையின் தாக்கம் பல்வேறு கோணங்களில் உணரப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இந்த திட்டத்தில் பன்முனை யுக்திகளான வருமானம் ஈட்டுவதற்கும், நுகர்வதற்கும் தொடர்ந்து கடன் வாய்ப்பு, வேலையுடன் கூடிய தொழில் பயிற்சிகள், சமுதாயப் பயிற்றுநர்களை உருவாக்கி அவர்கள் மூலம் பயிற்சிகள் நடத்துதல் மற்றும் பல்துறை திட்டப் பயன்கள் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மூலம் வறுமையின் தாக்கம் குறைந்து மேம்பாடு அடைவது கண்டுணரப்படுகிறது. இந்த ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள செயல்பாட்டில் வறுமையின் நிலைப்பாடு, வறுமைக்கான இதர காரணங்கள் ஆகியவற்றை புதிய யுக்திகள் மூலம் உணர்ந்து வறுமையின் தாக்கத்தை போக்க சுகாதார மேம்பாடு, சுகாதார அட்டைகள் வழங்குதல், மனநல மேம்பாட்டுத் திட்ட(PHRD) செயல்பாடு, கிராம அறிவு மையம், வாழ்க்கைக்கு வழிகாட்டும் மையங்கள் மற்றும் கல்லூரிகள் மூலம் நடத்தப்படும் இதர திறன்/தொழில் சார்ந்த பயிற்சிகள் ஆகியவை மேற்கொள்ளப்படவுள்ளன. வரும் நிதி ஆண்டில் வறுமைக்கான காரணிகளை ஆய்ந்து அவற்றை பன்முனை நடவடிக்கைகள் மற்றும் அனைத்து துறை திட்ட ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மூலம் வறுமையை அறவே அகற்றுகின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இத்துறையின் 10 மாத கால செயல்பாடுகளின் மூலம் திட்டங்கள் விரைவாகவும், தரமாகவும் செயல்படுத்தப்பட்டு



வருவது, பல தரப்பினராலும் பாராட்டப்பட்டு வருகிறது. இத்துறை, ஏழை எளிய மக்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோரின் வாழ்க்கை மேம்பாட்டிற்காக தொடர்ந்து முனைப்புடன் செயல்படும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமை மற்றும் தன்னிகரற்ற வழிகாட்டுதலின்படி ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் அனைத்து முயற்சிகளையும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மேற்கொண்டு அதில் மகத்தான வெற்றி பெறும்.

கே.பி. முனுசாமி
நகராட்சி நிர்வாகம் மற்றும்
ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்